# அத்தியாயம் 1

# பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் நிதியியல் முறைமையின் நிலைமைகள்

## சுருக்கம்

இலங்கைப் பொருளாதாரமானது முன்னைய ஆண்டில் எதிர்கொண்ட அதன் பாரிய பொருளாதாரப் பேரழிவினைத் தொடர்ந்து, 2023இல் மீட்சிப் பாதையை நோக்கி நகர்ந்தது. இம்மீட்சியானது துரிதமான பணவீக்கவீழ்ச்சி, மேம்படுத்தப்பட்ட வெளிநாட்டுத்துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மை, வலுவான இறை மீதிகள் மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு பேணப்பட்டமை போன்றவற்றின் மூலம் ஆதரவளிக்கப்பட்டது. அரசாங்கத்தினதும் மத்திய வங்கியினதும் கொள்கை வழிமுறைகளின் தொகுப்பின் உடனடியானதும் ஒருங்கிணைப்புமிக்கதுமான நடைமுறைப்படுத்தல் மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டுடன் இணைந்த கட்டமைப்புசார் சீர்திருத்த நிகழ்ச்சி திட்டம் என்பன ஒட்டுமொத்த பேரண்டபொருளாதார உறுதிப்பாட்டை வலுப்படுத்தியது. உறுதிப்பாட்டை மீட்டெடுத்ததன் பயனாக, பொருளாதாரமானது வளர்ச்சிப் பாதைக்கு மாற்றமடையத் தொடங்கியது. தொடர்ச்சியாக ஆறு காலாண்டு காலமாகப் பதிவுசெய்யப்பட்ட பொருளாதாரச் சுருக்கத்தின் பின்னர், பொருளாதாரம், 2023ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் விரிவாக்கமொன்றைப் பதிவுசெய்து, ஆண்டுகாலப்பகுதியில் ஆண்டு பொருளாதாரச் சுருக்கத்தை மட்டுப்படுத்தியது. கூட்டுகேள்வியில் ஏற்பட்ட வளர்ச்சியானது உள்நாட்டுக் கேள்வி மற்றும் தேறிய வெளிநாட்டுக் கேள்வி என்பனவற்றினால் தூண்டப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், தொழிலின்மை மாற்றமின்றி காணப்பட்டபோதிலும், 2023ஆம் ஆண்டில் தொழிற்படை பங்கேற்பு மேலும் வீழ்ச்சியடைந்தது. 2022 செத்தெம்பரில் எப்பொழுதுமில்லாத உயர்ந்தமட்டத்தையடைந்த பணவீக்கம், ஓர் ஆண்டிற்குள் ஒற்றை இலக்க மட்டங்களுக்குத் திரும்பியதுடன் 2023இறுதியளவில் இலக்கிற்கு அருகாமையில் தொடர்ந்துமிருந்தது. 2023ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து மத்திய வங்கி தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டைப் பின்பற்றியமை மற்றும் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகையின் இறுதிப்படுத்தலைத் தொடர்ந்து இடர்நேர்வு மிகையில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவற்றுடன், அரச பிணையங்கள் மீதான விளைவுகள் உள்ளிட்ட சந்தை வட்டி வீதங்கள் 2023இல் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தன. தனியார் துறைக்கான கொடுகடன் 2023ஆம் ஆண்டு நடுப்பகுதியிலிருந்து சாதகமான மாற்றமொன்றை அனுபவித்து, மாதாந்தச் சுருக்கங்களின் நீண்ட தொடர்ச்சியை முடிவுக்கு கொண்டுவந்தது. அதிகரித்த பணிகள் ஏற்றுமதிகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்களுக்கு மத்தியில் வர்த்தகப் பற்றாக்குறையில் குறிப்பிடத்தக்க சுருக்கமொன்றினால் ஆதரவளிக்கப்பட்டு, வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு 2023ஆம் ஆண்டில் மிகையொன்றைப் பதிவுசெய்தது. மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய கொள்வனவு மற்றும் பல்புடை பங்காளர்களிடமிருந்தான நிதியிடல் ஆதரவு என்பனவற்றுடன் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மேம்பட்டன. இடைக்கிடையேயான தளம்பல்களுக்கு மத்தியில், இலங்கை ரூபாவானது 2023இல் ஒட்டுமொத்த உயர்வடைதலொன்றைப் பதிவுசெய்தது. மத்திய வங்கி சந்தை அடிப்படையிலான செலாவணி வீத கொள்கையைப் பின்பற்றுவதனால், சந்தை நடத்தை மற்றும் மனப்பாங்குகளை இது பரந்தளவில் பிரதிபலித்தது. தொடர்ச்சியான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அதிர்வுகள் இருந்தபோதிலும், நிதியியல் துறையானது முனைப்புமிக்க மற்றும் முன்மதியுடைய கொள்கைகள் மற்றும் உயர்ந்தளவிலான நெருக்கடி தயார்நிலை போன்றவற்றிலிருந்து தோன்றுகின்ற அதன் தாக்குபிடிக்கும் தன்மையை வெளிப்படுத்தியது. சவால்களுக்கு மத்தியில், நிதித்துறையில் முன்னிலை வகிக்கும்

1

**வங்கித்தொழில் துறையானது இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் ஆதரவளிக்கப்பட்டு மூலதன மட்டத்தை பாதுகாப்பதன் மூலம் உறுதிப்பாட்டைப் பேணிய அதேவேளை திரவத்தன்மை குறைந்தபட்ச ஒழுங்குபடுத்தல் அளவிற்கு மேல் பேணப்பட்டது. வங்கித்தொழில் துறையின் மொத்தச் சொத்துக்கள் இலாபத்தன்மையுடன் இணைந்து மேம்பட்ட அதேவேளை 3ஆம் கட்ட கடன் விகிதத்தின் மூலம் குறிப்பிடப்பட்டவாறான கொடுகடன் இடர்நேர்வானது 2023 காலப்பகுதியில் அதிகரித்தது. அரசிறையை மேம்படுத்துவதற்கான கடுமையான திரட்சி வழிமுறைகள் மற்றும் செலவின சிக்கனப்படுத்தல் ஆகியவற்றினால் தூண்டப்பட்டு 2023இல் இறைச் செயலாற்றமானது வரவேற்கத்தக்கதாகக் காணப்பட்டது. 2023ஆம் ஆண்டில் ஆரம்ப மீதி மிகையொன்றைக் காண்பித்த அதேவேளை, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஒட்டுமொத்த வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை மேம்பட்டது. வெளிநாட்டு மூலங்களை அணுகுவதிலுள்ள தடைகளுக்கு மத்தியில், அரசாங்கமானது வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்காக முதன்மையாக உள்நாட்டு மூலங்கள் மீது தொடர்ந்தும் தங்கியிருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மத்திய அரச படுகடன் 2023இறுதியளவில் குறைவடைந்தமைக்கு முதன்மையாக பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியும் பகுதியளவில் வெளிநாட்டுப் படுகடன் மீதான நாணய உயர்வடைதலின் தாக்கமும் காரணமாயமைந்தன.**


## 1.1 பணவீக்கம் மற்றும் விலை அபிவிருத்திகள்

### 1.1.1 பணவீக்கம்

**2022 செத்தெம்பரில் வரலாற்றிலேயே மிக உயர்ந்த மட்டத்தினை அடைந்த பணவீக்கம் அதன் பின்னர் விரைந்து பணச்சுருக்கமொன்றினைப் பதிவுசெய்து, 2023 இறுதிப்பகுதியில் குறைந்த ஒற்றை இலக்க மட்டத்தினை அடைந்தது.** பரந்த பொருளாதாரத்திற்குள் இறுக்கமான நாணயக் கொள்கை நிலைமைகளின் தாக்கம் படிப்படியாக ஊடுகடத்தப்பட்டதன் காரணமாக குறைவடைந்த கேள்வி நிலைமைகள் கேள்விப்பக்கத்தின் மீதான இவ்விடைக்கால தன்மைக்கு முக்கிய பங்களிப்பாளராக விளங்கி விலை அழுத்தங்கள் உயர்வடைவதனைத் தடுத்தன. இதற்கு இறுக்கமான இறை வழிமுறைகள் மேலும் உதவியாக அமைந்தன. மேலும், நிரம்பல் நிலைமைகள் வழமைக்குத் திரும்பியமை, உலகளாவிய பண்ட விலைகள் மெதுவடைந்தமை மற்றும் இலங்கை ரூபா வலுவடைந்தமை என்பனவற்றுடன் 2022இல் அவதானிக்கப்பட்ட விலைகளில் காணப்பட்ட மாதத்திற்கு மாத பாரிய அதிகரிப்புக்கள் உருவாக்கிய சாதகமான தளதாக்கமும் இவ்விரைவான பணவீக்கச் சுருக்கத்திற்குப் பங்களித்தன.இதன் விளைவாக, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறான ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கம் (கொ.நு.வி.சு 2021 = 100) 2023 செத்தெம்பரில் 1.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. முற்போந்த- முன்னைய ஆண்டுப்பகுதியில் உயர் பணவீக்கத்திற்கு மிகப்பெரும் பங்களிப்பாளர்களாக விளங்கிய உணவுப்பொருட்களின் விலைகளும் போக்குவரத்திலுள்ளனவும் 2023இன் அநேக மாத காலங்களில் பணவீக்கச் சுருக்கத்தினை பதிவுசெய்தன. இதற்கு, உலகளாவிய எண்ணெய் விலைகள் வழமைக்குத் திரும்பியமை செலாவணி வீதம் உயர்வடைந்தமையின் தாக்கத்துடன் சேர்ந்து கொண்டமைக்கு மத்தியில் வழங்கல்பக்க தடைகள் வழமைக்குத் திரும்பியமையும் செலவினை பிரதிபலிக்கின்ற விதத்திலமைந்த எரிபொருள் விலைச்சீராக்கங்களும் முக்கிய காரணங்களாயமைந்தன. செலவினைப் பிரதிபலிக்கும் விலையிடல் கொள்கை நடைமுறைக்கிடப்பட்டமையின் காரணமாக மின்வலுத் தீர்வையில் அடிக்கடி ஏற்பட்ட மாற்றங்களும் 2023 காலப்பகுதியில் இயக்கவாற்றல் வாய்ந்த பணவீக்கத்திற்குப் - பணவீக்கத்தின் இயக்கத்திற்கு பங்களித்தன. குறிப்பாக, 2023இன் முதற் காலாண்டுப்பகுதியில் பணவீக்கச் சுருக்கத்தின் வேகம் குறைவடைந்தமைக்கு மின்வலுத் தீர்வையில் செய்யப்பட்ட மேல் நோக்கிய சீராக்கம் காரணமாயமைந்த வேளையில் அதன் பின்னர் 2023 யூலையில் தீர்வை குறைவடைந்தமையானது பணவீக்கம் குறைவடையக் காரணமாயிற்று. எனினும், 2023 செத்தெம்பரிலிருந்து பணவீக்கம் எதிர்பார்க்கப்பட்டவாறு இலக்கிடப்பட்ட மட்டத்தினை நோக்கி மேல் நோக்கி நகர்ந்தமைக்கு வலு விலைகள், குறிப்பாக மின்வலுத் தீர்வைகள் உயர்வுற்றமை காரணமாயமைந்த வேளையில் வேளாண்மைத் துறைக்கு ஏற்பட்ட வானிலையுடன் தொடர்பான தாக்கங்களும் கூட குறிப்பாக ஆண்டின் இறுதிப்பகுதியில் பணவீக்கம்

வரைபடம் 1.1

**இலங்கையின் அண்மைய பணவீக்க இயக்கவாற்றல் வாய்ந்த தன்மைகள்**




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் *மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

(அ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது முறையே 2023 சனவரி மற்றும் 2023 பெப்புருவரி மாத தரவு வெளியீடுகளிலிருந்து 2021 = 100 எனும் புதிய தள ஆண்டுடனான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் என்பவற்றை வெளியிடத் தொடங்கியதுடன் 2013 = 100 எனும் பழைய தள ஆண்டுடனான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் என்பவற்றின் வெளியீட்டினை இடைநிறுத்தியது. இதற்கமைய வரைபடங்களில் 2023 சனவரியிலிருந்து ஆரம்பிக்கின்ற தரவுகள் 2021 = 100 எனும் புதிய தள ஆண்டுத் தொடர்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன.


உயர்வடையப் பங்களித்தன. இதன்படி, கொழும்பு நுகர்வோா விலைச் சுட்டெண் அடிப்படையில், ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கம் 2022 இறுதியளவில் காணப்பட்ட 57.2 சதவீதத்துடன் (கொ.நு.வி.சு 2013 = 100) ஒப்பிடுகையில் 2023 இறுதியில் 4.0 சதவீதத்தினை பதிவுசெய்த வேளையில், 2023இல் ஆண்டுச் சராசரி முதன்மைப் பணவீக்கம் 2022இல் பதிவுசெய்யப்பட்ட 46.4 சதவீதத்திலிருந்து (கொ.நு.வி.சு. 2023 = 100)[1] 17.4 சதவீதத்திற்கு (கொ.நு.வி.சு 2021 = 100) வீழ்ச்சியடைந்தது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கமும் இதே போக்கினைப் பின்பற்றி 2022 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 59.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் (தே.நு.வி.சு 2013 = 100) 2023 இறுதியளவில் 42 சதவீதத்திற்கு (தே.நு.வி.சு 2021 = 100) வீழ்ச்சியடைந்த வேளையில் 42 சதவீதத்திற்கு 2023இல் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் 2022இன் 50.4 சதவீதத்துடன் (தே.நு.வி.சு 2013 = 100) ஒப்பிடுகையில் 16.5 சதவீதத்திற்கு (2021 = 100) வீழ்ச்சியடைந்தது.

1 தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் 2023 சனவரி மற்றும் 2023 பெப்புருவரியில் வெளியிடப்பட்ட தரவுகளிலிருந்து 2021 = 100 அடிப்படை ஆண்டுடன் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினையும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினையும் முறையே வெளியிடத் தொடங்கியதுடன் பழைய அடிப்படை ஆண்டுடன் கூடிய (2013 = 100) தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினையும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினையும் வெளியிடுவது நிறுத்தப்பட்டது.


# 1

## 2023ஆம் ஆண்டிற்கான


### பணவீக்கம் விரைவானதொரு பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறையைப் பதிவுசெய்தது...





### உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியின் வலுவான மீளெழுச்சி...





### கொள்கை வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டன...





### சந்தை வட்டி வீதங்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி...




### நாணய விரிவாக்கம் மெதுவடைந்து காணப்பட்டது...




### 2023இன் 2ஆம் அரையாண்டில் தனியார் துறைக் கொடுகடன் மீட்சியடைந்தது...





**பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம்**

**2022 செத்**
விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் பன்னாட்டு நாணய நிதியத்துடனான அலுவலர் மட்ட உடன்படிக்கை

**2023 மாச்**
முதலாவது தொகுதிக்கான பன்னாட்டு நாணய நிதிய நிறைவேற்றுச் சபையின் ஒப்புதல் மற்றும் பெறுகை

## இலங்கைப் பொருளாதாரத்தின் நிழற்படம்

### 2023இல் இலங்கையின் வெளிநாட்டுத் துறை வலுவாக மீளெழுச்சியடைந்தது...











### 2023இல் ஒட்டுமொத்த நிதியியல் துறை உறுதித்தன்மை பேணப்பட்டது...





### நிலைத்திருக்கக்கூடியதன்மையை நோக்கி முன்மொழியப்பட்ட இறைத் திருத்தங்கள்...


அரசிறை (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக)




அரச செலவினம் (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக)





ஆரம்ப மீதி மற்றும் இறை மீதி* (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக)




*இறை மீதியானது வட்டிச் செலவினத்தைக் கழித்த ஆரம்ப மீதிக்குச் சமனாகும்

மத்திய அரச படுகடன் (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக)




**2023 ஒத்** – முதலாவது மீளாய்வு தொடர்பில் ப.நா.நிதியத்துடனான அலுவலர் மட்ட உடன்படிக்கை

**2023 திசெ** – இரண்டாவது தொகுதிக்கான ப.நா.நிதிய நிறைவேற்றுச் சபையின் ஒப்புதல் மற்றும் பெறுகை

**2024 மாச்** – இரண்டாவது மீளாய்வு தொடர்பில் ப.நா.நிதியத்துடனான அலுவலர் மட்ட உடன்படிக்கை

1

அட்டவணை 1.1

## பேரண்டப்பொருளாதார செயலாற்றம் (2018-2023)

| குறிகாட்டி | அலகு | 2018 | 2019 | 2020 | 2021 (அ) | 2022 (அ) | 2023 (ஆ) |
|---|---|---|---|---|---|---|---|
| **உண்மைத் துறை (இ)** | | | | | | | |
| உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சி | % | 2.3 | -0.2 | -4.6 | 4.2 | -7.3 (ஆ) | -2.3 |
| நடைமுறைச் சந்தை விலையில் மொ.உ.உற்பத்தி | ரூ.பில் | 15,352 | 15,911 | 15,646 (அ) | 17,612 | 24,064 (ஆ) | 27,630 |
| தலைக்குரிய மொ.உ.உற்பத்தி (ஈ) (உ) | ஐ.அ.டொ. | 4,372 | 4,082 | 3,851 (அ) | 3,999 | 3,464 (ஆ) | 3,830 |
| **வெளிநாட்டுத் துறை** | | | | | | | |
| வர்த்தக நிலுவை (இ) | மொ.உ.உ. இன் % | -10.9 | -9.0 | -7.1 | -9.2 | -6.7 | -5.8 |
| நடைமுறை கணக்கு நிலுவை (இ) | மொ.உ.உ. இன் % | -3.0 | -2.1 | -1.4 | -3.7 | -1.9 | 1.8 |
| திரண்ட நிலுவை | ஐ.அ.டொ.மில் | -1,102.9 | 376.6 | -2,327.7 | -3,966.6 | -2,806.1 | 2,825.6 |
| வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் | ஐ.அ.டொ.மில் | 6,919.2 | 7,642.4 | 5,664.3 | 3,139.2 | 1,897.6 | 4,392.1 |
| **இறைத் துறை (இ)** | | | | | | | |
| நடைமுறை கணக்கு நிலுவை | மொ.உ.உ. இன் % | -1.1 | -3.4 | -7.5 | -7.3 | -6.4 | -6.0 |
| ஆரம்ப நிலுவை | மொ.உ.உ. இன் % | 0.6 | -3.4 | -4.4 | -5.7 | -3.7 | 0.6 |
| திரண்ட நிலுவை | மொ.உ.உ. இன் % | -5.0 | -9.0 | -10.7 | -11.7 | -10.2 | -8.3 |
| மத்திய அரச படுகடன் (ஊ) | மொ.உ.உ. இன் % | 78.4 | 81.9 | 96.6 | 100.0 | 114.2 | 103.9 |
| **நாணயத் துறை மற்றும் பணவீக்கம்** | | | | | | | |
| விரிந்த பண வளர்ச்சி ($M_{2b}$) (எ) | % | 13.0 | 7.0 | 23.4 | 13.2 | 15.4 | 7.3 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி ($M_{2b}$ இல்) (எ) | % | 15.9 | 4.2 | 6.5 | 13.1 | 6.2 | -0.6 |
| ஆண்டுச் சாராசரிப் பணவீக்கம் (ஏ) | % | 4.3 | 4.3 | 4.6 | 6.0 | 46.4 | 17.4 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் 2024 மாச்சில் வெளியிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் (தள ஆண்டு 2015) பயன்படுத்தப்பட்டுள்ளன.
(ஈ) பிந்திய குடித்தொகை எண்தொகைகளைக் கொண்டு மதிப்பீடுகள் இற்றைப்படுத்தப்பட்டன.
(உ) காலாண்டுச் சராசரி செலாவணி வீதத்தைப் பயன்படுத்தி கணிப்பிடப்படும் ஐ.அ.டொலர் நியதிகளில் காணப்படும் காலாண்டு மொ.உ.உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டது.
(ஊ) படுகடன் புள்ளிவிபரங்கள் தேறிய அடிப்படையில் முன்வைக்கப்படுகின்றன (தேறிய வைப்புக்கள்).
(எ) ஆண்டிறுதி பெறுமதிகளின் அடிப்படையிலான ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி.
(ஏ) 2022 வரையான கொ.நு.வி.சுட்டெண் (2023=100) அடிப்படையில், அத்துடன் 2023இன் கொ.நு.வி.சுட்டெண் (2021=100) அடிப்படையில்

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

பெறுமதிசேர் வரி வீதம் 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டமையின் மூலம் 2024இன் தொடக்கப்பகுதியில் பெறுமதிசேர் வரிக் கட்டமைப்பிற்கு செய்யப்பட்ட மாற்றங்களும் குறிப்பிட்ட வரி விலக்குகள் அகற்றப்பட்டமையும் 2024 சனவரியிலிருந்து பணவீக்கம் உயர்வடைய வழிவகுத்தது. எனினும், 2024 மாச்சு தொடக்கத்தில் மின்வலுத் தீர்வை குறைக்கப்பட்டமையும் அதனைத் தொடர்ந்து அதற்குப் பதிலிறுத்தும் விதத்தில் விலைகள் குறைவடைந்தமையும் உடனடித் தாக்கங்களையும் அதேபோன்று வரித் திருத்தங்களின் கசிவுத் தாக்கங்களையும் குறைவடையச் செய்யும் என எதிர்பார்க்கப்பட்டது. இது 2024 மாச்சில் பணவீக்கத்தின் பாரிய குறைப்பினூடாக எடுத்துக்காட்டப்பட்டதுடன் சாதகமான தளத்தாக்கத்துடன் சேர்ந்து இக்காரணிகள் இதற்குப் பகுதியளவில் காரணமாயின.

**2023இல் மையப் பணவீக்கமும் கணிசமான பணவீக்கச் சுருக்கச் செய்முறையினைப் பதிவுசெய்தது. மையப் பணவீக்கத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, 2023 யூன் வரை காணப்பட்ட இறுக்கமான நாணய நிலைமைகள் மற்றும் அப்போது நிலவிய இறுக்கமான இறை நிலைமைகள் மற்றும் பொதுமக்களின் கொள்வனவுச் சக்தி தேய்வடைந்து போனமையினால் ஏற்பட்ட விடாப்பிடியான தாக்கம் என்பனவற்றின் காரணமாக பொருளாதாரத்தில் கேள்வி நிலைமைகள் குறைவடைந்து போனமையினை அடிக்கோடிட்டுக் காட்டுவதாக அமைந்தது.** இது, 2023இன் பிற்பகுதியில் அதிகரித்த முதன்மைப் பணவீக்கம் போலன்றி, கொ.நு.வி.சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட மையப் பணவீக்கம் 2023ஆம் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக குறைவடைந்து, அதன் பின்னர் ஓரளவிற்கு உயர்வடைந்தது. இந்நடத்தையானது, மையப் பணவீக்கத்தினைக் கணிக்கும் போது விலக்கப்படுகின்ற வலு மற்றும் தளம்பலுறும் உணவுப்பொருட்களின் விலை அதிகரிப்புக்களின் முக்கிய காரணமாகவே 2023இன் பிற்பகுதியில் முதன்மைப் பணவீக்கத்தில் அதிகரிப்பு ஏற்பட்டதனை பிரதிபலித்தது. இதற்கமைய, கொ.நு.வி.சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு மையப் பணவீக்கம் 2022 இறுதியளவில் காணப்பட்ட 47.7 சதவீதத்துடன்

## சிறப்புக் குறிப்பு 1
## நாணயக் கொள்கை மீதான நிரம்பல் பக்க பணவீக்கத்தின் தாக்கங்கள்

உள்ளீடுகளின் கிடைக்குந்தன்மை தொடர்பான இடையூறுகள், உலகளாவிய பண்ட விலைகளின் மாற்றங்கள், வரிகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளுக்கான திருத்தங்கள், சாதகமற்ற வானிலை நிலைமைகள், உலகப் பொருளாதார நிலைமைகள் மற்றும் புவிசார் அரசியல் பதற்றங்களினால் ஏற்படும் நிரம்பல் சங்கிலி இடையூறுகள் மற்றும் உற்பத்திச் செயன்முறைகளின் செயற்றிறனின்மை போன்ற காரணிகளினால் ஏற்பட்ட உற்பத்திச் செலவுகளின் மாற்றங்களினாலேயே செலவு மிகுதிப் பணவீக்கமெனக் குறிப்பிடப்படும் நிரம்பல் பக்க பணவீக்கம் வழமையாக தூண்டப்படுகின்றது. இலங்கையைக் கருத்திற்கொள்ளும்போது, சீரற்ற வானிலைப் போக்கு நிரம்பல் பக்கத்தினைப் பாதிக்கின்ற முக்கிய காரணியொன்றாக இருந்துள்ளதுடன், உணவுப் பணவீக்கத்தில் தொடர்ச்சியான தளம்பல்களைத் தோற்றுவித்துள்ளது. ஏனைய பல்வேறு நாடுகளைப் போன்று, பொருளாதார நடவடிக்கை மற்றும் சமூக நலனோன்புகை மீதான காலநிலை மாற்றத்தின் தாக்கங்களினால் இலங்கையும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது. மேலும், உலகளாவிய நிரம்பல் சங்கிலிகளில் ஏற்பட்ட மாற்றங்கள் அதேபோன்று நிரம்பல் தடைகளுக்கு மத்தியில் உற்பத்திச் செலவுகளின் அதிகரிப்பு போன்றன நிரம்பல் பக்கத்தின் மூலம் பணவீக்கத்தில் ஏற்பட்ட அண்மைய தளம்பலுக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன. இத்தகைய நிரம்பல் பக்க அழுத்தங்கள் குறுகிய காலத்திற்குக் காணப்படுமாயின், அவை எந்தவொரு முக்கிய நாணயக் கொள்கைத் தாக்கங்களையும் ஏற்படுத்தாமலிருக்கலாம். எனினும், நிரம்பல் காரணிகளால் நாணயக் கொள்கை நடத்தையைப் பணவீக்கத்தின் தொடர்ச்சியான துரிதப்படுத்தலானது சிக்கலுக்குட்படுத்தலாம். இது முக்கியமாக பணவீக்க எதிர்பார்க்கைகளின் சாத்தியமான நிலைநிறுத்தலற்றத்தன்மை மற்றும் மத்திய வங்கியின் நம்பகத்தன்மையில் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தலாம். நாணயக் கொள்கையின் நிரம்பல் அதிர்வு தற்காலிகமாக இருக்கும்போது, எந்தவொரு நாணயக் கொள்கை நடவடிக்கைக்குமான தேவையின்றி, பணவீக்கம் சமநிலைக்குத் திரும்புகின்ற அதேவேளை, மீண்டும் நிரம்பல் அதிர்வுகள் இரண்டாம் சுற்றுவிளைவுகளைத் தூண்டி, முன்கூட்டிய நாணயக் கொள்கை நடவடிக்கையைத் தேவைப்படுத்துகிறது (John, Kumar and Patra, 2022).

### இலங்கையில் பணவீக்கத்தின் மீதான வானிலைப் போக்கினதும் காலநிலை மாற்றத்தினதும் தாக்கம்

வெப்பநிலையில் நீடித்த மாற்றங்கள் மற்றும் பூமியின் காலநிலை முறைமையின் பல்வேறு அம்சங்களைக் காலநிலை மாற்றம் உள்ளடக்கி, பெரும்பாலும் மனித நடவடிக்கைகளுக்குப் பெரிதும் பங்களிப்புச்செய்கின்றது. சூழல், பொருளாதார மற்றும் சுகாதாரத் தாக்கங்களை உள்ளடக்கிய அதன் தாக்கங்கள் விரிவானவையாகவும் பன்முகத்தன்மையினைக் கொண்டவையாகவும் காணப்படுகின்றன. நுகர்வுக் கூடையில் உணவுப் பொருட்கள் பெரும் பங்கைக் கொண்டுள்ள[1] இலங்கை போன்ற நாட்டில், சீரற்ற வானிலைப் போக்கும் காலநிலை மாற்றமும் உணவுப் பணவீக்கத்தில் குறிப்பிடத்தக்க தளம்பல்களைத் தோற்றுவிக்கலாம். இதன்விளைவாக, வேளாண்மைத் துறையானது முக்கியமாக, மழைவீழ்ச்சிப் போக்குகள் மற்றும் உயர்வடையும் வெப்பநிலைகளினால் பாதிப்படையக்கூடும்[2]. அரிசி மற்றும் தெங்கு உள்ளடக்கிய இலங்கையின் முக்கியப் பயிர்கள் வெப்பநிலை மற்றும் மழைவீழ்ச்சியின் வேறுபாடுகளினால் குறிப்பிடத்தக்களவில் பாதிக்கப்படலாம். குறிப்பாக, புவி வெப்பமடைதலினால் இரவுநேர வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக அரிசி விளைவுகளில் குறிப்பிடத்தக்க குறைப்பை ஏற்படுத்தும். உதாரணமாக, பிலிப்பைன்ஸிலுள்ள சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவகம் நாடாத்திய களப் பரிசோதனைகளை அடிப்படையாகக் கொண்டு, வறட்சியான காலப்பகுதியில் குறைந்தபட்ச வெப்பநிலையில் ஒவ்வொரு1°C அதிகரிப்பிற்கு 10 சதவீதத்தினால் அரிசி விளைச்சல்கள் வீழ்ச்சியடைகின்றது (Peng et al., 2004). சாதாரண வானிலை பருவ காலத்தில் மரக்கறி மற்றும் பழ விலைகளின் போக்கு எறிவுசெய்யக்கூடியபோதிலும், அரிசி, மரக்கறிகள் மற்றும் பழங்கள் மீதான காலநிலை மாற்றம் அல்லது அசாதாரண வானிலைப் போக்குகளின் தாக்கம் அவற்றின் விலையிடலை முன்னறிந்து கூறமுடியாமையாக்கின்றன. மேற்குறிப்பிட்டவற்றுக்கு மேலதிகமாக, நீண்டகால வறட்சி நிலைமைகள் குறைந்த செலவில் பெறத்தக்க நீர் மின்சாரத்திலிருந்து விலையுயர்ந்த எரிபொருள் அடிப்படையிலான மின்சார உற்பத்திக்கு மாறுவதால் மின்சார விலைகளைப் பாதிக்கலாமென்பதுடன் இது பரந்த பொருளாதாரத்திற்கு வானிலை மற்றும் காலநிலையுடன் தொடர்புடைய இடையூறுகளைப் பரவச்செய்து, பாரியளவிலான நிரம்பல் இடையூறுகளை உருவாக்கலாம்.

ஆகையினால், தீவிரமான வானிலை நிகழ்வுகள் குறிப்பிடத்தக்க பேரண்டபொருளாதார விளைவுகளை ஏற்படுத்தலாம். கடந்த காலத்தில் இவ்விளைவுகள் பெரும்பாலும் தற்காலிகமானவையாகவும் மத்திய வங்கிகளுக்கு குறைவான கரிசனையைக் கொண்டுள்ளனவாகக் கருதப்பட்டன. எனினும், வெப்ப அலைகள், நீடித்த வறட்சி அல்லது வெள்ளப்பெருக்கு போன்ற வானிலைத் தளம்பங்கள் அதிகரித்த அடுக்கு நிகழ்வுகளாகவும் அதிகரித்த தீவிரத் தன்மையுடையனவாவதனால் பணவீக்க எதிர்பார்க்கைகள் உள்ளடங்கலாக, நேரடி மற்றும் இரண்டாம் சுற்றுத் தாக்கங்களின் ஒன்றிணைந்த தாக்கத்தினூடாக பணவீக்கத்தின் மீது தொடர்ச்சியானதொரு தாக்கத்தை

---


1 கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் இலங்கையின் பணவீக்க அளவீடுகளாகக் காணப்படுகின்றன. 12 வகைகளினுள், உணவு வகையானது இரண்டு சுட்டெண்களிலும் பெரும்பாலும் முக்கிய நிறையைக் கொண்டுள்ளது. இது, கொ.நு.வி.சுட்டெண்ணில் 26.2 சதவீதத்திற்கும் தே.நு.வி. சுட்டெண்ணில் 39.2 சதவீதத்திற்கும் வகைகூறியது.

2 கொ.நு.வி.சுட்டெண்ணில் அரிசி வகைக்கான நிறை 2.72 சதவீதமாகும், அத்துடன் தெங்கு வகை 1.38 சதவீதமாகும்.

1

வரைபடம்
சி.கு. 1.1

**முதன்மைப் பணவீக்கத்திற்கான பங்களிப்பு: நிரம்பல் எதிர் நிரம்பலற்ற பொருட்கள்**
**(கொ.நு.வி.சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்டு, ஆண்டிற்கு ஆண்டு) (அ)**




(அ) நிரம்பலுடன் தொடர்புடைய பொருட்கள் கொ.நு.வி.சுட்டெண்ணிலுள்ள பொருட்களின் தொகுப்பைக் கொண்டிருக்கின்றன. அதன் விலைகள் நிரம்பல் காரணிகளின் மூலம் முதன்மையாக நிர்ணயிக்கப்படுகின்ற அதேவேளை எஞ்சியுள்ள பொருட்கள் நிரம்பல் அல்லாத பொருட்களாக கருதப்படுகின்றன (அலுவலர் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு)

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், மத்திய வங்கி அலுவலர் தீர்மானம்

ஏற்படுத்தலாம். இது, கொள்கை வகுப்பாளர்களுக்கு கரிசனையொன்றாகக் காணப்படுகின்றதுடன் பணவீக்க எறிவுசெய்தலை மிகவும் சவாலாக்குரியதாக்கிறது. அதேவேளை, காலநிலை மாற்றத்தின் மீதான அதிகரிக்கப்பட்ட வலியுறுத்தலைக் கருத்திற்கொண்டு, முக்கிய பொருளாதாரக் குறிகாட்டிகள் மீது காலநிலை மாற்றத்தின் உள்ளார்ந்த தாக்கங்களை மேலும் சிறப்பாக கருத்திற்கொள்வதற்கு மத்திய வங்கிகளின் பேரண்டப்பொருளாதார மாதிரிகளினுள் காலநிலையுடன் தொடர்புடைய மாறிகள் அத்துடன்/அல்லது காலநிலை தொடர்பான குறிப்பான மாதிரி சூழ்நிலைகளை மத்திய வங்கிகள் படிப்படியாக உள்ளடக்கின்றன.


## பணவீக்கத்தின் மீதான ஏனைய நிரம்பல் பக்க காரணிகள் மற்றும் அரசாங்க கொள்கைகளின் தாக்கம்

போக்குவரத்து மற்றும் மின்சார உற்பத்தி ஆகிய இரண்டிற்குமான எண்ணெய்யை இறக்குமதி செய்கின்ற நாடு என்ற ரீதியில், இலங்கையில் உலகளாவிய எண்ணெய் விலைகளின் தாக்கம் கணிசமானதாகக் காணப்படுகின்றதுடன் நேரடி மற்றும் மறைமுக வழிகளின் மூலம் பணவீக்கத் தளம்பல்களை மாற்றுகின்றது. இலங்கையில், வலு, எண்ணெய் மற்றும் எரிவாயு விலைகள் தற்போது கிரமமாகத் திருத்தப்படுகின்றதுடன் பரந்தளவில் செலவு மீட்பு அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. இதன்விளைவாக, புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் உலகளாவிய பொருளாதார நிலைமைகள் காரணமாக உலகளாவிய பண்ட விலைகள் மற்றும் கப்பலேற்றல் செலவுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் உள்நாட்டு விலைகளைப் பாதிக்கின்றதுடன் உள்நாட்டு விலைகளில் பெரும் தாக்கத்தை முன்னைய ஆண்டுகளை விட தற்போது ஏற்படுத்தலாம்[3]. அண்மைக்கால அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு, பணவீக்கம் மீதான மின்சாரம், எரிபொருள், மற்றும் எரிவாயு ஆகியவற்றின் விலை மாற்றங்களின் மறைமுகத் தாக்கமானது நேரடியான தாக்கத்தை விடவும் அதிகமாக இருக்கலாம். எனினும், வலுவின் உள்நாட்டு விலைகளின் அத்தகைய கிரமமான சீராக்கங்கள், 2022இலும் 2023இலும் காணப்பட்ட உள்நாட்டு எரிபொருள் மற்றும் மின்சார விலைகளுக்கான ஒரு தடவையான சடுதியான திருத்தங்கள் தொடர்பான இடர்நேர்வுகளை நீக்கும். இது எதிர்வரும் காலத்தில், பணவீக்கத்தில் ஏற்படும் பாரியளவிலான மாற்றங்களைத் தணிப்பதற்கு உதவுவதுடன் பொருளாதாரத்தின் ஆர்வலர்கள் மூலம் முன்னோக்கிப் பார்க்கும் பொருளாதாரத் தீர்மானங்களை ஊக்குவிக்குமென்பதுடன் இதன்மூலம், பணவீக்க எதிர்பார்க்கைகளை நிலைநிறுத்துவதற்கு உதவும்.

3 தொடர்புடைய அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் மூலம் இத்தாக்கம் முன்னரே உள்ளீர்க்கப்பட்டு, இதன்பயனாக இறைத் துறை அல்லது நிதியியல் துறையில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இதன்மூலம், பொதுமக்களுக்கு மறைமுகமான சுமைக்கு வழிவகுத்தது.

மேலும், வரிக் கட்டமைப்பிற்கு அடிக்கடி ஏற்படும் மாற்றங்கள் ஒரு முறை நிகழும் மாற்றங்களாக இருந்தாலும் கூட, பணவீக்கத் தளம்பலைக் குறிப்பிடத்தக்க வகையில் பாதிக்கலாம். பெறுமதிசேர் வரியில் ஏற்பட்ட சமீபத்திய சீராக்கங்கள் எரிபொருள் விலைகள் உள்ளடங்கலாக, நுகர்வோர் கூடையில் பல்வேறு பொருட்களின் விலைகள் மீது குறிப்பிடத்தக்க நேரடித் தாக்கத்தைக் கொண்டிருந்ததுடன் இது பணவீக்கத்தில் பாரியளவிலான தாக்கத்தைக் கொண்டிருந்தது. மேலும், இவ்வரிச்சீராக்கங்களைப் பயன்படுத்தி காரணமற்ற முறையில் விலைகளை வியாபாரங்கள் மாற்றுவதனால், இக்கொள்கைகளின் நேரடி மற்றும் மறைமுகத் தாக்கங்கள் கணிக்கமுடியாதவையாக இருக்கலாம். மேலும், கீழ் நோக்கிய விலைக் கடினத்தன்மையுடன் கூடிய அத்தியாவசியப் பொருட்களுக்கான போட்டித்தன்மையின்மை தொடர்ச்சியான விலை அழுத்தங்களுக்கு வழிவகுக்கலாம். அரிசி, முட்டை போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கான சந்தையில் ஒரு சிலர் முற்றுரிமை என்பது இப்பொருட்களின் விலைகள் மீது நேரடியாகவும் ஏனைய பல்வேறு விலைகள் மீது மறைமுகமாகவும் குறிப்பிடத்தக்க அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடும்.

வரைபடம் சி.கு. 1.2 நிரம்பல் பக்க பணவீக்கம்: (கொ.நு.வி.சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்டு, ஆண்டிற்கு ஆண்டு) (அ)




(அ) கொ.நு.வி.சுட்டெண்ணிலுள்ள பொருட்களின் தொகுப்பின் மொத்த விலை அசைவுகளை அடிப்படையாகக் கொண்டது. அதன் விலைகள் முக்கியமாக நிரம்பல் காரணிகளினால் நிர்ணயிக்கப்படுகின்றன.

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் மத்திய வங்கி அலுவலர் தீர்மானம்

## ஒட்டுமொத்த பணவீக்கம் மீதான நிரம்பல் பக்க காரணிகளிலிருந்தான பங்களிப்பு

இனங்காணுவதிலுள்ள சிக்கல்வாய்ந்த தன்மை காரணமாக பணவீக்க மாற்றங்களுக்குப் பின்னால் உள்ள கேள்வி மற்றும் நிரம்பல் காரணிகளை வகைப்படுத்துவது சவால்மிக்க செயன்முறையொன்றாகக் காணப்படுகின்றது. உணவுப் பணவீக்கமானது பொதுவாக நிரம்பல் பக்கக் காரணிகளினால் பெரும்பாலும் தூண்டப்படுகின்றது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் கூடையின் உணவு வகைக்கு மேலதிகமாக, இவ்வகைகளிலுள்ள விலைச் சீராக்கங்களின் அதிகரிக்கப்பட்ட மீடிறன் மற்றும் அளவு என்பவற்றைக் கருத்திற்கொண்டு, உணவல்லா வகையிலுள்ள குறிப்பிட்ட பொருட்களின் விலைகள் பணவீக்கத்திற்கான நிரம்பல்/செலவுத் தூண்டல் பங்களிப்பாளர்களாகவும் வகைப்படுத்தப்படலாம்[4].

நிரம்பலற்ற பணவீக்கத்துடன் ஒப்பிடுகையில், நிரம்பல் பக்க பணவீக்கமானது பெரும்பாலும் அதன் அதிகரிக்கப்பட்ட தளம்பலின் மூலம் அடையாளப்படுத்தப்படுகிறது (அட்டவணை சி.கு. 1.1). பொதுவாக நிரம்பல் பக்க பணவீக்கத்தின் தற்காலிகத் தன்மையைக் கருத்திற்கொண்டு, அதனை எதிர்கொள்வதற்கு நாணயக் கொள்கை நடவடிக்கைகளை பயன்படுத்துவதில் அவதானத்திற்குரிய அணுகுமுறையொன்றை மத்திய வங்கிகள் பின்பற்றலாம். மேலும், நிரம்பல் இடையூறுகள் என்பவை வெளியீடு மற்றும் விலைகளை எதிர் திசைகளில் நகர்த்துவதுடன், மத்திய வங்கி வெளியீடு மற்றும் விலை உறுதிப்பாடு ஆகிய இரண்டையும் பேணுவதற்கு இயலாமல் இருக்கலாம் (Amarasekara, 2009). இத்தகைய சூழ்நிலையில், முற்றிலும் விலை உறுதிப்பாட்டை இலக்காகக் கொண்ட தீவிர கொள்கைகள் உண்மைப் பொருளாதாரத்தில் நிரம்பல் இடையூறின் தாக்கத்தைத் தீவிரமடையச்செய்கின்றன.

4 இம்மதிப்பீட்டில், உணவு மற்றும் வெறியமல்லாக் குடிவகைகள் மற்றும் தனிப்பட்ட போக்குவரத்து உபகரணங்களுக்கான எரிபொருட்கள் மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் நீர் கட்டணம் போன்ற தெரிவுசெய்யப்பட்ட நிர்வகிக்கப்படும் விலை வகைகள் மற்றும் பொருட்கள் மற்றும் பணிகளின் கொ.நு.வி.சுட்டெண்ணின் போக்குவரத்துப் பணி வகைகள் போன்றவற்றை நிரம்பல்/செலவுத் தூண்டல் வகை பிரதிபலிக்கின்ற அதேவேளை நிரம்பலற்ற தூண்டல் வகை கொ.நு.வி.சுட்டெண்ணின் ஏனைய அனைத்து துணை வகைகளையும் பிரதிபலிக்கின்றது.

உடனடி மற்றும் தீவிரமான கொள்கை பதிலிறுப்புக்களுக்கான தேவையின்றி குறித்த நிரம்பல் பக்க அதிர்வுகள் காலப்போக்கில் அவற்றினைத் திருத்துவது சிறப்பனதாக அமையக்கூடும். உதாரணமாக, தற்காலிக வானிலையுடன் தொடர்புடைய காரணிகளிலிருந்து தாக்கமானது வெளிப்படுமாயின், அது படிப்படியாகக் குறைவடையும். இதற்கு முரணாக, பொருட்கள் மற்றும் பணிகள் மீது வரிகளுக்கான சீராக்கங்கள் மற்றும் நிர்வாக மாற்றங்கள் போன்றவற்றின் விளைவாக, அதன் நேரடித் தாக்கமானது பிரதானமாக ஒரு முறை நிகழ்வாக இருக்கும். தற்காலிக அல்லது ஒரு தடவையிலான நிரம்பல் அதிர்வுகள் ஏற்பட்டாலும் கூட, பணவீக்கத்தின் எதிர்காலப் போக்கு தொடர்பான தெளிவு, உறுதிப்பாடு மற்றும் வழிகாட்டுதல் என்பனவற்றை வழங்கி, பணவீக்க எதிர்பார்க்கைகளை நிலைநிறுத்துவதில் மத்திய வங்கியின் தொடர்பூட்டலானது முக்கிய பங்காற்றுகின்றது.

அட்டவணை சி.கு 1.1 நிரம்பல் பக்க மற்றும் நிரம்பலற்ற பக்க பணவீக்கத்தின் நியம விலகல் (கொ.நு.வி.சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்டது, ஆண்டிற்கு ஆண்டு, %)

| ஆண்டு | முதன்மைப் பணவீக்கம் | நிரம்பல் | நிரம்பலற்ற |
|---|---|---|---|
| 2015 | 1.3 | 2.8 | 1.3 |
| 2016 | 1.1 | 2.5 | 0.8 |
| 2017 | 0.9 | 2.2 | 1.0 |
| 2018 | 1.0 | 2.1 | 0.2 |
| 2019 | 0.6 | 1.7 | 0.5 |
| 2020 | 0.8 | 1.3 | 0.5 |
| 2021 | 2.6 | 3.9 | 1.6 |
| 2022 | 20.3 | 32.0 | 11.0 |
| 2023 | 20.1 | 29.9 | 12.9 |

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் மத்திய வங்கி அலுவலர் கணிப்பீடுகள்

## பணவீக்கத்தில் நிரம்பல் பக்க பிரச்சனைகளைக் கையாள்வதில் மத்திய வங்கிகள் குறைந்தளவான தீவிரத்தன்மையுடன் ஏன் காணப்படுகின்றன?

மத்திய வங்கிகளின் முதன்மைக் கட்டுப்பாடு என்பது கேள்விப் பக்க அடிப்படைப் பணவீக்க அழுத்தங்கள் மீது தாக்கம் செலுத்துவதாகயிருப்பதனால், பொதுவாக

நிரம்பல் பக்க அதிர்வுகளுக்குப் பதலிறுத்துவதில்லை. நிரம்பல் பக்க பிரச்சனைகள் விலைகள் மற்றும் பணவீக்கம் மீது உடனடியான தாக்கத்தைக் கொண்டுள்ளன. மேலும், பல நிரம்பல் பக்க காரணிகள் பெருமளவில் கட்டமைப்புசார்ந்ததாகவும் வானிலையுடன் தொடர்புடையதாகவும் காணப்பட்டாலும் வர்த்தகச் சுழற்சியின் விளைவொன்றாக இருக்காது. இவற்றை நிவர்த்தி செய்வதற்கு பொருளாதாரத்தின் உற்பத்தித்திறன் மற்றும் செயற்றிறனை மேம்படுத்துவதை இலக்காகக்கொண்டு அரசாங்கத்தின் நிரம்பல் பக்க கொள்கைகள் போன்ற நீண்டகால கொள்கை வழிமுறைகள் அல்லது கட்டமைப்புசார் சீர்திருத்தங்கள் தேவைப்படலாம். கேள்வித் தூண்டல் கொள்கைகளின் மூலம் வர்த்தகச் சுழற்சித் தளம்பல்களை நிவர்த்திசெய்வதை இலக்காகக் கொண்ட மத்திய வங்கிகளுக்கு அடிப்படைக் கட்டமைப்புசார் பிரச்சனைகளைச் சமாளிக்க முடியாது போகலாம். ஆகையினால், நாணயக் கொள்கையின் மூலம் நிரம்பல் பக்க விலை அழுத்தங்களை நிவர்த்திசெய்வதற்கு முயற்சிப்பது மோசமான விளைவுகளை ஏற்படுத்தலாம். பணவீக்கத்தைத் தளர்த்துவதற்கு வட்டி வீதங்களை உயர்த்துவது பொருளாதாரத்தின் நடவடிக்கைகளை மெதுவடையச்செய்து, அதன்மூலம் நிரம்பல் பக்க அழுத்தங்களை மேலும் மோசமாக்கும்.

எனினும், தொடர்ச்சியான அல்லது கடுமையான இடையூறுகள் ஒட்டுமொத்த விலை மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டிற்குப் பரந்தளவிலான தாக்கங்களைக் கொண்டிருக்கக்கூடும் என்பதால் மத்திய வங்கிகள் இன்னமும் நிரம்பல் பக்க பணவீக்கத்தை உன்னிப்பாகக் கண்காணிக்கின்றன. சில சந்தர்ப்பங்களில், நிரம்பல் பக்க அதிர்வுகள் பணவீக்க எதிர்பார்க்கைகள் மீது இரண்டாம் நிலைத் தாக்கங்களை ஏற்படுத்தினால் இல்லாவிடில் தொடர்ச்சியானதொரு பணவீக்கச் சூழலுக்கு இட்டுச்சென்றால் இத்தாக்கங்களைத் தணிப்பதற்கு மத்திய வங்கிகள் பொருத்தமான நடவடிக்கைகளை கருத்திற்கொள்ளலாம். இது தொடர்பில், ஒற்றை நிரம்பல் அதிர்வொன்றுக்கான உகந்த நாணயக் கொள்கை பதிலிறுப்பானது அதிர்வின் தன்மை மற்றும் காலம், அதன் இரண்டாம் சுற்று தாக்கங்கள் மற்றும் உண்மை வருமானங்களின் தாக்கம் போன்றன மீது தங்கியிருக்கின்றது (Bandera et al., 2023). இக்காரணிகள் ஒன்றாக இணைந்து, நாணயக் கொள்கை 'நோக்க வேண்டுமா' (கொள்கைப் பதிலிறுப்பற்ற) அல்லது 'அதிர்விற்கு எதிரான வீழ்ச்சியடைதல்' (கொள்கைச் சீராக்கம்) என்பதைத் தீர்மானிக்கின்றது. பணவீக்க நிரம்பல் அதிர்வுகளின் தொடரானது இறுக்கமான கொள்கைப் பதிலிறுப்பை தேவைப்படுத்தும். இத்தகைய சந்தர்ப்பங்களில், ஒவ்வொரு அதிர்விற்கும் தனிப்பட்ட முறையில் பதிலளித்தல், அண்மைக் கால இலக்கிலிருந்தான விலகல்களுக்கு எதிராக நடுத்தர கால விலகல்களை ஈடுசெய்வது விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். ஆகையினால், தொடரான நிரம்பல் அதிர்வுகளுக்கான நாணயக் கொள்கைப் பதிலிறுப்பானது அத்தகைய அதிர்வுகளின் ஒட்டுமொத்த பேரண்டப்பொருளாதாரத் தாக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் பணவீக்க எதிர்பார்க்கைகளின் தளம்பல்கள் தொடர்பான உன்னிப்பான மதிப்பீட்டையும் ஒன்றிணைக்க வேண்டும். மேலும், பாரிய மற்றும் தொடர்ச்சியான நிரம்பல் அதிர்வுகளுக்கு மத்தியில், நாணயக் கொள்கையின் முன்கூட்டிய நடவடிக்கைகள் பணவீக்க எதிர்பார்க்கைகளை உறுதியாக நிலைநிறுத்தி இதனால், மத்திய வங்கியின் நம்பகத்தன்மையைப் பேணலாம் (John et al., 2022).

**நிரம்பல் பக்க பணவீக்கத்தைப் பேணுவதில் அரசாங்கத்தின் வகிபாகம்**

பல்வேறு கொள்கைகள் மற்றும் தலையீடுகள் போன்றவற்றினூடாக நிரம்பல் பக்கப் பணவீக்கத்தைப் பேணுவதில் அரசாங்கங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. போக்குவரத்து மற்றும் வலு போன்ற உட்கட்டமைப்பில் முதலீடுகளை முன்னுரிமைப்படுத்துவதன் மூலம், அரசாங்கமானது பொருளாதாரத்தின் உற்பத்தித்திறனையும் செயற்றிறனையும் மேம்படுத்தும். மேலும், தனியார் துறையுடன் இணைந்து, அரசாங்கமானது அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களைத் தடுத்து உணவு விலைகளை உறுதிப்படுத்தும் அதேவேளை உள்நாட்டு உணவு உற்பத்தியை மேம்படுத்துவதை நோக்காகக்கொண்டு களஞ்சியப்படுத்தல் வசதிகள் போன்ற வேளாண்மை உட்கட்டமைப்பில் முதலீடுகளை அதிகரிப்பது மீது கவனஞ்செலுத்தலாம். மறுபுறத்தில், சந்தைப் போட்டித்தன்மையை வலுப்படுத்துவதற்கும், வியாபாரங்களுக்கான தடைகளைத் தகர்த்துவதற்கும், அத்துடன் அதிகாரத்துவச் செயன்முறைகளைச் சீராக்குவதற்கு ஒழுங்குமுறை வழிமுறைகளை நடைமுறைபடுத்தலாம் என்பதுடன் இது முதலீடுகளுக்கான உகந்த சூழலைப் பேணிவளர்க்கும். குறுகிய காலத்தில், தேவைக்கேற்றவாறும் தேவையேற்படும்போதும் நிரம்பல் இடையூறுகள் மற்றும் பற்றாக்குறைகள் காரணமாக தாழ்ந்த நிரம்பலுடன் இருக்கும் உணவு வகைகளின் இறக்குமதிப்படுத்தலை வசதிப்படுத்துவதற்கு முனைப்புமிக்க வழிமுறைகளை எடுக்கலாம் என்பதுடன் மேல்நோக்கிய விலை அசைவுகளைக் குறைப்பதற்கு தடுத்தல் வழிமுறைகளை எடுக்கலாம். ஐக்கிய அமெரிக்காவின் 2022ஆம் ஆண்டின் பணவீக்க குறைப்புச் சட்டமானது நிரம்பல் பக்க பிரச்சனைகளை நிவர்த்திசெய்வதற்கான அண்மைய அரசாங்க முன்னெடுப்பின் எடுத்துக்காட்டாகும். மருந்துப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கும் உள்நாட்டு சக்தி உற்பத்தியை முதலீடுசெய்வதன் மூலமும் சுத்தமான சக்தியை ஊக்குவிப்பதன் மூலமும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதை இச்சட்டவாக்கம் நோக்காகக் கொண்டுள்ளது.

**முடிவுரை**

வானிலைப் போக்குகள், உலகளாவிய பண்ட விலைகள், மற்றும் அரசாங்க கொள்கைகள் மற்றும் பணவீக்கம் மீதான அவற்றின் பாரதூரமான தாக்கம் போன்ற நிரம்பல் பக்க தளம்பல்களுக்கிடையில் நுட்பமான தொடர்புகள் காணப்படுகின்றது. விலைகளிலுள்ள தளம்பலுக்கு பங்களிப்புச்செய்கின்ற உள்நாட்டு மற்றும் உலகளாவிய சூழலிலிருந்து தோன்றுகின்ற பல்வேறு காரணிகளைக் கொண்ட குறிப்பாக, இலங்கை போன்ற சிறிய திறந்த பொருளாதாரங்களில் சிக்கல்தன்மை வாய்ந்த நிரம்பல் தூண்டல் பணவீக்கமானது நாணயக் கொள்கை

உருவாக்கத்தில் குறிப்பிடத்தக்க சவால்களைத் தோற்றுவிக்கின்றது. தற்காலிக நிரம்பல் அதிர்வுகள் உடனடியான நாணயக் கொள்கை நடவடிக்கையைத் தேவைப்படுத்தாத அதேவேளை, தொடர்ச்சியான இடையூறுகள் விலை உறுதிப்பாட்டைப் பேணுவதில் சிக்கலை உருவாக்கலாம். மேலும், சில நிரம்பல் பக்க சிக்கல்களின் கட்டமைப்புத் தன்மையானது வழமையான நாணயக் கொள்கைக் கருவிகளுக்கு அப்பால், நீண்டகால கொள்கை வழிமுறைகள் மற்றும் கட்டமைப்புசார் சீர்திருத்தங்களைத் தேவைப்படுத்துகிறது. நேரடியாக இனங்காணுகின்ற நிரம்பல் தூண்டல் பணவீக்கத்தில் வரையறைகள் இருந்தபோதிலும், பொருளாதார உறுதிப்பாடு மற்றும் பணவீக்க எதிர்பார்க்கைகள் மீதான மோசமான தாக்கங்களைத் தணிப்பதை இலக்காகக்கொண்டு, மத்திய வங்கிகள் விழிப்புடன் இருக்க வேண்டும். இறுதியாக, நிரம்பல் தூண்டல் பணவீக்கத்தின் நுணுக்கங்களை வழிநடாத்துவதற்கு, குறுகிய கால உறுதிப்படுத்தல் மற்றும் நீண்டகால பொருளாதார நிலைபெறத்தக்கத்தன்மை ஆகிய இரண்டையும் கருத்திற்கொள்கின்ற சமமான உபாயமொன்று தேவைப்படுகின்றது. பணவீக்கம் மீது நிரம்பல் பக்க இடையூறுகளின் தாக்கம் பற்றிய மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் தெளிவானதும் முனைப்புமிக்கதுமான தொடர்பூட்டலானது பணவீக்கத்தில் கேள்வி அழுத்தங்களை முகாமைசெய்யும் பொருட்டு பொருத்தமான நாணயக்கொள்கை நடவடிக்கைகளுடன், எதிர்பார்க்கைகளை முகாமைசெய்து உள்நாட்டு விலை உறுதிப்பாட்டை உறுதிப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**உசாத்துணைகள்:**

1. Amarasekara, C. (2009) Central bank objectives and aggregate disturbances. Proceedings of the Central Bank of Sri Lanka International Research Conference – 2009, pp. 41-55.
2. Bandera, N., Barnes, L., Chavaz, M., Tenreyro, S., and von dem Berge, L. (2023) Monetary policy in the face of shpply shocks: The role of inflation expectations. In ECB Forum on Central Banking, pp. 26-28.
3. John, J., Kumar, D., and Patra, M.D., (2022) Monetary policy: Confronting shpply-driven inflation, RBI Bulletin, 76(7), July 2022, pp. 97-109.
4. Peng, S., Huang. J., Sheehy. J., Laza. R., Visperas. R., Zhong. X., Centeno. G., Khush.G. and Cassman. K. (2004) Rice yields decline with higher night temperature from global warming, Proceedings of the National Academy of Sciences, 101(27), pp. 9971-9975.

(2013=100) ஒப்பிடுகையில் 2023 இறுதியளவில் 0.6 சதவீதத்திற்கு (2021= 100) வீழ்ச்சியடைந்த வேளையில் 2023இல் ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம் 2022இன் 34.6 சதவீதத்துடன் (2013=100) ஒப்பிடுகையில் 14.5 சதவீதத்தில் (2021=100) பதிவுசெய்தது. அதேவேளை, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட மையப் பணவீக்கம் 2022 இறுதியின் 57.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2023 இறுதியில் 0.9 சதவீதத்திற்கு (2021=100) வீழ்ச்சியடைந்தவிடத்து 2023இல் ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம் 2022இல் பதிவுசெய்யப்பட்ட 43.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் (தே.நு.வி.சுட்டெண் 2013=100) 15.8 சதவீதத்திற்கு (தே.நு.வி.சுட்டெண் 2021=100) வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, 2024 தொடக்கத்தில் பெறுமதிசேர் வரியில் செய்யப்பட்ட சீராக்கங்களின் காரணமாக அதிகரித்த விலையின் தாக்கத்தினை மைய நுகர்வோர் கூடையிலுள்ள பெரும்பாலான பொருட்கள் பெறுமதிசேர் வரிக்கு உட்பட்டனவாக இருப்பதன் காரணமாக மையப் பணவீக்கத்தில் காணக்கூடியதாக இருந்தது

**இலங்கை மத்திய வங்கியின், பணவீக்க எதிர்பார்ப்புக்கள் அளவீட்டின் மூலம் எடுத்துக்காட்டப்பட்டவாறு, இவ்வாண்டுப்பகுதியில் கம்பனி மற்றும் வீட்டுத்துறைகள் இரண்டினதும் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் 2022இல் அவதானிக்கப்பட்ட உச்சமட்டங்களிலிருந்து வீழ்ச்சியடைந்தன.** அதேவேளை, நடுத்தர காலப் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் பெருமளவிற்கு நிலையானதாக தொடர்ந்தும் காணப்பட்ட போதும், அண்மைய காலத்தில் சில தளம்பல்கள்

அட்டவணை 1.2

**பணவீக்கத்தின் அசைவுகள் (ஆண்டிற்கு ஆண்டு)**

சதவீதம்

| | | 2013 = 100 | | | | | 2021 = 100 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | திசெ-2019 | திசெ-2020 | திசெ-2021 | செத்-2022 | திசெ-2022 | செத்-2023 | திசெ-2023 | சன-2024 | பெப்-2024 | மாச்-2024 |
| முதன்மைப் | கொ.நு.வி.சு | 4.8 | 4.2 | 12.1 | 69.8 | 57.2 | 1.3 | 4.0 | 6.4 | 5.9 | 0.9 |
| பணவீக்கம் | தே.நு.வி.சு | 6.2 | 4.6 | 14.0 | 73.7 | 59.2 | 0.8 | 4.2 | 6.5 | 5.1 | |
| மையப் | கொ.நு.வி.சு | 4.8 | 3.5 | 8.3 | 50.2 | 47.7 | 1.9 | 0.6 | 2.2 | 2.8 | 3.1 |
| பணவீக்கம் | தே.நு.வி.சு | 5.2 | 4.7 | 10.8 | 64.1 | 57.5 | 1.7 | 0.9 | 2.2 | 2.7 | |
| உணவுப் | கொ.நு.வி.சு | 6.3 | 9.2 | 22.1 | 94.9 | 64.4 | -5.2 | 0.3 | 3.3 | 3.5 | 3.8 |
| பணவீக்கம் | தே.நு.வி.சு | 8.6 | 7.5 | 21.5 | 85.8 | 59.3 | -5.2 | 1.6 | 4.1 | 5.0 | |
| உணவல்லாப் | கொ.நு.வி.சு | 4.3 | 2.0 | 7.5 | 57.6 | 53.4 | 4.7 | 5.8 | 7.9 | 7.0 | -0.5 |
| பணவீக்கம் | தே.நு.வி.சு | 4.2 | 2.2 | 7.6 | 62.8 | 59.0 | 5.9 | 6.3 | 8.5 | 5.1 | |

குறிப்பு: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது முறையே 2023 சனவரியிலும் 2023 பெப்புருவரியிலும் வெளியிடப்பட்ட தரவுகளிலிருந்து 2021=100 எனும் புதிய தள ஆண்டைக் கொண்டு, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணையும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணையும் வெளியீடு செய்ய ஆரம்பித்ததுடன் 2013=100 எனும் பழைய தள ஆண்டைக் கொண்டு, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினதும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினதும் வெளியீட்டை இடைநிறுத்தியது.

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

அவதானிக்கப்பட்டன. பணவீக்க எதிர்பார்ப்புக்களில் காணப்பட்ட கீழ் நோக்கிய சீராக்கங்களுக்கு, கடுமையான இறை மற்றும் நாணயக் கொள்கைகளினால் ஆதரவளிக்கப்பட்ட உண்மைப் பணவீக்கத்தில் ஏற்பட்ட வேகவீழ்ச்சி உட்பட, பல்வேறு வகையான காரணிகள் தூண்டுதலாக அமைந்தன. மேலும், ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா உயர்வடைந்தமை, வழங்கல்பக்க இடையூறுகள் தளர்வடைந்தமை, உலகளாவிய பண்ட விலைகள் மிதமுற்றமை மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை என்பன பணவீக்க எதிர்பார்ப்புக்கள் கீழ்நோக்கி நகரப் பங்களித்தன. இதற்கமைய, கம்பனித் துறையின் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் 2023 ஓகத்து அளவில் ஒற்றை இலக்க மட்டத்தினை அடைந்தன. அதனைத் தொடர்ந்து, மின்வலுத் தீர்வைச் சீராக்கங்களினால் 2023 ஒத்தோபரிலும் மற்றும் பெறுமதிசேர் வரித் திருத்தங்களின் அறிவிப்பின் காரணமாக 2023 திசெம்பரிலும் காணப்பட்ட சிறிதளவு அதிகரிப்புக்கள் நீங்கலாக பணவீக்க எதிர்பார்ப்புக்கள் மேலும் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, வீட்டுத்துறையினரின் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் 2023 நவெம்பரில் ஒற்றை இலக்க மட்டத்தினை அடைந்ததுடன் அதனைத் தொடர்ந்து 2023 திசெம்பரில் சிறிதளவு உயர்வடைந்தன.

## 1.1.2 விலைகள்

**கொழும்பு நுகர்வோர் விலைக் சுட்டெண்ணினாலும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினாலும் அளவிடப்படும் பொது விலை மட்டம் முன்னைய ஆண்டின் கணிசமான உயர் மட்டங்களிலிருந்து 2023இல் மிதமான அதிகரிப்பொன்றினை எடுத்துக்காட்டின.** உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட உணவுப்பொருட்கள் இரண்டினதும் விலைகள் அதிகரித்தனவெனினும் 2022இல் காணப்பட்ட கணிசமான விலை அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் இது மெதுவான வீதமேயாகும். மேலும், உணவல்லாப் பொருட்களின் விலை அசைவுகள் ஆண்டு முழுவதும் செலவினைப் பிரதிபலிக்கின்ற விலையிடல் சரி செய்தல்களின் தாக்கத்திற்கு முதன்மையாக உட்பட்டிருந்தன. இவ்வபிவிருத்திகளுடன் இசைந்து செல்லும் விதத்தில், நுகர்வோர் விலைச் சுட்டெண்களினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு, பொருளாதாரத்தின் வாழ்க்கைச் செலவு 2023இல் தொடர்ந்தும் அதிகரித்ததெனினும் 2022 உடன் ஒப்பிடுகையில் மெதுவான வீதத்திலேயே காணப்பட்டது. **முக்கியமாக வழங்கல்பக்கக் காரணிகளினால் தூண்டப்படுகின்ற இருப்பினும் பண்டிகைக் காலங்களின் போது கேள்விப்பக்கக் காரணிகளின் காலாந்தரச் செல்வாக்கிற்குட்படுகின்ற உணவுப்பொருட்களின் விலைகள் 2022இல் அவதானிக்கப்பட்ட கணிசமான விலை உயர்வுடன் ஒப்பிடுகையில் மிதமான அதிகரிப்பினை எடுத்துக்காட்டின.** போதுமான இரசாயன வளமாக்கிகளின் வழங்கல், எரிபொருள் விலைகளில் காணப்பட்ட குறைப்புக்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் உள்ளீட்டுச் செலவுகள் வீழ்ச்சியடைந்தமை என்பனவற்றினால் தூண்டப்பட்ட சாதகமான அறுவடை உணரப்பட்டது. இதன் காரணமாக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட குறிப்பிட்ட உணவுப்பொருட்களின் விலைகளில் இவ்வாண்டுப்பகுதியில் வீழ்ச்சியொன்று பிரதிபலிக்கப்பட்டது. இருப்பினும் கூட, ஆண்டின் இறுதிப்பகுதியில், தீவு முழுவதிலும் நிலவிய கடுமையான வானிலை நிலைமைகள் பண்டிகைக்காலக் கேள்வியுடன் சேர்ந்து தளம்பலுறும் உணவு விலைகளில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட வழிவகுத்தன. அதேவேளை, 2022இல் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த இறக்குமதி செய்யப்பட்ட உணவுப்பொருட்களின் விலைகள் 2023 காலப்பகுதியில் ஓரளவிற்கு மிதமடைந்தமைக்கு இலங்கை ரூபா வலுவடைந்தமையும் சில நாடுகளினால் விதிக்கப்பட்ட ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளுக்கிடையிலும் உலகளாவிய பண்ட விலைகள் மெதுவடைந்தமையும் காரணங்களாயின.

**செலவினைப் பிரதிபலிக்கின்ற விலையிடல் சூத்திரங்கள் உணவல்லாப் பொருட்களின் விலை அசைவுகளை வடிவமைப்பதில் முக்கிய வகிபாகமொன்றினை ஆற்றின.** உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகள் 2023இல் பொதுவாக அதிகரித்துச் செல்லும் போக்கினைக் காட்டிய போதும் 2022இல் அவதானிக்கப்பட்ட கணிசமான அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் மிதமான வேகத்தினையே கொண்டிருந்தன. இதன்படி, 2023 மாச்சு வரை உணவல்லாப்பொருட்களின் விலைகள் அதிகரித்தமைக்கு, 2023 பெப்புருவரி 16ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 90 அலகுகளை[2] நுகர்ந்த மின் பட்டியல்களுக்கான மின்வலுத் தீர்வை 146 சதவீதத்தினால் மேல்

2 90 அலகுகளைப் பயன்படுத்துவதுடன் தொடர்பான செலவினம் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் கூடையில் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது.

நோக்கித் திருத்தப்பட்டமை முக்கிய காரணமாயமைந்த வேளையில் உள்நாட்டுப் பாவனையாளர்கள் சராசரியாக 66 சதவீதமான தீர்வை அதிகரிப்பினை அனுபவித்தனர். எனினும், 2023 மாச்சு தொடக்கம் உணவல்லாப்பொருட்களின் விலைகள் யூலை வரை வீழ்ச்சியொன்றை அனுபவித்ததுடன் அதனைத் தொடர்ந்து 2023 நவெம்பர் வரை கணிசமான அதிகரிப்பினைக் கொண்டிருந்தமைக்கு பல நிருவாகப் பொருட்களின் விலைச் சீராக்கங்களே முக்கிய தூண்டுதலாக அமைந்தன. 2023 யூலை 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 90 அலகுகளைப் பாவித்த பட்டியல்களுக்கான மின்வலுத் தீர்வை 24 சதவீதத்தினால் கீழ் நோக்கிச் சீராக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து 2023 ஒத்தோபர் 20 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 18 சதவீதம் கொண்ட மேல் நோக்கிய திருத்தமொன்று மேற்கொள்ளப்பட்டது. மேலும், 2023 ஓகத்து 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நீர் தீர்வை 22 அலகுகளின் பாவனைக்கான பட்டியலை 102 சதவீதம் கொண்ட மேல் நோக்கித் திருத்துவதற்கு உட்பட்டிருந்தமையானது மின்வலுத் தீர்வைத் திருத்தங்களில் செய்யப்பட்ட மாற்றங்களை ஓரளவு பிரதிபலித்தது. 2023 காலப்பகுதியில் பெற்றோல் (92 ஒக்ரேன், ஓட்டோ டீசல் மற்றும் மண்ணெண்ணெய்யின் விலைகள் பொதுவாக கீழ் நோக்கிய போக்கினை எடுத்துக்காட்டிய போதும் 2023 பெப்புருவரியிலும் மற்றும் யூலையிலிருந்து ஒத்தோபர் வரையிலும் இடையிடையே அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டன. உலக வலு விலைகள் தளம்பலுற்றுக் காணப்பட்டமைக்கிடையிலும் செலவுகளைப் பிரதிபலிக்கின்ற விலையிடல் சூத்திரத்தினைப் பின்பற்றுகின்ற விதத்தில் இச்சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், 2023இல் ஒட்டுமொத்த வீழ்ச்சியை எடுத்துக்காட்டிய திரவப் பெற்றோலிய வாயு விலைகள் பெப்புருவரி, செத்தெம்பர், ஒத்தோபர் மற்றும் நவெம்பர் மாதங்களில் அதிகரிப்புக்களைக் காட்டின. எரிபொருள் விலைகளில் காணப்பட்ட மாற்றங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் பேருந்துக் கட்டணங்கள் 2023 மாச்சு 31இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 7 சதவீதத்தினால் குறைக்கப்பட்டதுடன் அதன் பின்னர் 2023 செத்தெம்பர் 03இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 4 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டது. எனினும், 2023இல் புகைவண்டிக் கட்டணங்களில் திருத்தங்களெதுவும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், வெறியம்சார் குடிவகைகள் மற்றும் புகையிலையின் விலைகள், 2023 யூலை 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் கலால் தீர்வை மேல் நோக்கித் திருத்தப்பட்டமையினைத் தொடர்ந்து அதிகரித்தன.

### 1.1.3 நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் மற்றும் வாழ்க்கைச் செலவு

**இப்பின்னணியில், பொது விலை மட்டத்தில் ஏற்படும் மாற்றங்களை அளவிடுகின்ற அலுவல்சார் நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் இரண்டும் 2023ஆம் ஆண்டு முழுவதும் மிதமான அதிகரிப்புக்களை எடுத்துக்காட்டின.** இதன்படி, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (2021=100) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023ஆம் ஆண்டுப்பகுதியில் மெதுவான வேகத்தில் அதிகரித்து 2023 திசெம்பரில் 195.1 சுட்டெண் புள்ளியினைப் பதிவுசெய்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் காணப்பட்ட அசைவு 2023 யூன், ஓகத்து, ஒத்தோபர் மற்றும் திசெம்பர் தவிர்ந்த காலப்பகுதியில் உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலை அசைவுகளுடன் பெருமளவிற்கு இசைந்து செல்வதாகக் காணப்பட்டது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணும் (2021=100) 2022 உடன் ஒப்பிடுகையில் 2023ஆம் ஆண்டுப்பகுதியில் மெதுவான வேகத்தில் அதிகரித்து 2023 திசெம்பரில் 208.8 சுட்டெண் புள்ளிகளைப் பதிவுசெய்தது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவிற்கு 2023 மே, யூன், செத்தெம்பர், நவெம்பர் மற்றும் திசெம்பர் மாதங்கள் தவிர்ந்த மற்றைய காலப்பகுதியில் உணவல்லாப்பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட தளம்பல்களே முக்கிய காரணமாக அமைந்தன.

**நுகர்வோர் விலைச் சுட்டெண்களினால்[3] பிரதிபலிக்கப்பட்டவாறான வாழ்க்கைச் செலவு 2023இல் தொடர்ந்தும் அதிகரித்த போதும் 2022இல் காணப்பட்ட அதிகூடிய அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் மெதுவான வேகத்திலேயே காணப்பட்டன.** கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையில் (2021=100) வீட்டுத்துறையொன்றிற்கான[4] மதிப்பிடப்பட்ட சராசரி மாதாந்த நுகர்வுச் செலவினம், 2022இன் ரூ.150,184 இலிருந்து 2023இல் ரூ.176,253 இற்கு 17.4


3 நுகர்வோர் விலைக் சுட்டெண்கள், தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட வீட்டுத்துறையினர் வருமானம் மற்றும் செலவின அளவீடு (2019)இன் நிலையான நுகர்வு கூடைகளை அடிப்படையாகக் கொண்டவை. எனவே காலப்போக்கில் குடும்ப அலகில் ஏற்படும் நுகர்வு முறை மாற்றங்களை பிரதிபலிக்க மாட்டாது.

4 தொகைமதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட வீட்டுத்துறையினர் வருமானம் மற்றும் செலவின அளவீட்டினால் நடத்தப்பட்ட (2019) அளவீட்டின் அடிப்படையில் கொழும்பு மாவட்டத்தில் சராசரி வீட்டுத்துறை 3.8 ஆட்களை உள்ளடக்கயிருந்தது.


1

வரைபடம் 1.2

**வாழ்க்கைச் செலவு, நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் பணவீக்கம்**




மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி




மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

குறிப்பு : 2022இற்கான ஆண்டுக்காண்டு பணவீக்கம் கொ.நு.வி. சுட்டெண்ணினை (2013 = 100) அடிப்படையாகக் கொண்டுள்ளது

**2022ஆம் ஆண்டில், உயர்ந்தளவான பணவீக்க நிகழ்வினைத் தொடர்ந்து, நாணயக் கொள்கையின் வகிபாகம், பொது விலை மட்டத்திலுள்ள மேலதிக அதிகரிப்புக்களைக் குறைத்துள்ளதுடன் அதன்மூலம், உள்நாட்டு விலை உறுதிப்பாட்டை அடைதலாகவுள்ள மத்திய வங்கியின் முதன்மை குறிக்கோளுடன் இசைந்து செல்லும் விதத்தில் இலக்கிடப்பட்ட மட்டத்திற்கு முதன்மைப் பணவீக்கத்தை கொண்டுசென்றுள்ளது. இப்பொருத்தமான கொள்கை வழிமுறைகளின்றி, 2021இன் பிற்பகுதியிலும் 2022இலும் விலை மட்டங்களில் பதிவு செய்யப்பட்ட சடுதியான மேலும் தொடர்ந்து மிகைப் பணவீக்கத்திற்கு வழிவகுத்திருக்கக்கூடும். விலை உறுதிப்பாட்டை நிச்சயப்படுத்துவதன் மூலம் மத்திய வங்கியானது பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த நலத்திற்கும் உறுதிப்பாட்டிற்கும் ஆதரவளிக்கின்றது. இது நீண்டகால நிலைபெறத்தக்க பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமாக விளங்குகின்றது.**

சதவீதத்தினால் அதிகரித்தது. இது 2021 உடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 63.5 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் கணிசமானளவு மெதுவான போக்கினை எடுத்துக்காட்டியது. இதேபோன்று, தேசிய நுகர்வு விலைச்சுட்டெண்ணின் அடிப்படையில் (2021=100) மதிப்பிடப்பட்ட சராசரி மாதாந்த வீட்டுத்துறையினர்[5] நுகர்வுச் செலவினம் 2022இன் ரூ.88,704 இலிருந்து 2023இல் ரூ.103,283 இற்கு 16.5 சதவீதத்தினால் அதிகரித்து 2022இல் பதிவுசெய்யப்பட்ட 74.9 சதவீத அதிகரிப்பிலிருந்து குறிப்பிடத்தக்களவிற்கு தளர்வடைந்தமையினை எடுத்துக்காட்டியது. உணவு மற்றும் உணவல்லாப் பொருட்களுக்கிடையிலான நுகர்வுச் செலவினத்தின் பங்கீட்டினைப் பரிசீலனையில் கொள்கையில் பெரும்பங்கு உணவல்லாப்பொருட்களுக்கு ஒதுக்கப்பட்டமையினை இது எடுத்துக்காட்டியது. மேலும், உணவு வகைக்காக ஒதுக்கப்பட்ட சராசரி மாதாந்த நுகர்வுச் செலவினத்தின் விகிதாசாரத்தில் 2022இல் அவதானிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு, வழங்கல் நிலைமைகள் மேம்பட்டமையின் காரணமாக 2023இல் மிதமடைந்தது.


## 1.1.4 கூலிகள்

**கிடைக்கத்தக்க தகவல்களின்[6] படி, 2023இல் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்த முறைசாரா தனியார் துறை தவிர்ந்த கூலிகள் 2023ஆம் ஆண்டு முழுவதும்**

5 தொகைமதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட வீட்டுத்துறையினர் வருமான மற்றும் செலவின அளவீட்டின் அடிப்படையில் (2019) இலங்கையிலுள்ள சராசரி வீட்டுத்துறை 3.7 ஆட்களாகக் காணப்பட்டது.

6 இந்தப் பகுதியில் உள்ள தகவல் முதன்மையாக, இலங்கை மத்திய வங்கியினால் தொகுக்கப்படும் அரசதுறை கூலி வீதச் சுட்டெண் (2016=100) மற்றும் முறைசாரா தனியார் துறை கூலி வீதச் சுட்டெண் (2018=100) என்பவற்றையும் மற்றும் தொழில் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்ற முறைசார்ந்த தனியார் துறை ஊழியர்களின் குறைந்தபட்ச கூலி வீதச் சுட்டெண் (1978 திசெம்பர் = 100) அடிப்படையாகக் கொண்டது.

**வரைபடம் 1.3** 2023 காலப்பகுதியில் முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண்ணின் அசைவுகள் (பெயரளவு)




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**பெருமளவிற்கு மாற்றமின்றி தேக்க நிலையொன்றில் காணப்பட்டது.** முறைசாராத் தனியார் துறையிலுள்ள ஊழியர்களின் பெயரளவுக் கூலிகளில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பிற்கு வாழ்க்கைச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் தொழிலாளர் நிரம்பலில் ஏற்பட்ட பற்றாக்குறை என்பனவற்றின் காரணமாக நாளாந்தக் கூலித் தொழிலாளர்களினால் கோரப்பட்ட உயர்ந்த கூலிக்கான கோரிக்கையே காரணமாகும். அதேவேளை, வருடாந்தச் சராசரி அடிப்படையில் உண்மைக் கூலிகள் தனியார் துறை மற்றும் அரச துறை இரண்டிலும் தேய்வொன்றினைப் பதிவுசெய்தன. இருப்பினும், கிடைக்கத்தக்க கூலி வீதச் சுட்டெண்கள் அதாவது முறைசாரா தனியார் துறை கூலி வீதச் சுட்டெண் (2018=100), முறைசார்ந்த தனியார் துறை ஊழியர்களின் குறைந்தபட்ச கூலி வீதச் சுட்டெண் (1978 திசெம்பர் = 100) மற்றும் அரசதுறை கூலி வீதச் சுட்டெண் (2016=100) என்பன பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த கூலி வளர்ச்சிகளை அளவிடுவதில் சில வரம்புகளை வெளிப்படுத்துகிறது

## தனியார் துறைக் கூலிகள்

**முறைசாராத் தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண்ணினால் (2018=100) எடுத்துக்காட்டப்பட்டவாறு முறைசாரா தனியார் துறை ஊழியர்களின் பெயரளவு கூலிகள் 2023ஆம் ஆண்டு முழுவதும் அதிகரித்த போக்கொன்றினை எடுத்துக்காட்டின.** குறிப்பாக, இச்சுட்டெண், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023இல் பெயரளவு நியதிகளில் 11.4 சதவீதத்தினால் அதிகரித்தன. துணை நடவடிக்கைகளான வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகளின் நியதிகளில் முறைசாரா தனியார் துறை கூலி வீதச் சுட்டெண் பெயரளவு நியதிகளில் 2022 உடன் ஒப்பிடுகையில் 2023இல் முறையே 13.0 சதவீதத்தினாலும் 9.9 சதவீதத்தினாலும் 13.1 சதவீதத்தினாலும் அதிகரித்தன. இதற்கு உயர்வடைந்து செல்லும் வாழ்க்கைச் செலவிற்குப் பதிலிறுத்தும் விதத்தில் நாளாந்தக் கூலித் தொழிலாளர்களினால் உயர்ந்த இழப்பீட்டிற்கான தொடர்ச்சியான கோரிக்கையே காரணமாகும். இதன் விளைவாக, தொழில்தருநர்கள் அவர்களது வியாபாரத் தொழிற்பாடுகள் தொடர்வதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் குறிப்பிட்ட அனுபவம் வாய்ந்த தொழிலாளர்களைத் தக்கவைத்துக் கொள்வதற்காக நாளாந்தக் கூலிகளை அதிகரிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். மேலும், அனைத்துத் துறைகளிலும் காணப்பட்ட கணிசமானளவு தொழிலாளர் பற்றாக்குறைக்கு மற்றைய நாடுகளுக்கு தொழிலாளர் புலம்பெயர்ந்தமை காரணமாக விளங்கி, அனுபவம் வாய்ந்த தொழிலாளர்களுக்கு போட்டித்தன்மை வாய்ந்த சூழலொன்றினை உருவாக்கியதன் விளைவாக கூலி அதிகரிப்புக்கள் தோற்றம் பெற்றன. எனினும், 2023இன் தொடக்கப்பகுதி வரை நிலவிய உயர்ந்த பணவீக்கச் சூழல் காரணமாக முறைசாராத் தனியார் துறையிலுள்ள ஊழியர்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023இல் 7.1 சதவீதம் கொண்ட உண்மைக் கூலி தேய்விற்கு உட்பட்டிருந்தனர்.

**கூலி நிர்ணய சபையினால் நிருவகிக்கப்படுகின்ற கூலிகளைக் கொண்ட ஊழியர்களின் குறைந்தபட்ச கூலி வீதச் சுட்டெண் தொடர்பில் தொழில் திணைக்களத்தினால் திரட்டப்பட்ட குறைந்தபட்ச கூலி வீதச் சுட்டெண்ணின் (1978 திசெம்பர் = 100) அளவிடப்பட்டவாறான முறைசார்ந்த தனியார் துறையிலுள்ள ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் 2023இல் சிறிய அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன.** இதற்கமைய, பெயரளவு குறைந்தபட்சக் கூலி வீதச் சுட்டெண் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023இல் 0.4 சதவீதத்தினால் அதிகரித்தது. இருப்பினும், குறைந்தபட்ச உண்மைக் கூலி வீதச் சுட்டெண் 2022 உடன் ஒப்பிடுகையில் 2023இல் 17.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

## அரச துறைக் கூலிகள்

**அரச துறை கூலி வீதச் சுட்டெண்ணினால் (2016=100) அளவிடப்பட்டவாறான அரச துறை ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் 2023இல் தொடர்ந்தும்**

**மாற்றமின்றிக் காணப்பட்டு உண்மைக் கூலி 17.5 சதவீதம் கொண்ட தேய்வினைப் பதிவுசெய்தது.** இருப்பினும் கூட, 2024இல் வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு. அரச துறை ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படி 2024 சனவரியிலிருந்து ரூ.10,000 இனால் அதிகரிக்கப்பட்டது. இறைத் தடங்கல்களின் காரணமாக அரச துறை ஊழியர்களுக்கு 2024 சனவரியிலிருந்து மாச்சு வரை ரூ.5,000 கொண்ட பகுதியளவு கொடுப்பனவுச் வழங்கப்பட்டது. ரூ.10,000 கொண்ட முழுக் கொடுப்பனவு 2024 ஏப்பிறலிலிருந்து வழங்கப்படும். அதேவேளை, முதல் மூன்று மாதங்களுக்குமான நிலுவை 2025 சனவரி தொடக்கம் மூன்று சமமான தவணைகளில் செலுத்தப்படும்.

## 1.2 உண்மைத் துறை அபிவிருத்திகள்


### 1.2.1 பொருளாதார வளர்ச்சி

**இலங்கையின் பொருளாதாரம் 2022இல் அவதானிக்கப்பட்ட 7.3 சதவீதம் கொண்ட கணிசமான சுருக்கத்துடன் ஒப்பிடுகையில், 2023இல் 2.3 சதவீதம் கொண்ட மிதமான வேகத்தில் சுருக்கமடைந்தமையின் மூலம் தாக்குப்பிடிக்கும் தன்மையினை எடுத்துக்காட்டியது.** 2023 இல் படிப்படியாக ஆனாலும் நிலைத்து நிற்கத்தக்க தாக்குப் பிடிக்கும் தன்மையை கொண்டிருந்தமைக்கு குறிப்பாக மொத்த உள்நாட்டு உற்பத்தி[7] ஆண்டின் பின்னரைப்பகுதியில் நேர்மறையான வளர்ச்சி வீதங்களை பதிவுசெய்தமை சான்றாக இருந்தது. இதற்கு மெதுவடைந்த பணவீக்கத்திற்கு மத்தியில் புதுப்பிக்கப்பட்ட பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு மற்றும் வெளிநாட்டுத் துறை அழுத்தங்களில் தளர்வு என்பன அடித்தளமாக அமைந்தன.

**நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி 2023இல் ரூ.27,629.7 பில்லியனுக்கு 14.8 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு மொ.உ.உற்பத்திச் சுருக்கியினால் பிரதிபலிக்கப்பட்டவாறு 17.5 சதவீதம் கொண்ட விலைத் தாக்கமே காரணமாகும்.** மேலும், உலகின் ஏனைய நாடுகளிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானத்திற்கு மொ.உ.உற்பத்தியை சீராக்கம் செய்வதன் மூலம் மதிப்பிடப்படுகின்ற மொத்தத் தேசிய வருமானமும் 2023இல் நடைமுறை விலைகளில் 14.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. ஐ.அ.டொலர் நியதிகளில்

7 தொகைமதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களம் உற்பத்தி, செலவினம் மற்றும் வருமான அணுகுமுறைகளில் மொ.உ.உற்பத்தியை மதிப்பிட்டது.

வரைபடம் 1.4 மொ.உ.உற்பத்தி ஆண்டு வளர்ச்சி வீதங்கள் (அ)




(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை (அடிப்படை ஆண்டு 2015) அடிப்படையாகக் கொண்டது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

மொ.உ.உற்பத்தி 2023இன் 84.4 பில்லியனுக்கு 2022இன் 76.8 பில்லியனிலிருந்து அதிகரித்தமைக்கு இவ்வாண்டுப்பகுதியில் இலங்கை ரூபாவில் ஏற்பட்ட அதிகரிப்பு உதவியாக அமைந்தது.

**பெயரளவு மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சி மற்றும் நடுவாண்டுக் குடித்தொகை வீழ்ச்சியடைந்தமை என்பனவற்றின் தூண்டுதலினால் தலைக்குரிய மொ.உ.உற்பத்தி 2022இன் ரூ.1,084,882 உடன் ஒப்பிடுகையில் 2023இன் ரூ.1,253,785 இற்கு அதிகரித்தது.** அதேவேளை, தலைக்குரிய மொத்தத் தேசிய வருமானமும் 2022இன் ரூ.1,056,424 உடன் ஒப்பிடுகையில் 2023இல் ரூ.1,213,159 இற்கு அதிகரித்தது. ஐ.அ.டொலர் நியதிகளில் தலைக்குரிய மொ.உ.உற்பத்தி 2022இன் 3,464 உடன் ஒப்பிடுகையில் 2023இல் 3,830 ஆகவும் தலைக்குரிய மொத்தத் தேசிய வருமானம் 2022இன் 3,378 உடன் ஒப்பிடுகையில் 2023இல் 3,706 ஆகவும் அமைந்தது.

### 1.2.2 உற்பத்தி

#### வேளாண்மை

**வேளாண்மை நடவடிக்கைகள், 2023இல் கூட்டப்பட்ட பெறுமதியில் ஏற்பட்ட 2.6 சதவீதம் கொண்ட அதிகரிப்புக்களுடன் குறிப்பிடத்தக்க மீளெழுச்சியை எடுத்துக்காட்டியதுடன் 2022இல் காணப்பட்ட 4.2 சதவீதம் கொண்ட சுருக்கத்திலிருந்து கணிசமானளவிற்கு தலைகீழான மாற்றமொன்றினை எடுத்துக்காட்டியமைக்கு மேம்பட்ட வழங்கல் நிலைமைகள் குறிப்பாக வளமாக்கி, ஏனைய வேளாண் இரசாயன உள்ளீடுகள் மற்றும் எரிபொருள் வழங்கல் நிலைமைகள் மேம்பட்டமையே தூண்டுதலாக அமைந்தது.** அரிசி, பழவர்க்கங்கள், காய்கறிகளின் உற்பத்தி மற்றும் மீன்பிடி நடவடிக்கைகள் என்பன

இவ்வளர்ச்சிக்கு முக்கியமாகப் பங்களித்தன. எனினும், தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு வளர்ப்பு இவ்வாண்டுப்பகுதியில் சுருக்கமடைந்தமைக்கு வானிலையில் காணப்பட்ட முரண்பாடான தன்மையின் மோசமான தாக்கமே காரணமாகும்.

## கைத்தொழில்

**வழங்கல்பக்க தடைகளில் படிப்படியான மீட்சியொன்று ஆண்டு முழுவதிலும் அவதானிக்கப்பட்ட போதும் குறைவடைந்த கேள்வி நிலைமைகள் தொடர்ந்தும் அனைத்துக் கைத்தொழில் நடவடிக்கைகளுக்கும் இடையூறுகளை ஏற்படுத்தியதன் விளைவாக 2023ஆம் ஆண்டுப்பகுதியில் கைத்தொழில் நடவடிக்கைகளில் 9.2 சதவீதம் கொண்ட சுருக்கம் ஏற்பட்டது.** இதற்கு, பொருளாதார சரிவுகளினால் மிகக் கடுமையாக பாதிக்கப்படக்கூடிய கட்டுமானக் கைத்தொழில்கள் தொடர்பில் நிலைமைகள் மேம்படும் வரை கட்டுமானச் செயற்றிட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டமையின் காரணமாக அத்துறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியே காரணமாக அமைந்தது. மேலும், பாரிய கைத்தொழில் பிரிவான தயாரிப்புத் துறையும் இவ்வாண்டுக் காலப்பகுதியில் சுருக்கமடைந்தமைக்கு புடவைகளின் தயாரிப்பு, அணியும் ஆடைகள் தோலுடன் தொடர்பான கைத்தொழில்களுக்கான உலகளாவிய கேள்வி கணிசமானளவிற்கு வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். எனினும், ஆண்டின் பிற்பகுதியில் பெரும்பாலான ஏனைய கைத்தொழில் நடவடிக்கைகள் வலுவான மீட்சியைப் பதிவுசெய்தமைக்கு, உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகளும் நிலக்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் தயாரிப்பும் ஆதரவாக அமைந்தன.

## பணிகள்

**தங்குமிட வசதி, உணவு மற்றும் குடிவகைப் பணிகள் மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகளில் காணப்பட்ட கணிசமான வளர்ச்சிக்கு, குறிப்பாக ஆண்டின் பின்னரைப்பகுதியில் சுற்றுலாத் துறையின் படிப்படியான மீளெழுச்சியும், சிறந்த வலு வழங்கலும் காரணங்களாக அமைந்ததுடன் 2023இல் ஒட்டுமொத்தப் பணி நடவடிக்கைகள் 0.2 சதவீதத்திற்கு சுருக்குவதனை மட்டுப்படுத்துவதில் மிக முக்கியமான வகிபாகத்தினை ஆற்றின.** எனினும், குறிப்பாக, ஆண்டின் முன்னரைப்பகுதியில், நிலவிய உயர்ந்த வட்டி வீத சூழலினால் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்ட நிதியியல் பணிகள் மற்றும் உண்மைச் சொத்து நடவடிக்கைகளும் கணனி நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளில் காணப்பட்ட

அட்டவணை 1.3


**நிலையான விலைகளில் (2015) கைத்தொழில் மூலத்தின்படி மொத்த தேசிய வருமானம் (அ)(ஆ)**

| பொருளாதார நடவடிக்கை | மாற்றத்திற்கான வீதம் (%) | | வளர்ச்சிக்கான பங்களிப்பு (%) | | மொ.உ.உ. இன் சதவீதமாக (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2022 (இ) | 2023 | 2022 (இ) | 2023 | 2022 (இ) | 2023 |
| வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி | - 4.2 | 2.6 | - 0.3 | 0.2 | 7.5 | 7.9 |
| தயாரிப்பு, சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் மற்றும் ஏனைய கைத்தொழில் | - 13.9 | - 4.7 | - 2.9 | - 0.9 | 19.6 | 19.1 |
| இதில் : தயாரிப்பு நடவடிக்கைகள் | - 12.7 | - 3.2 | - 2.2 | - 0.5 | 16.1 | 16.0 |
| கட்டடவாக்கம் | - 20.9 | - 20.8 | - 1.9 | - 1.6 | 7.6 | 6.2 |
| மொத்த மற்றும் சில்லறை வியாபாரம், போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல், தங்குமிடம் மற்றும் உணவுப் பணிகள் நடவடிக்கைகள் | 2.4 | 3.1 | 0.6 | 0.8 | 26.5 | 28.0 |
| தகவல் மற்றும் தொடர்பூட்டல் | - 0.4 | - 13.2 | - 0.0 | - 0.5 | 3.4 | 3.0 |
| நிதியியல் மற்றும் காப்புறுதி நடவடிக்கைகள் | - 18.3 | - 5.3 | - 1.0 | - 0.3 | 5.0 | 4.8 |
| உண்மைச் சொத்து நடவடிக்கைகள் (வதிவிட உரிமை உள்ளடங்கலாக) | - 12.1 | - 6.0 | - 0.6 | - 0.3 | 4.6 | 4.4 |
| தொழிற்தகைமை, விஞ்ஞான, தொழில்நுட்ப, நிர்வாக மற்றும் ஆதரவளிக்கின்றச் சேவை நடவடிக்கைகள் | - 17.7 | 2.4 | - 0.4 | 0.0 | 2.0 | 2.1 |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் | - 0.3 | - 0.6 | - 0.0 | - 0.1 | 9.6 | 9.8 |
| ஏனைய சேவைகள் (சொந்த சேவைகள் நீங்கலாக) | 0.3 | 0.4 | 0.0 | 0.0 | 8.2 | 8.4 |
| **அடிப்படை விலையில் மொத்த பெறுமதி கூட்டலிற்குச் சமனான** | - 7.0 | - 2.6 | - 6.6 | - 2.5 | 94.1 | 93.7 |
| மானியங்கள் நீங்கலாக உற்பத்தி மீதான வரி | - 12.4 | 2.8 | - 0.8 | 0.2 | 5.9 | 6.3 |
| **சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குச் சமனான** | - 7.3 | - 2.3 | - 7.3 | - 2.3 | 100.0 | 100.0 |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானம் | - 4.5 | - 23.7 | | | | |
| **சந்தை விலையில் மொத்த தேசிய வருமானம்** | - 7.6 | - 3.0 | | | | |

அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை (அடிப்படை ஆண்டு 2015) அடிப்படையாகக்கொண்டது
ஆ) தற்காலிகமானது
இ) திருத்தப்பட்டது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் 1.5 பொருளாதார நடவடிக்கைகளின் வளர்ச்சி - 2023 (அ)




(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளின் (அடிப்படை ஆண்டு 2015) அடிப்படையிலமைந்துள்ளன

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

தொடர்ச்சியான சுருக்கமும் இவ்வாண்டுப்பகுதியில் பணிகள் நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கு பெரும் எதிர்மறையான தாக்கத்தினைக் கொண்டிருந்தன.

### 1.2.3 செலவினம்

**செலவினக் கண்ணோட்டத்தில், நடைமுறை விலைகளில் பொருளாதாரத்தின் மொத்தக் கேள்வியில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு உள்நாட்டு மற்றும் தேறிய வெளிநாட்டுக் கேள்விகள் இரண்டும் சாதகமாகப் பங்களித்தன.** 2023இல் உள்நாட்டுக் கேள்வியின் நியதிகளில், முனைப்பு மிக்க செலவினக்கூறான நுகர்வுச் செலவினம் 16.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில், முதலீட்டுச் செலவினம் 1.6 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டது. நுகர்வுச் செலவினத்தில் ஏற்பட்ட ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு, விலையின் தூண்டுதலினால் தனியார் மற்றும் அரசு இரண்டினதும் நுகர்வுச் செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாயமைந்தது. இவ்வாண்டுப்பகுதியில் முதலீட்டுச் செலவினத்தில் அதிகரிப்புக் காணப்பட்ட போதும் நிலையான மூலதன உருவாக்கம் சுருக்கமடைந்தமைக்கு கட்டுமான நடவடிக்கைகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி வழிவகுத்தது. மேலும், பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் மீதான செலவினத்தில் காணப்பட்ட தேக்கநிலையில் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வளர்ச்சி தேறிய வெளிநாட்டுக் கேள்வியில் கணிசமான முன்னேற்றங்களைத் தோற்றுவித்தது.

**2023இல் நிலையான விலைகளில் செலவின மதிப்பீடுகளைப் பரிசீலனையில் கொள்கையில், நுகர்வுச் செலவினம் சுருக்கமடைந்தமைக்கு கொள்வனவுச் சக்தி குறைவடைந்தமை காரணமாயமைந்த வேளையில் முதலீட்டுச் செலவினம் சுருக்கமடைந்தமைக்கு மோசமடைந்த முதலீட்டு நிலைமைகள் காரணமாயமைந்தது.** அதேவேளை இவ்வாண்டுப்பகுதியில் தேறிய வெளிநாட்டுக் கேள்வி நிலையான விலைகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தமையானது உண்மை நியதிகளில் மொ.உ.உற்பத்திச் சுருக்கம் 2.3 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்படுவதற்கு உதவியது.

அட்டவணை 1.4

**நடைமுறைச் சந்தை விலைகளில் கூட்டுக் கேள்வி மற்றும் சேமிப்புக்கள் (அ)(ஆ)**

| வகை | ரூ.பில்லியன் | | (%) மாற்றம் | | மொ.உ.உ இன் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2022 (இ) | 2023 | 2022 (இ) | 2023 | 2022 (இ) | 2023 |
| **1. உள்நாட்டு கேள்வி** | 24,921.2 | 28,042.4 | 31.8 | 12.5 | 103.6 | 101.5 |
| 1.1 நுகர்வு | 18,038.2 | 21,051.6 | 45.0 | 16.7 | 75.0 | 76.2 |
| தனியார் | 16,311.0 | 19,158.5 | 51.3 | 17.5 | 67.8 | 69.3 |
| அரசு | 1,727.3 | 1,893.1 | 3.8 | 9.6 | 7.2 | 6.9 |
| 1.2 முதலீடு (மொத்த மூலதன உருவாக்கம்) | 6,883.0 | 6,990.8 | 6.4 | 1.6 | 28.6 | 25.3 |
| மொத்த நிலையான மூலதன உருவாக்கம் | 5,724.1 | 4,859.6 | 23.4 | -15.1 | 23.8 | 17.6 |
| இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் கையகப்படுத்தல்களிலிருந்து கழித்தொதுக்கப்பட்ட பெறுமதிகள் | 1,159.0 | 2,131.2 | -36.7 | 83.9 | 4.8 | 7.7 |
| **2. தேறிய வெளிநாட்டு கேள்வி** | -857.5 | -412.7 | 34.1 | 51.9 | -3.6 | -1.5 |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதி | 5,187.9 | 5,634.2 | 74.1 | 8.6 | 21.6 | 20.4 |
| பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதி | 6,045.4 | 6,046.9 | 41.2 | 0.0 | 25.1 | 21.9 |
| **3. மொத்தக் கேள்வி (மொ.உ.உ.) (1+2)** | 24,063.8 | 27,629.7 | 36.6 | 14.8 | 100.0 | 100.0 |
| **4. உள்நாட்டு சேமிப்புக்கள் (3-1.1)** | 6,025.5 | 6,578.1 | 16.6 | 9.2 | 25.0 | 23.8 |
| தனியார் | 7,566.0 | 8,228.9 | 17.1 | 8.8 | 31.4 | 29.8 |
| அரசு | -1,540.4 | -1,650.9 | -19.4 | -7.2 | -6.4 | -6.0 |
| **5. வெளிநாட்டிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானம் (ஈ)** | -631.2 | -895.3 | -59.6 | -41.8 | -2.6 | -3.2 |
| **6. வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் (ஈ)** | 1,159.4 | 1,836.2 | 12.1 | 58.4 | 4.8 | 6.6 |
| **7. தேசிய சேமிப்புக்கள் (4+5+6)** | 6,553.7 | 7,519.0 | 12.8 | 14.7 | 27.2 | 27.2 |
| **8. சேமிப்புக்கள் முதலீட்டு இடைவெளி** | | | | | | |
| உள்நாட்டு சேமிப்புக்கள் - முதலீடு (4-1.2) | -857.5 | -412.7 | | | -3.6 | -1.5 |
| தேசிய சேமிப்புக்கள் - முதலீடு (7-1.2) | -329.3 | 528.2 | | | -1.4 | 1.9 |
| **9. வெளிநாட்டு நடைமுறை கணக்கு நிலுவை (2+5+6) (ஈ)** | -329.3 | 528.2 | | | -1.4 | 1.9 |

(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை (அடிப்படை ஆண்டு 2015) அடிப்படையாகக் கொண்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது
(ஈ) சென்மதி நிலுவை மதிப்பீடுகளுடனான ஏதேனும் வேறுபாடுகளிற்கு தொகுப்பில் ஏற்படுகின்ற காலதாமதமே காரணமாகும்.

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**2023 காலப்பகுதியில், நடைமுறை விலைகளில் நாட்டின் உள்நாட்டு சேமிப்புக்கள் 9.2 சதவீதத்தினால் மேம்பட்ட வேளையில் தேசிய சேமிப்புக்கள் 14.7 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டன.** தேசிய சேமிப்புக்களில் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சிக்கு ரூபா நியதிகளில் உலகின் எஞ்சிய பகுதிகளிலிருந்து தேறிய நடைமுறை மாற்றல்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காரணமாயமைந்த வேளையில் உலகின் ஏனைய பகுதிகளிலிருந்தான தேறிய ஆரம்ப வருமானம் தொடர்ந்தும் சுருக்கமடைந்து காணப்பட்டது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2023இல் 23.8 சதவீதத்தினைப் பதிவுசெய்த வேளையில் தேசிய சேமிப்பு 27.2 சதவீதமாக விளங்கியது. மேலும், தேசிய சேமிப்புக்கள் - முதலீட்டு இடைவெளி 2023இல் நேர்க்கணியத்திற்கு திரும்பியமைக்கு, வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றத்துடன், முதலீட்டுடன் ஒப்பிடுகையில் தேசிய சேமிப்புக்களில் ஏற்பட்ட ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வளர்ச்சி காரணமாயமைந்தது.

### 1.2.4 வருமானம்

**2023இன் வருமான மதிப்பீடுகளைப் பரிசீலனையில் கொள்கையில், பொருளாதாரத்தின் மிகப்பெரும் வருமானக் கூறான மொத்த தொழிற்பாட்டு மிகை, 2022இல் பதிவுசெய்யப்பட்ட 39.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் நடைமுறை விலைகளில் 21.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து மொத்த கூட்டப்பட்ட பெறுமதியில் 37.9 சதவீதத்திற்கு வகைகூறியது.** இரண்டாவது மிகப்பெரிய வருமானக்கூறான மொத்தக் கலப்பு வருமானம் 2022இன் 43.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2023இல் 13.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. ஏனைய முக்கிய வருமான மூலங்களின் நியதிகளில் உற்பத்தி மீதான உதவுதொகைகளையும் கழித்த ஏனைய வரிகள் தொடர்ந்து இவ்வாண்டுப்பகுதியில் விரிவடைந்த அதேவேளை, ஊழியர்களின் இழப்பீடு, நிதியல்லா கூட்டுத்தாபனங்களால் தூண்டப்பட்டு சுருக்கமடைந்தது. மொத்தப் பெறுமதி கூட்டப்பட்டவற்றின் நிறுவன ரீதியான

1

அட்டவணை 1.5

## நடைமுறைச் சந்தை விலைகளில் பொருளாதாரத் துறையில் வருமானக் கூறுகள் (அ)(ஆ)

| வகை | சதவீதப் பங்கு (%) | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2022 (இ) | | | | | 2023 | | | | |
| | நிதியல்லா கூட்டுத்தாபனங்கள் | நிதிக் கூட்டுத்தாபனங்கள் | பொது அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் | அடிப்படை விலையில் மொத்த பெறுமதி கூட்டப்பட்டவை | நிதியல்லா கூட்டுத்தாபனங்கள் | நிதிக் கூட்டுத்தாபனங்கள் | மத்திய அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் | அடிப்படை விலையில் மொத்த பெறுமதி கூட்டப்பட்டவை |
| ஊழியர்களின் நட்டஈடு | 48.2 | 10.3 | 23.4 | 18.1 | 27.0 | 44.7 | 11.1 | 23.7 | 20.6 | 23.8 |
| மொத்த தொழிற்பாட்டு மிகை | 85.7 | 12.0 | 2.3 | - | 35.4 | 84.3 | 13.8 | 2.0 | - | 37.9 |
| மொத்த கலப்பு வருமானம் | - | - | - | 100.0 | 37.3 | - | - | - | 100.0 | 37.6 |
| உற்பத்தி மீதான மானியங்களை கழித்த ஏனைய வரிகள் | 71.2 | 11.1 | - | 17.7 | 0.2 | 64.1 | 14.6 | - | 21.3 | 0.7 |
| அடிப்படை விலையில் மொத்த பெறுமதி கூட்டப்பட்டவை | 43.5 | 7.1 | 7.1 | 42.3 | 100.0 | 43.0 | 7.9 | 6.4 | 42.6 | 100.0 |

(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை (அடிப்படை ஆண்டு 2015) அடிப்படையாக கொண்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

துறைப் பகுப்பாய்வினைப் பரிசீலனையில் கொள்கையில் நிதியல்லா கூட்டுத்தாபனங்கள் பாரிய வருமான உருவாக்கிகளாகக் காணப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து முறையே வீட்டுத்துறையும் வீட்டுத்துறைக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்களும், நிதிக் கூட்டுத்தாபனங்களும் மற்றும் பொது அரசாங்கமும் காணப்பட்டன.

## 1.2.5 குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழில்நிலை

**பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்டவாறு 2023இல் இலங்கையின் நடுவாண்டுக் குடித்தொகை 22.037 மில்லியனுக்கு 0.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு பிறப்புக்கள் குறைவடைந்தமையும் இறப்பு மற்றும் தேறிய புலம்பெயர்வில் ஏற்பட்ட அதிகரிப்புக்களும் காரணங்களாக அமைந்தன.** குடித்தொகையில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் இசைந்து செல்லும் விதத்தில் நாட்டின் குடித்தொகை அடர்த்தி, 2022இல் பதிவுசெய்யப்பட்ட சதுர கிலோ மீற்றரொன்றிற்கான 354 மக்களிலிருந்து 2023இல் சதுர கிலோ மீற்றரொன்றிற்கு 351 மக்களுக்கு குறைவடைந்தது.

**தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட இலங்கை தொழிற்படை அளவீட்டில் காட்டப்பட்டவாறு பொருளாதார ரீதியாகச் செயற்படுகின்ற[8] குடித்தொகை (தொழிற்படை) 2022இல் பதிவுசெய்யப்பட்ட 8.547 மில்லியனிலிருந்து 2023இல் 8.408 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. வீட்டுத்துறை குடித்தொகைக்கான தொழிற்படையின் விகிதமாக விளங்கும் தொழிற்படைப் பங்கேற்பு வீதமும் 2022இன் 49.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2023இல் 48.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.**

8 இது தற்போதைய பொருளாதார ரீதியாக செயற்படுகின்ற குடித்தொகையாகும். அதாவது தொடர்பான ஒரு வாரகாலப்பகுதியில் தொழிலுள்ள அல்லது தொழிலில்லாத ஆட்களின் எண்ணிக்கையாகும் (15 வயதும் அதற்குமேல்).

**2023இல் தொழிலற்ற குடித்தொகை[9] மற்றும் தொழிற்படை இரண்டிலும் ஏற்பட்ட வீழ்ச்சியின் இணைந்த பெறுபேறாக இவ்வாண்டுப்பகுதியில் தொழிலின்மை வீதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023இல் 4.7 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது.** 2023இல் தொழிலற்றவர் குடித்தொகை 2022இன் 0.399 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 0.398

9 தொழிலுக்குக் கிடைக்கத்தக்க அத்துடன் அல்லது தொழிலை எதிர்பார்த்திருக்கும் ஆட்கள் மற்றும் தொழில்புரியாத மற்றும் கடந்த நான்கு வாரங்களில் தொழிலொன்றினைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட அத்துடன் அடுத்த இரண்டு வார காலப்பகுதியில் தொழில்வாய்ப்பொன்றினை ஏற்றுக்கொள்ளத் தயாராகவுள்ள ஆட்கள் தொழிலற்றவர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றனர்.

அட்டவணை 1.6

## குடும்ப அலகுகளின் குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழிற்படை பங்கேற்பு

| விடயம் | 2022 | 2023 (அ) |
|---|---|---|
| குடும்ப அலகுகளின் எண்ணிக்கை '000 ஆட்கள் (ஆ) | 17,162 | 17,306 |
| தொழிற்படை '000 ஆட்கள் | 8,547 | 8,408 |
| தொழிலுள்ளோர் | 8,148 | 8,010 |
| தொழிலற்றோர் | 399 | 398 |
| தொழிலின்மை வீதம் | 4.7 | 4.7 |
| ஆண் | 3.7 | 3.6 |
| பெண் | 6.5 | 7.0 |
| தொழிற்படை பங்கேற்பு வீதம் (இ) | 49.8 | 48.6 |
| ஆண் | 70.5 | 68.6 |
| பெண் | 32.1 | 31.3 |

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

(அ) தற்காலிகமானது
(ஆ) 15 வயதிற்கும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் குடித்தொகை
(இ) குடும்ப அலகுகளின் குடித்தொகையின் சதவீதமாக தொழிற்படைப் பங்கேற்பு

மில்லியனுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. மேலும், 2023இல் தொழிலிலுள்ளவர்களின் குடித்தொகையும்[10] முன்னைய ஆண்டின் 8.148 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023இல் 8.010 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

**வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்காகப் புறப்பட்டவர்களின் எண்ணிக்கை உயர்வாக இருந்த போதும் 2022இன் 311,056 இலிருந்து 2023இல் 297,656 இற்குக் குறைவடைந்து 4.3 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.** இவ்வாண்டுப்பகுதியில் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்காகச் சென்றவர்களின் மொத்தத் தொகையில் தொழில் வாய்ப்பிற்காகச் சென்ற ஆண்கள் மற்றும் பெண்களின் தொகை முறையே 55.3 சதவீதத்திற்கும் 44.7 சதவீதத்திற்கும் வகைகூறியது.

## 1.2.6 பொருளாதார உட்கட்டமைப்பு

### வலு மற்றும் சக்தி

#### பெற்றோலியம்

**ஆண்டின் பிற்பகுதியில் புவிசார் அரசியல் பதற்றங்கள் விலைகளில் மேல் நோக்கிய அழுத்தங்களை ஏற்படுத்திய போதும், 2023இல் மசகெண்ணெய்யின் உலகளாவிய விலைகளில் அவதானிக்கப்பட்ட பொதுவான கீழ்நோக்கிய போக்கு இலங்கை ரூபாவின் உயர்வடைதலுடன் சேர்ந்து, 2022 உடன் ஒப்பிடுகையில் பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விலைகளில் குறைவினை ஏற்படுத்தின.** 2022 உடன் ஒப்பிடும் போது 2023இல் உலகளாவிய மசகெண்ணெய் விலைகள் வீழ்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு குறைவடைந்த உலகளாவிய கேள்வி பெருமளவிற்குக் காரணமாயமைந்ததுடன் பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு நாடுகளின் தன்னிச்சையான உற்பத்திக் குறைப்பை எதிரீடு செய்தது. இதற்கமைய சராசரி பிறென்ட் மசகெண்ணெய் விலைகள் 2022இன் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 99.06 இலிருந்து 2023இல் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 82.22 இற்கு 17.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உலகளாவிய மசகெண்ணெய் விலைகளில் காணப்பட்ட இக்கீழ்நோக்கிய போக்குடன் இசைந்து செல்லும் விதத்தில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மசகெண்ணெய்யின் ஆண்டுச் சராசரி இறக்குமதி விலைகள் 2023இல் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 89.60 இற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் இலங்கை ரூபாவின் படிப்படியான உயர்வும் ரூபா நியதிகளில் இறக்குமதி விலைகள் வீழ்ச்சியடைய ஆதரவளித்தன. செலவினைப் பிரதிபலிக்கும் விலையிடல் சூத்திரத்துடன் இசைந்துசெல்லும் விதத்தில் பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விலைகளுக்கு மாதாந்த சீராக்கங்கள் ஆண்டு முழுவதிலும் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக, ஆண்டின் இறுதியில் பெற்றோலிய கூட்டுத்தானத்தின் பெற்றோல் 92, டீசல், மண்ணெண்ணெய் என்பனவற்றின் சில்லறை விலைகள் 2022இன் இறுதியில் காணப்பட்டவற்றுடன் ஒப்பிடுகையில் முறையே 6.5 சதவீதம், 21.7 சதவீதம், 32.3 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்தக் குறைப்புக்களைப் பதிவுசெய்தன. எனினும், 2023 சனவரி மற்றும் யூன் மாதங்களில் இடம்பெற்ற இரண்டு சுற்றுக்களில் முக்கிய சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் மீது அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட லீற்றர் ஒன்றிற்கான ரூ.25.00 கொண்ட கலால் தீர்வை விதிக்கப்பட்டமையின் காரணமாக மேலதிக குறைப்புக்கள் நிறுத்தப்பட்டன.[11]

**பொருளாதார நெருக்கடிகளை உடனடுத்து வந்த காலப்பகுதியில் பொருளாதார நடவடிக்கைகள் படிப்படியாக பழையநிலைக்கு திரும்பியமையினையும் மேம்பட்ட வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மை நிலைமையின் காரணமாக எரிபொருள் கிடைப்பனவு மேம்பட்டமையினையும் பிரதிபலிக்கும் வகையில் 2023இல் பெற்றோலிய விற்பனைகள் அதிகரித்தன.** பெற்றோலிய உற்பத்திகளின் விற்பனை அளவுகள் 2023இல் 7.1 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தன. மேலும், வழங்கல் கட்டுப்பாடுகள் இல்லாமல் போனமையுடன் அரசாங்கம் தேசிய எரிபொருள் அனுமதி கியூஆர்(QR) குறியீட்டு முறைமையின் கீழான வாராந்த வழங்கல் அளவுகளை 2023 ஏப்பிறலிலும் மேயிலும் அதிகரித்தமையின் மூலம் 2022இன் நடுப்பகுதியிலிருந்து நடைமுறையிலிருந்த கேள்வி முகாமைத்துவ உபாயங்களைத் தளர்த்துவதற்கு அரசாங்கம் வழிமுறைகளை மேற்கொண்டதுடன் அதனைத் தொடர்ந்து 2023 செத்தெம்பரில் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இவ்வனுமதிப் பங்குகள் ஒழிக்கப்பட்டன.

10 ஆய்விற்குரிய காலப்பகுதியில் குறைந்தபட்சம் ஒரு மணித்தியாலமாவது கொடுப்பனவு பெறும் ஊழியர்களாக, தொழில்தருநர்களாக, சொந்தத் தொழில்புரிபவர்களாக அல்லது பங்களிக்கின்ற குடும்ப உறுப்பினராக பணியாற்றும் ஆட்கள் தொழில்புரிபவர் எனக் குறிப்பிடப்படுவர். இது தொழிலிலுள்ள ஆட்களை உள்ளடக்குகின்ற போதிலும் ஆய்விற்குரிய காலப்பகுதியில் தொழில்புரியாத ஆட்களை உள்ளடக்காது

11 முக்கிய பெற்றோலிய உற்பத்திகளான பெற்றோல் 92, பெற்றோல் 95, டீசல், சிறப்பு டீசல் என்பன மீதான பெறுமதிசேர் வரி விலக்கல்கள் 2024 சனவரி 01 இலிருந்து நீக்கப்பட்ட வேளையில் மண்ணெண்ணெய் மீதான பெறுமதிசேர் வரி விலக்கல் தொடர்வடைந்தது.

**இவ்வாண்டுப்பகுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் நிதியியல் செயலாற்றத்தில் கணிசமான மாற்றங்களைக் காட்டியது.** செலவினைப் பிரதிபலிக்கின்ற விலையிடல் சூத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்டமையானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் செயலாற்றம் மேம்படுவதற்கு வழியமைத்ததுடன் நிறுவனம் 2022இல் பதிவுசெய்த ரூ.617.6 பில்லியன் கொண்ட இழப்புடன் ஒப்பிடுகையில் 2023இல் ரூ.120.3 பில்லியன் இலாபத்தினைப் பதிவுசெய்தது. 2022 இறுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 2.5 பில்லியன் தொகை கொண்ட அரசாங்கத்தினால் உத்தரவாதமளிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயப் படுகடன் இருப்பினை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியிடல் ஆற்றலை மேம்படுத்துவதற்கான வழிமுறையொன்றாக அரச ஐந்தொகைக்கு மாற்றல் செய்ய அரசாங்கம் தீர்மானித்தது. 2023 திசெம்பரில் சிறிலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் இலங்கை மின்சார சபை என்பனவற்றிலிருந்தான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வர்த்தகப் படுகடன் பெறத்தக்கவைகள் மறுசீரமைக்கப்பட்டமையின் காரணமாக அரச நிறுவனங்களிலிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளிநின்ற வர்த்தக பெறத்தக்கவைகள் 2023 திசெம்பர் இறுதியில் ரூ.206.0 பில்லியனால் ரூ.17.7 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, சிறிலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் இலங்கை மின்சார சபையிலிருந்தான நிலுவைகளின் தீர்ப்பனவு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2023 திசெம்பர் இறுதியளவில் இந்திய தொடர் கொடுகடன் தொடர்பான அதன் பொறுப்புக்களைத் தீர்ப்பனவு செய்வதனை இயலுமைப்படுத்தியது.


**இலங்கையில் பெற்றோலியத் துறையின் போட்டித்தன்மையினையும் வினைத்திறனினையும் மேம்படுத்தும் நோக்குடன் உள்நாட்டுப் பெற்றோலியச் சந்தையினை தாராளமயப்படுத்துவதற்காக 2023இல் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.** 2023 மாச்சில் அமைச்சரவை இலங்கையிலுள்ள முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட வணிகர் - தொழிற்பாட்டாளர் விநியோக வலையமைப்பினூடாகப் பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதி, களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகம் என்பனவற்றிற்காக மூன்று தனியார் கம்பனிகளுக்கு ஒப்பந்தங்களை வழங்குவதற்கு ஒப்புதலை வழங்கியது. இதன்படி, இரண்டு வெளிநாட்டு வழங்குநர்கள் 2023இலும் 2024இன் தொடக்கப்பகுதியிலும் தமது சில்லறை வியாபாரத் தொழிற்பாடுகளைத் தொடங்கினர். புதிய ஏற்பாடுகளின் கீழ் செலவினைப் பிரதிபலிக்கின்ற விலையிடல் சூத்திரத்தினூடாக வலு மற்றும் சக்தி அமைச்சினால் தீர்மானிக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் விற்பனை செய்யப்படும் பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விலைகள் சந்தையில் உச்ச விலைகளாகச் செயற்பட்டதுடன் புதிய வழங்குநர்கள் தமது விலைகளை அவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் தீர்மானித்துக் கொண்டனர்.

## மின்வலு

**வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மை நெருக்கடி மற்றும் மோசமான நீர்த்தேக்க மட்டங்கள் என்பனவற்றினால் ஏற்பட்ட எரிபொருள் மற்றும் நிலக்கரியின் பற்றாக்குறை காரணமாக கேள்வி முகாமைத்துவ உபாயமொன்றாக 2022 பெப்புருவரியிலிருந்து நாளாந்த அட்டவணையிடப்பட்ட முறையில் மேற்கொள்ளப்பட்ட மின்வெட்டு படிப்படியாக நீக்கப்பட்டு 2023 பெப்புருவரி நடுப்பகுதியிலிருந்து தடங்கலற்ற மின் வழங்கல் மீண்டும் ஆரம்பமாகியதுடன் இதற்கு மின்வலு உருவாக்கத்திற்கான வெப்ப மூலங்கள் போதுமானளவிற்கு கிடைக்கத்தக்கனவாக இருந்தமை உதவியாக அமைந்தது.** 2022இல் அட்டவணையிடப்பட்ட மின்வெட்டுக்களுக்கு மத்தியிலான குறைந்தமட்ட மின்வலு உருவாக்கத்திலிருந்து தோற்றம்பெற்ற சாதகமான புள்ளிவிபரவியல் தளத்தாக்கத்திற்கு மத்தியிலும், மின்வலு உருவாக்கம் 2023இல் 2.2 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டுச் சுருக்கத்தினை எடுத்துக்காட்டியது. இது செலவினைப் பிரதிபலிக்கின்ற மின்வலுத் தீர்வை மற்றும் குறைவடைந்த பொருளாதார நடவடிக்கை இரண்டினதும் இணைந்த தாக்கத்திலிருந்து தோன்றிய பொருளாதாரத்தின் நலிவடைந்த வலுவின் கேள்வியைப் பிரதிபலித்தது. எல் நினோ தாக்கத்தின் விளைவாக தென்மேற்கு பருவக்காற்று மழை ஆரம்பிப்பதற்கு தாமதமாகியதன் காரணமாக 2023இன் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுப் பகுதியில் வலுத் துறை அழுத்தங்களை எதிர்நோக்கியது. இது மின்வலு உருவாக்கத்திற்காக செலவுமிக்க வெப்பவலு மூலங்களின் அதிகரித்த

வரைபடம் 1.6

வலு மற்றும் சக்தித் துறை அபிவிருத்திகள்




உலகளாவிய மசகெண்ணெய் விலைகளின் கீழ்நோக்கிய போக்கு மற்றும் இலங்கை ரூபாவின் பெறுமான உயர்வு என்பன பெற்றோலிய உற்பத்திகளின் தாழ்ந்தளவிலான உள்நாட்டு விலைகளுக்கு உட்படுத்தப்பட்ட வேளையில், ஆண்டு காலப்பகுதியில் கலப்பு உருவாக்கத்தில் பதிவுசெய்யப்பட்ட தளம்பல்கள் காரணமாக மின்சாரத் தீர்வைகள் உயர்ந்தளவில் காணப்பட்டன.

பயன்பாட்டினைத் தோற்றுவித்தது. எனினும், இப்போக்கு 2023 செத்தெம்பரின் இறுதிப்பகுதியிலிருந்து வழமைக்கு மாறான உயர் மழைவீழ்ச்சியின் காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் மேம்பட்டமையின் விளைவாக மாற்றமடைந்தது. இவ்வாண்டுப்பகுதியில் நீர்மின்வலு, எரிபொருள், நிலக்கரி மற்றும் பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க வலு மூலங்கள் ஒட்டுமொத்த மின்வலு உருவாக்கத்தில் முறையே 29 சதவீதம், 20 சதவீதம், 30 சதவீதம் மற்றும் 21 சதவீதங்களுக்கு வகைகூறின.

**மின்வலுவின் செலவினைப் பிரதிபலிக்கின்ற விலையிடல் இலங்கை மின்சார சபையின் நிதியியல் செயலாற்றத்தில் மேம்பாடுகளைத் தோற்றுவித்தது.** 2023இல் செலவினைப் பிரதிபலிக்கின்ற விலையிடல் மூலமாக இலங்கை மின்சார சபையின் நிதியியல் நெருக்கடிகளைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் அரையாண்டு தீர்வைத் திருத்தப் பொறிமுறையினை நிறுவியது. எனினும், உருவாக்க கலவையில் ஏற்பட்ட தளம்பலின் காரணமாக மின்வலுத் தீர்வை இவ்வாண்டுப்பகுதியில், பெப்புருவரி மற்றும் ஒத்தோபரில் இரு தடவை மேல் நோக்கியும் 2023 யூலையில் கீழ் நோக்கியும் திருத்தப்பட்டமையின் மூலம் மூன்று முறை திருத்தியமைக்கப்பட்டது. இதன்படி, சராசரி மின்வலுத் தீர்வை 2023 பெப்புருவரியிலும் ஒத்தோபரிலும் முறையே ஏறத்தாழ

66 சதவீதத்தினாலும் 18 சதவீதத்தினாலும் மேல் நோக்கித் திருத்தப்பட்ட வேளையில் 2023 யூலையில் தீர்வை ஏறத்தாழ 14 சதவீதத்தினாலும் கீழ் நோக்கித் திருத்தப்பட்டது. மேலும், இவ்வபிவிருத்திகளினை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் 2024இல் முதலாம் காலாண்டிலிருந்து தீர்வை திருத்தச் சுழற்சிச் சட்டத்தினை மூன்று மாதங்களுக்கு குறைக்கத் தீர்மானித்தது. இதற்கமைய, மின்வலுத் தீர்வை 2024 மாச்சு 05ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் கீழ் நோக்கித் திருத்தப்பட்டது. 2016 இலிருந்து ஏறத்தாழ ஏழு ஆண்டுகள் தொடர்ச்சியாகப் பதிவுசெய்யப்பட்ட நட்டத்தினைத் தொடர்ந்து கிரமமான தீர்வைத் திருத்தங்கள் இலங்கை மின்சார சபையின் காசுப்பாய்ச்சலில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மேம்பாட்டிற்குப் பங்களித்தமையின் மூலம் 2023இல் ரூ.61.2 பில்லியன் கொண்ட கணிசமான இலாபத்திற்கு வழிவகுத்தது. 2023இல் இலங்கை மின்சார சபையின் மேம்பட்ட நிதியியல் செயலாற்றத்திற்கு குறிப்பாக, 2023இன் பிற்பகுதியில் மொத்த மின்வலு உருவாக்கத்தில் நீர்மின் வலுவின் பங்கு அதிகரித்தமையும் ஆதரவளித்தது.

**தோற்றம்பெற்று வரும் வலுக் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்காக உள்நாட்டு வலுத் துறையின் போட்டித்தன்மையினையும் வினைத்திறனையும் மேம்படுத்தும் நோக்குடன் அதனைச் சீர்திருத்துவதற்காக அரசாங்கம் பல்வேறு கொள்கை வழிமுறைகளை முன்னெடுத்தது.** அரசாங்கத்திற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் தொடர்பில் தற்பொழுது இடம்பெற்றுவரும் சீர்திருத்தங்களுக்கு மத்தியிலும் தனியார் துறைக்காக முன்மொழியப்பட்ட புதிய சட்டவாக்கம் இத்துறைக்குள் தேவையான சீர்திருத்தங்களுக்கான ஊக்கியாக விளங்குவதன் மூலம் வலுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தக் கூடிய வினைத்திறனும் நிதியியல் ஆற்றலும் கொண்ட துறைக்கு வழியமைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், வலு மூலங்களைப் பன்முகப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முன்னுரிமையும் பல்வேறுபட்ட வலுச் செயற்றிட்டங்களூடாக, குறிப்பாக வெளிநாட்டு முதலீடுகளூடாக நிதியிடப்படுகின்ற புதுப்பிக்கத்தக்க வலு முன்னெடுப்புக்களினூடாக, உருவாக்க இயலளவை விரிவுபடுத்துவதும் 2030 அளவில் புதுப்பிக்கத்தக்க மூலங்களிலிருந்து வலுவில் 70 சதவீத மூலங்களைப் பெற்றுக்கொள்ளும் நாட்டின் கடப்பாட்டிற்கு வசதியளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில், வளர்ந்துவரும் வலுவுக்கான கேள்வியைச் சிக்கனமான முறையிலும் நீடித்துநிலைத்திருக்கும் விதத்திலும் பூர்த்தி செய்யப்படுவதனையும் இயலுமைப்படுத்தும். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும் இலங்கை மின்சார சபையினதும் நிதியியல் செயலாற்றத்தில் அண்மையில் காணப்பட்ட முன்னேற்றங்கள் இறைத் துறையின் மீதான சுமையினை ஓரளவிற்குக் குறைக்க உதவும். எனினும், இம் முக்கிய அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் மேம்பட்ட நிதியியல் செயலாற்றம் நிதியியல் முறைமையின் மீது அவை அளவுக்கதிகமாக தங்கியிருப்பதனைக் குறைத்துக் கொண்டது. மாறாக, அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் இழப்புகளுக்காக முன்னர் ஒதுக்கிவைக்கப்பட்ட நிதியியல் முறைமையின் பெறுமதிமிக்க மூலவளங்களைப் பொருளாதாரம் முழுவதிலுமுள்ள உற்பத்தியாற்றல்மிக்க துறைகளுக்கு மீளவழிப்படுத்தப்படுவதனை இது இயலுமைப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், பன்முகப்படுத்தலை நோக்கிய தொடர்ச்சியான சீர்திருத்தங்களுடன் சேர்த்து செலவினைப் பிரதிபலிக்கின்ற விலையிடல் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் கடப்பாடு, வலு மற்றும் சக்தி துறை முழுவதிலும் காணப்பட்ட மேம்பட்ட போட்டித்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பன எதிர்காலத்தில் இத்துறைகளில் ஏற்படக்கூடிய ஏதேனும் நெருக்கடிகளைத் தடுப்பதற்கு இன்றியமையாததாகும்.

## போக்குவரத்துத் துறை

**இவ்வாண்டுப்பகுதியில், எரிபொருள் கிடைப்பனவு வழமைக்கு திரும்பியமையினாலும் பொருளாதார நடவடிக்கைகள் மீட்சியடையத் தொடங்கியமையினாலும் போக்குவரத்து நடவடிக்கைகள் அதன் உத்வேகத்தினை மீண்டும் அடைந்து கொண்டன.** தொழிற்படுத்தப்பட்ட கிலோ மீற்றர்களின் நியதிகளில், இலங்கை போக்குவரத்துச் சபையின் தொழிற்பாடுகள் 11.2 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியை அறிக்கையிட்ட வேளையில், பயணிகள் கிலோ மீற்றர்கள் இவ்வாண்டுப்பகுதியில் 4.6 சதவீதம் கொண்ட சுருக்கத்தினைப் பதிவுசெய்தன. அதேவேளை, தனியார் பேருந்து தொழிற்பாட்டாளர்களின் பயணிகள் கிலோ மீற்றர் மற்றும் தொழிற்பட்ட கிலோ மீற்றர் இரண்டும் 2023இல் முறையே 23.7 சதவீதம் மற்றும் 94.3

சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைக் காட்டின. புகைவண்டி போக்குவரத்துத் துறையில் மதிப்பிடப்பட்ட பயணிகள் கிலோ மீற்றரும் பொருட்கள் கிலோ மீற்றரும் 2023இல் முறையே 6.7 சதவீதம் மற்றும் 15.0 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. விமானப் போக்குவரத்து துறையில், 2023இல் 7.5 மில்லியன் பயணிகள் போக்குவரத்து (இடைநிற் பயணிகள் நீங்கலாக) காணப்பட்டு 35.8 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. எனினும், சரக்குக் கையாளல் இவ்வாண்டுப்பகுதியில் 5.0 சதவீதம் கொண்ட சுருக்கத்தினைப் பதிவுசெய்தது. அதேவேளை, 2023 ஒத்தோபரில் சிறிலங்கன் எயார்லைன்ஸின் உரித்து நீக்கத்திற்காக சாத்தியமான முதலீட்டாளர்களிடமிருந்து ஆர்வத்தினை வெளிப்படுத்துகைகள் அழைப்பின் மூலம் சிறிலங்கன் எயார்லையினின் மறுசீரமைப்பதற்கான முன்னெடுப்புக்களை அரசாங்கம் மேற்கொண்டது. 2023இன் ஆரம்பத்தில் குறிப்பிடத்தக்களவு பின்னடைவினை அனுபவித்த துறைமுகத்துறை அதன் பின்னர் வேகமடைந்தமைக்கு இறக்குமதிக் கட்டுப்பாடுகள் படிப்படியாக தளர்த்தப்பட்டமையும் அதிகரித்த வர்த்தக நடவடிக்கையும் ஆதரவளித்தன. இதற்கமைய 2023இல் கொள்கலன் கையாளல் மற்றும் சரக்குக் கையாளல் நடவடிக்கைகள் முறையே 1.3 சதவீதம் மற்றும் 3.4 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியை அறிக்கையிட்ட வேளையில் கப்பல்களின் வருகையும் 18.4 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தன. இச் சாதகமான செயலாற்றத்திற்கு, குறிப்பாக ஆண்டின் பிற்பகுதியில் செங்கடலிலிருந்து கலம்கள் வேறு மார்க்கங்களுக்கு விலகிச் சென்றமையின் காரணமாக மாற்றிக் கப்பலேற்றலின் அளவுகள் உயர்வடைந்தமை தூண்டுதலாக அமைந்தது.

## ஏனைய அபிவிருத்திகள்

**2023இல் ஏனைய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் படிப்படியாக மீண்டும் ஆரம்பமாயின.** வீதிகள் மற்றும் பொது வசதிகள் உட்பட, கொழும்பு துறைமுகத்தின் தரை உட்கட்டமைப்பு கட்டுமான வேலைகள் தொடர்பில் கட்டம் ஐ உடன் தொடர்பான வேலைகள் இறுதிக் கட்டத்தினை அடைந்துள்ளதுடன் 2024இன் நடுப்பகுதியில் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், கொழும்பு துறைமுக நகரத்தின் சட்டபூர்வமான கட்டமைப்பினைத் தொடர்ச்சியாக வலுப்படுத்துவதற்காக இவ்வாண்டுப்பகுதியில் பல்வேறுபட்ட வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இது தொடர்பான முக்கிய மைல்கலாக பன்னாட்டு வர்த்தகப் பிணக்குகள் தீர்மான நிலையம் நிறுவப்பட்டது. கொழும்பு துறைமுகத்தில் கிழக்கு கொள்கலன் முனையத்தின் கட்டம் II மற்றும் மேற்கு கொள்கலன் முனையத்தின் கட்டம் I என்பன தொடர்பான உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் இவ்வாண்டுப்பகுதியில் தொடர்ந்ததுடன் 2027 அளவில் 6 மில்லியன் இருபது அடிக்குச் சமமான அலகுகளினால் இயலளவு விரிவடைவதனை இயலுமைப்படுத்தும். இவ்வாண்டுப்பகுதியில், நகர உட்கட்டமைப்பு மற்றும் நகரமயமாக்கல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமான சியக் நகரம் ஊடாக நகர அபிவிருத்தி அதிகாரசபை பல பிராந்திய அபிவிருத்திச் செயற்றிட்டங்களை நிறைவுசெய்தது. இது நுவரெலியா, குருநாகல் மற்றும் காலி பிரதேசங்களிற்குட்பட்ட பிராந்திய நகர மையங்களை பிரசைகளை மையமாகக் கொண்ட நகரங்களாக மாற்றுவதற்கு எதிர்பார்க்கின்றது. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அரச - தனியார் பங்குடமையின் கீழ் 2023இல் மிகுந்துபுர வீடமைப்புச் செயற்றிட்டத்தினை மீளத்தொடங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்தது. இவ்வாண்டுப்பகுதியில் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் பல நீர்வழங்கல் செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டன. அதேவேளை, அரசாங்கத்தின் டிஜிகொன் (DIGIECON) 2030 நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான முன்னெடுப்புக்கள் இடம்பெற்று வருவதுடன், இவை இலங்கை டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு உருமாற்றமடைவதனை விரைவுபடுத்துவதற்குப் பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## 1.2.7 சமூக உட்கட்டமைப்பு

### கல்வி

**வெளித்தோற்றம் வழமைக்கு திரும்பிவிட்டமையினைக் காட்டுகின்ற போதும் நெருக்கடிக் காலப்பகுதியில் தீவிரமடைந்த கல்வி முறைமைகளில் காணப்பட்ட சமநிலையற்ற தன்மை கட்டுப்படுத்தப்படாமல் தொடர்ந்தும் காணப்படுகின்றது. கொவிட்-19 உலகளாவிய பெருந்தோற்றுக் காரணமாகவும்**

**பொருளாதார நெருக்கடிகள் காரணமாகவும் ஏற்பட்ட தடங்கல்கள் படிப்படியாக மறைந்தமையுடன் ஏறத்தாழ மூன்றாண்டுகளைக் கொண்ட கலப்பு பயில்தலுக்குப் பின்னர் 2023இல் நேரில் வருகைதரும் கல்வித்துறை நடவடிக்கைகள் மீளத் தொடங்கின.** அரசாங்கம் தேசிய மட்டத்திலான அனைத்துப் பரீட்சைகளையும் தொடர்ந்து நடத்திய போதும், கல்வியாண்டு தொடர்பில் காணப்பட்ட தாமதம் சீர்செய்யப்படாமல் தொடர்ந்தும் காணப்பட்டமையானது தரம் 11 மற்றும் தரம் 13 இற்கான மாணவர்களின் இரண்டு தொகுதிகள் ஒன்றுடனொன்று கலந்து இரண்டு தொகுதிகளாக காணப்பட வழிவகுத்ததுடன் தொடர்பான பாடசாலைகளிலிருந்து அவர்களுக்கென வளங்களின் கிடைப்பனவு நியதிகளில் பிரதிகூலம் நிறைந்த பரீட்சைக்கான சாத்தியத்தையும் எதிர்நோக்கினர். தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அளவீட்டில் கண்டறியப்பட்டவாறு பொருளாதார நெருக்கடிகளின் சூழ்நிலையில் 3-21 வயதான பாடசாலை செல்லும் பிள்ளைகளில் 54.9 சதவீதத்தினர் நெருக்கடிகளினால் பாதிக்கப்பட்டிருந்தனர். இப்பின்னணியில், அரசாங்கம் பள்ளிக்கூடக் கல்வியிலிருந்து பிள்ளைகள் இடைவிலகுவதனை குறைக்கும் நோக்குடனும் தரமான கல்வியை அணுகுவதற்கும் பங்கேற்பதற்குமான வசதிகளை மேம்படுத்துவதற்கும் 2023 காலப்பகுதியில் அரசாங்கம் மாணவர் நலன்புரியிலும் உதவுதொகை நிகழ்ச்சித்திட்டத்திலும் முதலீடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. இவ்வழிமுறைகள் பாடசாலைகளின் உணவு நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்தல், இலவசப் பாடப்புத்தகங்களை வழங்குதல், இலவசப் பாடசாலைச் சீருடைகள் மற்றம் காலணிகளை வழங்குதல் என்பனவற்றை உள்ளடக்கிக் காணப்பட்டன. எனினும், கல்வியியல் பெறுபேறுகளின் மீது, குறிப்பாக பாதிக்கப்படும் தன்மை மற்றும் வறுமையின் பொதுவான சுழற்சி வட்டத்தினை உடைப்பதற்காக மிகவும் முக்கியமாகத் தேவைப்படும் கல்வி குடித்தொகையினரின் பாதிக்கப்படக்கூடிய பிரிவினருடைய கல்வியியல் பெறுபேறுகளின் மீது, நெருக்கடிகளை உடனடுத்து ஏற்பட்ட தாக்கத்தின் அச்சுறுத்தல்களைத் தணிப்பதற்கு மாத்திரம் இவ்வழிமுறைகள் வலியுறுத்தப்படுதல் வேண்டும்.

## சுகாதாரம்

**தொற்றக்கூடிய மற்றும் தொற்றாத நோய்கள் இரண்டினதும் சுமையினால் தொடர்ந்தும் இறுக்கப்பட்டிருக்கும் சுகாதாரத்துறை, மட்டுப்படுத்தப்பட்ட மூலவளங்களின் காரணமாக இந்நோய்களுக்கு சிகிச்சையளிப்பதில் மேலதிக நிதி நெருக்கடிகளை எதிர்நோக்குவது அனைத்தையுமுள்ளடக்கிய உபாயங்களையும் வினைத்திறன்மிக்க முகாமைத்துவத்திற்கான வளங்களையும் இந்நோய்களைத் தடுப்பதற்கான வழிவகைகளையும் தேவைப்படுத்துகின்றது.** 2023இல் இலங்கையில் டெங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து 2017இல் (186,101 தொற்றாளர்கள்) மற்றும் 2019இல் இடம்பெற்ற (105,049 தொற்றாளர்கள்) இடம்பெற்ற மிகக் கணிசமான தொற்றுகளை அடுத்து நாடு அதன் மூன்றாவது மிகப்பெரிய நோய்த்தொற்றான 89,799 தொற்றாளர்களை 2023இல் அறிக்கையிட்டது. மேலும், இலங்கை வெளியிலிருந்து கொண்டு வரப்பட்ட 62 மலேரியா தொற்றாளர்கள் பற்றி அறிவித்தமையானது, மலேரியா மீண்டும் தோன்றுவதற்கான சாத்தியம் பற்றி கரிசனைகளைத் தோற்றுவித்தது. அண்மைய ஊட்டச்சத்து தொடர்பான குறிகாட்டிகள், நாட்டில் தற்போது காணப்படும் சமூக பொருளாதார சவால்கள் காரணமாக குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய குழுவினரிடையேயுள்ள சிறுவர்கள் மற்றும் பெண்கள் பற்றி குழப்பமானதும் மோசமானதுமான ஊட்டச்சத்து நிலைமைகளை எடுத்துக்காட்டுகின்றன. இது தொடர்பில், அதிகாரிகள் இப்பிரச்சனையினை நீண்ட காலத்தில் கட்டுப்படுத்தும் முயற்சியொன்றாக அபிவிருத்திப் பங்காளர்களின் ஒத்துழைப்புடன் இவ்வாண்டுப்பகுதியில் பிள்ளைகளுக்கான ஊட்டச்சத்துப் பணிகளைத் தொடர்ந்தும் வழங்கி வருகின்றனர். எனினும், ஊட்டச்சத்தின்மையின் தாக்கங்கள் நீண்ட காலத்தினைக் கொண்டனவாகவும் தலைமுறை முழுவதிலுமுள்ள தனிப்பட்டவர்களை மோசமான உற்பத்தித்திறனின்மைக்கும் அதன் மூலம் வறுமை என்ற நச்சுவட்டத்திற்குள்ளும் சிக்கவைத்து விடக்கூடியனவாகவும் இருப்பதனால் இது தொடர்பில் அனைத்தையுமுள்ளடக்கியதும் சிறந்த முறையில் இலக்கிடப்பட்டதுமான உபாயம் இன்றியமையாததாகும்.

**சுகாதாரத் துறையில் காணப்படும் தவறுகள் அதிகரித்தளவிற்கு குழப்ப நிலைமைகளைத்**

**தோற்றுவிப்பனவாக மாறி துறையின் நலன் தொடர்பில் கடுமையான கரிசனைகளைத் தோற்றுவிக்கிறது.** மருந்து வகைகள் மற்றும் தேவையான சாதனங்களின் கொள்வனவினைப் பாதிக்கின்ற, வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மையுடன் இணைந்த பொருளாதார நெருக்கடிகளினால் பொது சுகாதாரத் துறையின் பணி வழங்கல் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. இது தொடர்பில் காணப்பட்ட அழுத்தங்கள் பெருமளவிற்கு ஒழிக்கப்பட்டுள்ள வேளையில், மருந்துகளின் தரம் தொடர்பான பிரச்சனைகள் மோசமான தரக் கட்டுப்பாடுகள், பரீட்சிப்புக்கள் மற்றும் இது தொடர்பில் கடுமையான ஒழுங்குமுறைப்படுத்தல் பொறிமுறை போதுமானளவில் இல்லாமையின் காரணமாக அண்மைக் காலத்தில் கிரமமான அடிப்படையில் மீண்டும் மீண்டும் நிகழ்ந்திருக்கின்றன. மேலும், மருத்துவப் பணிகளை வழங்குவதில் காணப்படும் கவனயீனங்கள் பற்றி பல்வேறு கரிசனைகள் வளர்ந்து வருகின்றன. மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு விடயங்களும் மரணங்களைத் தோற்றுவித்துள்ளமையினால் உலகளாவிய சுகாதாரத் துறைக் கவனிப்பில் நாட்டிற்குரிய நீண்ட காலக் கடப்பாடுகளைக் கவனத்திற்கொள்கையில் இது கண்டிக்கத்தக்கதொன்றாகக் காணப்படுகிறது. இச்சம்பவங்கள் இதுவரை காலமும் அடையப்பட்ட சிக்கலற்ற சுகாதாரத் துறை பெறுபேறுகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. நாட்டின் நலக்கவனிப்பு முறைமை பொருளாதாரத்தின் மனித மூலதனத் தளத்தின் இன்றியமையாத தூணாக இருப்பதனால் அதனைப் பலப்படுத்துவதன் மீது கவனத்தினைச் செலுத்த வேண்டிய தேவையினை வலியுறுத்துகிறது. சுகாதாரத் துறையின் முதலீட்டிற்காக போதுமான வரவு செலவுத்திட்ட ஒதுக்குகளின் அவசர முன்னுரிமைகளுக்குப் புறம்பாக, துறையானது தனிப்பட்டவர்களின் நலனோம்புகை மற்றும் உயிர் வாழ்க்கை என்பனவற்றுடன் தொடர்புபட்டிருப்பதனைப் பரிசீலனையில் கொள்கையில் மருந்தாக்கல் உற்பத்திகள் மற்றும் மருத்துவச் சாதனங்கள் தொடர்பான வழங்கல் சங்கிலியின் ஒவ்வொரு கட்டத்திலும் கடுமையான ஒழுங்குமுறைப்படுத்தல் பொறிமுறைகள் மிக முக்கியமானவைகளாகக் காணப்படுகின்றன. நீடித்துநிலைத்திருக்கக்கூடிய சுகாதார நிதியிடல் கொள்கையினைச் சரியான நேரத்தில் நடைமுறைக்கிடுவதும் அவசியமான வழிமுறையொன்றாகக் காணப்பட்டதுடன் இதனை குறுங்காலத்தில் மேற்கொள்வது அவசியமாகும். நடுத்தர காலத்தில் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நலக்கவனிப்புக்களை வழங்குவது உட்கட்டமைப்பு அபிவிருத்தி, மருந்துகளின் உற்பத்தி மற்றும் மருத்துவச் சாதனங்கள் உட்பட இத்துறையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியிலும் பணி வழங்கலில் மாத்திரமன்றி நலக்கவனிப்பு வழங்கலின் மற்றைய அம்சங்கள் தொடர்பிலும் அரச - தனியார் பங்குடமையினைத் தீவிரமாக ஊக்குவிப்பதுடன் இணைக்கப்படுதல் வேண்டும். அதேவேளை, இதுவரை அடையப்பட்ட சாதனைகள் இவ்வண்மைய சம்பவங்களினால் நிறுத்தப்படாதிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு மனித மூலதன இழப்பு மற்றும் அவசியமான ஆளணியினரின் உற்பத்திக்கான உட்கட்டமைப்பு போதுமானளவில் இல்லாமை என்பன தொடர்பான பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் அவசரமாகத் தேவைப்படுகின்றன.

## சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்கள்

**பாதிக்கப்படக்கூடிய வீட்டுத்துறையினர் மீது பொருளாதார நெருக்கடிகள் கொண்டிருக்கக்கூடிய விகிதாசாரமற்ற மற்றும் நீண்ட கால தாக்கங்களைப் பரிசீலனையில் கொண்டு, பன்னாட்டு நாணய நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழான பேரண்டப்பொருளாதாரச் சீராக்கல் நிகழ்ச்சித்திட்டத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் நாட்டின் சமூகப் பாதுகாப்பு வலையமைப்பினை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டன.** இதற்கமைய, நலன்புரி நன்மைகள் சபையின் கீழ் சமுர்த்தி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு பதிலீடு செய்யும் நோக்குடன் 2023 யூலையில் அஸ்வேசும நலன்புரி நன்மைகள் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தேவையான துறைகளின் காத்திரமான இலக்கிடலை உறுதிப்படுத்தும் விதத்தில் மேம்படுத்தப்பட்ட சரிபார்ப்பு அணுகுமுறையுடன் பல்பரிமாண அளவு முறைகளைப் பரிசீலனையில் கொண்டு நலன்புரி நன்மைகள் தகவல்கள் முறைமையினை அபிவிருத்தி செய்த பின்னராக இந் நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கப்பட்ட வேளையில், இந்நன்மைகள் திட்டத்தில் உள்ளடக்கப்படாத சந்தர்ப்பத்தில் மேன்முறையீடு செய்வதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்பட்டது. ஆரம்பத்தில் 3.7 மில்லியன் விண்ணப்பதாரிகளிலிருந்து ஏறத்தாழ 1.4 மில்லியன் விண்ணப்பதாரிகள்


பாதிக்கப்படக்கூடியவர்களாக மாற்றலாகிக் கொண்டுள்ளோர், பாதிக்கப்படக்கூடியவர்கள், வறியோர், மிகுந்த வறியோர் என அஸ்வேசும நிகழ்ச்சித்திட்டத்தின் வகைப்படுத்தப்பட்ட நான்கு முக்கிய வகைகளின் கீழ் நன்மைகளைப் பெறுவதற்கு தெரிவுசெய்யப்பட்டனர். மேலும், நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்கிடலை மேம்படுத்துவதற்காக தரவுகளை மீளச்சான்றுபடுத்தல் மற்றும் சரிபார்ப்பு நடவடிக்கைகள் அதேபோன்று கிரமமான மீளாய்வுகள் என்பனவற்றுடன் சேர்த்து தெரிவுசெய்தல் பிரமாணங்களை வலுப்படுத்துவதற்காக பல்வேறு வழிமுறைகள் எடுக்கப்பட்டன. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 2023இல் ஏறத்தாழ ரூ.53.8 பில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. அதேவேளை, அமைச்சரவை புதிய நன்மைகள் திட்டத்தின் கீழ் மேன்முறையீட்டு விண்ணப்பச் செயன்முறைகள் நிறைவடையும் வரை சமுர்த்தி உதவுதொகைத் திட்டத்தினைத் தொடர்வதற்கான அனுமதியினை 2023 யூலையில் வழங்கியது. இதன்படி, 2023 இறுதியில், சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நன்மைபெறும் குடும்பங்களின் எண்ணிக்கை ஆண்டின் தொடக்கத்தில் காணப்பட்ட 1.7 மில்லியன் குடும்பங்களுடன் ஒப்பிடுகையில், 363,214 குடும்பங்களாகக் காணப்பட்டது. சமூக உதவி நிகழ்ச்சித்திட்டங்களின் பயன்களை மேம்படுத்துகின்ற அரசாங்கத்தின் முயற்சிகளை வரவேற்கின்ற அதேவேளையில் வறுமை, பாதிக்கப்படக்கூடிய தன்மை மற்றும் சமத்துவமற்ற தன்மை என்பன தொடர்பான நிலைமைகள் பற்றிய நெருக்கடிக்குப் பின்னைய புள்ளிவிபரங்கள் போதுமானதற்றதாகவும் குழப்பங்கள் நிறைந்ததாகவும் காணப்படுவதோடு அத்தகைய புள்ளிவிபரங்கள் இல்லாமல் இருப்பது வறுமை ஒழிப்பையும் சமூக உதவி முயற்சிகளையும் சரியான நேரத்தில் மேற்கொள்வதற்கு முட்டுக்கட்டையாகக் காணப்படுகிறது.

## 1.3 நாணயத் துறை அபிவிருத்திகள்

### 1.3.1 உள்நாட்டு பணச் சந்தை திரவத்தன்மை மற்றும் குறுங்கால வட்டி வீதங்கள்

**2023இல் உள்நாட்டுப் பணச் சந்தையில் ஓரிரவு திரவத்தன்மை, பற்றாக்குறை மட்டத்திலிருந்து பரந்தளவு சமநிலையான மட்டத்திற்கு குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட்டது.** தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை

வரைபடம் 1.7 முக்கிய கொள்கை வட்டி வீதங்கள், சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் மற்றும் ஓரிரவு பணச் சந்தை




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

நிலையுடன் இசைந்துசெல்லும் விதத்தில் ஓரிரவு திரவத்தன்மை ஏற்பாடுகளுக்கும் மேலதிகமாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ், தவணை நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களினூடாக சந்தைக்கான திரவத்தன்மை ஏற்பாடு மற்றும் விடாப்பிடியான திரவத்தன்மைப் பற்றாக்குறையினை அனுபவித்த குறிப்பிட்ட உரிமம்பெற்ற வங்கிகளுக்கான விசேட திரவத்தன்மை உதவிகளின் வழங்கல் என்பன சந்தைத் திரவத்தன்மையினை மேம்படுத்துவதற்காக மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட வழிமுறைகளாகும். மேலும், மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணியின் கணிசமான தேறிய கொள்வனவுகளும் ரூபா திரவத்தன்மையினை விடுவித்தன. மேலும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்களின் மீதான ஏற்புடைத்தான நியதி ஒதுக்கு விகிதக் குறைப்பு 2023 ஓகத்து 16 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 200 அடிப்படைப் புள்ளிகளினால் 2.00 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டமையானது உள்நாட்டுப் பணச் சந்தைக்கு ஏறத்தாழ ரூ. 200 பில்லியன் கொண்ட மேலதிகத் திரவத்தன்மையை உட்செலுத்தியது. இதன் விளைவாக, 2022 காலப்பகுதியில் சராசரியாக ஏறத்தாழ ரூ.450 பில்லியன் பற்றாக்குறையில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட உள்நாட்டு பணச் சந்தையின் திரவத்தன்மை 2023 காலப்பகுதியில் ஏறத்தாழ ரூ.70 பில்லியன் கொண்ட சராசரிப் பற்றாக்குறைக்கு மேம்பட்டது. பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் ஓரிரவு திரவத்தன்மை தொடர்ந்தும் தளம்பல் நிலையில் காணப்பட்டமைக்கு, மத்திய வங்கியினால் துணைநில்

வசதிகளின் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாயமைந்தன[12]. எனினும், திரவத்தன்மையில் காணப்பட்ட தளம்பலும் நிச்சயமற்ற தன்மையும் 2024 பெப்புருவரி/ மாச்சில் குறிப்பிடப்பட்ட கட்டுப்பாடுகள்[13] அகற்றப்படுவதன் விளைவாக எதிர்வரும் காலத்தில் வழமைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. உரிமம்பெற்ற வங்கிகளிடையே திரவத்தன்மை தொடர்ந்தும் ஒழுங்கற்றதொரு முறையில் பகிரப்பட்டு காணப்பட்ட வேளையில் வெளிநாட்டு வங்கிகள் பாரியளவு திரவத்தன்மை மிகையைக் கொண்டிருந்தன. நாணயக் கொள்கை நிலை தளர்த்தப்பட்டமைக்குப் பதிலிறுத்தும் விதத்தில்[14] உள்நாட்டுப் பணச்சந்தை திரவத்தன்மை நிலைமைகளில் காணப்பட்ட படிப்படியான முன்னேற்றம், சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம்[15], நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் சந்தை வட்டி வீதங்களுக்கு வழிகாட்டுவதற்காக தொழிற்பாட்டு இலக்காக மத்திய வங்கியினால் நெருக்கமாகக் கண்காணிக்கப்பட்ட குறிப்பிடத்தக்களவு இறுக்கமான நாணயக் கொள்கை காணப்பட்ட காலப்பகுதியில் ஏறத்தாழ துணைநில் வீத வீச்சின் மேல் எல்லையில் ஊசலாடிக் கொண்டிருந்த குறுங்கால வட்டி வீதம் நாணயக் கொள்கைத் தளர்த்தலுடன் இசைந்து செல்லும் விதத்தில் துணைநில் வீத வீச்சின் கீழ் எல்லையை நோக்கிச் சீராக்கப்பட்டமை என்பனவற்றின் மூலம் சந்தை வட்டி வீத அமைப்பில் ஒட்டுமொத்த குறைப்பு ஏற்பட வசதியளித்தது.

12 ஒதுக்குப் பேணல் காலம் 2023 சனவரி 16 தொடக்கம் நடைமுறைக்கு வருவதிலிருந்து துணைநில் வைப்பு வசதி நாட்காட்டி மாதமொன்றிற்கு உயர்ந்தபட்சம் ஐந்து(5) தடவைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வேளையில் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம், குறிப்பிட்ட ஏதேனும் ஒரு நாளன்று, ஒவ்வொரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியினதும் நியதி ஒதுக்கு விகிதத்தில் 90 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது.

13 துணைநில் வசதிகள் மீதான கட்டுப்பாடுகள் இரண்டு கட்டங்களாக தளர்த்தப்பட்டன/ நீக்கப்பட்டன. 2024 பெப்புருவரி 16ஆம் நாள் தொடங்குகின்ற ஒதுக்குப் பேணல் நடைமுறைக்குவரும் காலப்பகுதியிலிருந்து துணைநில் வசதி மீதான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு துணைநில் வைப்பு வசதி மீதான கட்டுப்பாடுகள் நாட்காட்டி மாதமொன்றிற்கான 5 தடவைகளிலிருந்து (5) பத்து தடவைகளுக்கு (10) தளர்த்தப்பட்டது. இறுதியாக, துணைநில் வைப்பு வசதி மீதான எஞ்சிய கட்டுப்பாடுகள் 2024 ஏப்பிறல் 01இல் தொடங்குகின்ற ஒதுக்குப் பேணல் காலத்திலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நீக்கப்பட்டது.

14 2023 யூனில் நாணயக் கொள்கைத் தளர்த்தல் சுழற்சி தொடங்கப்பட்டதிலிருந்து மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதம் 2023இல் 650 அடிப்படைப் புள்ளிகளினாலும் 2024 இதுவரையான காலப்பகுதியில் மேலும் 50 அடிப்படைப் புள்ளிகளினாலும் குறைக்கப்பட்டது. இதன்மூலம் மொத்தமாக 700 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டது.


15 குறுங்கால வட்டி வீதங்கள் மத்திய வங்கியினால் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் சந்தை வட்டி வீதங்களுக்கு வழிகாட்டுவதற்காக தொழிற்பாட்டு இலக்காக நெருக்கமாகக் கண்காணிக்கப்படுகிறது.

## 1.3.2 சந்தை வட்டி வீதங்கள்

**சந்தை வட்டி வீதங்கள் 2022இல் பதிவுசெய்யப்பட்ட குறிப்பிடத்தக்களவு உயர்ந்த மட்டங்களிலிருந்து 2023இல் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன.** சந்தை வட்டி வீதங்கள் குறைவடைந்தமைக்கு, ஏனைய பல காரணிகளுடன் சேர்த்து 2023 யூனிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை வழிமுறைகள் தூண்டுதலாக விளங்கின.[16] மிகையான சந்தை வட்டி வீதங்களைக் குறைப்பதனை இலக்காகக் கொண்ட நிருவாக வழிமுறைகளும் தாா்மீகப் பொறுப்புகளுக்கும் விரைந்த பணவீக்க வீழ்ச்சி செயன்முறை மற்றும் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் மிதமடைந்தமையினால் ஆதரவளிக்கப்பட்டதுடன் உள்நாட்டுப் படுகடன் மேம்பாட்டு தொழிற்பாட்டினைத்

16 மத்திய வங்கி அதன் கொள்கை வட்டி வீதங்களை 2023 மாச்சில் 100 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரித்ததுடன் 2021 ஓகத்தில் தொடங்கப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை சுழற்சி வட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இறுதி கொள்கை வட்டி வீத அதிகரிப்பாக இது குறிப்பிடப்படுகிறது.

வரைபடம் 1.8 தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்களின் அசைவுகள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

1

அட்டவணை 1.7

### வட்டி வீதங்களின் அசைவுகள்

ஆண்டொன்றிற்கான சதவீதம்

| வட்டி வீதம் | 2022 இறுதி | 2023 இறுதி | சதவீதப் புள்ளிகளில் மாற்றம் |
|---|---|---|---|
| **முக்கிய கொள்கை வட்டி வீதங்கள்** | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 14.50 | 9.00 | -5.50 |
| துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் | 15.50 | 10.00 | -5.50 |
| சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் | 15.50 | 9.24 | -6.26 |
| **அரச பிணையங்களின் மீதான விளைவு வீதம்** | | | |
| **முதலாந்தரச் சந்தை (அ)** | | | |
| **திறைசேரி உண்டியல்கள்** | | | |
| 91-நாள் | 32.64 | 14.51 | -18.13 |
| 182-நாள் | 32.20 | 14.16 | -18.04 |
| 364-நாள் | 29.27 | 12.93 | -16.34 |
| **திறைசேரி முறிகள்** | | | |
| 2-ஆண்டு | 33.01 (ஆ) | 13.87 (இ) | -19.14 |
| 3-ஆண்டு | 31.36 (ஆ) | 14.07 (இ) | -17.29 |
| 4-ஆண்டு | - | 14.21 (இ) | - |
| 5-ஆண்டு | 31.78 (ஆ) | 14.32 (இ) | -17.46 |
| 10-ஆண்டு | 30.86 (ஆ) | - | - |
| **இரண்டாந்தரச் சந்தை** | | | |
| **திறைசேரி உண்டியல்கள்** | | | |
| 91-நாள் | 30.75 | 14.13 | -16.62 |
| 182-நாள் | 29.50 | 13.86 | -15.64 |
| 364-நாள் | 28.39 | 12.71 | -15.68 |
| **திறைசேரி முறிகள்** | | | |
| 2-ஆண்டு | 28.19 | 13.52 | -14.67 |
| 3-ஆண்டு | 28.32 | 13.62 | -14.70 |
| 4-ஆண்டு | 27.60 | 13.66 | -13.94 |
| 5-ஆண்டு | 26.78 | 13.74 | -13.04 |
| 10-ஆண்டு | 26.18 | 13.10 | -13.09 |
| **வைப்புக்கள் மீதான வட்டி வீதங்கள்** | | | |
| ***உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் (ஈ)*** | | | |
| சேமிப்பு வைப்புக்கள் | 0.25-6.00 | 0.25-13.00 | - |
| 1 ஆண்டு நிலையான வைப்புக்கள் (உ) | 4.50-30.00 | 1.00-22.00 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் (ஊ) | 14.06 | 11.64 | -2.42 |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் (ஊ) | 18.49 | 14.88 | -3.61 |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் (ஊ) | 23.07 | 11.06 | -12.01 |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதம் (ஊ) | 23.73 | 11.33 | -12.40 |
| ***ஏனைய நிதி நிறுவனங்கள் (எ)*** | | | |
| தேசிய சேமிப்பு வங்கி | | | |
| சேமிப்பு வைப்புக்கள் | 3.00 | 3.00 | - |
| 1 ஆண்டு நிலையான வைப்புக்கள் | 12.00 | 8.00 | -4.00 |
| உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் (ஏ) | | | |
| சேமிப்பு வைப்புக்கள் | 4.63-8.03 | 4.33-6.62 | - |
| 1 ஆண்டு நிலையான வைப்புக்கள் | 20.48-27.15 | 11.88-13.56 | - |
| **கடன் வழங்கல் மீதான வட்டி வீதங்கள்** | | | |
| ***உரிமம்பெற்ற வங்கிகள் (ஐ)*** | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி கடன் வழங்கல் வீதம் | 20.73 | 15.33 | -5.40 |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி கடன் வழங்கல் வீதம் | 26.91 | 14.96 | -11.95 |
| ***உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் (ஈ)*** | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதம் (மாதாந்த) | 28.19 | 12.39 | -15.80 |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதம் | 18.70 | 14.21 | -4.49 |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன் வழங்கல் வீதம் | 26.20 | 14.38 | -11.82 |
| ***உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் (எ)*** | | | |
| தேசிய சேமிப்பு வங்கி | 28.00-32.00 | 15.00-20.00 | - |
| அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி (ஒ) | 18.00-27.25 | 9.50-21.00 | - |
| ***உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் (ஏ)*** | | | |
| நிதிக்குத்தகை | 21.53-35.37 | 14.98-32.48 | - |
| அசையாச் சொத்துக்களுக்கு எதிரான கடன்கள் | 26.80-28.43 | 14.18-23.86 | - |
| **கூட்டாண்மை படுகடன் சந்தை** | | | |
| தொகுதிக்கடன்கள் | 15.42-28.00 | 13.50-29.50 | - |
| வர்த்தகப் பத்திரம் | 11.00-36.00 | 17.00-26.50 | - |

(அ) இறுதியாகக் கிடைக்கப்பெற்ற ஏலத்தில் உள்ளவாறான சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு வீதங்கள்.
(ஆ) 2022இல் இறுதியான முதலாந்தர ஏலம்:
2 ஆண்டு - 13 திசெ| 3 ஆண்டு - 29 திசெ|
5 ஆண்டு - 28 ஒத்| 10 ஆண்டு - 11 நவ,
(இ) 2023இல் இறுதியான முதலாந்தர ஏலம்:
2 ஆண்டு - 28 திசெ| 3 ஆண்டு - 12 திசெ| 4 ஆண்டு - 28 திசெ| 5 ஆண்டு - 12 திசெ
(ஈ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் குறித்துரைக்கப்பட்ட வீதங்களை அடிப்படையாகக் கொண்டது.
(உ) உயர்ந்தபட்ச வீதமானது குறிப்பிட்ட உரிமம்பெற்ற வர்த்த வங்கிகளால் வழங்கப்பட்ட சிறப்பு வீதமாகும்.
ஊ) 2018 யூலையிலிருந்து அரசினால் வழங்கப்பட்ட மூத்த பிரஜைகளுக்கான சிறப்பு வைப்பு வட்டி வீதத்தின் தாக்கத்தினை நீக்குவதற்காக சிறப்பு வட்டி வீதமான 15 சதவீதத்திற்குப் பதிலாக தொடர்புடைய சந்தை வட்டி வீதங்களைப் பயன்படுத்தி ச.நி.வை. வீதமும் ச.நி. நி.வை. வீதமும் கணிப்பிடப்பட்டுள்ளது. 2018 யூனிலிருந்து ச.நி.பு.வை. வீதத்தையும் ச.நி.பு. நி.வை. வீதத்தையும் கணிப்பிடுவதற்கு இதேமுறை பிரயோகிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2022.10.01 இலிருந்து 15% கொண்ட மூத்த பிரசைகளுக்கான சிறப்பு வைப்பு வீதம் இடைநிறுத்தப்பட்டது.
(எ) ஏனைய தெரிவுசெய்யப்பட்ட நிதியியல் நிறுவனங்களினால் குறித்துரைக்கப்பட்ட வீதங்களை அடிப்படையாகக் கொண்டது.
(ஏ) தொடர்புடைய மாதங்களுக்காகத் திரட்டப்பட்ட வைப்புக்கள் மற்றும் கடன் வழங்கல்கள் மீது பிரயோகிக்கப்படும் வட்டி வீதங்களின் எல்லையானது உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளால் குறிக்கப்பட்ட சராசரி உயர்ந்தபட்ச மற்றும் குறைந்தபட்ச வீதங்களை அடிப்படையாகக் கொண்டது. 2023 இற்கான தரவு தற்காலிகமானது.
(ஐ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளால் குறித்துரைக்கப்பட்ட வீதங்களை அடிப்படையாக கொண்டது.
(ஒ) வீடமைப்பு நோக்கங்களுக்கான கடன் வழங்கல் மட்டும்.


*மூலங்கள்:* தொடர்புடைய நிதியியல் நிறுவனங்கள்
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை
இலங்கை மத்திய வங்கி

தொடர்ந்து அரச பிணையங்கள் மீதான விளைவுகளுடன் இணைத்திருந்த இடர்நேர்வு கட்டணத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவும் சந்தைக் கடன்வழங்கல் வீதங்களில் ஏற்பட்ட பரந்த அடிப்படையிலான குறைப்பிற்குப் பங்களித்த ஏனைய முக்கிய காரணிகளாக விளங்கின. மிகையான கடன்வழங்கல் வட்டி வீதங்களைக் குறைப்பதற்காக 2023 ஓகத்து காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட நிருவாக வழிமுறைகள், ஆண்டின் இறுதிப்பகுதியில் ரூபாக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான ஏனைய சந்தை கடன்வழங்கல் வட்டி வீதங்களில் படிப்படியான குறைப்பினைத் தூண்டுவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட பரந்தளவிலான வழிகாட்டல்கள் என்பன சந்தைக் கடன்வழங்கல் வீதங்களில் வீழ்ச்சியைத் தோற்றுவித்து வரவேற்கத்தக்க ஊடுகடத்தலைப் பிரதிபலித்தது. அரச பிணையங்கள் மீதான விளைவுகள் ஒப்பீட்டு ரீதியில் தொடர்ந்தும் உயர்வான மட்டத்தில் காணப்பட்டமையினால் சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்கள் கீழ் நோக்கிச் சரிவதிற்கெதிரான விடாப்பிடியான தன்மையினை எடுத்துக்காட்டின. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுடன் வைத்திருக்கப்பட்ட வட்டி உழைக்கின்ற ரூபா வைப்புக்களின் வெளிநின்ற இருப்புக்களை அடிப்படையாகக் கொண்ட வட்டி வீதங்கள் (சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம்) 2.42 - 3.61 சதவீதம் புள்ளிகளை கொண்ட வீச்சில் வீழ்ச்சியடைந்த வேளையில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் திரட்டப்பட்ட புதிய வட்டி உழைக்கும் ரூபா வைப்புக்கள் மீதான வட்டி வீதங்கள் (சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வட்டி வீதம்) 2023இல் குறிப்பிட்ட மாத காலப்பகுதியில் 12.01 - 12.40 சதவீதப் புள்ளியைக் கொண்ட வீச்சில் வீழ்ச்சியடைந்திருந்தது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் குறிப்பிட்ட வாரமொன்றில் அவர்களது முதன்மை வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற, சில்லறைச் சந்தைகளில் அடித்தள அளவு வட்டி வீதங்களிலொன்றாக விளங்கும் குறுங்கால ரூபாக் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கு ஏற்புடைத்தான குறிப்பிட்ட வட்டி வீதங்களைக் கொண்ட கடன்வழங்கல் வட்டி வீதங்கள் (சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம்) 2023இல் 15.11 சதவீதப் புள்ளியினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன.

அதேவேளை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட அனைத்து வெளிநின்ற ரூபாக் கடன்கள் மற்றும் முற்பணங்களை அடிப்படையாகக் கொண்ட கடன்வழங்கல் வீதமும் (சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம்) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட அனைத்துப் புதிய ரூபாக் கடன்கள் மற்றும் முற்பணங்களை அடிப்படையாகக் கொண்ட கடன்வழங்கல் வட்டி வீதமும் (சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம்) குறிப்பிட்ட மாத காலப்பகுதியில், 2023இல் முறையே 4.49 மற்றும் 11.82 சதவீதப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்தன. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கான கடன்கள் மீதான ஏற்புடைத்தான வட்டி வீதங்கள் ஏனைய சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களின் மிதமான தன்மையுடன் இசைந்து செல்லும் விதத்தில் வீழ்ச்சியடைந்தன. இதற்கமைய, சிறிய மற்றும் நடுத்தரதொழில் முயற்சிதுறைக்கு உரிமம்பெற்ற வங்கிகளினால் வழங்கப்பட்ட அனைத்து வெளிநின்ற ரூபாக் கடன்கள் மற்றும் முற்பணங்களை அடிப்படையாகக் கொண்ட வட்டி வீதமும் (சராசரி நிறையேற்றப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி கடன்வழங்கல் வீதம்) முறையே 5.40 மற்றும் 11.95 சதவீதப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்தன. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான கடன்வழங்கல் வட்டி வீதங்களில் பொதுவான குறைப்பு காணப்பட்டமைக்கு கடன்வழங்கலின் தன்மையும் இணைந்து காணப்பட்ட இடர்நேர்வும் காரணமாயமைந்ததுடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளிலிருந்து விதிக்கப்பட்ட வட்டி வீதங்கள் ஒப்பீட்டு ரீதியில் தொடர்ந்தும் உயர்வாக விளங்கியதுடன் இது குறிப்பாக சிறிய கடன்கள் தொடர்பானதாகக் காணப்பட்டது. சந்தை வட்டி வீதங்களில் காணப்பட்ட கீழ் நோக்கிய போக்கு 2024 ஆரம்பத்திலும் தொடர்ந்ததுடன் தளர்த்தப்பட்ட நாணய நிலைமைகளுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் சந்தை வட்டி வீதங்கள், மேலும் வீழ்ச்சியடைவதற்கான இடைவெளி காணப்படுவதனை எடுத்துக்காட்டின. இவ்வபிவிருத்திகளுக்கு மத்தியிலும் உண்மையான சந்தை வட்டி வீதங்கள் குறைந்த பணவீக்க மட்டத்தினைக் கருத்திற்கொள்கையில் தொடர்ந்தும் சாதகமாகக் காணப்பட்டதன் மூலம் நாணய நிலைமைகள் வட்டி வீதக் கண்ணோட்டத்தில் தொடர்ந்தும் ஓரளவுக்கு இறுக்கமடைந்திருப்பதனைக் குறிப்பிடுகின்றன. அதேவேளை, வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீது வழங்கப்பட்ட வட்டி வீதங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023ஆம் ஆண்டுப்பகுதியில் மிதமான தன்மையினைப் பதிவுசெய்தமைக்கு வணிகப்பொருட்கள் மற்றும் பணிகள் துறை ஏற்றுமதிகளிலிருந்தும் அதேபோன்று தொழிலாளர் பணவனுப்பல்களிலுமிருந்தான உட்பாய்ச்சல்களின் உதவியுடன் வங்கித்தொழில் துறையில் வெளிநாட்டுச் செலாவணி நிலுவைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் காரணமாக அமைந்தபோதும், நாணயக் கொள்கையின் உலகளாவிய நிலை தொடர்ந்தும் இறுக்கமாகவே காணப்பட்டது,

**2023 யூலையில் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகைத் தொழிற்பாடுகள் அறிவிக்கப்பட்டதுடன் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்த அரச பிணையங்கள் மீதான விளைவுகள் நாணயக் கொள்கையின் தளர்த்தல் மற்றும் அரச பிணையங்களுடன் இணைந்து காணப்பட்ட இடர்நேர்வுக் மிகை படிப்படியாக இல்லாமல் போனமை என்பனவற்றின் உதவியுடன் மேலும் குறைவடைந்தது.** மேலும், இறைத்திரட்சி முயற்சிகள் மற்றும் அரசிறையில் ஏற்பட்ட முன்னேற்றம், அரசாங்கத்தினால் காசுத் தொழிற்பாடுகளுக்காக தாங்கிருப்பு நிதியம் கட்டியெழுப்பப்பட்டமை, பணவீக்கம் குறைவடைந்தமை மற்றும் பணவீக்க எதிர்பார்ப்புக்களில் ஏற்பட்ட குறைப்பு மற்றும் மேம்பட்ட சந்தை மனோபாவம் என்பனவும் அரச பிணைய மீதான விளைவுகள் வழமைக்குத் திரும்பியமைக்கும் ஆதரவளித்தன. இதன்படி, அனைத்து

வரைபடம் 1.9 அரச பிணையங்களுக்கான இரண்டாந்தரச் சந்தை விளைவு வளையி




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

முதிர்ச்சிகளையும் கொண்ட திறைசேரி உண்டியல் மீதான விளைவுகள் 2023 காலப்பகுதியில் 16.34 - 18.13 சதவீதப் புள்ளியினால் வீழ்ச்சியடைந்த வேளையில் திறைசேரி முறியின் விளைவுகளும் மிதமடைந்தன. அதேநேரம், இரண்டாந்தரச் சந்தை வளையி 2022 ஏப்பிறலிலிருந்து வழமைக்கு மாறான நகர்வுகளைக் காட்டிருந்ததுடன் உள்நாட்டுப் படுகடன் மறுசீரமைப்பு கரிசனைகளிலிருந்து தோன்றிய நிச்சயமற்ற தன்மைகளினாலும் அரசாங்கத்தின் கடன்பாட்டுத் தேவைகளை உயர்வடைந்தமையினாலும் உருவாகியது. இதன்காரணமாக, 2023இன் பெருமளவு காலப்பகுதியில், இரண்டாந்தரச் சந்தை விளைவு வளையி இரண்டு புடைத்த தலைகீழான விளைவு வளையியை எடுத்துக்காட்டியது. எனினும், உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகைத் தொழிற்பாடுகளைத் தொடர்ந்து அரச பிணையங்கள் மீதான விளைவுகள் மிதமடைந்தமை மேம்பட்ட இறை வருவாய் என்பனவற்றின் காரணமாக இது 2024 தொடக்கத்திலிருந்து வழமையான மேல் நோக்கி சரிந்த விளைவு வளையிக்கு மாற்றமடைந்தது.

### 1.3.3 கொடுகடன் கூட்டுக்கள்


**2023 யூனில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்படட கொடுகடனின் முழுமையான திரும்பல் நீண்டகாலமாக காணப்பட்ட தனியார் துறைக்கான கொடுகடனின் மாதாந்த சுருக்கத்தினை முடிவடையச்செய்தது.** மொத்தத்திற்கு, நாணயக் கொள்கை நிலையின் படிப்படியான தளர்வு, பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட முன்னேற்றம் மற்றும் சந்தை மனோபாவம் என்பனவற்றினால் ஆதரவளிக்கப்பட்டது. இதன்படி, 2023 யூன் - திசெம்பர் காலப்பகுதியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட வெளிநின்ற கொடுகடனில் ஏற்பட்ட ஒன்றுசேர்ந்த அதிகரிப்பு ரூ.367.4 பில்லியனாகக் காணப்பட்டது. 2023இன் பின்னரைப்பகுதியில் மீட்சி காணப்பட்டமைக்கிடையிலும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் தனியார் துறைக்கான கொடுகடன் 2023ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.45.0 பில்லியன் கொண்ட ஒன்றுசேர்ந்த சுருக்கத்தினைப் பதிவுசெய்து, 2022 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 6.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2023 இறுதியில் 0.6 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு சுருக்கத்தினைப் பதிவுசெய்தது. எனினும், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனில் காணப்பட்ட அதிகரித்துச் செல்லும் போக்கு 2024 சனவரியில் எதிர்பாராத மாதாந்தச் சுருக்கமொன்றினை ஏற்படுத்தியமைக்கு (ரூ.52.2 பில்லியன் கொண்ட சுருக்கம்) 2024 சனவரியில் நடைமுறைக்குவரும் பெறுமதிசேர் வரிச் சீராக்கங்களின் நடைமுறைப்படுத்தலைக் கருத்திற்கொண்டு முன்கூட்டிய செலவிடல் மற்றும் ஆண்டின் இறுதியில் பண்டிகைக் காலப்பகுதியில் வியாபாரங்களினால் பெறப்பட்ட குறுங்காலக் கடன்பாடுகள் தீர்ப்பனவு செய்யப்பட்டமையும் பகுதியளவில் காரணங்களாயமைந்தன. மேலும், 2024 சனவரியில் இலங்கை ரூபாவின் உயர்விலிருந்து தோன்றிய மதிப்பீட்டுத் தாக்கம் சுருக்கத்தினை மேலும் பெரிதாக்கியது. இருப்பினும் கூட, தனியார் துறைக்கான கொடுகடன் 2024 பெப்புருவரியில் ஓரளவிற்கு விரிவடைந்ததுடன், இது எதிர்காலத்தில் மேலும் விரிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றமையானது சந்தை வட்டி வீதங்கள் மேலும் குறைவடையும் என்ற எதிர்பார்ப்பினையும் பொருளாதார நடவடிக்கையில் முன்னேற்றத்தினையும் தோற்றுவிக்கிறது. அதேவேளை, உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2023இல் ரூ.32.9 பில்லியனால் சுருக்கமடைந்து, 2023இன் இறுதியில் 2.8 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு சுருக்கத்தினைப் பதிவுசெய்தமைக்கு அவ்வங்கிகளில் காணப்பட்ட இறுக்கமான திரவத்தன்மை நிலைமைகளும் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வட்டி வீதங்களும் காரணமாக அமைந்தன. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனும் 2023இல் ரூ.24.2 பில்லியனால் சுருக்கமடைந்து 2023 இறுதியளவில் 1.8 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டுச் சுருக்கத்தினைப் பதிவுசெய்தது.

**பொருளாதாரத்தின் முக்கிய துறைகளுக்கான கொடுகடன்,[17] 2023ஆம் ஆண்டின் முதலரைப்பகுதியில் சுருக்கத்தினால் பாதிக்கப்பட்டதெனினும் அதன் பின்னர் மீட்சியடைந்தது.** இவ்வாண்டுப்பகுதியில் உற்பத்தித் துறைகளுக்காக வழங்கப்பட்ட கொடுகடனில் முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்ட போதும், கைத்தொழில் துறைக்கான கொடுகடன் பின்னடைவினை அனுபவித்தது. இதற்கமைய, ஆண்டிற்கு ஆண்டு

17 கண்டறியப்பட்ட விடயங்கள், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான காலாண்டு அளவீட்டினை அடிப்படையாகக் கொண்டனவாகும்.

வரைபடம் 1.10

**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன்**





*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அடிப்படையில் வேளாண்மை மற்றும் பணிகள் துறை 2023ஆம் காலப்பகுதியில் முறையே 0.9 சதவீதத்தினாலும் 2.1 சதவீதத்தினாலும் அதிகரித்தன. வேளாண்மைத் துறைக்குள் தேயிலை, நெல் மற்றும் மீன்பிடித் துணைத் துறைகள் இவ்வாண்டுப்பகுதியில் கொடுகடன் விரிவாக்கத்தினைப் பதிவுசெய்து வேளாண்மை நடவடிக்கைகளில் காணப்பட்ட பரந்தளவிலான விரிவாக்கத்தினைப் பிரதிபலித்தன. பணிகள் துறையில் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், தொடர்பூட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்பம், கப்பற்படுத்தல், விமானப் போக்குவரத்து, சரக்கு அனுப்பல் தொடர்பான துணைத் துறைகள் இவ்வாண்டுப்பகுதியில் கொடுகடனில் விரிவாக்கத்தினைப் பதிவுசெய்து, பொருளாதாரத்திலுள்ள பணிகள் தொடர்பான பொருளாதார நடவடிக்கைகள் மீண்டும் உத்வேகம் பெற்றமைக்கான அறிகுறிகளைக் காட்டின. இறை தொடர்பான தடங்கல்களினால் உயர்வடைந்து வரும் மூலப்பொருள்களின் விலைகள் மற்றும் 2022 மற்றும் 2023 ஆரம்பத்தில் நிலவிய உயர்ந்த வட்டி வீதச் சூழல் காரணமாக அவற்றுடன் இணைந்து காணப்பட்ட நிதிச் செலவுகள் என்பன காரணமாக அரச மற்றும் தனியார் துறைச் செயற்றிட்டங்கள் குறைவடைந்தமையின் காரணமாக கட்டுமானத் துணைத் துறைக்கான கொடுகடன் கடுமையாகப் பாதிக்கப்பட்டமையினால் கைத்தொழில் துறைக்கான கொடுகடன் பலவீனமாகக் காணப்பட்டது. புடவைகள் மற்றும் ஆடைகள், உணவு மற்றும் குடிபானத் துணைத் துறைகளுக்கான கொடுகடனில் அவதானிக்கப்பட்ட சுருக்கம் ஆண்டின் பின்னரைப்பகுதியில் ஓரளவு மீட்சியைக் காட்டியது. எனினும், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், கைத்தொழில் துறைக்கான கொடுகடன் 2023இல் 5.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. அதேவேளை, தனியாள் கடன்கள் மற்றும் முற்பணங்களின் வடிவில் வழங்கப்பட்ட கொடுகடன்கள் 2023இல் 0.2 சதவீதம் கொண்ட சிறிதளவு சுருக்கத்தினால் பாதிக்கப்பட்ட போதும், அடகுபிடித்தலுடன் தொடர்பான கொடுகடனில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பின் தூண்டுதலினால் ஆண்டின் பின்னரைப்பகுதியில் மீட்சியொன்று அவதானிக்கப்பட்டது. அடகுபிடித்தலுக்கான கொடுகடன் கொவிட்-19 தொடங்கிய காலத்திலிருந்து தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது.

**வங்கித்தொழில் முறைமையிலிருந்து அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினால் பெறப்பட்ட கொடுகடன் 2022 காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட குறிப்பிடத்தக்க விரிவாக்கத்திற்கு மாறாக 2023இல் சுருக்கமடைந்தது.** உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2023இல் ரூ.979.9 பில்லியனால் சுருக்கமடைந்தமைக்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட

வரைபடம் 1.11 வங்கித்தொழில் முறைமையிலிருந்தான அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனின் வருடாந்த மாற்றம் (அ)




(அ) 2023 சனவரி 30 அன்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அதன் ஒப்புதலுடன், இலங்கை பெற்றோலியக் கூட்டத்தாபனத்தின் வெளிநின்ற வெளிநாட்டு நாணய உத்தரவாதப்படுத்தப்பட்ட படுகடனானது தெரிவுசெய்யப்பட்ட அரசுக்குச்சொந்தமான தொழில்முயற்சிகளின் ஐந்தொகையை மறுசீரமைப்பதற்கு பன்னாட்டு நாணய நிதிய – விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் உடன்பட்ட நடவடிக்கைகளுக்கமைய, 2022 திசெம்பரிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில், மத்திய அரசப் படுகடனில் உள்ளீர்க்கப்பட்டது. இதற்கமைய, இச்சீராக்கமானது இரு கட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. முதலாவது 2023 ஏப்பிறலிலும், அதைத்தொடர்ந்து 2023 திசெம்பரிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட-துடன் குறிப்பிடத்தக்க அரசுக்குச் சொந்தமான வர்த்தக வங்கியின் ஐந்தொகையில் பிரதிபலிக்கப்பட்டது. இதன்மூலம், அரசக் கூட்டுத்தாபனங்களுக்கான/அரசுக்குச்சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான கொடுகடனில் குறைப்பும் அத்துடன் தேறிய அரசிற்கான கொடுகனில் தொடர்புடைய விரிவாக்கமும் தோற்றுவிக்கப்பட்டது.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அரசாங்கத்தினால் உத்தரவாதமளிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயப் படுகடன் கடப்பாடுகள் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டமை முக்கிய காரணமாக அமைந்ததுடன் செலவினைப் பிரதிபலிக்கின்ற விலையிடல் நடைமுறைப்படுத்தப்பட்டமை தொடர்ந்து முக்கிய அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நிதியியல் செயலாற்றம் மேம்பட்டமையின் மூலம் வங்கி நிதியிடல் மீது அவை தங்கியிருப்பது குறைவடைந்தது.

**வங்கித்தொழில் முறைமை அரசாங்கத்தின் உள்நாட்டு நிதியிடலின் முக்கிய மூலங்களிலொன்றாக இருப்பதனால், உரிமம்பெற்ற வங்கிகளின் அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் 2023இல் தொடர்ந்தும் அதிகரித்தது.** வங்கித்தொழில் முறைமையின் அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் 2023 காலப்பகுதியில் ரூ.813.9 பில்லியனால் அதிகரித்ததெனினும் 2022 காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட (ரூ.1,638.7 பில்லியன் கொண்ட விரிவு) விரிவிலும் பார்க்க குறைவாகக் காணப்பட்டது. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் 2023ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.1,870.1 பில்லியன் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்து தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனில் ஏற்பட்ட குறைப்பு மற்றும் அரசாங்கத்திற்கான இ.பெ.கூட்டுத்தாபனத்தின் அரச உத்தரவாதமளிக்கப்பட்ட வெளிநின்ற வெளிநாட்டு நாணயப் படுகடனின் மாற்றல் என்பனவற்றிற்கு மத்தியிலும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் அரச பிணையங்களில் செய்யப்பட்ட முதலீடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. மாறாக 2023இல் மத்திய வங்கியின் அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ.1,056.3 பில்லியன் கொண்ட கணிசமான குறைப்பினைப் பதிவுசெய்தமைக்கு மத்திய வங்கி வசமிருந்த திறைசேரி உண்டியலின் சுமை குறைக்கப்பட்டமை உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் திரவத்தன்மையில் ஏற்பட்ட படிப்படியான முன்னேற்றங்களின் காரணமாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் மத்திய வங்கியின் துணைநில் கடன் வசதியின் பயன்பாடு குறைவடைந்தமையும் முக்கிய காரணங்களாக அமைந்தன. மத்திய வங்கியின் அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் குறைவடைந்தமைக்கு, நாணய நிதியிடலைத் தடை செய்கின்ற 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட நாணய நிதியிடல் மீதான கட்டுப்பாடுகளும் பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடுகளின் கீழ் மத்திய வங்கியின் அரச பிணையங்களின் உடமையினைக் குறைக்கும் கடப்பாடுகளும் ஓரளவு காரணங்களாயமைந்தன. அதேவேளை, M4[18] இனை அடிப்படையாகக் கொண்ட அரசிற்கான தேறிய கொடுகடனின் விரிவாக்கம் 2023இல் ரூ.1,038.6 பில்லியனாக விளங்கியது. இதில் ரூ.140.7 பில்லியன் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளூடாகவும் ரூ.84.0 பில்லியன் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளூடாகவும் கிடைத்தன.

## 1.3.4 நாணயக் கூட்டுக்கள்

**ஒதுக்குப்பணம் 2023இல் சிறிதளவு சுருக்கத்தினைப் பதிவுசெய்த போதும், 2023 தொடக்கத்திலிருந்து அதன் மட்டங்களில் உயர் தளம்பல்கள் அவதானிக்கப்பட்டமைக்கு இலங்கை மத்திய வங்கியின் துணைநில் வசதிகளின் மீது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் அளவுக்கதிகமாக தங்கியிருப்பதனைக் குறைப்பதற்காக மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட நிருவாக வழிமுறைகளின் தாக்கமே காரணமாக அமைந்தது.** துணைநில் வைப்பு வசதியை அணுகுவது மட்டுப்படுத்தப்பட்டமையானது,

18 நிதியியல் அளவீடானது திரவத்தன்மைசார் பரந்த வழிமுறைகளை வழங்குவதோடு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் மத்திய வங்கி என்பனவற்றிற்குப் புறம்பாக, உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உட்பட அனைத்து வைப்புக்களையும் ஏற்கும் நிறுவனங்களையும் உள்ளடக்குகிறது.

அட்டவணை 1.8

## நாணயக் கூட்டுக்களின் அபிவிருத்திகள்

ரூ.பில்லியன்

| வகை | 2019 இறுதி | 2020 இறுதி | 2021 இறுதி | 2022 இறுதி | 2023 இறுதி (அ) |
|---|---|---|---|---|---|
| **1. ஒதுக்குப் பணம்** | 933 | 964 | 1,306 | 1,349 | 1,329 |
| (ஆண்டிற்காண்டு % மாற்றம்) | -3.0 | 3.4 | 35.4 | 3.3 | -1.5 |
| மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டு சொத்துக்கள் | 896 | 527 | -387 | -1,614 | -837 |
| மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டு சொத்துக்கள் | 37 | 438 | 1,693 | 2,963 | 2,166 |
| **2. ஒடுங்கிய பணம் ($M_1$)** | 865 | 1,177 | 1,460 | 1,454 | 1,658 |
| (ஆண்டிற்காண்டு % மாற்றம்) | 4.2 | 36.0 | 24.0 | -0.4 | 14.1 |
| **3. விரிந்த பணம் ($M_{2b}$)** | 7,624 | 9,406 | 10,647 | 12,290 | 13,189 |
| (ஆண்டிற்காண்டு % மாற்றம்) | 7.0 | 23.4 | 13.2 | 15.4 | 7.3 |
| 3.1 தேறிய வெளிநாட்டு சொத்துக்கள் | 101 | -209 | -982 | -1,767 | -456 |
| நாணய அதிகார சபைகள் (ஆ) | 896 | 527 | -387 | -1,614 | -837 |
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | -795 | -736 | -595 | -153 | 381 |
| 3.2 தேறிய உள்நாட்டு சொத்துக்கள் | 7,523 | 9,615 | 11,629 | 14,056 | 13,645 |
| உள்நாட்டு கொடுகடன் | 9,411 | 11,721 | 14,002 | 16,632 | 16,421 |
| அரசிற்கான தேறிய கொடுகடன் | 2,796 | 4,548 | 5,832 | 7,471 | 8,285 (இ) |
| மத்திய வங்கி | 363 | 869 | 2,094 | 3,432 | 2,376 |
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | 2,433 | 3,679 | 3,738 | 4,039 | 5,909 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான/ அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான கொடுகடன் | 818 | 1,002 | 1,188 | 1,750 (ஈ) | 770 (இ) |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 5,797 | 6,171 | 6,981 | 7,411 (ஈ) | 7,366 |
| (ஆண்டிற்காண்டு % மாற்றம்) | 4.2 | 6.5 | 13.1 | 6.2 | -0.6 |
| ஏனைய விடயங்கள் (தேறிய) | -1,887 | -2,106 | -2,373 | -2,576 | -2,776 |
| **4. விரிந்த பணம் ($M_4$)** | 9,445 | 11,462 | 12,985 | 14,840 | 15,829 |
| (ஆண்டிற்காண்டு % மாற்றம்) | 8.2 | 21.4 | 13.3 | 14.3 | 6.7 |
| 4.1 தேறிய வெளிநாட்டு சொத்துக்கள் | 89 | -217 | -999 | -1,767 | -456 |
| நாணய அதிகார சபைகள் (ஆ) | 896 | 527 | -387 | -1,614 | -837 |
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | -795 | -736 | -595 | -153 | 381 |
| உரிமம்பெற்ற சிறப்பியல்வு வாய்ந்த வங்கிகள் | -12 | -8 | -17 | 0 | 0 |
| 4.2 தேறிய உள்நாட்டு சொத்துக்கள் | 9,356 | 11,679 | 13,984 | 16,607 | 16,285 |
| அரசிற்கான தேறிய கொடுகடன் | 3,483 | 5,366 | 6,769 | 8,469 | 9,507 (இ) |
| மத்திய வங்கி | 363 | 869 | 2,094 | 3,432 | 2,376 |
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | 2,433 | 3,679 | 3,738 | 4,039 | 5,909 |
| உரிமம்பெற்ற சிறப்பியல்வு வாய்ந்த வங்கிகள் | 614 | 742 | 845 | 881 | 1,022 |
| உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் | 73 | 75 | 92 | 116 | 200 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான/ அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான கொடுகடன் | 818 | 1,002 | 1,188 | 1,750 (ஈ) | 770 (இ) |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 7,793 | 8,285 | 9,339 | 9,917 (ஈ) | 9,815 |
| (ஆண்டிற்காண்டு % மாற்றம்) | 3.9 | 6.3 | 12.7 | 6.2 | -1.0 |
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | 5,797 | 6,171 | 6,981 | 7,411(ஈ) | 7,366 |
| உரிமம்பெற்ற சிறப்பியல்வு வாய்ந்த வங்கிகள் | 814 | 936 | 1,094 | 1,159 | 1,126 |
| உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் | 1,182 | 1,177 | 1,264 | 1,347 | 1,323 |
| ஏனைய விடயங்கள் (தேறிய) | -2,738 | -2,973 | -3,312 | -3,529 | -3,807 |
| ஞாபகார்த்த விடயங்கள்: | | | | | |
| இற்கான பணப் பெருக்கி ($M_{2b}$) | 8.18 | 9.75 | 8.15 | 9.11 | 9.93 |
| சுற்றோட்ட வேகம் ($M_{2b}$ இற்கான சராசரி) (உ) | 2.16 | 1.84 | 1.73 | 2.04 (ஈ) | 2.19 |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


(ஆ) அரசாங்க கணக்குகள் திணைக்களத்தால் அறிக்கையிடப்பட்டவாறு மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்தையும் அதேபோன்று அரசாட்சி முகவர் சிலுவையும் உள்ளடக்குகின்றது

(இ) 2023 சனவரி 30 அன்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அதன் ஒப்புதலுடன், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளிநின்ற நாணய உத்தரவாதப் படுகடன் 2022 திசெம்பர் தொடக்கம் மத்திய அரசப் படுகடனுடன் உள்ளீர்க்கப்பட்டது. இதற்கமைய, இச்சீராக்கமானது இரு கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டது. முதலாவது 2023 ஏப்பிறலிலும் அதைத்தொடர்ந்து, 2023 திசெம்பரிலும் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், குறித்த அரசுக்குச் சொந்தமான வர்த்தக வங்கியின் ஐந்தொகையில் பிரதிபலிக்கப்பட்டது. இது அரசக்கூட்டுத்தாபனங்களுக்கு/ அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளுக்கு கொடுகடனில் குறைப்பொன்றினையும் அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனில் ஒத்த விரிவாக்கமொன்றினையும் தோற்றுவித்தது.

(ஈ) திருத்தப்பட்டது

(உ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தாள் மீள்மதிப்பு செய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியை (2015 தள ஆண்டு) அடிப்படையாகக் கொண்டது

வரைபடம் 1.12
விரிந்த பணத்தின் ($M_{2b}$) ஆண்டிற்காண்டு வளர்ச்சிக்கான பங்களிப்பு




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

கிரமமற்ற இடைவெளிகளில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மத்திய வங்கியுடனும் பாரியளவு மிகையான ஒதுக்குகளைப் பேண வழியமைத்தது. இது இலங்கை மத்திய வங்கியுடனான உரிமம்பெற்ற வங்கிகளில் வைப்புக்களில் நாளாந்த தளம்பல்கள் உருவாக்கி ஒதுக்குப்பணம் தளம்பலடையக் காரணமாகியது. 2023 ஓகத்தில் நியதி ஒதுக்கு விகிதம் 200 அடிப்படைப் புள்ளியினால் குறைக்கப்பட்டமையுடன் மத்திய வங்கியுடனான உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்த போதும் கட்டுப்பாடுகள் 2023 காலப்பகுதியிலும் நடைமுறையிலிருந்தமையினால் தளம்பல் தொடர்ந்தும் காணப்பட்டது. அதேவேளை, 2023 ஏப்பிறலில் பண்டிகைக் காலத்தின் பின்னர் கணிசமாக வீழ்ச்சியடைந்த சுற்றோட்டத்திலுள்ள நாணயம் 2023 யூன் இறுதியில் ஓரளவு விரிவாக்கத்தினைப் பதிவுசெய்து முக்கியமாக உள்நாட்டுப் படுகடனை மேம்படுத்துகை தொழிற்பாட்டினைச் சுற்றி நிலவிய நிச்சயமற்ற தன்மையினைப் பிரதிபலித்தது. எனினும், உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை பற்றி பொதுமக்கள் பெருமளவு தெளிவான விரிவாக்கத்தினைப் பெற்றுக்கொண்டமையின் காரணமாக 2023 யூலை நடுப்பகுதியிலிருந்து நாணயம் வங்கித்தொழில் முறைமைக்குத் திரும்புவது அவதானிக்கப்பட்ட போதும் இது மிதமானதாகவே காணப்பட்டது. கடந்த காலத்தினைப் போன்றே, ஆண்டின் இறுதிப்பகுதியில் சுற்றோட்டத்திலிருந்த நாணயம் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு பண்டிகைக்காலக் கேள்வி காரணமாக இருந்த போதும் நாணயத்திற்கான பண்டிகைக்கால கேள்வியின் ஒரு பகுதி வங்கித்தொழில் முறைமைக்குத் திரும்பியது. எனினும், அதன் பின்னர், சுற்றோட்டத்திலுள்ள நாணயம் தொடர்ந்தும் அதிகரித்தமைக்கு பணத்தினை அடிப்படையாகக் கொண்ட கொடுக்கல்வாங்கல்களை அண்மைய வரி தொடர்பான வழிமுறைகள் அதிகரிக்கும் என எதிர்பார்த்தமை மற்றும் குறைவடைந்த வைப்பு வீதங்களின் காரணமாக நாணயமாக வைத்திருக்கும் அமையச் செலவு குறைவாக இருந்தமை என்பன காரணமாகயமைந்தன. இதற்கமைய, 2023 இறுதியில் ஒதுக்குப் பணம் ரூ.1,328.7 பில்லியனுக்குச் சுருக்கமடைந்து 1.5 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு சுருக்கத்தினைப் பதிவுசெய்தது. அதேவேளை, 2024 பெப்புருவரியிலும் மாச்சிலும் துணைநில் வசதிகள் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையின் காரணமாக நாளாந்த ஒதுக்குப் பணத்தில் காணப்பட்ட தளம்பல் ஓரளவிற்கு குறைவடைந்தது.

**மத்திய வங்கியின் ஐந்தொகையின் சொத்துக்கள் பக்கத்தில், 2023 காலப்பகுதியில் ஒதுக்குப் பணம் சுருக்கத்தினைப் பதிவுசெய்தமைக்கு, இவ்வாண்டுப்பகுதியில் மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களின் சுருக்கம் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் விரிவாக்கத்தினை விஞ்சிக் காணப்பட்டமையே முழுக் காரணமாகும்.** 2023இல் மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் ரூ.797.2 பில்லியனால் வீழ்ச்சியடைந்தமைக்கு அரசாங்கத்தின் தேறிய கோரல்களில் ஏற்பட்ட வீழ்ச்சி, முக்கியமாக, மத்திய வங்கியின் அரச பிணையங்களின் உடைமையில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கிய காரணமாக அமைந்தது (மீள்கொள்வனவு நீங்கலாக). இருப்பினும், உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தலைத் தொடர்ந்து உறப்பட்ட முன்கூட்டிய ஒரே இழப்பிற்கான கணக்கீட்டின் பெறுபேறாக 2023 செத்தெம்பரிலிருந்து பிடித்துவைக்கப்பட்ட இலாபம் எதிர்க்கணியமாக மாறியமை மற்றும் ஏனைய விடயங்களின் (தேறிய) விரிவாக்கத்திற்கு வழிவகுத்த உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வைப்பிலிடப்பட்ட துணைநில் வைப்பு வசதியில் ஏற்பட்ட குறைப்பு ஆகியவற்றினால் இவ்வீழ்ச்சி ஓரளவு தணிக்கப்பட்டது. அதேவேளை, 2021 ஓகத்தில் எதிர்க்கணியத்திற்கு திரும்பிய மத்திய

வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2023இல் படிப்படியாக மேம்பாடடைந்து வெளிநாட்டு ஒதுக்குகளின் திரட்சி மற்றும் மத்திய வங்கியின் வெளிநாட்டுப் பொறுப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவற்றுடன் சேர்ந்து அதிகரித்த வெளிநாட்டுச் சொத்துக்களின் இணைந்த தாக்கத்தினைப் பிரதிபலித்தது. 2023 காலப்பகுதியில் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ.776.5 பில்லியனால் மேம்பட்ட போதும் ஆண்டின் இறுதியளவில் தொடர்ந்தும் எதிர்க்கணியமாகவே காணப்பட்டது.

**வங்கித்தொழில் முறைமையின் தேறிய அரசிற்கான கொடுகடனிலும் தேறிய வெளிநாட்டுச் சொத்திலும் விரிவாக்கம் பதிவுசெய்யப்பட்ட போதும் விரிந்த பணநிரம்பல் ($M_{2b}$) 2023 காலப்பகுதியில் தொடர்ந்தும் மிதமாகக் காணப்பட்டமைக்கு தனியார் துறைக்கும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடனில் பதிவுசெய்யப்பட்ட சுருக்கமே முக்கிய காரணமாகும்.** வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2023 காலப்பகுதியில் ரூ.1,310.7 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவில் மேம்பட்டமைக்கு வெளிநாட்டுப் பொறுப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியும் வெளிநாட்டுச் சொத்துக்கள் கட்டியெழுப்பப்பட்டமையும் காரணமாக விளங்கி, வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்திலும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளிலும் ஒரு மேம்பாட்டினைப் பிரதிபலித்தது. மத்திய வங்கியினதும் அதேபோன்று உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்களின் தீர்ப்பனவு வங்கித்தொழில் முறைமையின் வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்கள் குறைவடைய உதவிய வேளையில் பல்புடை முகவர்களிடமிருந்தான பெறுகைகள் அதேபோன்று வங்கித்தொழில் முறைமைக்குள் வெளிநாட்டுச் செலாவணியினை பிடித்துவைத்தமைக்கு வெளிநாட்டுச் செலாவணிக்கான குறைந்த கேள்வியின் மூலமாக வங்கித்தொழில் முறைமையின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் அதிகரித்தமையே காரணமாகும். இதற்கமைய, இவ்வபிவிருத்திகளின் தூண்டுதலினால் விரிந்த பணத்தின் ($M_{2b}$) ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 2023 இறுதியில் 7.3 சதவீதத்திற்கு படிப்படியாக வீழ்ச்சியடைந்ததுடன் இது மேலும் 2022 இறுதியில் 15.4 சதவீதத்திலிருந்து 2024 சனவரி இறுதியளவில் மேலும், 6.4 சதவீதத்திற்கு குறைவடைந்தது. விரிந்த பணத்தின் இன் பொறுப்புக்கள் பக்கத்தில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளில் பொதுமக்களினால் வைத்திருக்கப்பட்ட தவணைச் சேமிப்பு வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு விரிந்த பணத்தின் ஆண்டிற்கு ஆண்டு விரிவாக்கத்தில் 77 சதவீதத்திற்குப் பங்களித்தது. அதேவேளை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளில் பொதுமக்களினால் வைத்திருக்கப்பட்ட நாணயம் மற்றும் கேள்வி வைப்புக்களின் விரிவாக்கமொன்று 2023இல் பதிவுசெய்யப்பட்டமைக்கு அதிகரித்த வாழ்க்கைச் செலவுகளுக்கிடையில் நாணயம் மற்றும் கேள்வி வைப்புக்களின் அதிகரித்த கையிருப்புக்கள் பகுதியளவில் காரணமாகியது. நாணயம் மற்றும் கேள்வி வைப்புக்களை கையிருப்புக்களில் வைத்திருப்பதனால் ஏற்படும் அமையச் செலவுகளை வீழ்ச்சியடைந்து செல்லும் வட்டி வீதங்கள் குறைத்துவிட்டன. விரிந்த பணத்தில் அவதானிக்கப்பட்ட இதே போக்கினைத் தொடர்ந்து நிதியியல் அளவீட்டினால் அளவிடப்பட்டவாறான $M_4$ விரிந்த பணநிரம்பலின் வளர்ச்சி 2023இல் மிதமானதாகக் காணப்பட்டது.

## 1.4 வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள்

**இலங்கையின் வெளிநாட்டுத் துறை 2023இல் மிக வலுவாக மீளெழுச்சியடைந்து பெருமளவு உறுதித்தன்மையினை எடுத்துக்காட்டி, ஆண்டின் பிற்பகுதியில் பல்வேறு முனைகளிலும் சாதகமான அபிவிருத்தியைப் பதிவுசெய்தது.** 2023 மாச்சில் ஆரம்பமான பன்னாட்டு நாணய நிதியத்தின் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியும் இது வரை அதன் வெற்றிகரமான தொடர்ச்சியும் வெளிநாட்டுத் துறையில் உறுதித்தன்மையினை எய்துவதற்கான கருவியாக விளங்கி வருகிறது. வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு 2023இல் மிகையைப் பதிவுசெய்தது. இதற்கு, வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க சுருக்கமும் பணிகளின் ஏற்றுமதி மற்றும் தொழிலாளர் பணவனுப்பல் நியதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க உட்பாய்ச்சல்களும் ஆதரவாக அமைந்தன. 2023ஆம் ஆண்டிற்கான வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறை 2010இற்குப் பின்னர் அதன் மிகக் குறைந்த மட்டத்தினைப் பதிவுசெய்தமைக்கு, ஏற்றுமதி வருவாய்களிலும் பார்க்க இறக்குமதிச் செலவினம் பெருமளவிற்கு சுருக்கமடைந்தமை ஆதரவாக அமைந்தது. பணிகள் கணக்கின் மிகையில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு கடந்த நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ச்சியாக

1

அட்டவணை 1.9

**நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு**

| வகை | ஐ.அ.டொ.மில்லியன் | |
|---|---|---|
| | 2022 (அ) | 2023 (ஆ) |
| நடைமுறைக் கணக்கு (தேறிய) | -1,448 | 1.559 |
| பெறுகைகள் | 20,228 | 23,779 |
| கொடுப்பனவுகள் | 21,677 | 22,221 |
| வர்த்தக நிலுவை | -5,185 | -4,900 |
| ஏற்றுமதிகள் | 13,106 | 11,911 |
| இறக்குமதிகள் | 18,291 | 16,811 |
| பணிகள் (தேறிய) | 2,110 | 3,404 |
| பெறுகைகள் | 3,062 | 5,416 |
| *இதில்;* | | |
| போக்குவரத்து | 676 | 1,550 |
| பயணம் | 1,136 | 2,068 |
| கணனி பணிகள் | 1,066 | 795 |
| கட்டடவாக்க பணிகள் | 9 | 355 |
| கொடுப்பனவுகள் | 953 | 2,012 |
| *இதில்;* | | |
| போக்குவரத்து | 333 | 732 |
| பயணம் | 244 | 152 |
| கணனி பணிகள் | 133 | 198 |
| கட்டடவாக்க பணிகள் | 11 | 111 |
| முதலாந்தர வருமானம் (தேறிய) | | |
| பெறுகைகள் | 266 | 463 |
| ஊழியர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் | 30 | 53 |
| முதலீட்டு வருமானம் | 237 | 410 |
| நேரடி முதலீடு | 15 | 12 |
| சொத்துப்பட்டியல் முதலீடு | - | - |
| ஏனைய முதலீடு | 217 | 349 |
| கொடுப்பனவுகள் | 2,136 | 3,027 |
| ஊழியர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் | 69 | 30 |
| முதலீட்டு வருமானம் | 2,068 | 2,997 |
| நேரடி முதலீடு | 549 | 888 |
| சொத்துப்பட்டியல் முதலீடு | 778 | 866 |
| ஏனைய முதலீடு | 741 | 1,243 |
| இரண்டாம் நிலை வருமானம் (தேறிய) | 3,496 | 5,619 |
| பெறுகைகள் | 3,793 | 5,989 |
| *இதில்;* | | |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 3,789 | 5,970 |
| கொடுப்பனவுகள் | 296 | 371 |
| மூலதனக் கணக்கு (தேறிய) | 19 | 63 |
| பெறுகைகள் | 38 | 94 |
| கொடுப்பனவுகள் | 19 | 31 |
| நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு (தேறிய) | -1,429 | 1,622 |
| மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக | | |
| வர்த்தக நிலுவை | -6.7 | -5.8 |
| பொருட்கள் மற்றும் பணிகள் | -4.0 | -1.8 |
| நடைமுறைக் கணக்கு | -1.9 | 1.8 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

ஏற்பட்ட சவால்களுக்கு முகம் கொடுத்த பின்னர் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்பட்ட உத்வேகம் மிக்க மீட்சியின் விளைவாக சுற்றுலாவிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றமே முக்கிய காரணமாக அமைந்தது. அட்டுறு அடிப்படையில் திரட்டப்பட்ட முதலாந்தர வருமானத்தில் காணப்படும் பற்றாக்குறை 2023இல் விரிவடைந்தமைக்கு, நிலுவைகள் உட்பட வெளிநாட்டுக் கடன்கள் மீதான உயர்ந்த வட்டிக் கொடுப்பனவுகள் காரணமாயின. மேலும், தொடர்ச்சியாக வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புக்காக நாட்டைவிட்டுப் புறப்படுதல் மற்றும் உத்தியோகபூர்வ முறைகள் மூலமாக அதிகரித்த உட்பாய்ச்சல்களின் காரணமாக தொழிலாளர் பணவனுப்பல்கள் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பதிவுசெய்தது. மறுபுறத்தில், மிதமான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களின் காரணமாக நிதியியல் கணக்கின் செயலாற்றம் தொடர்ந்தும் குறைவடைந்து காணப்பட்டது. எனினும், அரச பிணையங்கள் சந்தை மற்றும் பங்குச் சந்தையில் வெளிநாட்டு முதலீடுகள் 2023இல் தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. அதேவேளை, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்களவிலான தேறிய வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள், பன்னாட்டு நாணய நிதியத்தின் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழான பகிர்ந்தளிப்புக்கள் மற்றும் உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பல்புடை முகவர்களிடமிருந்தான வெளிநாட்டு நிதியிடல் என்பன மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2023இன் இறுதியில் கணிசமான அதிகரிப்பதற்கு உதவின. 2022இல் பதிவு செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க தேய்விற்கு மாறாக 2023 காலப்பகுதியில் இலங்கை ரூபா குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வடைந்தமைக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் செலாவணி சந்தையில் மேம்பட்ட திரவத்தன்மை நிலைமைகளும் சந்தை மனோபாவங்களும் காரணங்களாக அமைந்தன.


## 1.4.1 சென்மதி நிலுவை


### நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு


**வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு 2022இன் ஐ.அ.டொலர் 1,448 மில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில், 2023இல் ஐ.அ.டொலர் 1,559 மில்லியன் கொண்ட மிகையைப் பதிவுசெய்தது.** இம்மிகை, முக்கியமாக, 2022இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 5.2 பில்லியன் கொண்ட வர்த்தகப் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2023இல் ஐ.அ.டொலர் 4.9 பில்லியன் கொண்ட குறைந்த வர்த்தகப் பற்றாக்குறையை கொண்டிருந்தது. இது, முதலாந்தர வருமானக் கணக்கில் ஏற்பட்ட பற்றாக்குறையால் சிறிதளவால் விரிவடைந்த போதும்,

வரைபடம் 1.13

**வெளிநாட்டுத் துறையின் முக்கிய பண்புகள்**




வர்த்தக பற்றாக்குறையின் மிதமடைந்த மட்டம், தொழிலாளர் பணவனுப்பல்களை மீண்டும் ஏற்படுத்தல், சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் மற்றும் பணிகள் துறைக்கான ஏனைய தேறிய உட்பாய்ச்சல்கள் என்பன 2023இல் நடைமுறைக் கணக்கு மிகைக்கு பங்களிப்புச் செய்து, நிலையான செலாவணி வீதத்தையும் அதிகரித்த மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் தோற்றுவித்தன.

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*


பணிகளிலுள்ள மேம்பட்ட வர்த்தகம் குறிப்பாக சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் மற்றும் இரண்டாந்தர வருமானக் கணக்கில் காணப்பட்ட உயர்ந்த மிகை என்பனவற்றினால் தூண்டப்பட்டது.

## வணிகப்பொருள் வர்த்தகக் கணக்கு

**2023ஆம் ஆண்டிற்கான வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறை, 2010இற்குப் பின்னர் அதன் மிகக் குறைந்த மட்டத்தினை அடைந்து ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் இறக்குமதிச் செலவினம் கணிசமாக வீழ்ச்சியடைந்தமையின் மூலம் பெருமளவிற்குத் தூண்டப்பட்டது.** 2023இல் ஏற்றுமதி வருவாய்கள் கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியுடன் குறைவடைந்தது. இது ஆடை ஏற்றுமதிகளின் வீழ்ச்சியின் மூலம் தூண்டப்பட்டது. அதேவேளை, இறக்குமதிச் செலவினத்தில் அவதானிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சிக்கு குறைவடைந்த பொருளாதார நடவடிக்கைகள், குறைந்த செலவிடத்தக்க வருமானம், இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மற்றும் இறுக்கமான நாணய மற்றும் இறை நிலைமைகள் என்பன காரணங்களாயமைந்தன. இதன்படி, வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2022இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 5,185 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 4,900 மில்லியனுக்கு குறுக்கமடைந்தது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2022இல் 6.7 சதவீதத்திலிருந்து 2023இல் 5.8

வரைபடம் 1.14

**நடைமுறைக் கணக்கு நிலுவை மற்றும் அதன் உள்ளமைப்பு**




சதவீதத்திற்குக் குறுக்கமடைந்தது. வர்த்தக மாற்று விகிதம் அதாவது இறக்குமதிகளின் விலைகளுக்கான ஏற்றுமதி விலைகளின் விகிதம் சிறிதளவிற்கு தேய்வடைந்தமைக்கு, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள் இரண்டும் 2022 உடன் ஒப்பிடுகையில் 2023இல் ஒத்த மட்டத்திற்கு நெருக்கமாக தேய்வடைந்தமையே காரணமாகும். அதேவேளை,

அட்டவணை 1.10

**வணிகப்பொருள் வர்த்தகச் செயலாற்றத்தின் சுருக்கம்**

| வகை | 2022 பெறுமதி (ஐ.அ.டொ. மில்லியன்) | 2023 பெறுமதி (ஐ.அ.டொ. மில்லியன்) | ஆண்டிற்காண்டு மாற்றம் (%) |
|---|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | **13,106.4** | **11,910.7** | **-9.1** |
| கைத்தொழில் | 10,465.3 | 9,277.7 | -11.3 |
| வேளாண்மை | 2,568.0 | 2,566.5 | -0.1 |
| கனிப்பொருள் | 50.0 | 38.5 | -23.1 |
| வகைப்படுத்தப்படாதவை | 23.2 | 28.0 | 20.8 |
| **இறக்குமதிகள்** | **18,291.0** | **16,811.1** | **-8.1** |
| நுகர்வோர் | 2,813.0 | 3,043.9 | 8.2 |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 1,607.9 | 1,693.0 | 5.3 |
| உணவல்லா நுகர்வோர் | 1,205.1 | 1,350.9 | 12.1 |
| இடைநிலை | 12,438.8 | 11,006.6 | -11.5 |
| முதலீடு | 3,030.5 | 2,744.6 | -9.4 |
| வகைப்படுத்தப்படாதவை | 8.8 | 16.0 | 82.9 |
| **வர்த்தக நிலுவை** | **-5,184.6** | **-4,900.4** | |
| **மொத்த வர்த்தகம்** | **31,397.4** | **28,721.8** | **-8.5** |

*மூலங்கள்:* இலங்கைச் சுங்கம்
பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள்
தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை
இலங்கை மத்திய வங்கி

மொத்த வர்த்தகம் அதாவது ஏற்றுமதி வருவாய்களின் மொத்தம் மற்றும் இறக்குமதிச் செலவினம் 2023இல் (ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில்) 8.5 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்தது.

## ஏற்றுமதிச் செயலாற்றம்

**வணிகப்பொருட்களின் ஏற்றுமதிச் செயலாற்றம் 2023இல் குறைவடைந்தது.** 2023இல் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 11,911 மில்லியனைப் பதிவுசெய்தது. இது, 2022 உடன் ஒப்பிடுகையில் 9.1 சதவீதத்தினால் வீழ்ச்சி கண்டது. இவ்வீழ்ச்சியின் மீது உயர்ந்த வாழ்க்கைச் செலவு மற்றும் முக்கிய ஏற்றுமதி நாடுகளின் பொருளாதாரச் சரிவு, புவி அரசியல்சார் பதற்றங்கள் உள்ளிட்ட உலகளாவிய காரணிகள் செல்வாக்குச் செலுத்தின. இது இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான கேள்வியைக் குறைவடையச் செய்தன. மறுபுறத்தில் உயர்ந்த தொழிற்பாட்டுச் செலவினங்கள் மற்றும் இடைநிலைப்பொருட்களின் நிரம்பல் இடையூறுகள் போன்ற உள்நாட்டுக் காரணிகள் ஏற்றுமதிகளின் ஒட்டுமொத்த போட்டித்தன்மையின் மீது மோசமான தாக்கத்தினை ஏற்படுத்தின. ஒட்டுமொத்த ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சி, ஏற்றுமதிச் சுட்டெண்களின் அசைவுகளில் பிரதிபலிக்கப்பட்டவாறு ஏற்றுமதி விலைகளின் வீழ்ச்சிக்கு காரணமான வேளையில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் அதிகரித்தது. மேலும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக ஏற்றுமதி வருவாய்கள் 2022இன் 17.1 சதவீதத்திலிருந்து 2023இல் 14.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.


**கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பெருமளவிற்குப் பங்களித்த போதும் இவ்வீழ்ச்சி பரந்த அடிப்படையைக் கொண்டதாகக் காணப்பட்டது.** இலங்கையின் தனியொரு பாரிய ஏற்றுமதியாக விளங்கும் புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகள் 2022 உடன் ஒப்பிடுகையில் 2023இல் 18.0 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்து ஏற்றுமதியின் ஒட்டுமொத்த வீழ்ச்சிக்கு முக்கிய பங்களிப்பாளராக தோற்றம்பெற்றது. 2023இல் பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டமைக்கு நீர்க்கல மற்றும் வான் எரிபொருட்களின் குறைந்த விலைகளே காரணமாகும். மற்றைய பெரும்பாலான கைத்தொழில் பொருட்களிலிருந்தான வருவாய்களும் மந்தமான செயலாற்றத்தினைக் கொண்டிருந்தன. எனினும், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் மற்றும் பொறிகள், எந்திரவியல் சாதனங்களின் ஏற்றுமதிகள் 2023இல் வளர்ச்சியைப் பதிவுசெய்தன. அதேவேளை, வேளாண்மை ஏற்றுமதிகள் 2022 உடன் ஒப்பிடுகையில் 2023இல் ஏற்றுமதிகளில் சிறிதளவு குறைப்பினைப் பதிவுசெய்தன. வேளாண்மை ஏற்றுமதிகளான தேயிலை, வாசனைத்திரவியங்கள் மற்றும் தயாரிக்கப்படாத புகையிலை என்பனவற்றில் முக்கியமாகக் காணப்பட்ட அதிகரிப்புக்கள் தேங்காய், இறப்பர் மற்றும் கடலுணவு ஏற்றுமதிகளில் காணப்பட்ட நலிவடைந்த செயலாற்றங்களினால் எதிரீடு செய்யப்பட்டன. தேயிலை ஏற்றுமதிகளின் அளவுகளில் வீழ்ச்சி காணப்பட்ட போதும் தேயிலை ஏற்றுமதிகளின் வருவாய்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்டமை உயர்ந்த ஏற்றுமதி விலைகளைப் பிரதிபலிப்பதாக இருந்தது. கனிப்பொருள் ஏற்றுமதிகள் 2022 உடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தமைக்கு 2023இல் ரைட்டேனிய தாதின் குறைந்த ஏற்றுமதிகளே வழிவகுத்தது.

## இறக்குமதிச் செயலாற்றம்

**2023இல் இறக்குமதிச் செலவினத்தில் குறிப்பிடத்தக்க சுருக்கம் அவதானிக்கப்பட்டது.** இறக்குமதி மீதான செலவினம் 2022 உடன் ஒப்பிடுகையில் 2023இல் ஐ.அ.டொலர் 16,811 மில்லியனுக்கு 8.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள், குறைவடைந்த பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் இறுக்கமான நாணய மற்றும் இறைக்கொள்கைகளின் காரணமாக பொதுமக்களின் செலவிடல் இயலாற்றல் சுருக்கமடைந்தமை உள்ளிட்ட பல காரணிகள் தூண்டுதலாக விளங்கின. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக இறக்குமதிச் செலவினம் 2022இல் 23.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2023இல் 19.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.


**இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி இடைநிலை மற்றும் முதலீட்டுப்பொருட்களின் குறைந்த இறக்குமதியின் பெறுபேறாக அமைந்த வேளையில் உணவு மற்றும் உணவல்லா நுகர்வுப்பொருட்கள் இரண்டின் இறக்குமதிகள் மீதுமான செலவினம் அதிகரித்தது.** அரிசி இறக்குமதி மீதான செலவினம் முக்கியமாக குறைந்த அரிசி இறக்குமதி விலைகளின் காரணமாக 2022 உடன் ஒப்பிடுகையில் 2023இல்

வரைபடம் 1.15 ஏற்றுமதிகளின் உள்ளமைப்பு




*மூலங்கள்:* இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 1.16 இறக்குமதிகளின் உள்ளமைப்பு




(அ) பருப்பு வகைகள் வெங்காயம் உருளைக்கிழங்குகள், அவரை வகை மற்றும் ஏனைய காய்கறிகளை உள்ளடக்கின்றது.

*மூலங்கள்:* இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

கணிசமானளவிற்கு வீழ்ச்சியடைந்த போதும் சீனி, எண்ணெய் மற்றும் கொழுப்பு மற்றும் பால்மா போன்ற ஏனைய பெரும்பாலான உணவு இறக்குமதிகள் மீதான உயர்ந்த செலவினால் எதிரீடு செய்யப்பட்டது. அதேவேளை, உணவல்லா நுகர்வுப்பொருட்கள் மீதான செலவினம் பெருமளவிற்கு அதிகரித்தமைக்கு மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகளினதும் செல்லிடத் தொலைபேசிகளினதும் இறக்குமதிகளே காரணமாகும். எனினும், உணவல்லா நுகர்வுப்பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட ஏனைய பெரும்பாலான விடயங்கள் 2023இன் பிற்பகுதியில் அதிகரித்த போக்கினைக் காட்டியமைக்கு இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையே காரணமாகும். இடைநிலைப்பொருட்கள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு புடவை மற்றும் புடவைப்பொருட்களில் ஏற்பட்ட வீழ்ச்சி குறிப்பிடத்தக்க பங்கிற்கு வகைகூறி ஆடை ஏற்றுமதிகளைப் பிரதிபலித்தது. இறக்குமதிக் கூடையில் பெரும் விடயமாக விளங்கும் எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு பெரும்பாலும் அனைத்து உற்பத்திகளினதும் மசகெண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் (திரவப்பெற்றோலிய வாயு உட்பட) மற்றும் நிலக்கரியிலும் குறைந்த இறக்குமதி விலைகள் முக்கிய காரணமாக அமைந்த போதும் அதிகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் நிலக்கரியின் இறக்குமதி அளவுகள் அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. குறைந்த பொருளாதார நடவடிக்கைகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் பெரும்பாலான ஏனைய இடைநிலைப்பொருட்களின் மீதான செலவினம் 2023இல் வீழ்ச்சியடைந்தது. முதலீட்டுப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு முதலீட்டுப்பொருட்களின் அனைத்து மூன்று முக்கிய வகைகளான பொறிகள் மற்றும் சாதனங்கள் (முக்கியமாகப் பொறியியல்படுத்தும் பொருட்கள்), கட்டட மூலப்பொருட்கள் (முக்கியமாக இரும்பு மற்றும் உருக்கு), போக்குவரத்துச் சாதனங்கள் மற்றும் பெரும்பாலான துணைவகைகளிலும் ஏற்பட்ட வீழ்ச்சி 2022 உடன் ஒப்பிடுகையில் 2023இல் குறிப்பிடத்தக்கதாகக் காணப்பட்டமையும் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மற்றும் விசேடமாக கட்டுமானத் துறையின் பொருளாதார நடவடிக்கைகள் குறைவடைந்தமையும் முக்கிய காரணங்களாக அமைந்தன.

## வர்த்தக மாற்று விகிதம்

**ஏற்றுமதி விலைகளுக்கும் இறக்குமதி விலைகளுக்குமான விகிதமாக விளங்கும் வர்த்தக மாற்று விகிதம் 2023இல் சிறிதளவால் தேய்வடைந்தது.** ஏற்றுமதி மற்றும் இறக்குமதி விலைச்சுட்டெண்கள் முறையே 11.3 சதவீதத்தினாலும் 10.8 சதவீதத்தினாலும் 82.7 சுட்டெண் புள்ளிகளுக்கும் 96.6 சுட்டெண் புள்ளிகளுக்கும் வீழ்ச்சியடைந்தமையின் மூலம் வர்த்தக மாற்று விகிதம் 2022 உடன் ஒப்பிடுகையில் 2023இல் 0.6 சதவீதத்தினால் தேய்வடைந்தது. கைத்தொழில் ஏற்றுமதிகளினதும் கனிப்பொருள் ஏற்றுமதிகளினதும் விலைச்சுட்டெண்களில் ஏற்பட்ட வீழ்ச்சி ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பங்களித்த வேளையில் இடைநிலைப்பொருட்களினதும் முதலீட்டுப்பொருட்களினதும் இறக்குமதிகளின் குறைந்த விலைகள் ஒட்டுமொத்த இறக்குமதி விலைச்சுட்டெண்ணில் வீழ்ச்சிக்கு முக்கியமாக வகைகூறின. கைத்தொழில் ஏற்றுமதிகள் தவிர்ந்த, ஏற்றுமதிகளின் அனைத்து முக்கிய வகைகளுக்குமான அளவுச்சுட்டெண்கள் தேய்வடைந்தவிடத்து நுகர்வுப்பொருட்கள் தவிர்ந்த அனைத்து முக்கிய வகைகளினதும் இறக்குமதி அளவுச்சுட்டெண்கள் 2023இல் முன்னேற்றங்களைக் காட்டின.

## வர்த்தகத்தின் போக்கு


**2023இல் குறைவடைந்த மொத்த வர்த்தகத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் பெரும்பாலான முக்கிய வர்த்தகப் பங்காளர்களுடனுமான இருபுடை வர்த்தகம்**

அட்டவணை 1.11
வர்த்தக மாற்று விகித சுருக்கம் (2010=100)

| வகை | 2022/ 2023 (%) ஆண்டிற்காண்டு மாற்றம் | | |
|---|---|---|---|
| | பெறுமதிச் சுட்டெண் | அளவுச் சுட்டெண் | அலகுப் பெறுமதிச் சுட்டெண் |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **-9.1** | **2.4** | **-11.3** |
| வேளாண்மை ஏற்றுமதிகள் | -0.1 | -0.3 | 0.3 |
| கைத்தொழில் ஏற்றுமதிகள் | -11.3 | 3.0 | -13.9 |
| கனிப்பொருள் ஏற்றுமதிகள் | -23.1 | -15.0 | -9.5 |
| **மொத்த இறக்குமதிகள்** | **-8.1** | **3.0** | **-10.8** |
| நுகர்வுப் பொருட்கள் | 8.2 | -1.4 | 9.7 |
| இடைநிலைப் பொருட்கள் | -11.5 | 0.7 | -12.1 |
| முதலீட்டுப் பொருட்கள் | -9.4 | 10.6 | -18.1 |
| **வர்த்தக மாற்று விகிதம்** | | | **-0.6** |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 1.17** நாடுகள் ரீதியான வர்த்தக நிலுவை




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**கணிசமானவளவிற்கு வீழ்ச்சியடைந்தது.** இந்தியா, இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளராகத் தொடர்ந்தும் இருந்து வருவதுடன் அதனைத் தொடர்ந்து சீனாவும் ஐக்கிய அமெரிக்காவும் விளங்குகின்றன. இதன்படி, இம்மூன்று முக்கிய வர்த்தகப் பங்காளர்களும் சேர்ந்து 2023இல் இலங்கையின் மொத்த வர்த்தகத்தில் ஏறத்தாழ 37 சதவீதத்திற்குப் பங்களித்தன. இந்தியாவுடனான மொத்த வர்த்தகம் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 4 பில்லியனாக காணப்பட்ட வேளையில் சீனா மற்றும் ஐக்கிய அமெரிக்கா இரண்டுடனுமான வர்த்தகம் ஒவ்வொன்றும் ஐ.அ.டொலர் 3 பில்லியனை விஞ்சின. இறக்குமதிகளில் ஏற்பட்ட பொதுவான வீழ்ச்சியுடன் இசைந்து செல்லும் விதத்தில் பெரும்பாலான நாடுகளுடனான மொத்த வர்த்தகம் வீழ்ச்சியடைந்தது. 2023இல் முக்கிய நாடுகளின்படியான வர்த்தக நிலுவைகள் பெரும்பாலும் மாற்றமின்றிக் காணப்பட்டவிடத்து குறிப்பிடத்தக்களவு வர்த்தக மிகைகள் ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இத்தாலி, ஜேர்மனி மற்றும் நெதர்லாந்துடன் பதிவுசெய்யப்பட்ட வேளையில், கணிசமான வர்த்தகப் பற்றாக்குறை சீனா, இந்தியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சிங்கப்பூர் மற்றும் மலேசியாவுடன் பதிவுசெய்யப்பட்டன.

## வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகள், அபிவிருத்திகள் மற்றும் நிறுவன ரீதியான ஆதரவு

**வணிகப்பொருள் வர்த்தகத் துறையின் செயலாற்றம் குறைவடைந்தமைக்கிடையிலும் வர்த்தக கொள்கையின் நகர்வு 2023இல் புதுப்பிக்கப்பட்ட உத்வேகத்துடன் முன்னோக்கிச் செல்லத் தொடங்கியது.** 2018 ஒத்தோபரிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பான பேச்சுவார்த்தைகள் 2023இல் விரைவுபடுத்தப்பட்டதன் விளைவாக இலங்கைக்கும் தாய்லாந்திற்குமிடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை 2024 பெப்புருவரியில் கையெழுத்தாகியது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவநிலைமைகள் முன்னேற்றம் கண்டமையினால் 2020-2022 காலப்பகுதியில் விதிக்கப்பட்டிருந்த இறக்குமதிக் கட்டுப்பாடுகள் 2023இல் தளர்த்தப்பட்டன. இதற்கமைய, குறிப்பிட்ட அத்தியாவசியமற்ற இறக்குமதிகள் மீது 2022 மேயில் மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட 100 சதவீத காசு அளவுத் தேவைப்பாடுகள் 2023 மேயில் அகற்றப்பட்டன. அதேவேளை, குறிப்பிட்ட அத்தியாவசியமற்ற விடயங்களை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கான இறக்குமதிக் கட்டுப்பாடுகளும் 2023 யூன், யூலை மற்றும் ஒத்தோபரில் அரசாங்கத்தினால் படிப்படியாகத்

**அட்டவணை 1.12** இலங்கையின் முன்னுரிமை மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளுக்கு கீழான ஏற்றுமதிகள்

| முன்னுரிமை உடன்படிக்கை | 2022 | 2023 (அ) | | |
|---|---|---|---|---|
| | பெறுமதிகள் (ஐ.அ.டொ. மில்லியன்) | பெறுமதிகள் (ஐ.அ.டொ. மில்லியன்) | வளர்ச்சி (%) | பங்கு (%) |
| முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை (ஜி.எஸ்.பி) | 4,314.7 | 3,803.5 | -11.8 | 79.7 |
| இதில் ஐரோப்பிய ஒன்றியம் (முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை+ உள்ளடங்கலாக) | 2,440.3 | 2,094.5 | -14.2 | 43.9 |
| ஐக்கிய அமெரிக்கா (ஆ) | 719.0 | 663.4 | -7.7 | 13.9 |
| ஐக்கிய இராச்சியம் | 659.0 | 562.4 | -14.7 | 11.8 |
| ருசிய கூட்டாட்சி (இ) | 125.7 | 127.9 | 1.7 | 2.7 |
| அவுஸ்திரேலியா | 97.0 | 93.3 | -3.8 | 2.0 |
| கனடா | 86.2 | 72.9 | -15.4 | 1.5 |
| யப்பான் | 80.7 | 68.3 | -15.3 | 1.4 |
| துருக்கி | 45.3 | 62.6 | 38.1 | 1.3 |
| ஏனைய முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை | 61.6 | 58.2 | -5.5 | 1.2 |
| இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை | 561.5 | 536.4 | -4.5 | 11.2 |
| ஆசிய-பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (ஈ) | 228.4 | 213.9 | -6.4 | 4.5 |
| தற்காசியா சுதந்திர வர்த்தக பிரதேசம் | 75.2 | 93.2 | 23.9 | 2.0 |
| வர்த்தக முன்னுரிமைகளுக்கான உலகளாவிய முறைமை | 62.5 | 79.1 | 26.7 | 1.7 |
| பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை | 56.6 | 46.1 | -18.6 | 1.0 |
| சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை | 1.5 | 1.1 | -24.5 | 0.0 |
| **மொத்தம்** | **5,300.4** | **4,773.4** | **-9.9** | **100.0** |
| **மொத்த ஏற்றுமதிகளின் பங்காக** | **40.4** | **40.1** | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) ஐக்கிய அமெரிக்க-முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை 2020.12.31 அன்று காலாவதியானதினால் முன்னுரிமையளிக்கப்பட்ட பொதுவாக்கப்பட்ட முறைகளைக் காண்பிக்கின்றது
(இ) ருசியா, பெலாறுஸ் மற்றும் கசகஸ்தான் உள்ளடங்கலாக
(ஈ) முன்னர் பாங்கொக் உடன்படிக்கை (1975) என அழைக்கப்பட்டது

*மூலங்கள்:* இலங்கை வர்த்தகத் திணைக்களம், இலங்கைச் சுங்கம்

1

தளர்த்தப்பட்டன. அதன் பின்னர், உந்து ஊர்திகள் மட்டும் தொடர்ந்தும் இடைநிறுத்தப்பட்ட பட்டியலில் காணப்பட்டன. 2022 மேயில் முக்கியமாகத் திறந்த கணக்கு நியதிகளின் மீது விதிக்கப்பட்ட கொடுப்பனவு நியதிகள் மீதான கட்டுப்பாடுகள் 2023ஆம் ஆண்டு முழுவதும் தொடர்ந்த போதும் இறக்குமதிகளுக்காக ஏற்றுக்கொள்ளலுக்கெதிரான ஆவணம் மற்றும் கொடுப்பனவு நியதிகளுக்கெதிரான ஆவணங்களுக்காக வர்த்தக வங்கிகளிலிருந்து முன்னொப்புதல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற தேவைப்பாடு 2024 பெப்புருவரியில் நீக்கப்பட்டது.

**இலங்கை அதன் நான்காவது இருபுடை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினை தாய்லாந்துடன் கையெழுத்திட்ட வேளையில், ஏனைய பல சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளுக்கான பேச்சுவார்த்தைகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.** இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மீதான பேச்சுவார்த்தைகள் 3ஆவது சுற்றிற்காக 2023 சனவரியில் மீண்டும் தொடங்கப்பட்டதுடன் 2023 நவெம்பரில் நடத்தப்பட்ட 8ஆவது சுற்றில் பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்தன. அனைத்தையுமுள்ளடக்கும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை முதலீடுகள், சுங்க நடவடிக்கை முறைகள், புலமைச் சொத்து உரிமைகள் என்பனவற்றிற்கு மேலதிகமாக பொருட்கள் மற்றும் பணிகளிலுள்ள வர்த்தகத்தினையும் உள்ளடக்குகின்றன. இந்தியாவுடனான பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்பவியல் ஒத்துழைப்பு உடன்படிக்கைக்கான பேச்சுவார்த்தைகளின் 12ஆவது சுற்று இலங்கையில் 2023 ஒத்தோபரில் இடம்பெற்றதுடன் 2024 சனவரியில் 13ஆவது சுற்று இடம்பெற்றது. பொருளாதார மற்றும் தொழில்நுட்பவியல் ஒத்துழைப்பு உடன்படிக்கை இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையிலும் பார்க்க பரந்த செயற்பரப்பினைக் கொண்டிருப்பதுடன் இப்பேச்சுவார்த்தைகள் தற்போதைய பொருட்கள் மீதான வாத்தகம், தொழில்நுட்ப ஒத்துழைப்பு, பொருளாதார ஒத்துழைப்பு, பணிகளையும் முதலீடுகளையும் தாராளமயப்படுத்தல் என்பவற்றை மேலும் ஆழமாக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. குறைந்த ஏற்றுமதி வருவாய்களுக்கு இசைவாக, இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான ஏற்றுமதிகள் என்பனவற்றுடன் பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையும் அதேபோன்று பெரும்பாலான ஏனைய பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளும் 2023இல் கைவிடப்பட்டன. எனினும் வர்த்தக முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமையின் கீழ் ஏற்றுமதிகள் அதிகரித்தமைக்கு மெக்சிக்கோவிற்கான கறுவா ஏற்றுமதிகளும் தென்னாசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான ஏற்றுமதிகளும் அதிகரித்தமைக்கு இந்தியாவிற்கான மிளகு ஏற்றுமதியே காரணமாகும். வங்காளதேசத்துடனான முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை மீதான பேச்சுவார்த்தைகள் தொடர்பில் 4 சுற்றுக்கள் நிறைவடைந்த வேளையில் இந்தோனேசியா, மலேசியா மற்றும் வியட்நாம் என்பனவற்றுடனான பல முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகள் ஆயத்தநிலையில் காணப்படுகின்றன. வர்த்தகம் தொடர்பான ஏனைய ஏற்பாடுகளின் கீழ், 14ஆவது ஐக்கிய அமெரிக்கா - இலங்கை வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கட்டமைப்பு உடன்படிக்கை துணைக்குழுக் கூட்டம் கொழும்பில் 2023இல் செத்தெம்பரில் நடத்தப்பட்ட வேளையில், 2023 ஒத்தோபரில் இலங்கை 2023 இலிருந்து 2025 காலப்பகுதிக்காக இந்து சமுத்திர வளைய அமைப்பின் தலைமைப் பதவியை பொறுப்பேற்றுக் கொண்டது.

**ஆடை ஏற்றுமதிகளில் குறைந்த செயலாற்றம் காணப்பட்டமைக்கிடையிலும் ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவிற்கான முக்கிய ஏற்றுமதி விடயங்களைப் பொறுத்தவரை அவர்களினால் வழங்கப்பட்ட முன்னுரிமைத் திட்டங்களின் பொதுவாக்கப்பட்ட முறைமைகளிலிருந்து இலங்கை தொடர்ச்சியாக நன்மைகளைப் பெற்றுக்கொண்டது.** புதிய ஐரோப்பிய ஒன்றிய பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத்திட்டம் 10 ஆண்டுத் திட்டம் 2023 திசெம்பர் 31இலிருந்து 2024 சனவரி 01 வரை நடைமுறைப்படுத்தப்படும் என்ற முன்மொழிவுடன் ஐரோப்பிய ஒன்றியத்துடனான பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை முறைமைத் திட்டம் 2023 திசெம்பர் 31இல் காலாவதியாக விடப்பட்டது. இது, ஆறு மேலதிகப் பன்னாட்டு மாநாடுகளை உள்ளடக்கியிருந்ததுடன் இதனை மத்திய வங்கி ஏற்கனவே அங்கிகரித்திருக்கிறது. எனினும், 2023 செத்தெம்பரில் ஐரோப்பிய ஆணைக்குழு, தற்போதைய முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டத்தின் செல்லுபடியாகக்கூடிய காலத்தினை 2027 இறுதிவரை நீடித்தது. ‘அபிவிருத்தியடைந்து வரும்

நாடுகள் வர்த்தகப்படுத்தல் திட்டம்' என்ற பெயரில் ஐக்கிய இராச்சியத்தின் புதிய முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட திட்டம் 2023 யூனில் நடைமுறைக்கு வந்ததுடன், இதன் கீழ் இலங்கை 3 ஆண்டுகளுக்கு அதிகரிக்கப்பட்ட அதன் முன்னுரிமைத் திட்டத்திலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொண்டது. 2020 திசெம்பர் 31இல் காலாவதியான ஐக்கிய அமெரிக்காவின் முன்னுரிமையளிக்கப்பட்ட பொதுவான திட்டம் ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தினால் இன்னமும் மீளஅங்கீகரிக்கப்படவில்லை. எனினும், ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் பொதுவான நடைமுறைகளின்படி, பின்னோக்கிய அடிப்படையில் இது மீள அங்கீகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மற்றைய பெரும்பாலான முன்னுரிமைப்படுத்தப்பட்ட பொதுவான திட்டத்தின் கீழ் ஏற்றுமதிச் செயலாற்றம் 2023இல் தொடர்ந்து நலிவடைந்தே காணப்பட்டது.

**2023ஆம் ஆண்டுப்பகுதியில் நிறுவன ரீதியான ஆதரவு, வர்த்தகக் கொள்கை முன்னெடுப்புக்களின் முன்னேற்றத்திற்கான திறவுகோலாகும்.** இது, தொடர்பில் அனைத்து பன்னாட்டு வர்த்தக பேச்சுவார்த்தைகளையும் கையாள்வதற்காக சனாதிபதி செயலகத்தின் கீழ் பன்னாட்டு வர்த்தக அலுவலகமொன்று நிறுவப்பட்டது. இது, இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தைகளை விரைவான முறையில் நிறைவுசெய்வதற்காக பல்வேறு தொடர்பான முகவர்களின் இணைந்த முயற்சிகளுக்கான பல முனைகளைக் கொண்ட அமைப்பாகும். வர்த்தகத் திணைக்களம் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட திட்டங்களையும் தற்போதுள்ள ஏனைய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளையும் தொடர்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்ட வேளையில் வர்த்தகப் பேச்சுவார்த்தைச் செயன்முறைகளுக்கும் ஆதரவளித்தது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட வளங்களின் சேரிடமாக இலங்கையினை நிலைநிறுத்துவதற்காக 2023 நவெம்பரில் “உங்கள் இன்றியமையாத தீவு - இலங்கை” என்ற தேசிய ஏற்றுமதி வர்த்தக நாமத்தினை அங்குராப்பணம் செய்தது. தேசிய ஏற்றுமதி உபாயத்தின் நடைமுறைப்படுத்தல் காலம் 2022 இறுதியில் காலாவதியானதுடன், தேசிய ஏற்றுமதி உபாயச் செயற்றிட்டத்தினை மீளவலுப்படுத்துவது தற்பொழுது இடம்பெற்று வருகிறது. அதேவேளை, இலங்கைச் சுங்கம் நான்கு உபாயத் துறைகளான அரசிறை, வர்த்தக வசதிப்படுத்தல், சூழல் - சமூகப் பாதுகாப்பு மற்றும் நிறுவன ரீதியான அபிவிருத்தி என்பனவற்றை முக்கிய கவனத்திற்கொண்ட 2024-2028 காலப்பகுதிக்கான உபாயத்திட்டமொன்றினை முன்னெடுத்தது. முதலீடு மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்புக்களுக்காக மிகச் சாதகமான சூழலொன்றினை உருவாக்குவதற்காக, அமைச்சரவை முதலீட்டுச்சபையினையும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினையும் இணைக்கும் எதிர்பார்ப்புடன் 2023 நவெம்பரில் இலங்கை பொருளாதார ஆணைக்குழுவினை நிறுவுவதற்கு ஒப்புதலை வழங்கியது. அதேவேளை, பொதுவான கொள்கைப் பணிப்புரைகளை வழங்குவதற்காக வர்த்தகம், வணிகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சினால் புதிய தேசிய வர்த்தகக் கொள்கையொன்று வரையப்பட்டு வருகிறது. அத்தகைய முன்னெடுப்புக்கள் பொருளாதாரத்தின் வர்த்தகப்படுத்தத்தக்கத் துறையின் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்திக்கு மிக முக்கியமானதாகும்.

## பணிகள் கணக்கு

**2023இன் பணிகள் கணக்கின் மிகை குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.** பணிகள் கணக்கின் மிகை 2022இன் ஐ.அ.டொலர் 2,110 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023இல் ஐ.அ.டொலர் 3,404 மில்லியனாகக் காணப்பட்டது. பயணம், போக்குவரத்து, கட்டுமானம் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் பணிகளை உள்ளடக்கும் பணிகள் துறையின் செயலாற்றம் கணிசமானளவிற்கு மேம்பட்டது. காப்புறுதி மற்றும் ஓய்வூதியம் மற்றும் ஏனைய வியாபாரப் பணிகளுக்கான தேறிய உட்பாய்ச்சல்கள் மிதமானதாகத் தொடர்ந்தும் காணப்பட்ட வேளையில், கணனிப் பணிகள் உள்ளிட்ட ஏனைய துணைத் துறைகளுக்கான உட்பாய்ச்சல்கள் கணிசமானளவிற்குச் சுருக்கமடைந்தன. பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையின் கீழ், 2023 சனவரியில் தரவுகளைச் சேகரிப்பது ஆரம்பமாகியதனைத் தொடர்ந்து, மத்திய வங்கி 2024 சனவரியில் முதற்றடவையாக, பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையின் அடிப்படையில் மாதாந்தப் பணிகளின் தரவுகளை வெளியிடத் தொடங்கியது. மேலும், கணனி பணிகள்,

1

வான் போக்குவரத்து, கடற் போக்குவரத்து, கட்டுமானப் பணிகள் போன்ற ஏற்கனவேயுள்ள தரவுத் தொடர்களைக் கணிசமானளவிற்கு மீளச்சீரமைக்கும் பணிகளும் காணப்பட்டன. சுற்றுலா 2023இல் தொடர்ந்தும் மீட்சியடைந்து 1,487,303 வருகைகளைப் பதிவுசெய்தது. இது 2022இல் பதிவுசெய்யப்பட்ட வருகைகளிலும் பார்க்க இரு மடங்கிற்கும் மேல் கூடுதலானதாகும். இதன்படி, சுற்றுலாவிலிருந்தான வருவாய்களும் 2022இன் ஐ.அ.டொலர் 1,136 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023இல் ஐ.அ.டொலர் 2,068 மில்லியனுக்கு அதிகரித்தது.

## முதலாந்தர வருமானக் கணக்கு

**2023இல் முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை விரிவடைந்தது.** படுகடன் இடைநிறுத்தப்பட்டமையின் விளைவாக ஒன்றுசேர்ந்த நிலுவைகள் உட்பட, அனைத்துக் வட்டிக் கொடுப்பனவுகளும் வங்காள தேச வங்கி மற்றும் இந்திய றிசேர்வ் வங்கியுடனான ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் வெளிநின்ற பொறுப்பு மற்றும் பன்னாட்டு நாணய பரஸ்பரபரிமாற்றல் ஏற்பாடுகளின் பேரில் மத்திய வங்கியினால் செய்யப்பட்ட வட்டிக் கொடுப்பனவுகளும் முதலாந்தர வருமானக் கணக்கின் வெளிப்பாய்ச்சல்களுக்கு முக்கியமாகப் பங்களித்தன. இதன்படி, முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை 2022இன் ஐ.அ.டொலர் 1,870 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023இல் ஐ.அ.டொலர் 2,564 மில்லியனாக விளங்கியது. இவ்வாண்டுப்பகுதியில், வெளிநாட்டு நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகளினால் செலுத்தப்பட்ட பங்கிலாபங்களில் அதிகரிப்பொன்று காணப்பட்ட போதும் 2022 உடன் ஒப்பிடுகையில் 2023இல் மீள்முதலீட்டு வருவாய்களில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. எனினும், படுகடன் பிணையங்களின் பேரிலான வட்டிக் கொடுப்பனவுகள் அதே மட்டத்திலேயே காணப்பட்டது. இருப்பினும் கூட, அரசாங்கம் மற்றும் மத்திய வங்கி உட்பட அனைத்துத் துறைகளிலுமுள்ள கொடுப்பனவு நிலுவைகள் குறிப்பாக புதிய பரஸ்பரபரிமாற்றல்களின் கீழ் இந்திய றிசேர்வ் வங்கியின் பரஸ்பரபரிமாற்றல் பொறுப்புக்கள் மற்றும் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் கொடுப்பனவு நிலுவைகள் இணைக்கப்பட்டதனால் வெளிநாட்டு வட்டிக் கொடுப்பனவுகளில் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. அதேவேளை, 2023 காலப்பகுதியில் ஒதுக்குச் சொத்துக்களிலிருந்தான வருமானம் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் சேர்ந்து அதிகரித்தது.

## இரண்டாந்தர வருமானக் கணக்கு

**2022இன் இறுதிக் காலாண்டிலிருந்து தொழிலாளர் பணவனுப்பல்களின் உட்பாய்ச்சலில் ஏற்பட்ட தொடர்ச்சியான முன்னேற்றத்துடன், இரண்டாந்தர வருமானக் கணக்கின் மிகை 2023இல் அதிகரித்தது.** அதிகரித்த தொழிலாளர் பணவனுப்பல்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காகத் தொடர்ந்தும் வெளிநாட்டிற்குச் செல்பவர்களினால் ஆதரவளிக்கப்பட்டன. அலுவல்சார் மார்க்கங்களினூடாக உட்பாய்ச்சல்கள் அதிகரித்தமைக்கு அலுவல்சார் செலாவணி வீதத்திற்கும் முறைசாரா வீதங்களுக்குமிடையில் நிலவிய பாரிய வேறுபாடுகள் சரிசெய்யப்பட்டமைக்காக ஆதரவளித்ததுடன் மேம்பட்ட பணவனுப்பல்களுக்கும் உதவிபுரிந்தன. எனவே, தொழிலாளர் பணவனுப்பல்கள் 2022இன் ஐ.அ.டொலர் 3,789 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023இல் ஐ.அ.டொலர் 5,970 மில்லியனுக்கு 57.5 சதவீதங்களால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன. இதன் விளைவாக, இரண்டாந்தர வருமானக் கணக்கு 2022இன் ஐ.அ.டொலர் 3,496 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023இல் ஐ.அ.டொலர் 5,619 மில்லியன் கொண்ட மிகையைப் பதிவுசெய்தது.


## மூலதனக் கணக்கு நிலுவை

**மூலதனக் கணக்கிற்கான தேறிய உட்பாய்ச்சல்கள் 2023இல் அதிகரித்தன.** அரசாங்கம் மற்றும் தனியார் துறை இரண்டிற்குமான மூலதன மாற்றல்கள் 2023இல் அதிகரித்த போதும், அரசாங்கத்திற்கான மூலதன நன்கொடைகள் மிதமாகவே தொடர்ந்தும் காணப்பட்டன. இதற்கமைய, மூலதனக் கணக்கு 2022இன் ஐ.அ.டொலர் 19 மில்லியன் கொண்ட மிகையுடன் ஒப்பிடுகையில் 2023இல் ஐ.அ.டொலர் 63 மில்லியன் கொண்ட மிகையினைப் பதிவுசெய்தது.

## நிதியியல் கணக்கு

**சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கில் தேறிய உறப்பட்ட பொறுப்புக்களும் நிதியியல் சொத்துக்களின் தேறிய கையேற்பும் 2023ஆம் ஆண்டுப்பகுதியில்**

வரைபடம் 1.18
நிதியியல் கணக்கு




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. தேறிய உறப்பட்ட பொறுப்புக்கள் 2022இன் ஐ.அ.டொலர் 1,652 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023ஆம் ஆண்டு ஐ.அ.டொலர் 2,171 மில்லியன் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. 2023ஆம் ஆண்டுப்பகுதியில் நிதியியல் கணக்கிற்கான முக்கிய உட்பாய்ச்சல்கள் பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 670 மில்லியன் கொண்ட தொகைப் பெறுகைகளையும் உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பனவற்றிலிருந்தான முறையே ஏறத்தாழ ஐ.அ.டொலர் 500 மில்லியனையும் ஐ.அ.டொலர் 550 மில்லியனையும் உள்ளடக்கியிருந்தன.

## நேரடி முதலீடுகள்

**நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களை உள்ளடக்கிய வெளிநாட்டு நேரடி உட்பாய்ச்சல்கள் இவ்வாண்டுப்பகுதியில் தொடர்ந்தும் மிதமாகக் காணப்பட்டன.** வருவாய்களின் உரிமை மூலதனம் மற்றும் மீள்முதலீடுகள் 2023இல் மிதமான அதிகரிப்பினைப் பதிவுசெய்த போதும், நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான கடன்களும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தன. அதேவேளை, முதலீட்டுச்சபை கம்பனிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களின் உட்பாய்ச்சல்கள் 2023இல் மிதமடைந்தன. இதற்கமைய, வெளிநாட்டுக் கடன்களை உள்ளடக்கிய வெளிநாட்டு நேரடி முதலீடு 2022இன் ஐ.அ.டொலர் 1,167 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023இல் ஐ.அ.டொலர் 758 மில்லியனாக விளங்கியது. மேலும், கடன்கள் நீங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2022இல் ஐ.அ.டொலர் 884 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023இல் ஐ.அ.டொலர் 712 மில்லியனாகக் காணப்பட்டது.

அட்டவணை 1.13
நிதியியல் கணக்கு

| வகை | ஐ.அ.டொ.மில்லியன் | |
|---|---|---|
| | 2022 (அ) | 2023 (ஆ) |
| **நிதியியல் கணக்கு (தேறிய)** | **-1,569** | **1,304** |
| நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப்படுத்தல் | 84 | 3,474 |
| பொறுப்புக்களின் தேறிய உறப்படல் | 1,652 | 2,171 |
| **நேரடி முதலீடு: சொத்துக்கள்** | **15** | **34** |
| பங்குரிமை மூலதனம் | 11 | 29 |
| படுகடன் சாதனங்கள் | 5 | 5 |
| **நேரடி முதலீடு: பொறுப்புக்கள்** | **884** | **712** |
| பங்குரிமை மூலதனம் | 275 | 496 |
| படுகடன் சாதனங்கள் | 610 | 216 |
| **சொத்துப் பட்டியல் முதலீடு: சொத்துக்கள்** | **-** | **173** |
| படுகடன் பிணையங்கள் | - | 173 |
| **சொத்துப் பட்டியல் முதலீடு: பொறுப்புக்கள்** | **370** | **931** |
| பங்குரிமை மூலதனம் | 151 | 8 |
| படுகடன் பிணையங்கள் | 218 | 923 |
| பொது அரசாங்கம் | 212 | 910 |
| குறுங்காலம் (திறைசேரி உண்டியல்கள்) | 30 | 132 |
| நீண்டகாலம் | 183 | 778 |
| திறைசேரி முறிகள் | 21 | 78 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 2 | -27 |
| நாட்டுக்கான முறிகள் | 159 | 727 |
| ஏனைய துறைகள் | 6 | 12 |
| நீண்டகாலம் | 6 | 12 |
| **நிதியியல் பெறுதிகள்** | **-** | **-** |
| **ஏனைய முதலீடுகள்: சொத்துக்கள்** | **1,302** | **1,022** |
| நாணயமும் வைப்புக்களும் | 514 | 114 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | 282 | 186 |
| ஏனைய கணக்குகள் பெறவேண்டியவை | 506 | 721 |
| **ஏனைய முதலீடுகள்: பொறுப்புக்கள்** | **398** | **528** |
| நாணயமும் வைப்புக்களும் | -583 | -143 |
| கடன்கள் | 385 | 1,056 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | -895 | -555 |
| ஏனைய கணக்குகள் கொடுக்க வேண்டியவை | 1,492 | 171 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | - | - |
| **ஒதுக்குச் சொத்துக்கள்** | **-1,234** | **2,245** |
| **தவறுகளும் விடுபாடுகளும்** | **-139** | **-318** |
| **திரண்ட நிலுவை (இ)** | **-2,806** | **2,826** |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) திரண்ட நிலுவையைக் கணிப்பிடுவது தொடர்பில் அட்டவணை 1.15 பார்க்குக.

துறைவாரியான அடிப்படையில், முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் முக்கியமாக தொலைத்தொடர்பூட்டல்கள், தயாரிப்பு மற்றும் சொத்து அபிவிருத்தித் துறைகளுக்கானவையாக இருந்த வேளையில், முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்படாத கொழும்பு பங்குப் பரிவர்த்தனை கம்பனிகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் முக்கியமாக வசதி ஏற்பாடு மற்றும் எரிபொருள், வாயு மற்றும் பெற்றோலியத் துறைகளுக்கானவையாகக் காணப்பட்டன.

## சொத்துப்பட்டியல் முதலீடுகள்

**கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பங்குரிமை மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகளின் வடிவிலமைந்த சொத்துப்பட்டியல் முதலீடுகள் தொடர்ந்தும் மிதமானவையாகக் காணப்பட்ட வேளையில்**

**அரச பிணையங்களில் வெளிநாட்டு முதலீடுகள் 2023இல் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன.** அரச பிணையங்களில் வெளிநாட்டு முதலீடுகள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு 2022இன் தொடக்கப்பகுதியிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் ஒன்றுசேர்ந்த வட்டி கொடுப்பனவுகளே பிரதான காரணமாகும். 2023இல் அரச பிணையங்கள் சந்தையில் வதிவற்றோரின் முதலீடுகள், குறிப்பாக திறைசேரி உண்டியல்களில் கணிசமாக அதிகரித்தது. கூப்பன் கொடுப்பனவுகள் மற்றும் வெளிநாட்டு கடன்கள் மீதான கொடுப்பனவு செய்யப்படாமையின் காரணமாக ஏற்பட்ட நிலுவைகள் தொடர்பான சாதனங்களின் வெளிநின்ற பொறுப்புடன் சேர்க்கப்பட்டன. இதற்கமைய, நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் கூப்பன் கொடுப்பனவுகளின் ஐ.அ.டொலர் 727 மில்லியன்கள் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் ஒன்றுசேர்ந்த வட்டியாகப் பதிவுசெய்யப்பட்டன. மேலும், 2023 காலப்பகுதியில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினால் வழங்கப்பட்ட வதிவற்றோருக்கான பன்னாட்டு முறிகள் மீதான ஒன்றுசேர்ந்த வட்டியாக ஐ.அ.டொலர் 12 மில்லியன் பதிவுசெய்யப்பட்டது.

### ஏனைய முதலீடுகள் மற்றும் ஒதுக்குச் சொத்துக்கள்

**ஆண்டுமுழுவதும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அதன் வர்த்தகக் கொடுகடன் பொறுப்புக்களை மீளச்செலுத்தியமையினால் வர்த்தகக் கொடுகடன்களும் முற்பணங்களும் பொறுப்புக்களில் வீழ்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் இவ்வாண்டுப்பகுதியில் புதிய வர்த்தகக் கொடுகடன் வசதிகளையும் பெறமுடியாமல் இருந்தது.** புதிய வெளிநாட்டுக் கடப்பாடுகள் ஒரு சில மட்டுமே பெறப்பட்டமையின் விளைவாக 2023இல் வெளிநாட்டுக் கடன்களுக்கான வங்கித்தொழில் துறையின் வெளிப்படுத்துகை வீழ்ச்சியடைந்த வேளையில், விசேடமாக 2023இல் வங்கித்தொழில் முறைமையின் உயர்ந்த வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையின் பின்னணியில் முன்னைய கடன்பாடுகள் செலுத்தப்பட்டன. அதேநேரம், கம்பனிகள் துறையின் கடன்பாடுகள் தொடர்ந்தும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தமையினால் இவ்வாண்டில் இத்துறைக்கான தேறிய உட்பாய்ச்சல்கள் கணிசமானதாக இருக்கவில்லை.

**நிதியியல் சொத்துக்களின் கையேற்பு 2023ஆம் ஆண்டுப்பகுதியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்து, 2022இன் ஐ.அ.டொலர் 84 மில்லியன் கொண்ட சிறிதளவு தேறிய அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 3,474 மில்லியனாக விளங்கியது.** இதற்கு மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2022இன் ஐ.அ.டொலர் 1,234 மில்லியன் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2023இல் ஐ.அ.டொலர் 2,245 மில்லியனுக்கு அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு உள்நாட்டுச் சந்தைகளிலிருந்து மத்திய வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்ட கணிசமான தேறிய வெளிநாட்டுச் செலாவணியும் பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிகளிலிருந்தான பெறுகைகளும் முக்கிய காரணங்களாக அமைந்தன. எனினும், வங்கித்தொழில் துறையில் நாணயம் மற்றும் வைப்புக்கள், வர்த்தகக் கொடுகடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் ஏனைய பெறத்தக்க கணக்குகள் ஆகிய நியதிகளில் தேறிய சொத்துக்களின் கையேற்பு 2023இல் அதிகரித்தது.

## 1.4.2 பன்னாட்டு முதலீட்டு நிலைமை, ஒதுக்குச் சொத்துக்கள் மற்றும் திரண்ட நிலுவை

### பன்னாட்டு முதலீட்டு நிலைமை

**2023இன் இலங்கையின் தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமை மோசமடைந்தது.** 2022 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2023 இறுதியில் நாட்டின் மொத்த வெளிநாட்டுப் பொறுப்பு நிலைமையும் மொத்தச் சொத்து நிலைமையும் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன. எனினும், 2022 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2023 இறுதியில் மொத்தப் பொறுப்பு நிலைமை மொத்தச் சொத்து நிலைமைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினை விஞ்சிக் காணப்பட்டது.

**நாட்டின் வெளிநின்ற வெளிநாட்டுப் பொறுப்பு நிலைமையின் நியதிகளில், புதிய படுகடன் சாதனங்களை வழங்குவதற்காக மத்திய வங்கி இந்திய றிசேர்வ் வங்கியுடன் வெளிநின்ற இந்திய றிசேர்வ் வங்கியின் பன்னாட்டு பரஸ்பரபரிமாற்றல் ஏற்பாடுகளையும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் வெளிநின்ற பொறுப்புக்களையும் பதிலீடு செய்வதற்காக இந்திய றிசேர்வ் வங்கியுடன் விசேட பரஸ்பர பரிமாற்றல்**

**ஏற்பாடுகளைச் செய்தது.** இச்சாதனம் மத்திய வங்கியின் வெளிநின்ற நாணயம் மற்றும் வைப்புக்களின் கீழ் பிரதிபலிக்கப்பட்டதுடன், 2023 இறுதியிலுள்ளவாறு கொடுபடத்தக்க ஏனைய கணக்குகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் வெளிநின்ற தொகை பதிலீடு செய்யப்பட்டது. நேரடி முதலீடுகளாக வெளிநின்ற பொறுப்பு நிலைமை இவ்வாண்டுப்பகுதியில் மிதமாக மாத்திரம் அதிகரித்தமைக்கு வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் தொடர்ந்தும் குறைவாக இருந்தமையும் பகிரங்கமாகப் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் சந்தை விலைகள் தொடர்ந்தும் குறைவடைந்தமையும் காரணங்களாகும். படுகடன் பிணையங்களின் பொறுப்பு நிலைமையில் ஏற்பட்ட அதிகரிப்பு அதிகரித்த சந்தை விலைகள்[19] மற்றும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின்

19 நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சந்தை விலைகள் பன்னாட்டு வர்த்தகப்படுத்தல் தளம்களில் கிடைக்கத்தக்கதாகவுள்ள சந்தை விலைகளை அடிப்படையாகக் கொண்டதாக இருப்பதுடன் இவ்வாண்டுப்பகுதியில் பன்னாட்டுச் சந்தைகளிலுள்ள இரண்டாந்தரச் சந்தை வர்த்தகங்களைக் காட்ட வேண்டுமென்ற அவசியமில்லை.

அட்டவணை 1.14

**பன்னாட்டு முதலீட்டு நிலைமை (சுருக்கம்) (அ)**

ஐ.அ.டொ.மில்லியன் (கால முடிவிலான நிலைமை)


| வகை | 2022 (ஆ) | | 2023 (இ) | |
|---|---|---|---|---|
| | சொத்துக்கள் | பொறுப்புக்கள் | சொத்துக்கள் | பொறுப்புக்கள் |
| **நேரடி முதலீடு** | **1,534** | **14,047** | **1,560** | **14,831** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள் | 1,489 | 8,103 | 1,511 | 8,671 |
| படுகடன் கருவிகள் | 45 | 5,944 | 50 | 6,160 |
| **சொத்துப்பட்டியல் முதலீடு** | **0.1** | **4,366** | **174** | **7,744** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள் | | 332 | | 484 |
| படுகடன் கருவிகள் | 0.1 | 4,035 | 174 | 7,260 |
| **ஏனைய முதலீடு** | **5,399** | **39,689** | **6,420** | **41,412** |
| நாணயமும் வைப்புக்களும் | 1,656 | 5,880 | 1,770 | 7,941 |
| கடன்கள் | | 29,497 | | 31,721 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | 1,493 | 1,020 | 1,679 | 464 |
| ஏனைய பெறத்தக்க/ கொடுபடத்தக்க கணக்குகள் | 2,250 | 2,028 | 2,971 | - |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | | 1,265 | | 1,285 |
| **ஒதுக்குச் சொத்துக்கள்** | **1,898** | | **4,392** | |
| **மொத்த சொத்துக்கள்/ பொறுப்புக்கள்** | **8,830** | **58,102** | **12,546** | **63,986** |
| **தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமை** | | **-49,272** | | **-51,440** |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | | | |
| ப.மு.நி-முதிர்ச்சி அடிப்படையிலான பகுப்பாய்வு | 8,830 | 58,102 | 12,546 | 63,986 |
| குறுங்காலம் | 7,091 | 7,957 | 9,330 | 5,516 |
| நீண்டகாலம் | 1,739 | 50,145 | 3,216 | 58,471 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

(அ) ப.மு.நி இன் விரிவான பகுப்பிற்கு இணைப்பு அட்டவணை 12ஐப் பார்க்க
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

வரைபடம் 1.19

**பன்னாட்டு முதலீட்டு நிலைமை**





*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

ஒன்றுசேர்ந்த கூப்பன் கொடுப்பனவுகள் என்பனவற்றின் விளைவாகும். வெளிநாட்டுக் கடன்களின் அதிகரிப்புக்கு பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான பெறுகைகள், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் அரசிற்கு வழங்கப்பட்ட நிதிகள் அதேபோன்று அரசாங்கத்தினால் மீளச்செலுத்தப்படாத வெளிநாட்டுக் கடன்கள் மீதான ஒன்றுசேர்ந்த வட்டியும் காரணங்களாக அமைந்தன. இதன் விளைவாக, நாட்டின் மொத்த வெளிநாட்டுப் பொறுப்பு நிலைமை 2022 இறுதியின் ஐ.அ.டொலர் 58.1 பில்லியனிலிருந்து 2023 இறுதியில் ஐ.அ.டொலர் 64.0 பில்லியனுக்கு அதிகரித்தது.

**2023 காலப்பகுதியில் நாட்டின் வெளிநாட்டுச் சொத்து நிலைமை மேம்பட்டது.** இவ்வாண்டுப்பகுதியில் ஒதுக்குச் சொத்து மற்றும் வங்கித்தொழில் முறைமையின் வெளிநாட்டுச் சொத்து போன்றவற்றால் வெளிநாட்டுச் சொத்து நிலைமை அதிகரித்தது. மத்திய வங்கியின் வெளிநாட்டு சொத்து நிலைமை இவ்வாண்டுப்பகுதியில் இரண்டு மடங்கிற்கும் கூடுதலாகியது. வங்கிகளின் நாணயம் மற்றும் வைப்புக்களும் ஏனைய பெறத்தக்க கணக்குகளும் அதிகரித்தமையின் காரணமாக வங்கித்தொழில் முறைமையின் வெளிநாட்டுச் சொத்து நிலைமையும் அதிகரித்தது. இதற்கமைய, நாட்டின் மொத்தச் சொத்து நிலைமை 2022 இறுதியில் ஐ.அ.டொலர் 8.8 பில்லியனிலிருந்து 2023 இறுதியில் ஐ.அ.டொலர் 12.5 பில்லியனுக்கு அதிகரித்தது. மொத்தப் பொறுப்பு நிலைமையில் ஏற்பட்ட அதிகரிப்பு மொத்தச் சொத்து நிலைமையில் ஏற்பட்ட அதிகரிப்பிலும் பார்க்க உயர்வாக இருந்தமையினால் பன்னாட்டு முதலீட்டு நிலைமையினால் பிரதிபலிக்கப்பட்டவாறு நாட்டின் தேறிய பொறுப்பு நிலைமை 2022 இறுதியின் ஐ.அ.டொலர் 49.3 பில்லியனிலிருந்து 2023 இறுதியில் ஐ.அ.டொலர் 51.4 பில்லியனுக்கு அதிகரித்தது.

வரைபடம் 1.20

## ஒதுக்குச் சொத்துக்கள் நிலைமையின் முக்கிய கூறுகள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

## ஒதுக்குச் சொத்து நிலைமை

**2023 இறுதியிலுள்ளவாறான மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்[20] மேம்பாடடைந்து 2022 இறுதியிலுள்ளவாறான ஐ.அ.டொலர் 1,898 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 4,392 மில்லியன் கொண்ட ஆரோக்கியமான மட்டத்தினை அடைந்து 2023 காலப்பகுதியில் வெளிநாட்டுத் துறையில் அவதானிக்கப்பட்ட சாதகமான அபிவிருத்திகளைப் பிரதிபலித்தன.** மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் கட்டியெழுப்பப்பட்டமைக்கு உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணி ஈர்த்துக் கொள்ளப்பட்டமை மற்றும் தற்பொழுது இடம்பெற்று வருகின்ற பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடுகளின் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரப் பிரிவுகள், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கியிடமிருந்தான நிதியியல் ஆதரவு போன்ற ஏனைய வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களின் பெறுகைகள் என்பன காரணங்களாக அமைந்தன. வெளிநாட்டுச் செலாவணியினை ஈர்த்துக் கொள்ளும் விதத்தில், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடு இவ்வாண்டுப்பகுதியில் தேறிய அடிப்படையில் (மதிப்பீட்டுத் திகதியின் அடிப்படையில்) ஐ.அ.டொலர் 1,683 மில்லியனாக விளங்கிய வேளையில், உள்நாட்டு வங்கிகளுடனான தேறிய வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடுகள் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 861 மில்லியனாக (மதிப்பீட்டுத் திகதியின் அடிப்படையில்) விளங்கின. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியினை நேரடியாக ஈர்த்துக் கொண்டமையினூடாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் கட்டியெழுப்பப்பட்டமையானது பன்னாட்டு நாணய நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடுகளின் கீழ் தேசிய பன்னாட்டு ஒதுக்கு இலக்கினை விஞ்சிச் செயலாற்றுவதற்கு மத்திய வங்கியை இயலுமைப்படுத்தியது. வெளிநாட்டுப் பொறுப்பு நிலைமையிலும் பார்க்க வெளிநாட்டுச் சொத்து நிலைமை உயர்வொன்றினைப் பதிவுசெய்தமையின் விளைவாக வங்கித்தொழில் துறை முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்து நிலைமை நேர்க்கணியமான மட்டத்தில் காணப்பட்டது.

20 2022 மற்றும் 2023 இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் இம்மட்டங்கள் சீன மக்கள் வங்கியிலிருந்தான சீன யுவான் 10 பில்லியன் கொண்ட பன்னாட்டு பரஸ்பரபரிமாற்றல் வசதியையும் உள்ளடக்கியிருந்தது. இதன் பெறுமதி முறையே ஐ.அ.டொலர் 1,433 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 1,420 மில்லியன் என மதிப்பிடப்பட்டது.

அட்டவணை 1.15

## மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் திரண்ட நிலுவை

ஐ.அ.டொ.மில்லியன்
(கால முடிவிலான நிலைமை)

| வகை | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 (அ) |
|---|---|---|---|---|---|
| 1. அரசின் வெளிநாட்டு சொத்துக்கள் | 386 | 155 | 177 | 39 | 875 |
| 2. மத்திய வங்கியின் வெளிநாட்டு சொத்துக்கள் | 7,256 | 5,510 | 2,962 | 1,858 | 3,517 |
| **3. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (1+2)** | **7,642** | **5,664** | **3,139** | **1,898** | **4,392** |
| 4. வைப்புக்களை ஏற்கும் கூட்டுத் தாபனங்களின் வெளிநாட்டு சொத்துக்கள் | 2,760 | 2,856 | 2,983 | 3,976 | 4,981 |
| **5. மொத்த வெளிநாட்டு சொத்துக்கள் (3+4) (ஆ)** | **10,402** | **8,521** | **6,122** | **5,874** | **9,373** |
| 6. ஒதுக்குடன் தொடர்புடைய பொறுப்பக்கள் (இ) | 1,771 | 2,121 | 3,562 | 5,127 | 4,796 |
| **7. தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் (3-6)** | **5,871** | **3,543** | **-423** | **-3,229** | **-404** |
| **8. திரண்ட நிலுவை (ஈ)** | **377** | **-2,328** | **-3,967** | **-2,806** | **2,826** |
| 9. பொருட்களின் இறக்குமதிகளின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மாதங்களின்படி | 4.6 | 4.2 | 1.8 | 1.2 | 3.1 |
| 10. பொருட்களின் இறக்குமதிகளின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மாதங்களின்படி | 6.3 | 6.4 | 3.6 | 3.9 | 6.7 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது
(ஆ) "வெளிநாட்டு நேரடி முதலீடு" மற்றும் "வழங்கப்பட்ட வர்த்தகக் கடன் மற்றும் முற்பணங்கள்" வடிவிலுள்ள வெளிநாட்டுச் சொத்துக்கள் நீங்கலாக
(இ) வெளிநின்ற சிறப்பு எடுப்பனவு உரிமைகள் நீங்கலாக மத்திய வங்கியின் மொத்த வெளிநின்ற படுகடன்
(ஈ) ஆண்டுக்காலப்பகுதியில் தேறிய பன்னாட்டு ஒதுக்கு நிலைமையின் மாற்றம்

வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்து நிலைமை 2022 இறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 3,976 மில்லியனிலிருந்து 2023 இறுதியளவில் ஐ.அ.டொலர் 4,981 மில்லியனுக்கு அதிகரித்தது. இதன் விளைவாக, மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் இரண்டையும் உள்ளடக்கிய மொத்த பன்னாட்டு ஒதுக்குகள் 2023 இறுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன.

### திரண்ட நிலுவை

**தேறிய பன்னாட்டு ஒதுக்குகளில் மாற்றத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவை 2020இலிருந்து முன்னைய ஆண்டில் உயர்ந்த பற்றாக்குறையினைப் பதிவுசெய்த பின்னர் 2023 இறுதியில் குறிப்பிடத்தக்களவு உயர்ந்த மிகையைப் பதிவு செய்தது.** மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் கணிசமாக அதிகரித்தமைக்கு உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து கணிசமானளவிற்கு வெளிநாட்டுச் செலாவணி ஈர்த்துக் கொள்ளப்பட்டமையும் பல்புடை நிறுவனங்களிலிருந்து கணிசமானளவு உட்பாய்ச்சல்கள் பெறப்பட்டமையும் முக்கிய காரணங்களாக அமைந்தன. இதன் விளைவாக, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 இறுதியில் தேறிய பன்னாட்டு ஒதுக்கு நிலைமையில் முன்னேற்றமொன்று காணப்பட்டு திரண்ட நிலுவை 2022இன் ஐ.அ.டொலர் 2,806 மில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2023இல் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 2,826 பில்லியன் கொண்ட மிகைப் பதிவைத் தோற்றுவித்தது.

## 1.4.3 வெளிநாட்டுப் படுகடன் மற்றும் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

### வெளிநாட்டுப் படுகடன்

**சந்தை விலைகளில்[21] குறிப்பிடப்படும் இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் 2023இல் அதிகரித்தது.** 2022இல் நிலவிய குறைந்த சந்தை வட்டி வீதங்களுடன் கணிசமானளவில் ஒப்பிடுகையில் அரசாங்கத்தினால் வெளியிடப்படும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சந்தை பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பின் முக்கிய காரணமாக 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023இல் அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடனில் குறிப்பிடத்தக்கதொரு அதிகரிப்பு காணப்பட்டது. மேலும், தனியார் துறையினதும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினதும் வெளிநாட்டுப் படுகடன் மிதமான அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. அதேவேளை மத்திய வங்கியினதும் வங்கித்தொழில் துறையினதும் வெளிநாட்டுப் படுகடன் வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.

**2023இல் அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.** அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சந்தைப் பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு, வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் ஒன்றுசேர்ந்த கூப்பன்களில் ஏற்பட்ட அதிகரிப்பு, பல்புடைப் பங்காளர்களிடமிருந்தான பெறுகைகளுடன் சேர்ந்த அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுக் கடன்களில் ஏற்பட்ட அதிகரிப்பு, அரசாங்கத்தின் இருபுடை வெளிநாட்டுக் கடன்களின் ஒன்றுசேர்ந்த வட்டியில் ஏற்பட்ட அதிகரிப்பு, திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் வெளிநாட்டு முதலீடுகளில் ஏற்பட்ட மிதமான அதிகரிப்பு என்பன அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பங்களிப்புச்செய்தன. இதன் விளைவாக, வர்த்தகப்படுத்தத்தக்க படுகடன் சாதனங்களுக்கான சந்தைப் பெறுமதியில் குறிப்பிடப்படும் அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் 2022 இறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 27.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 இறுதியில் ஐ.அ.டொலர் 33.1 பில்லியனாக விளங்கியது. முகப்புப் பெறுமதியின் நியதிகளில், அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் 2023 இறுதியில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 38.4 பில்லியனாகக் காணப்பட்டது.


**பெறப்பட்ட பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதிகளின் படிப்படியான மீள்கொடுப்பனவு மற்றும் இந்திய றிசேர்வ் வங்கியுடனான விசேட பரஸ்பரபரிமாற்றல் ஏற்பாடுகளின் மீள்கொடுப்பனவுகள் ஆரம்பித்தமை என்பவற்றுடன் 2016இல் மத்திய வங்கியின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் மிதமாக வீழ்ச்சியடைந்தது.** அதேவேளை, குறுங்கால மற்றும் நீண்ட காலக் கடன்கள் இரண்டிலும் ஏற்பட்ட


21 2012இலிருந்து, அலுவல்சார் வெளியீட்டு நோக்கங்களுக்கான வெளிநாட்டு படுகடன் புள்ளிவிபரங்களானது சென்மதி நிலுவைகளின் ஆறாவது பதிப்பு மற்றும் பன்னாட்டு முதலீட்டு நிலைமை கையேடு என்பவற்றிற்கமைவாக சென்மதி நிலுவை பன்னாட்டு நியமங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் சந்தைப் பெறுமதியில் காணப்படுகின்றன.


1

வரைபடம் 1.21

வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன்




"சந்தைப் பெறுமதி நியதிகளை அடிப்படையாகக் கொண்ட இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் 2023 இறுதியிலுள்ளவாறு ஐ.அ.டொலர் 54.8 பில்லியனாகக் காணப்பட்டது. இது ஐ.அ.டொலர் 60.2 பில்லியன் கொண்ட முகப்புப் பெறுமதியில் வெளிநாட்டுப் படுகடனிலும் பார்க்க குறிப்பிடத்தக்களவில் குறைந்து காணப்படுகின்றது. வெளிநாட்டுப் படுகடனின் சந்தைப் பெறுமதியில் ஏற்பட்ட குறைப்பிற்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் குறிப்பிடத்தக்களவு தாழ்ந்தளவிலான சந்தை மதிப்பீடு காரணமாக அமைந்தது."

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வீழ்ச்சியுடன் வங்கித்தொழில் துறையின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் குறைவடைந்தது. தனியார் துறையின் வெளிநின்ற வர்த்தகக் கொடுகடன்களில் குறிப்பிடத்தக்க குறைப்பு காணப்பட்ட போதும் தனியார் துறையின் வெளிநின்ற வெளிநாட்டுக் கடன்கள் அதிகரித்ததுடன் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் அதே மட்டத்திலேயே தொடர்ந்தும் காணப்பட்டது. நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் தொடர்பான தரப்பினரின் வெளிநின்ற வெளிநாட்டுக் கடன்களும் 2023 காலப்பகுதியில் அதிகரித்தன.

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக நாட்டின் வெளிநாட்டுப் படுகடன் நிலைமை 2022 மற்றும் 2023 இறுதியிலுள்ளவாறான அதே மட்டங்களில் காணப்பட்டன.** மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வெளிநின்ற படுகடன் நிலைமை 2022 இறுதியிலுள்ளவாறான 64.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2023 இறுதியிலுள்ளவாறான 65.0 சதவீதமாக காணப்பட்டது. மேலும், குறுங்கால தன்மையினைக் கொண்ட கடன்களின் விகிதம் இவ்வாண்டுப்பகுதியில் குறைப்பொன்றினைப் பதிவுசெய்தது. மேலும், அரச படுகடன் ஸ்தம்பிதத்தன்மை தொடர்வதனால், இவ்வாண்டுப்பகுதியில் வதிவற்றோருக்கான வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் முகப்புப் பெறுமதியில் மாற்றங்களெதுவும் காணப்படவில்லை.

## வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

**2022 ஏப்பிறலில் குறிப்பிட்ட தெரிவுசெய்யப்பட்ட அரச படுகடன் மீதான படுகடன் நிறுத்தி வைக்கப்பட்டமை பற்றிய அறிவித்தலைத் தொடர்ந்தும் 2022இலும் 2023இலும் இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன்**

அட்டவணை 1.16

## வெளிநின்ற வெளிநாட்டு படுகடனின் நிலைமை

ஐ.அ.டொ.மில்லியன்
(கால முடிவிலான நிலைமை)

| வகை | 2022 (அ) | 2023 (ஆ) |
|---|---|---|
| **பொது அரசாங்கம்** | **27,518** | **33,117** |
| திறைசேரி உண்டியல்கள் (ஏட்டுப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது) | 31 | 210 |
| திறைசேரி முறிகள் (ஏட்டுப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது) | 34 | 124 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் (முகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது) | 27 | - |
| நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் (அட்டுறு வட்டி உள்ளடங்கலான சந்தை விலையை அடிப்படையாகக் கொண்டது) | 3,866 | 6,794 |
| வெளிநின்ற வெளிநாட்டு படுகடன்கள் (அட்டுறு வட்டி உள்ளடங்கலாக) | 23,562 | 25,988 |
| **மத்திய வங்கி** | **6,391** | **6,081** |
| நாணயமும் வைப்புக்களும் (குறுங்காலம்) | 0.2 | 0.3 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்கள் | 2,028 | - |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள், ஒதுக்கீடுகள் | 1,265 | 1,285 |
| இந்திய றிசேர்வ் வங்கி பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடு | 400 | - |
| இந்திய றிசேர்வ் வங்கி மற்றும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் இணைந்த பரஸ்பர பரிமாற்ற ஏற்பாடு (இந்திய றிசேர்வ் வங்கி சிறப்பு பரஸ்பர பரிமாற்றல்) | | 2,451 |
| பங்களாதேச வங்கி பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடு | 200 | - |
| சீன மக்கள் வங்கி பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடு | 1,434 | 1,420 |
| பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதான அட்டுறு வட்டி | 3 | 20 |
| ப.நா.நிதியத்துடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | 1,062 | 904 |
| **வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்** | **5,370** | **4,933** |
| நாணயமும் வைப்புக்களும் (இ) | 3,843 | 4,050 |
| கடன்கள் - குறுங் காலம் | 704 | 307 |
| கடன்கள் - நீண்ட காலம் | 823 | 576 |
| **ஏனைய துறைகள் (ஈ)** | **4,443** | **4,542** |
| வர்த்தக கொடுகடன்களும் முற்பணங்களும் (உ) | 1,020 | 464 |
| படுகடன் பிணையங்கள் (அட்டுறு வட்டி உள்ளடங்கலான சந்தை விலையை அடிப்படையாகக் கொண்டது) | 78 | 132 |
| தனியார் துறை கூட்டுத்தாபனங்களின் கடன்கள் | 2,361 | 2,966 |
| அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளினதும் அரச கூட்டுத்தாபனங்களினதும் கடன்கள் | 985 | 980 |
| **நேரடி முதலீடு: கம்பனிகளுக்கிடையிலான கடன் வழங்கல் (ஊ)** | **5,944** | **6,160** |
| **மொத்த வெளிநாட்டு படுகடன் நிலைமை** | **49,667** | **54,832** |
| **மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக** | | |
| மொத்த வெளிநாட்டு படுகடன் | 64.6 | 65.0 |
| குறுங்கால படுகடன் | 9.9 | 6.0 |
| நீண்டகால படுகடன் | 54.7 | 59.0 |
| **மொத்த வெளிநாட்டு படுகடனின் சதவீதமாக** | | |
| குறுங்கால படுகடன் | 15.4 | 9.2 |
| நீண்டகால படுகடன | 84.6 | 90.8 |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | |
| **வதிவற்றோரினால் வைத்திருக்கப்படும் படுகடன் பிணையங்கள்- முகப் பெறுமதியில் துறைவாரியான பிரிவு** | **11,622** | **12,615** |
| பொது அரசாங்கம் | 11,447 | 12,440 |
| திறைசேரி உண்டியல்கள் | 34 | 233 |
| திறைசேரி முறிகள் | 36 | 130 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 27 | - |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | 10,800 | 10,800 |
| வதிவற்றோர்களுக்காக செலுத்தவேண்டிய நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் கூப்பன்களின் அட்டுறு வட்டி | 551 | 1,278 |
| ஏனைய துறைகள் | 175 | 175 |
| **மொத்த வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் முகப் பெறுமதி** | **12,550** | **12,550** |
| வதிவற்றோரினால் வைத்திருக்கப்படும் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | 10,800 | 10,800 |
| வதிவுள்ளோரினால் வைத்திருக்கப்படும் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | 1,750 | 1,750 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கு வைப்புக்களை உள்ளடக்கியுள்ளது
(ஈ) தனியார் துறை மற்றும் அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளை உள்ளடக்கியுள்ளது
(உ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை கம்பனிகளின் வெளிநின்ற வர்த்தக கொடுகடனை உள்ளடக்கியுள்ளது
(ஊ) முதலீட்டுச்சபையில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் கம்பனிகளுக் கிடையிலான கடன் பெறுகைகள் மற்றும் பங்குதாரர் முற்பணங்கள் உள்ளடங்கலாக

அட்டவணை 1.17

## வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

ஐ.அ.டொ.மில்லியன்

| வகை | 2022 (அ) | 2023 (ஆ) |
|---|---|---|
| **1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள்** | **2,483** | **2,589** |
| **1.1 தீர்ப்பனவுகள்** | **1,714** | **1,869** |
| பொது அரசாங்கம் | 1,236 | 1,043 |
| செயற்றிட்டக் கடன்கள் | 845 | 1,041 |
| படுகடன் பிணையங்கள் | 391 | 2 |
| மத்திய வங்கி | 140 | 522 |
| ப.நா.நிதியம் | 140 | 172 |
| பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றங்கள் | - | 350 |
| தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 339 | 304 |
| வெளிநாட்டு கடன்கள் | 339 | 304 |
| **1.2 வட்டிக் கொடுப்பனவுகள்** | **769** | **720** |
| பொது அரசாங்கம் | 465 | 405 |
| செயற்றிட்டக் கடன்கள் | 273 | 377 |
| படுகடன் பிணையங்கள் | 192 | 28 |
| மத்திய வங்கி | 57 | 118 |
| ப.நா.நிதியம் | 20 | 57 |
| பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றங்கள் | 36 | 60 |
| தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 216 | 185 |
| வெளிநாட்டு கடன்கள் | 204 | 173 |
| படுகடன் பிணையங்கள் | 12 | 12 |
| நேரடி முதலீட்டு தொழில் முயற்சிகளின் கம்பனிகளுக்கிடையிலான படுகடன் | 31 | 12 |
| **2. பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள்** | **16,169** | **17,327** |
| **3. பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள், வருமானம் மற்றும் நடைமுறை மாற்றல்களிலிருந்தான பெறுகைகள்** | **20,228** | **23,779** |
| **4. படுகடன் பணி விகிதம்** | | |
| 4.1 மேலுள்ள 2இன் சதவீதமாக | | |
| ஒட்டு மொத்த விகிதம் | 15.4 | 14.9 |
| ப.நா.நிதிய கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக | 14.4 | 13.6 |
| 4.2 மேலுள்ள 3இன் சதவீதமாக | | |
| ஒட்டு மொத்த விகிதம் | 12.3 | 10.9 |
| ப.நா.நிதிய கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக | 11.5 | 9.9 |
| **5. அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள்** | | |
| 5.1 அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (இ) | 1,701 | 1,448 |
| 5.2 மேலுள்ள 1இன் சதவீதமாக | 68.5 | 55.9 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) ப.நா.நிதியத்துடனான கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக

**தீர்ப்பனவுக் கொடுப்பனவு தொடர்ந்தும் மிதமாகக் காணப்பட்டன.** 2019, 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் ஆண்டொன்றிற்கு சராசரியாக ஐ.அ.டொலர் 5.0 பில்லியனுக்கு நெருக்கமாகக் காணப்பட்ட நாட்டின் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2022இல் ஐ.அ.டொலர் 2.5 பில்லியனுக்கும் 2023இல் ஐ.அ.டொலர் 2.6 பில்லியனுக்கும் குறைவடைந்தன. 2023இல் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2022இலும் பார்க்கச் சிறிதளவு உயர்வானதாகக் காணப்பட்டமைக்கு மத்திய வங்கியின் அதிகரித்த வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுகளே காரணமாகும். 2023இல் அரச வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுகள் 2023இல் கணிசமானளவிற்குக் குறைவாகக் காணப்பட்டமைக்கு படுகடன் ஸ்தம்பிதத்தன்மையின் காரணமாக 2023இல்

1

நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மீள்கொடுப்பனவுகள் எதுவும் காணப்படாமையே காரணமாகும். எனினும், 2023 காலப்பகுதியில் பல்புடை நிறுவனங்களின் மூலதனம் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் மீளச்செலுத்தப்பட்டமையின் காரணமாக அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன்களின் வெளிநின்ற படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் அதிகரித்தன. மத்திய வங்கி, வங்காளதேச வங்கிக்கு செலுத்தப்பட வேண்டிய ஐ.அ.டொலர் 200 மில்லியன் கொண்ட பன்னாட்டு பரஸ்பரபரிமாற்றல் வசதியை மீளச்செலுத்தியதுடன் இந்திய றிசேர்வ் வங்கியுடன் செய்துகொண்ட விசேட பரஸ்பரபரிமாற்றல் ஏற்பாடுகளின் பேரிலான வெளிநின்ற பொறுப்புக்களையும் மீளச்செலுத்த ஆரம்பித்தது. மேலும், மத்திய வங்கி 2016இல் தொடங்கப்பட்ட ப.நா. நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதிப் பொறுப்புக்களை தொடர்ந்தும் மீளச்செலுத்தியது. 2023இல் தனியார் துறைக் கூட்டுத்தாபனங்களின் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2022இனை ஒத்ததாக ஏறத்தாழ அதே மட்டத்தில் காணப்பட்டன.

### 1.4.4 செலாவணி வீத அசைவுகள்

**இடையிடையே காணப்பட்ட சில தளம்பல்களுக்கு மத்தியிலும் மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சந்தையை அடிப்படையாகக் கொண்ட செலாவணி வீதக் கொள்கையின் கீழ், 2023இல் இலங்கை ரூபா மிகக் கூடுதலாக உயர்வடைந்தது.** 2022இல் ஐ.அ.டொலருக்கெதிராக 44.8 சதவீதத்தினால் தேய்வடைந்த இலங்கை ரூபா 2023இல் 12.1 சதவீதத்தினால் உயர்வடைந்தது. கணிசமான ஒரு நாளுக்குள்ளேயான தளம்பலிருந்து செலாவணி வீதத்தினை உறுதிப்படுத்த உதவிய நடுத்தர உடன் செலாவணி வீதத்தினையும் மாறுபடும் அளவினையும் இலங்கை மத்திய வங்கி வெளியிட்டு உடன் செலாவணி வீதத்தின் மீதான நாளாந்த வழிகாட்டலைத் தொடர்ச்சியாக வழங்கியமையால் 2023இன் முதலாவது இரண்டு மாத காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐக்கிய அமெரிக்க டொலருக்கு ஏறத்தாழ 362 ரூபாவாக உறுதியாகக் காணப்பட்டது. சந்தையில் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையினை உயர்த்துவதற்கும் பெருமளவு நெகிழ்ச்சித்தன்மையினை வழங்குவதற்கும் மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட கொள்கை வழிமுறைகளால் துணையளிக்கப்பட்டு இலங்கை ரூபா அதன் பின்னர் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வடைந்தது. 2023 பெப்புருவரி 27இலிருந்து மத்திய வங்கி, மாற்றப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்து குறிப்பிட்ட தொகையினை மத்திய வங்கிக்கு கட்டாயமாக விற்க வேண்டும் என உரிமம்பெற்ற வங்கிகள் மீது விதிக்கப்பட்ட தேவைப்பாட்டினைப் படிப்படியாக தளர்த்தத் தொடங்கியதுடன் குறிப்பிட்ட தேவைப்பாட்டினை வங்கித்தொழில் முறைமையில் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையினை மேம்படுத்தும் நோக்குடன் 2023 மாச்சு 07இலிருந்து இரத்துச் செய்தது. மேலும், செலாவணி வீதத்தினைத் தீர்மானிப்பதில் பெருமளவு நெகிழ்ச்சித்தன்மையினை அனுமதிப்பதற்கும் மத்திய வங்கியின் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்புடன் இசைந்துசெல்லும் விதத்தில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் சந்தைத் தூண்டல் நடவடிக்கையினையும் ஊக்குவிப்பதற்கும் மத்திய வங்கி 2023 மாச்சு 07இலிருந்து நடைமுறைக்குவரும்

அட்டவணை 1.18

**செலாவணி வீத அசைவுகள்**


| நாணயம் | வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கான ரூபா | | | | | | முன்னைய ஆண்டுடனான சதவீத மாற்றம் (அ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டிறுதி வீதம் | | | ஆண்டுச் சராசரி வீதம் | | | ஆண்டிறுதி | | ஆண்டுச் சராசரி | |
| | 2021 | 2022 | 2023 | 2021 | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 |
| யூரோ | 226.86 | 386.93 | 358.75 | 235.10 | 339.04 | 354.11 | -41.37 | 7.86 | -30.66 | -4.26 |
| இந்திய ரூபா | 2.69 | 4.39 | 3.90 | 2.69 | 4.11 | 3.97 | -38.59 | 12.57 | -34.57 | 3.63 |
| யப்பானிய யென் | 1.74 | 2.74 | 2.29 | 1.81 | 2.44 | 2.34 | -36.41 | 19.53 | -25.92 | 4.54 |
| ஸ்ரேலிங் பவுண் | 270.60 | 437.35 | 412.61 | 273.51 | 396.89 | 407.07 | -38.13 | 5.99 | -31.09 | -2.50 |
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 200.43 | 363.11 | 323.92 | 198.88 | 324.55 | 327.53 | -44.80 | 12.10 (ஆ) | -38.72 | -0.91 (ஆ) |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 280.53 | 483.24 | 434.60 | 283.18 | 431.91 | 436.88 | -41.95 | 11.19 | -34.43 | -1.14 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

(அ) இலங்கை ரூபாவிற்கு சமனான வெளிநாட்டு நாணயங்களின் அப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன. (-) அடையாளம் என்பது ஒவ்வொரு நாணயத்திற்கும் எதிரான இலங்கை ரூபாவின் தேய்மானத்தை குறிப்பிடுகின்றது.

(ஆ) பகுப்பாய்வு நோக்கங்களுக்காக, இலங்கை ரூபாவின் உயர்வடைதல்/தேய்வடைதல் ஆண்டிறுதி செலாவணி வீதத்தை அடிப்படையாகக் கொண்டு மத்திய வங்கியினால் கணிக்கப்படுகின்றது. இதற்கமைய, 2022 இறுதியுடன் ஒப்பிடுகையில், 2023ஆம் ஆண்டிறுதி செலாவணி வீதத்தின் நியதிகளில் இலங்கை ரூபா உயர்வடைதலொன்றை பதிவுசெய்திருந்தது. எனினும், 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2023இல் ஆண்டு சராசரி செலாவணி வீதத்தை அடிப்படையாகக்கொண்டு, 2023இல் இலங்கை ரூபா சிறிதளவிலான தேய்மானமொன்றை பதிவுசெய்தது.

வரைபடம் 1.22 மத்திய வங்கியின் தலையீடுகள் மற்றும் ஆண்டுச் சராசரி செலாவணி வீதம்





*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

விதத்தில் வெளிநாட்டுச் செலாவணி வீதத்தின் மீதான நாளாந்த வழிகாட்டல் ஏற்பாடுகளை இடைநிறுத்தியது. இதனைத் தொடர்ந்து உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மை மேம்பட்டதுடன் உடன் சந்தை நடவடிக்கையும் உத்வேகம் பெற்றது. 2023 மாச்சில் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடு ஆரம்பிக்கப்பட்டதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சாதகமான சந்தை மனோபாவங்களும் செலாவணி வீதம் உயர்வடைவதற்கு உதவின.

**பல்வேறுபட்ட சாதகமான அபிவிருத்திகளின் காரணமாக இரண்டாம் காலாண்டுப் பகுதியில், குறிப்பாக 2023 மே மாதத்திலும் மற்றும் யூன் ஆரம்ப காலப்பகுதியிலும் இலங்கை ரூபா குறிப்பிடத்தக்க உயர்வினைப் பதிவுசெய்தது.** இறக்குமதிக்கான குறைவடைந்த கேள்வியுடன் சேர்ந்து ஏற்றுமதிப் பெறுகைகள், தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் அரச பிணையங்கள் சந்தைக்கான வெளிநாட்டு முதலீடுகள் என்பனவற்றின் விளைவாக மேம்பட்ட சந்தை நிலைமைகள், இறுக்கமான நாணய நிலைமைகள் இவ்வுயர்விற்குப் பங்களித்த முக்கிய காரணிகளாக விளங்கியமையினைப் பிரதிபலித்தன. 2023 மேயில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்தும் 2023 யூனில் உலக வங்கி நிதியிடலிருந்தும் வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவளிக்கும் விதத்தில் சிறப்புக் கொள்கையினை அடிப்படையாகக் கொண்ட கடன் பெறுகைகள் சந்தை மனோபாவங்களை மேம்படுத்துவதற்கான தூண்டுதல்களாக அமைந்தன. ஒட்டுமொத்தமாக, இலங்கை ரூபா ஆண்டின் தொடக்கத்திலிருந்து 2023 யூன் 08 வரையான காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக 24.8 சதவீதம் கொண்ட உயர்ந்த அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. அதன் பின்னர், இலங்கை ரூபா ஓரளவு தளம்பல்களைக் காட்டியதுடன் 2023இன் மூன்றாம் காலாண்டில் தேய்வொன்றினைப் பதிவுசெய்து உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் நிலவிய ஒப்பீட்டு ரீதியில் இறுக்கமான திரவத்தன்மை நிலைமைகளைப் பிரதிபலித்தது. தேய்வு அழுத்தத்திற்குப் பங்களித்த முக்கிய காரணியாக வங்கிகளிடமிருந்தான இலங்கை அபிவிருத்தி முறிகளின் ரூபா தீர்ப்பனவுடன் இணைந்த அதன் வெளிநாட்டு நாணய நிலைமையினை உள்ளடக்குவதற்கு அதிகரித்த கேள்வியின் காரணமாக திரவத்தன்மை வெளியேறியமை காணப்பட்டது. இதன் விளைவாக, பாதிக்கப்பட்ட வங்கிக்கும் சந்தைக்கும் திரவத்தன்மை ஆதரவினை 2023இன் மூன்றாம் காலாண்டுப்பகுதியில் காலத்திற்குக் காலம் வழங்கியதன் மூலம் மத்திய வங்கி தலையிட்டது. எனினும், 2023 யூனிலிருந்து இறக்குமதிக் கட்டுப்பாடுகள் படிப்படியாகத் தளர்த்தப்படுவது ஆரம்பிக்கப்படுகையில் இறக்குமதிகளுக்கான அடக்கி வைக்கப்பட்ட கேள்வி செலாவணி வீதத்தின் மீது அழுத்தத்தினைத் தோற்றுவிக்குமென எதிர்பார்க்கப்பட்டபோதும் அது பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை. ஆண்டின் இறுதிப்பகுதியில், மேம்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்களும் பணிகள் துறை உட்பாய்ச்சல்களும் அவதானிக்கப்பட்டன. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் இரண்டாவது பிரிவு பெறப்பட்டமை மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி என்பனவற்றிலிருந்தான


வரைபடம் 1.23 செலாவணி வீத உயர்வு / தேய்வு




*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

1

வரைபடம் 1.24 தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் 24-நாணயம் (2017=100)




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

பெறுகைகள் என்பனவற்றின் முக்கிய விளைவாக ஆண்டின் பிற்பகுதியை நோக்கி சந்தை மனோபாவங்கள் தொடர்ந்தும் மேம்பட்டன. இதற்கமைய, இடையிடையேயான தளம்பல்களுக்கு மத்தியிலும் ஆண்டின் பிற்பகுதியில் ரூபா உயர்வொன்றினைப் பதிவுசெய்தது. அதேவேளை, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடு 2023இல் தேறிய அடிப்படையொன்றில் (வர்த்தக திகதியின் அடிப்படையில்) ஐ.அ.டொலர் 1,896 மில்லியன் ஈர்ப்பினை ஏற்படுத்தியது. இது, ஐ.அ.டொலர் 2,722 மில்லியன் கொண்ட ஈர்ப்பினையும் ஐ.அ.டொலர் 826 மில்லியன் கொண்ட நிரம்பலையும் உள்ளடக்கியிருந்தது. மாறாக, 2022இல் மத்திய வங்கி ஐ.அ.டொலர் 2,726 மில்லியன் கொண்ட வெளிநாட்டுச் செலாவணியினை சந்தைக்கு வழங்கியவேளையில் ஐ.அ.டொலர் 2,147 மில்லியனைக் கொள்வனவு செய்தது.

**இலங்கை ரூபாவின் உயர்வடைந்து செல்லும் போக்கு 2024இலும் தொடர்ந்தது.** இதன்படி, 2024 மார்ச்சு இறுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 7.6 சதவீதத்தினால் உயர்வடைந்தது. இவ்வுயர்விற்கு சுற்றுலா வருவாய்கள், தொழிலாளர் பணவனுப்பல்கள் ஆகிய வடிவில் ஏற்பட்ட உத்வேகம் மிக்க உட்பாய்ச்சல்களும் குறைவடைந்த இறக்குமதிச் செலவினமும் முக்கிய காரணங்களாக அமைந்தன. இதன் விளைவாக, 2024இன் முதற்காலாண்டில் மத்திய வங்கியும் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1,200 மில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்களவு வெளிநாட்டுச் செலாவணியினை தேறிய அடிப்படையில் (வர்த்தக திகதியின் அடிப்படையில்) கொள்வனவு செய்யக்கூடியதாக இருந்தமை சந்தையில் நிலவிய மிகையான உயர்வு அழுத்தத்தினைத் தடுக்க உதவியது.

**பன்னாட்டுச் சந்தைகளில் ஐ.அ.டொலருக்கெதிரான குறுக்கு நாணய செலாவணி வீதங்களின் அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், ரூபா முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023இல் மற்றைய அனைத்த முக்கிய நாணயங்களுக்கெதிராகவும் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வடைந்தது.** இதற்கமைய, 2023 காலப்பகுதியில் இலங்கை ரூபா யூரோ (7.9 சதவீதம்), ஸ்டேர்லிங் பவுண் (6.0 சதவீதம்), யப்பானிய யென் (19.5 சதவீதம்), இந்திய ரூபா (12.6 சதவீதம்) என்பனவற்றிற்கெதிராக உயர்வடைந்தது. முக்கிய நாணயங்களுக்கெதிராக ரூபா உயர்வடைந்தமையின் இணைந்த தாக்கத்துடன் இலங்கை ரூபாவும் இவ்வாண்டுப்பகுதியில் சிறப்பு எடுப்பனவு உரிமைக்களுக்கெதிராக 11.2 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

## பெயரளவு மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதங்கள்

**2023ஆம் ஆண்டுப்பகுதியில், பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் அதிகரித்தவேளையில், உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் வீழ்ச்சியடைந்தன.** 5-நாணய பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண் 10.52 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் 24-நாணய பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண் 13.39 சதவீதத்தினால் அதிகரித்தது. பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்களில் ஏற்பட்ட அதிகரிப்பு, குறுக்கு நாணயச் செலாவணி வீதங்களில் ஏற்பட்ட அசைவுகளுடன் சேர்ந்து குறிப்பிட்ட முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா பெயரளவில் உயர்வடைந்தமையினைப் பிரதிபலித்தது. மேலும், 5-நாணய உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண் 12.87 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன் 24-நாணய உண்மைத் தாக்கமுள்ள செலாவணிச் சுட்டெண் 12.42 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஒட்டுமொத்தமாக, உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் இரண்டும் 2017 அடிப்படையாண்டில் நிலவிய மட்டத்திற்கு கணிசமானளவிற்கு கீழே தொடர்ந்து காணப்பட்டு, இலங்கை ரூபா தொடர்ந்தும் போட்டித்தன்மையுடையதாக விளங்கியமையை எடுத்துக்காட்டியது.

அட்டவணை 1.19

**பெயரளவு மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதங்கள்**

| தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் (அ) (ஆ) | ஆண்டிறுதி சுட்டெண் | | | ஆண்டுச் சராசரி சுட்டெண் | | | முன்னைய ஆண்டுடனான சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | ஆண்டிறுதி சுட்டெண் | | ஆண்டுச் சராசரி சுட்டெண் | |
| (2017=100) | 2021 | 2022 | 2023 | 2021 | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 |
| பெ.தா.செ.வீ - 24 நாணயங்கள் | 79.65 | 47.32 | 53.66 | 78.64 | 53.99 | 53.30 | -40.59 | 13.39 | -31.34 | -1.28 |
| உ.தா.செ.வீ - 24 நாணயங்கள் | 90.51 | 79.74 | 69.84 | 84.76 | 77.49 | 71.39 | -11.90 | -12.42 | -8.58 | -7.87 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

(அ) பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதமென்பது (பெ.தா.செ.வீ) 24 வர்த்தகப் பங்காளர் மற்றும் போட்டி நாடுகளின் பெயரளவு நாணயமாற்று வீதத்தின் நிறையேற்றப்பட்ட சராசரியாகும். ஒவ்வொரு நாணய கூடைகளிலுள்ள ஒவ்வொரு நாணயத்துடனும் தொடர்புடைய பணவீக்க வேறுபாடுகளுக்காக பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதங்களை சீராக்குவதன் மூலகாக உண்மைத் தாக்கமுள்ள செலாவணி (உ.தா.செ.வீ) கணிக்கப்படுகின்றது. கழித்தல் அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் உண்மை தாக்கமுள்ள நாணயமாற்று வீதத்தை கணிப்பிட பயன்படுத்தப்பட்டது

(ஆ) நாணயமாற்று வீதமானது சுட்டெண்களின் அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டதனால் ஏனைய நாணயங்களுடன் ஒப்பிடும்போது ரூபாவின் பெறுமதி உயர்வு/ பெறுமதி தேய்வு என்பது முறையே தாக்கமுள்ள நாணயமாற்று வீதங்களின் சுட்டெண்களின் பெறுமதிகளின் உயர்ச்சி/ வீழ்ச்சியில் நேரடியாக பிரதிபலிக்கின்றது

## 1.5 நிதியியல் துறை அபிவிருத்திகள்

**2023இல், குறிப்பாக, பொருளாதார நெருக்கடிகளிலிருந்து தோன்றிய சவால் நிறைந்த நிலைமைகளுக்கு மத்தியிலும் ஒட்டுமொத்த நிதியியல் துறை உறுதித்தன்மை பேணப்பட்டது.** நிதியியல் துறையில் ஆதிக்கம் செலுத்தும் வங்கித்தொழில் துறை, இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியின் உதவியுடன் மூலதனத்தினைப் பேணியதன் மூலம் உறுதித்தன்மையினைப் பேணக்கூடிய இயலுமையினைக் கொண்டிருந்த வேளையில், அரச பிணையங்களில் காணப்பட்ட அதிகரித்த முதலீடுகளின் காரணமாக திரவத்தன்மை குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தலுக்கும் மேலே காணப்பட்டது. மேலும், வங்கித்தொழில் துறையின் மொத்தச் சொத்துக்கள் இலாபத்தன்மையுடன் சேர்த்து மேம்பட்ட வேளையில், கட்டம் 3 கடன் விகிதத்தினால் எடுத்துக்காட்டப்பட்டவாறான கடன் தவணை தவறிய இடர்நேர்வுகள் 2022 உடன் ஒப்பிடுகையில் 2023இல் அதிகரித்தன. அதேபோன்று உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறையின் சொத்துத் தளமும் மேம்பட்ட வேளையில் துறையின் கடன் தவணை தவறிய இடர்நேர்வு 2023இல் கட்டம் 3 கடன் விகிதத்தின் நியதிகளில் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. இதன்படி, கட்டம் 3 கடன் விகிதத்தினால் பிரதிபலிக்கப்பட்டவாறு உயர்வடைந்த கொடுகடன் இடர்நேர்வுகள் வங்கித்தொழில் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறை இரண்டிற்கும் கரிசனையினை ஏற்படுத்துவனவாகவுள்ளன. அதேவேளை, நீண்ட கால மற்றும் பொதுவான துணைத் துறைகளை உள்ளடக்குகின்ற காப்புறுதித் துறை இவ்வாண்டுப்பகுதியில் வேறுபட்ட நிதியியல் செயலாற்றங்களைக் காட்டியது. நிதியியல் சந்தைகளுக்குள், உள்நாட்டு பணச் சந்தையின் திரவத்தன்மைப் பற்றாக்குறை ஆண்டின் இறுதியில் கணிசமானளவிற்கு வீழ்ச்சியடைந்த வேளையில், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மை நிலைமைகளும் மேம்பட்டன. மேலும், அரச பிணையங்கள் சந்தையில் விளைவு வீதங்கள் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகள் இரண்டிலும் வீழ்ச்சியொன்றினைக் காட்டின. உள்நாட்டுப் பங்குச் சந்தை விலைச் சுட்டெண்கள், சந்தை மூலதனமயமாக்கல் மற்றும் நாளாந்த மொத்தப் புரள்வு ஆகிய நியதிகளில் கலப்பான செயலாற்றத்தினைக் காட்டிய வேளையில், வெளிநாட்டுப் பங்கேற்பு 2022 உடன் ஒப்பிடுகையில் 2023இல் வீழ்ச்சியடைந்தது. மத்திய வங்கி, நிதியியல் வசதிக்குட்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகளிலும் நிதியியல் துறையின் சுமுகமான தொழிற்பாட்டிற்காக உத்வேகம் மிக்க நிதியியல் உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துவதிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டது. மேலும், மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரவரம்பின் கீழ், நிதியியல் பணிகளை வழங்குபவர்களுக்காக, நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு கட்டமைப்பினை வலுப்படுத்தும் நோக்குடன் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு தொடர்பான புதிய ஒழுங்குவிதிகள் 2023ஆம் ஆண்டில் விடுக்கப்பட்டன. மேலும், நிதியியல் முறைமையின் நிலைமை தொடர்பான விபரங்கள் 2023இன் நிதியியல் உறுதிப்பாட்டு மீளாய்வின்[22] மூலம் பெறக்கூடியதாக இருக்கும்.

22 https://www.cbsl.gov.lk/ta/வெளியீடுகள்/பொருளாதார-மற்றும்-நிதியியல்-அறிக்கை/நிதியியல்-முறைமை உறுதிப்பாட்டு-மீளாய்வு

## சிறப்புக் குறிப்பு 2
## பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டம் முன்னேற்றம் தொடர்பிலானதோர் இற்றைப்படுத்தல்

2022இல் ஏற்பட்ட வரலாற்றில் முன்னொருபோதுமல்லாத சமூக-பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியினைத் தொடர்ந்து பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினையும் படுகடனின் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையினையும் மீட்டெடுப்பதற்கும் உலகத்துடனான இணைப்புக்களை மீள்கட்டியெழுப்புவதற்கும் பேரண்டப்பொருளாதாரச் சீராக்க நிகழ்ச்சித்திட்டமொன்றுடன் இணைந்த நிதியிடல் ஏற்பாடொன்றினைப் பெற்றுக்கொள்ளல் குறித்து பன்னாட்டு நாணய நிதியத்துடன் இலங்கை கலந்துரையாடல்களை ஆரம்பித்தது. 2022 செத்தெம்பரில், விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் 48 மாத கால ஏற்பாடொன்றிற்கான அலுவலர் மட்ட உடன்படிக்கையொன்றினைப் பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களும் இலங்கையின் அதிகாரிகளும் எட்டியதுடன் இது சிறப்பு எடுப்பனவு உரிமைகள் 2.286 பில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3 பில்லியன்) தொகையாக விளங்கியது. அதனைத் தொடர்ந்து, 2023 மாச்சு 20 அன்று இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்களுக்குத் துணைபுரிவதற்கான வரவுசெலவுத் திட்ட ஆதரவொன்றாக விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டிற்குப் பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை ஒப்புதலளித்தமையானது இலங்கையின் பதினேழாவது பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டத்தின் தொடக்கத்தினைக் குறித்தது. இதற்கமைய, சிறப்பு எடுப்பனவு உரிமைகள் 508 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 670 மில்லியன்) கொண்ட மொத்த தொகையிலான பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் முதலாவது மற்றும் இரண்டாவது தொகுதிகள் முறையே 2023 மாச்சு மற்றும் திசெம்பர் ஆகிய மாதங்களில் பகிர்ந்தளிக்கப்பட்டன. விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட கணியம்சார் செயலாற்றப் பிரமாணம், தொடர்ச்சியான செயலாற்றப் பிரமாணம், நாணயக் கொள்கை ஆலோசனை விதிகள், குறியீட்டு இலக்குகள் மற்றும் அமைப்பியல்சார் அடிப்படை அளவுக்குறியீடுகள் என்பன தொடர்பில் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழ் உள்ள முன்னேற்றத்தினைப் பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் தொடர்புடைய அதிகாரிகள் கிரமமாகக் கண்காணிக்கின்றனர். இலங்கை சார்பில் இந்த இலக்குகளை அடையப்பெறலானது அரசாங்கத்தினதும் இலங்கை மத்திய வங்கியினதும் பொறுப்பாகும். நிகழ்ச்சித்திட்டச் செயலாற்றத்தினைப் பொறுத்தவரையில், சமூக செலவிடல் மீதான குறியீட்டு இலக்குகள் நீங்கலாக 2023 திசெம்பர் இறுதிக்கான சகல கணியம்சார் செயலாற்றப் பிரமாணங்களும் குறியீட்டு இலக்குகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ள வேளையில் 2024 பெப்புருவரி இறுதிக்கு முன்னர் அடையப்பட வேண்டிய அநேகமான அமைப்பியல்சார் அடிப்படை அளவுக்குறியீடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன அல்லது தாமதமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாவது மீளாய்வினை நிறைவுசெய்வதற்கான பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பிலான அலுவலர் மட்ட உடன்படிக்கையொன்று 2024 மாச்சு 21 அன்று எட்டப்பட்டது. பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையினால் மீளாய்வுக்கு ஒப்புதலளிக்கப்பட்டவுடன், நிதியிடலில் மேலும் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் 254 மில்லியன் தொகையொன்றிற்கான (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 337 மில்லியன்) அணுகலினை இலங்கை கொண்டிருக்கும்.

இலங்கையில் பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினையும் பொதுப் படுகடனின் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையினையும் மீட்டெடுக்கும் பொருட்டு பல்வேறு முக்கிய தூண்களில் தங்கியிருக்கின்ற அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டமொன்றாக பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அரசிறையின் அடிப்படையிலமைந்த இறைத் திரட்சி, மிகவும் பாதிப்படையக்கூடியவர்களைப் பாதுகாப்பதற்கான வலுவானதொரு சமூக பாதுகாப்பு வலையமைப்பு, நாட்டிற்கான படுகடன் மறுசீரமைப்பு உபாயம், நீடித்து நிலைத்திருக்கக்கூடிய வகையில் பொதுப்படுகடனை மீட்டெடுக்கும் நோக்கிலமைந்த பெருமளவிலான செலாவணி வீத நெகிழ்ச்சித்தன்மையின் கீழ் விலை உறுதிப்பாட்டினை மீட்டெடுப்பதற்கும் பன்னாட்டு ஒதுக்குகளை மீள்கட்டியெழுப்புவதற்குமான பல்முனை கொண்டதோர் உபாயம், நிதியியல் உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதற்கான கொள்கைகள், ஆளுகை மற்றும் ஊழலினால் பாதிக்கப்படக்கூடியதன்மை என்பவற்றினைத் தீர்ப்பதற்கான ஒருமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் மற்றும் வளர்ச்சியை மேம்படுத்தக்கூடிய பரந்தளவிலான கட்டமைப்புசார் சீர்திருத்தங்கள் என்பவற்றினை இத்தூண்கள் உள்ளடக்கியுள்ளன.

தற்போதைய பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய இலக்குகள் மற்றும் கூறுகள் கீழே கலந்துரையாடப்பட்டுள்ளன.

**தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் இலக்கு**

ஒதுக்குடன் தொடர்புடைய பொறுப்புக்களைத் தவிர்த்து மத்திய வங்கியினால் பேணப்படுகின்ற ஒதுக்கு மட்டத்தினை மதிப்பிடுவதற்கு விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழான கணியம்சார் செயலாற்றப் பிரமாணமொன்றாக தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் இலக்கு காணப்படுகின்றது. நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்களின் தொடர்ச்சியான மிதமடைதல், பல்புடை கடன்வழங்குநர்களுக்கான வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் மற்றும் முதன்மையாக, ஆண்டு காலப்பகுதியில் அத்தியாவசிய இறக்குமதிகளிற்காக மத்திய வங்கியின் மூலம் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு மேற்கொள்ளப்பட்ட தேறிய விற்பனைகள் என்பன காரணமாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தமையினால் 2022 மற்றும் 2023இன் முற்பகுதியில் ஒதுக்குகள் குறைவடைந்த மட்டங்களில் தொடர்ந்தும் காணப்பட்டன. நிகழ்ச்சித்திட்டத்தின் தொடக்கத்தில், 2023 மாச்சு இறுதியிலுள்ளவாறு, ஒதுக்குடன் தொடர்புடைய பொறுப்புக்கள் ஒதுக்குச் சொத்துக்களிலும் பார்க்க மிக உயர்ந்தளவில் காணப்பட்டதுடன் இதன் விளைவாக தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் பாரியளவிலான எதிர்மறையான மட்டங்களில் விளங்கின. மொத்த அலுவல்சார் ஒதுக்குச் சொத்துக்களின் அதிகரிப்பு பொறுப்புக்களை விஞ்சிக் காணப்படுவதனை நிச்சயப்படுத்துவதுடன் அதன்மூலம் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை நேர்க்கணிய மட்டங்களில் பேணுவதானது விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழ் தேறிய பன்னாட்டு ஒதுக்கு இலக்கினை அடைவதன் முதன்மை நோக்கமாகக் காணப்படுகின்றது. விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் இதுவரையான காலப்பகுதியில், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து தேறிய அடிப்படையொன்றில் வெளிநாட்டுச் செலாவணியினைக் கொள்வனவு செய்வதன் மூலம் மத்திய வங்கி ஒதுக்குகளைத் தொடர்ந்து கட்டியெழுப்பியது. இதன் விளைவாக, மொத்த அலுவல்சார் ஒதுக்கு மட்டமும் 2022 இறுதியிலுள்ளவாறு ஐ.அ.டொலர் 1.9 பில்லியனிலிருந்து 2023 இறுதியளவில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 4.4 பில்லியனிற்கும் 2024 மாச்சு இறுதியளவில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 5.0 பில்லியனிற்கும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது.

**மத்திய வங்கியின் அரசிற்கான தேறிய கொடுகடன் இலக்கு**

வரலாற்று ரீதியாக, அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் மத்திய வங்கியிடமிருந்தான நாணய நிதியிடலை நாடியுள்ளமையானது 2022இல் பணவீக்கம் குறிப்பிடத்தக்களவிலான உயர் மட்டங்களிற்கு உயர்வடைந்தமைக்கான முக்கிய காரணிகளில் ஒன்றாகக் காணப்பட்டது. மத்திய வங்கியின் அரசிற்கான தேறிய கொடுகடனானது மத்திய அரசாங்கத்தின் மீதான மத்திய வங்கியின் கோரல்கள் மற்றும் மத்திய வங்கியில் மத்திய அரசாங்கத்தினால் ரூபாவில் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்கள் என்பவற்றிற்கிடையிலான வேறுபாடாக அளவிடப்படுகின்றது. பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு முன்னர், வெளிநாட்டு நிதியிடல் தெரிவுகளின்மை மற்றும் வரையறுக்கப்பட்ட உள்நாட்டு நிதியிடல் தெரிவுகள் மீதான அரசாங்கத்தின் விஞ்சியளவிலான தங்கியிருக்கும் தன்மை என்பன காரணமாக அரசாங்கத்தின் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையின் நாணய நிதியிடலில் கிரமமாக ஈடுபட வேண்டிய கட்டாயம் மத்திய வங்கிக்கு ஏற்பட்டது. அரசாங்கம் மத்திய வங்கியிடமிருந்து நாணய நிதியிடலைப் பெற்றுக்கொள்வதனை இயலச் செய்யும் ஏதேனும் வழிகளிருப்பின் அதனைத் தடுப்பது பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகவுள்ளதுடன் இது 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க மத்திய வங்கிச் சட்டத்தின் சட்டவாக்கத்தினூடாக அடையப்பட்டதொன்றாகவுள்ளது. புதிய நாணய நிதியிடலின்மை மற்றும் மத்திய வங்கியின் அரச பிணையங்களின் தற்போதைய கையிருப்புக்களின் படிப்படியான குறைப்பின்மை என்பவற்றுடன் பன்னாட்டு நாணய நிதியத்தினால் நிர்ணயிக்கப்பட்ட 2023 திசெம்பர் இறுதியிலான அரசிற்கான தேறிய கொடுகடன் இலக்கும் அடையப்பட்டது.

**நாணயக் கொள்கை ஆலோசனை விதிகள்**

இலங்கையின் பணவீக்கம் 2022இல் வரலாற்று ரீதியில் உயர்ந்தளவிலான மட்டங்களிற்கு அதிகரித்தது. உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினைப் பேணுகின்ற அதன் குறிக்கோளுடன் இசைந்து செல்லும் விதத்தில் பணவீக்கத்தின் இலக்கிடப்பட்ட மட்டத்தினை இலங்கை அடைவதனை நிச்சயப்படுத்தும் பொருட்டு பணவீக்கத்தில் ஏற்படுகின்ற அபிவிருத்திகளை உன்னிப்பாகக் கண்காணிப்பதற்கு நாணயக் கொள்கை ஆலோசனை விதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இது காலாண்டுப் பணவீக்கத்தினை முன்கூட்டித் தீர்மானிக்கப்பட்ட

1

இலக்குத் திகதிகளில் கண்காணிக்கின்றது. இதற்கமைய, பன்னாட்டு நாணய நிதிய அலுவலா் அறிக்கையின் தொழில்நுட்ப புரிந்துணா்வு விஞ்ஞாபனத்தில் குறித்துரைக்கப்பட்ட முறைக்கமைய, கொழும்பு நுகா்வோா் விலைச் சுட்டெண்ணின் (2021=100) அடிப்படையில் கணக்கிடப்படுகின்ற காலாண்டு சராசரி ஆண்டிற்கு ஆண்டு பணவீக்கம் 2023 திசெம்பரளவில் 3.0 சதவீதமாக விளங்கியது. ஆதலால், 2023 திசெம்பரளவில் அடையப்பட்ட பணவீக்கமானது 2.0-3.5 சதவீதம் கொண்ட நாணயக் கொள்கை ஆலோசனை விதிகளின் தாழ்ந்தளவிலான வெளியக வீச்சினுள் காணப்பட்டது.

**ஆரம்ப மீதி இலக்கு, அரசிறை மற்றும் திரண்ட வரவுசெலவுத் திட்ட மீதி**

இலங்கையின் மத்திய அரசாங்க அரசிறைச் சேகரிப்பானது உலகிலேயே மிகத் தாழ்ந்தளவிலானதொன்றாக இருக்குமென அடையாளப்படுத்தப்பட்டு, வரலாற்று ரீதியாக குறிப்பிடத்தக்களவிலான ஆரம்ப மீதிப் பற்றாக்குறைகளுக்கு வழிவகுத்துள்ளது. அரசிறையின் அடிப்படையிலமைந்த இறைத் திரட்சி வழிமுறைகளை நடைமுறைப்படுத்துமாறும் சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்கள், இறை நிறுவனங்கள் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதனையும் அரச திறைசேரி மீதான சுமையினைக் குறைப்பதனையும் நோக்காகக் கொண்ட அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் என்பவற்றிற்கான சீா்திருத்தங்களை அறிமுகப்படுத்துமாறும் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டம் இலங்கையைத் தேவைப்படுத்துகின்றது. கண்டிப்பான இறைத் திரட்சி முயற்சிகளினால் ஆதரவளிக்கப்பட்டு, 2023இற்கான ஆரம்ப மிகையொன்றினை அரசாங்கம் எய்தியதுடன் இது 2023இற்கான பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் நிா்ணயிக்கப்பட்டுள்ள முதன்மைப் பற்றாக்குறை இலக்கிலும் பாா்க்க விஞ்சியளவிலானதாயுள்ளது. அதேவேளை, அரச செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பொன்றிற்கு மத்தியில் அரசிறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பின் விளைவொன்றாக 2023இற்கான திரண்ட வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை மேம்பட்டது.

மேலும், மத்திய அரசாங்கத்தின் வரி அரசிறையானது பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறியீட்டு இலக்கொன்றாகக் குறித்துரைக்கப்பட்டுள்ளது. பன்னாட்டு நாணய நிதியத்தின் அண்மையில் முடிவடைந்த நிகழ்ச்சித்திட்ட மீளாய்வு விஜயத்தின் போது வரி அரசிறைச் சேகரிப்பில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றமானது பாராட்டப்பட்டது.

**தொடா்ச்சியான செயலாற்றப் பிரமாணம் மற்றும் குறியீட்டு இலக்குகள்**

பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டம் இரண்டு தொடா்ச்சியான செயலாற்றப் பிரமாணங்களையும் குறித்துரைத்துள்ளது. (i) நிதியல்லாப் பொதுத்துறை மற்றும் மத்திய வங்கி என்பவற்றினால் புதிய வெளிநாட்டுக் கொடுப்பனவு நிலுவைகள் ஒன்றுதிரட்டப்படாமை மற்றும் (ii) மத்திய வங்கியின் மூலம் முதலாந்தரச் சந்தையிலிருந்து அரச பிணையங்களின் மேலதிக கொள்வனவுகளின்மை ஆகிய இரண்டினையும் இவை உள்ளடக்கின்றன. இத்தொடா்ச்சியான செயலாற்றப் பிரமாணங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கை அதிகாரிகளினால் பூா்த்திசெய்யப்பட்டுள்ளன. மேலும், மத்திய அரசாங்கத்தின் வரி அரசிறை, மத்திய அரசாங்கத்தின் மூலமான சமூக செலவிடல், எரிபொருள் மற்றும் மின்சாரத்திற்கான வா்த்தகமல்லாக் கடப்பாட்டுச் செலவு மற்றும் திறைசேரி உத்தரவாதங்கள் என்பவற்றுடன் தொடா்புடைய குறித்துரைக்கப்பட்ட குறியீட்டு இலக்குகளையும் நிகழ்ச்சித்திட்டம் கொண்டுள்ளது. மத்திய அரசாங்கத்தின் மூலமான சமூக செலவிடல் நீங்கலாக நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான சகல குறியீட்டு இலக்குகளும் 2023 திசெம்பா் இறுதியளவில் பூா்த்திசெய்யப்பட்டுள்ளன.

**மறுசீரமைப்பின் முன்னேற்றம்**

பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் மூலம் எதிா்பாா்க்கப்படுகின்றவாறு படுகடன் பாதையை நீடித்துநிலைத்திருக்கக்கூடிய பாதையொன்றிற்குக் கீழ் நோக்கிக் கொண்டு வருகின்ற நோக்குடன் வெளிநாட்டுப் படுகடன் மீதான நிவாரணத்தைப் பேச்சுவாா்த்தை செய்யும் பொருட்டு அரசாங்கம் வெளிநாட்டுக் கடன்வழங்குநா்களுடன் ஈடுபட்டு வருகின்றது. வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமொன்று காணப்படுகின்றது. 2023 நவெம்பரில், அதிகாரிகளுக்கும் அலுவல்சாா் கடன்வழங்குநா்கள் குழுவிற்குமிடையிலான கோட்பாட்டு ரீதியான உடன்படிக்கையொன்று எட்டப்பட்டதுடன் இலங்கை மீதான அதன் கோரல்களை மறுசீரமைக்கும் பொருட்டு சீன

ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் இலங்கைக்குமிடையிலான பூர்வாங்க உடன்படிக்கையொன்றும் எட்டப்பட்டது. தற்போது, நிகழ்ச்சித்திட்ட பிரமாணங்களுடன் இசைந்து செல்கின்றதும் ஒப்பிடத்தக்கதொரு முறையிலுமான படுகடன் உடன்படிக்கைகளை அடையும் பொருட்டு அலுவல்சார் கடன்வழங்குநர்கள் குழு மற்றும் சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கி என்பவற்றுடன் இலங்கை நெருக்கமாக ஈடுபட்டு வருகின்றது. அதேவேளை, படுகடன் கையாளல் குறித்து விரைவில் இணக்கப்பாடொன்றினை எட்டும் நோக்குடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மற்றும் தகவல் பகிர்வுகள் என்பவற்றினூடாக நல்லெண்ணத்தில் வெளிநாட்டு வர்த்தகக் கடன்வழங்குநர்களுடன் இலங்கை நெருக்கமாக ஈடுபட்டு வருகின்றது.

மேலும், 2023 யூலையில் அரசாங்கம் அதன் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பித்ததுடன் அதன் முக்கிய அம்சங்கள் 2023 செத்தெம்பரில் நிறைவுசெய்யப்பட்டன. ஆரம்பிக்கப்பட்ட படுகடன் பரிவர்த்தனைகள் அரசிற்குக் குறிப்பிடத்தக்களவிலான திரவத்தன்மை நிவாரணத்தை வழங்கிய வேளையில் அரசாங்கத்தின் எதிர்கால ஆண்டு ரீதியான மொத்த நிதியிடல் தேவைப்பாடுகள் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய மட்டங்களிற்குக் குறைவதற்குப் பங்களித்து உந்துதலளித்தன.

**முக்கிய அமைப்பியல்சார் அடிப்படை அளவுக்குறியீடுகள்**

இறை, அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு வலையமைப்புச் சீர்திருத்தங்கள், நிதியியல் துறை மற்றும் ஆளுகை போன்ற பகுதிகளில் உள்ள முக்கிய அமைப்பியல்சார் அடிப்படை அளவுக் குறியீடுகளைத் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டம் உள்ளடக்கின்றது. இம்முக்கிய அமைப்பியல்சார் அடிப்படை அளவுக்குறியீடுகளை அடைவதனைப் பொறுத்தவரையில் இதுவரையான காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிலானதொரு முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. மத்திய வங்கிச் சட்டத்தின் சட்டவாக்கம், அரசிற்குச் சொந்தமான இரண்டு பாரியளவிலான வங்கிகள் மற்றும் மூன்று பாரியளவிலான தனியார் துறை வங்கிகள் என்பவற்றிற்கான வங்கிகளை அடையாளம் காண்கின்ற செய்முறையின் சொத்துத் தர மீளாய்வுக் கூறின் நிறைவு மற்றும் வங்கித்தொழில் முறைமையின் மூலதன மற்றும் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மைப் பற்றாக்குறைகளைத் தீர்ப்பதற்கான வழிகாட்டலொன்றினை உருவாக்குதல் என்பவற்றினை மத்திய வங்கிக்குப் பொருந்தக்கூடிய பூரணப்படுத்தப்பட்டுள்ள முக்கிய அமைப்பியல்சார் அடிப்படை அளவுக்குறியீடுகள் உள்ளடக்கின்றன. மேலும், வங்கித்தொழில் சட்டத்திற்கான திருத்தங்களிற்கு பாராளுமன்ற ஒப்புதல் தாமதமாகவேனும் பெற்றுக்கொள்ளப்பட்டது. அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிகளின் சீர்திருத்தங்களைப் பொறுத்தவரையில், ஏனையவற்றிற்கிடையில், செலவைப் பிரதிபலிக்கக்கூடிய எரிபொருள் விலையிடலை நிர்ணயித்தல் மற்றும் மாதாந்த சூத்திரத்தினை அடிப்படையாகக் கொண்ட சீராக்கங்களுடனான மின்சாரத் தீர்வை அட்டவணைகள் என்பன பூர்த்திசெய்யப்பட்ட முக்கியமான அமைப்பியல்சார் அடிப்படை அளவுக்குறியீடுகளாகக் காணப்படுகின்றன. இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்ற நீண்டகாலமாக நட்டத்தை ஏற்படுத்துகின்ற நிறுவனங்களின் மேம்பட்ட இலாபத்தன்மையுடன் இம்முயற்சிகள் வெற்றிகரமான பெறுபேறுகளை ஏற்கனவே காட்டியுள்ளன. 2024 ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பாராளுமன்ற ஒப்புதல், அரச உத்தரவாதங்கள் மீதான வரையறையில் மொ.உ.உற்பத்தியின் 7.5 சதவீதத்திற்கான குறைவொன்றுடன் அமைச்சரவை ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளல், பெறுமதி கூட்டப்பட்ட வரி மீளளிப்பு முறைமையொன்றினைக் கட்டியெழுப்புவதற்கும் எளிமையாக்கப்பட்ட பெறுமதி கூட்டப்பட்ட வரியின் முழுமையான நீக்குதலொன்றினை அடைவதற்குமான உபாயமொன்றிற்கு அமைச்சரவை ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் வரி இணங்குவிப்பிற்கான முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகளை அறிமுகப்படுத்தல் என்பன இதுவரையான காலப்பகுதியில் பூர்த்திசெய்யப்பட்டுள்ள இறைத் துறையுடன் தொடர்புடைய சில முக்கிய அமைப்பியல்சார் அடிப்படை அளவுக்குறியீடுகளாகக் காணப்படுகின்றன.

**ஆளுகை**

இலங்கையில் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார மீட்சியை நிச்சயப்படுத்தும் பொருட்டு ஊழலினால் பாதிக்கப்படக்கூடியதன்மையினை நிவர்த்தி செய்வதானது மிகவும் முக்கியமானதொன்றாகும். நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய மையத் தூணொன்றாக ஆளுகை மற்றும் ஊழலிற்கெதிரான சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கு

1

இலங்கை தொடர்ந்தும் அர்ப்பணிப்புடனுள்ளது. இவ்வகையில், 2023 செத்தெம்பரில் ஆளுகையினைக் கண்டறிகின்ற அறிக்கையினை இலங்கை வெளியிட்டு, பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆளுகையினைக் கண்டறிகின்ற செயற்பாட்டினை மேற்கொண்ட முதலாவது ஆசிய நாடாக இலங்கையைத் தடம்பதிக்கச் செய்துள்ளது. மேலும், ஆளுகையினைக் கண்டறிகின்ற அறிக்கையின் முக்கிய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு நடவடிக்கைத் திட்டமொன்றினை இலங்கை அண்மையில் வெளியிட்டதுடன் இது அண்மைய மீளாய்வின் போது பன்னாட்டு நாணய நிதியத்தினால் பாராட்டப்பட்டது. ஊழல் இடர்நேர்வுகளை நிவர்த்தி செய்தல், பொருளாதார நம்பிக்கையை மீள்கட்டியெழுப்புதல் மற்றும் வளர்ச்சியை மேலும் வலுவானதாகவும் அனைத்தையுமுள்ளடக்கியதாகவும் மாற்றுதல் போன்றவற்றினை மேற்கொள்ளும் பொருட்டு இச்சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான தொடர்ச்சியான முயற்சிகளிற்கான அவசியத்தினை பன்னாட்டு நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது.

## 1.5.1 வங்கித்தொழில் துறை

**நிதியியல் தொழில் துறையில் ஆதிக்கம் செலுத்திவரும் வங்கித்தொழில் துறை, 2023 இறுதியிலுள்ளவாறு மொத்தச் சொத்துக்களில் 61.5 சதவீதத்திற்கு வகைகூறி, பொருளாதார நெருக்கடிகள் மற்றும் மோசமான உலகளாவிய நிலைமைகள் என்பனவற்றிலிருந்து தோன்றிய சவால்களைக் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு மேலே மூலதனத்தினையும், திரவத்தன்மையினையும் பேணுகின்ற பக்கபலத்துடன் எதிர்த்துநிற்கக்கூடிய தன்மையினைக் கொண்டிருந்தது.** 2023 இறுதியில், வங்கித்தொழில் துறை 30 வங்கிகளையும் அதாவது வெளிநாட்டு வங்கிகளின் 11 கிளைகள் உட்பட 24 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் 6 உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் உள்ளடக்கிக் காணப்பட்டது. வங்கித்தொழில் துறை வங்கித்தொழில் வலையமைப்பினை விரிவாக்கியதன் மூலமும் வங்கித்தொழில் பணிகளை அதிகரித்தமையின் மூலமும் நிதியியல் இடையேற்பாடுகளுக்கு வங்கித்தொழில் துறை தொடர்ந்தும் ஆதரவளித்ததன் மூலம் நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவித்தது. 2023இல் 7 வங்கிக் கிளைகளும் 272 தன்னியக்கக் கூற்றுப் பொறிகளும் நிறுவப்பட்ட வேளையில் 04 வங்கிக் கிளைகளும் 31 தன்னியக்கக் கூற்றுப் பொறிகளும் மூடப்பட்டன. இதற்கமைய, 2023 இறுதியில் வங்கித்தொழில் நிலையங்களினதும் தன்னியக்கக் கூற்றுப் பொறிகளினதும் மொத்த எண்ணிக்கை முறையே 7,517 ஆகவும் 6,943 ஆகவும் காணப்பட்டது. இவ்வாண்டுப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் மொத்தச் சொத்துக்கள் ரூ.989.4 பில்லியனால் அதிகரித்து 2023 திசெம்பர் இறுதியில் ரூ.20.0 றில்லியனை விஞ்சிக் காணப்பட்டது. சொத்துக்களின் ஆண்டிற்காண்டு வளர்ச்சி 2022 இறுதியின் 15.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2023 இறுதியில் 5.1 சதவீதத்தினைப் பதிவுசெய்தது. வளர்ச்சியில் ஏற்பட்ட இம்மெதுவான போக்கிற்கு, செலாவணி வீத உயர்வுடன், வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் இலங்கை ரூபாவிற்கான முதலீடுகளாக மாற்றப்பட்டமையே முக்கிய காரணமாக இருந்தது. 2023இன் முதலரைப்பகுதியில் நிலவிய இறுக்கமான நாணயக் கொள்கை நிலை, கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 2022 இறுதியில் காணப்பட்ட 5.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2023 இறுதியில் 2.6 சதவீதத்தினால் சுருக்கமடைய வழிவகுத்தது. அதேவேளை முதலீட்டில் ஏற்பட்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 2022இன் 19.4 சதவீதத்திலிருந்து 2023 இறுதியில் 23.3 சதவீதத்திற்கு விரைவடைந்தது. ஆய்விற்குரிய காலப்பகுதியில் முதலீடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சந்தைப் பெறுமதியில் நிதியியல் சொத்துக்கள் ரூ.828.2 பில்லியனாலும் பெறுமதி இழப்புச் செலவில் நிதியியல் முதலீடுகள் ரூ.311.2 பில்லியனாலும் அதிகரித்தமை முக்கிய காரணமாக அமைந்தது.

**வைப்புக்கள் வங்கித்தொழில் துறையின் நிதியிடலில் முக்கிய மூலமாகத் தொடர்ந்தும் விளங்கி 2023 இறுதியில் மொத்த ஐந்தொகைப் பொறுப்புக்களில் 81.5 சதவீதத்தினைப் பிரதிபலித்த வேளையில் கடன்பாடுகள் 6.8 சதவீதத்திற்கு வகைகூறின.** தவணை வைப்புக்களின் பங்கு 66.4 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் சேமிப்பு மற்றும் கேள்வி வைப்புக்கள் 2023 இறுதியில் காணப்பட்டவாறான மொத்த வைப்புக்களில் முறையே 25.8 சதவீதத்திற்கும் 6.5 சதவீதத்திற்கும் வகைகூறின. இதற்கமைய, நடைமுறை மற்றும் சேமிப்பு கணக்கு

அட்டவணை 1.20

**நிதியியல் முறைமையின் மொத்தச் சொத்துக்கள்**

| விடயம் | 2022 (அ) | | 2023 (ஆ) | |
|---|---|---|---|---|
| | ரூ. பில் | பங்கு (%) | ரூ. பில் | பங்கு (%) |
| **வங்கித்தொழில் துறை** | **23,928.0** | **76.2** | **24,611.5** | **74.1** |
| மத்திய வங்கி | 4,510.3 | 14.4 | 4,205.4 | 12.7 |
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | 17,226.3 | 54.9 | 18,121.0 | 54.6 |
| உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 2,191.4 | 7.0 | 2,285.0 | 6.9 |
| **வைப்புக்களை ஏற்கும் ஏனைய நிதியியல் நிறுவனங்கள்** | **1,812.1** | **5.8** | **1,914.1** | **5.8** |
| உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் | 1,610.2 | 5.1 | 1,692.0 | 5.1 |
| கூட்டுறவு கிராமிய வங்கிகள் (இ) | 201.2 | 0.6 | 221.3 | 0.7 |
| சிக்கன மற்றும் கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள் | 0.8 | 0.0 | 0.9 | 0.0 |
| **சிறப்பியல்பு வாய்ந்த நிதியியல் நிறுவனங்கள்** | **328.9** | **1.0** | **728.7** | **2.2** |
| சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் | 1.0 | 0.0 | 1.2 | 0.0 |
| உரிமம்பெற்ற நுண்கடன் கம்பனிகள் | 9.9 | 0.0 | 11.7 | 0.0 |
| முதனிலை வணிகர்கள் | 131.7 | 0.4 | 270.8 | 0.8 |
| பங்குத் தரகர்கள் | 24.8 | 0.1 | 24.3 | 0.1 |
| நம்பிக்கைக் கூறுகள் / நம்பிக்கை கூறு முகாமைத்துவக் கம்பனிகள் | 153.5 | 0.5 | 411.6 | 1.2 |
| சந்தை இடையீட்டாளர்கள் (ஈ) | 8.0 | 0.0 | 9.1 | 0.0 |
| துணிகர மூலதனக் கம்பனிகள் | வி/கி | வி/கி | வி/கி | வி/கி |
| **ஒப்பந்த அடிப்படையிலான சேமிப்பு நிறுவனங்கள்** | **5,320.3** | **16.9** | **5,945.5** | **17.9** |
| காப்புறுதிக் கம்பனிகள் | 947.3 | 3.0 | 1,086.9 | 3.3 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 3,491.8 | 11.1 | 3,895.1 | 11.7 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 465.0 | 1.5 | 520.5 | 1.6 |
| அனுமதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் மற்றும் சேமலாப நிதியங்கள் | 330.4 | 1.1 | 347.2 | 1.0 |
| அரச பணி சேமலாப நிதியம் | 85.9 | 0.3 | 95.8 | 0.3 |
| **மொத்தம்** | **31,389.4** | **100.0** | **33,199.8** | **100.0** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) தரவு இல்லாமையால், கூட்டுறவு கிராமிய வங்கிகளின் 2023 ஆண்டு இறுதி சொத்துத் தளம் 2023 மூன்றாம் காலாண்டு இறுதியில் உள்ள சொத்துத் தளத்திற்கு சமமாகக் கொள்ளப்பட்டது.
(ஈ) சந்தை இடையீட்டாளர்களாக பதிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் நீங்கலாக.

*மூலங்கள்:* இலங்கை மத்திய வங்கி
கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்
தொழில் திணைக்களம்
ஓய்வவூதியத் திணைக்களம்
ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை
இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு
சணச சம்மேளனம்
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு
இலங்கை நம்பிக்கைக் கூறு அமைப்பு

விகிதம் 2022இன் 31.2 சதவீதத்திலிருந்து 2023இல் 32.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. வங்கித்தொழில் துறையின் மொத்தக் கடன்பாடுகள் 2022இன் ரூ.301.4 பில்லியன் கொண்ட வீழ்ச்சியுடன் (எதிர்க்கணியமான 13.9 சதவீதம்) ஒப்பிடுகையில் 2023இல் 482.5 பில்லியனால் (எதிர்கணியமான 25.8 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சிக்கு 40.8 சதவீதம் (ஐ.அ.டொலர் 514.5 மில்லியன்) கொண்ட எதிர்க்கணியமான வளர்ச்சியை அறிக்கையிட்ட வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் காரணமாக அமைந்து நாட்டிற்கான தரமிடல் குறைக்கப்பட்டமையின் தாக்கத்தைப் பிரதிபலித்த வேளையில் 2023ஆம் ஆண்டுப்பகுதியில் ரூபாக் கடன்பாடுகள் 19.4 சதவீதத்தினால் (ரூ.256.0 பில்லியன்) குறைவடைந்தன.

**2023ஆம் ஆண்டுப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 0.6 சதவீதம் (ரூ.26.3 பில்லியன் வீழ்ச்சி) கொண்ட எதிர்க்கணியமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 15.6 சதவீதம் (ரூ.724.4 பில்லியன் அதிகரிப்பு) கொண்ட வளர்ச்சியை அறிக்கையிட்டது.** கணிசமான அதிகரிப்புக்கள் வெளிநாட்டு நாணயத்துடன் தொடர்பான ஐந்தொகைக்கு வெளியேயான கொள்வனவுகள் (ரூ.415.0 பில்லியன்), வெளிநாட்டுச் செலாவணியுடன் தொடர்பான ஐந்தொகைக்கு வெளியேயான விற்பனைகள் (ரூ.261.0 பில்லியன்), எடுப்பனவு செய்யப்படாத கொடுகடன் தொடர்கள் (ரூ.118.4 பில்லியன்) மற்றும் ஆவணக் கொடுகடன்கள் (ரூ.52.3 பில்லியன்) என்பனவற்றில்

அட்டவணை 1.21

**வங்கித்தொழில் துறையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உள்ளமைப்பு**

| வகை | 2022 (அ) | | 2023 (ஆ) | | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.பில் | பங்கு (%) | ரூ.பில் | பங்கு (%) | 2022 | 2023 |
| **சொத்துக்கள்** | | | | | | |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 11.312.5 | 58.3 | 11,017.6 | 54.0 | 5.5 | -2.6 |
| முதலீடுகள் | 5.931.7 | 30.5 | 7.314.0 | 35.8 | 19.4 | 23.3 |
| ஏனையவை (இ) | 2.172.4 | 11.2 | 2.074.4 | 10.2 | 92.1 | -4.5 |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| வைப்புக்கள் | 15.298.7 | 78.8 | 16.623.6 | 81.5 | 18.8 | 8.7 |
| கடன் பெறுகைகள் | 1.871.6 | 9.6 | 1.389.0 | 6.8 | -13.9 | -25.8 |
| முதலீட்டு நிதிகள் | 1.598.1 | 8.2 | 1.766.9 | 8.7 | 18.5 | 10.6 |
| ஏனையவை | 648.2 | 3.3 | 626.5 | 3.1 | 52.2 | -3.4 |
| **மொத்த சொத்துக்கள்/ பொறுப்புக்கள்** | **19,416.6** | **100.0** | **20,406.0** | **100.0** | **15.4** | **5.1** |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) காசு மற்றும் வங்கி மீதிகள், வைப்புகள், நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மற்றும் நிலையான சொத்துக்கள் உள்ளடங்கலாக

அவதானிக்கப்பட்ட வேளையில் உத்தரவாதங்கள் மற்றும் முறிகள் (ரூ.223.8 பில்லியன்) மற்றும் ஏற்றுக்கொள்ளல்கள் (ரூ.3.8 பில்லியன்) என்பன 2023இல் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தன.

**கட்டம் 3 கடன்களின் விகிதங்களினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு வங்கித்தொழில் துறையின் கொடுகடன் இடர்நேர்வுகள் 2023 இறுதியில் அதிகரித்த மட்டங்களில் தொடர்ந்தும் காணப்பட்டன.** வங்கித்தொழில் துறையின் கட்டம் 3 கடன்களின் விகிதங்கள் 2022 இறுதியின் 11.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2023 இறுதியில் 12.8 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு, அதிகரித்த கட்டம் 3 கடன்களும், கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளின் சுருக்கமும் முக்கிய காரணங்களாக விளங்கி துறையின் கொடுகடன் தரம் பற்றிய கரிசனைகளை எடுத்துக்காட்டுகின்றன. எனினும், கட்டம் 3 கடன்களுக்கான பெறுமதியிழப்பு, எடுப்பனவு செய்யப்படாத தொகைகள் உட்பட 18.4 சதவீதத்தினால் அதிகரித்து (ஆண்டிற்கு ஆண்டு)

வரைபடம் 1.25

**2023 இறுதியில் உள்ளவாறு வங்கித்தொழில் துறையின் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகை**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 1.22

**வங்கித்தொழில் துறையின் வைப்புக்களின் உள்ளமைப்பு**

| | 2022 (அ) | | 2023 (ஆ) | | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.பில் | பங்கு (%) | ரூ.பில் | பங்கு (%) | 2022 | 2023 |
| கேள்வி வைப்புக்கள் | 1,060.0 | 6.9 | 1,079.0 | 6.5 | 19.4 | 1.8 |
| சேமிப்பு வைப்புக்கள் | 3,713.0 | 24.3 | 4,293.0 | 25.8 | -7.4 | 15.6 |
| தவணை வைப்புக்கள் | 10,393.0 | 67.9 | 11,042.3 | 66.4 | 32.2 | 6.2 |
| ஏனைய வைப்புக்கள் | 133.2 | 0.9 | 209.3 | 1.3 | 12.0 | 57.2 |
| **மொத்த வைப்புக்கள்** | **15,299.1** | **100.0** | **16,623.6** | **100.0** | **18.8** | **8.7** |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

2022 இறுதியின் 44.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2023 இறுதியில் 49.3 சதவீதத்திற்கு கட்டம் 3 பெறுமதியிழப்பு பாதுகாப்பு விகிதம் மேம்பட்டமையினை எடுத்துக்காட்டியது.

**நியதி திரவத்தன்மை சொத்து விகிதம் மற்றும் திரவத்தன்மை காப்பு விகிதம் என்பனவற்றினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு வங்கித்தொழில் துறையின் திரவத்தன்மை 2023ஆம் ஆண்டுகாலப்பகுதியில் மேம்பட்டமைக்கு ரூபா - குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்களின் வடிவமைப்பில் திரவச் சொத்துக்களில் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சியே முக்கிய காரணமாக அமைந்தது.** நியதி திரவத்தன்மை சொத்து விகிதம் 2023 இறுதியில் 44.9 சதவீதத்திற்கு அதிகரித்து குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டிற்கு மிக மேலே தொடர்ந்தும் காணப்பட்டது. மேலும், மொத்தச் சொத்துக்களுக்கான திரவச் சொத்துக்களும் 2022 இறுதியின் 23.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2023 இறுதியில் 35.9 சதவீதத்திற்கு மேம்பட்டது. 2023ஆம் ஆண்டுப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் திரவத்தன்மை காப்பு விகிதத்தில் கணிசமான மேம்பாடொன்று அவதானிக்கப்பட்டது. ரூபா மற்றும் அனைத்து நாணய திரவத்தன்மை காப்பு விகிதம் 2023 இறுதியில் முறையே 340.9 சதவீதமாகவும் 286.4 சதவீதமாகவும் விளங்கின. மேலும், போதுமானளவு உறுதித்தன்மை வாய்ந்த நிதியிடல் மூலங்களைப் பேணுமாறு வங்கிகளைத் தேவைப்படுத்துகின்ற 2019இல் அறிமுகப்படுத்தப்பட்ட தேறிய உறுதித்தன்மை வாய்ந்த நிதியிடல் விகிதம் 2023 இறுதியில் 158.4 சதவீதமாக விளங்கி ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடான 100 சதவீதத்திற்கு மிக மேலே காணப்பட்டது.

அட்டவணை 1.23

**வங்கித்தொழில் துறையின் இலாபம்**

| விடயம் | 2022 (அ) தொகை (ரூ.பில்) | 2022 (அ) சராசரி சொத்தின் % ஆக | 2023 (ஆ) தொகை (ரூ.பில்) | 2023 (ஆ) சராசரி சொத்தின் % ஆக |
|---|---|---|---|---|
| **தேறிய வட்டி வருமானம்** | **750.8** | **4.0** | **713.8** | **3.6** |
| வட்டி வருமானம் | 2,079.4 | 11.0 | 2,609.0 | 13.0 |
| வட்டிச் செலவினம் | 1,328.6 | 7.0 | 1,895.2 | 9.4 |
| **வட்டியல்லா வருமானம்** | **280.6** | **1.5** | **206.8** | **1.0** |
| தேறிய கட்டண மற்றும் தரகு வருமானம் | 127.0 | 0.7 | 132.1 | 0.7 |
| **வட்டியல்லா செலவினம்** | **324.0** | **1.7** | **373.2** | **1.9** |
| ஊழியர் செலவுகள் | 173.2 | 0.9 | 190.0 | 0.9 |
| **கடன்களுக்கும் ஏனைய இழப்புக்களுக்குமான பெறுமதியிழப்பு** | **468.8** | **2.5** | **163.8** | **0.8** |
| **வரிக்கு முன்னரான இலாபம் (பெறுமதி சேர் வரிக்குப் பின்னரான)** | **177.8** | **0.9** | **294.4** | **1.5** |
| **வரிக்கு பின்னரான இலாபம்** | **153.8** | **0.8** | **188.9** | **0.9** |


*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

**இவ்வாண்டுப்பகுதியில் இலாபத்தன்மை மேம்பாடடைந்தமைக்கு புதிய பெறுமதியிழப்புக் கட்டணங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கிய காரணமாக அமைந்தது.** வங்கித்தொழில் துறையின் வட்டி வருமான வீதங்கள் 25.5 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் வட்டிச் செலவுகள் 2023ஆம் ஆண்டுப்பகுதியில் 42.7 சதவீதத்தினால் அதிகரித்து தேறிய வட்டி வருமானம் 4.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைய வழிவகுத்தது. இதன் விளைவாக, தேறிய வட்டி வருமானம் 2022 இறுதியில் 4.0 சதவீதத்திலிருந்து 2023 இறுதியில் 3.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வட்டியல்லாச் செலவினங்கள் ரூ.49.2 பில்லியனால் அதிகரித்தமைக்கு அலுவலர் செலவுகள் ரூ.16.8 பில்லியனால் அதிகரித்த வேளையில் கடன்கள் மற்றும் ஏனைய இழப்புக்களுக்கான பெறுமதி இழப்பு 2023ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.305.0 பில்லியனால் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். இதன் விளைவாக, வரிக்கு முன்னராக இலாபம் ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடலின்படி 2023இல் ரூ.294.4 பில்லியனாகக் காணப்பட்டது. இது, முன்னைய ஆண்டிலும் பார்க்க ரூ.116.6 பில்லியன் உயர்வானதாகக் காணப்பட்டது. வங்கித்தொழில் துறையின் வரிக்குப் பின்னரான இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 22.8 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்து 2023ஆம் ஆண்டுப்பகுதியில் 188.9 பில்லியனாகக் காணப்பட்டது. இலாபத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு வரிக்கு முன்னரான சொத்து மீதான வருவாயில் பிரதிபலிக்கப்பட்டது. இது, 2022 இறுதியிலுள்ளவாறான 1.0 சதவீதத்திலிருந்து 2023 இறுதியின் 1.5 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் வரிக்குப் பின்னரான மூலதனத்தின் மீதான வருவாய் 2022இன் 10.2 சதவீதத்திலிருந்து 2023இல் 10.6 சதவீதத்திற்கு அதிகரித்தது. மேலும், வங்கித்தொழில் துறையின் வினைத்திறன் 2022 இறுதியிலுள்ளவாறான 31.5 சதவீதத்திலிருந்து 2023 இறுதியில் 40.5 சதவீதத்திற்கு தேய்வடைந்தமைக்கு தொழிற்பாட்டுச் செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களே முக்கிய காரணமாகும்.

வரைபடம் 1.26


**வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மை விகிதங்கள்**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 1.27

**வங்கித்தொழில் துறையின் மூலதன விகிதங்கள்**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 1.24

**வங்கித்தொழில் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தின் உள்ளமைப்பு**

| விடயம் | ரூ.பில் 2022 (அ) | ரூ.பில் 2023 (ஆ) | உள்ளடக்கம் (%) 2022 (அ) | உள்ளடக்கம் (%) 2023 (ஆ) |
|---|---|---|---|---|
| **அடுக்கு I: மூலதனம்** | **1,152.0** | **1,261.6** | **100.0** | **100.0** |
| பங்கு மூலதனம் | 366.7 | 385.3 | 31.8 | 30.5 |
| நியதி ஒதுக்கு நிதிகள் | 74.3 | 81.1 | 6.4 | 6.4 |
| பிடித்து வைத்திருக்கப்பட்ட இலாபம் | 544.5 | 627.2 | 47.3 | 49.7 |
| பொது மற்றும் ஏனைய ஒதுக்குகள் | 295.2 | 312.4 | 25.6 | 24.8 |
| ஏனையவை | 67.2 | 77.2 | 5.8 | 6.1 |
| ஒழுங்குமுறைப்படுத்தல் சீராக்கங்கள் | (195.9) | (221.6) | (17.0) | (17.5) |
| **அடுக்கு II: மூலதனம்** | **277.7** | **290.2** | **100.0** | **100.0** |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள் | 35.4 | 42.4 | 12.7 | 14.6 |
| கீழ்மட்ட தவணை படுகடன் | 135.4 | 148.8 | 48.8 | 51.3 |
| பொது ஏற்பாடுகள் மற்றும் ஏனையவை | 107.3 | 99.6 | 38.6 | 34.3 |
| ஒழுங்குமுறைப்படுத்தல் சீராக்கங்கள் | (0.5) | (0.6) | (0.2) | (0.2) |
| **மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தளம்** | **1,429.6** | **1,551.8** | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

1

## சிறப்பு குறிப்பு 3
## நீடித்துநிலைத்திருக்கக்கூடிய பொருளாதார மீட்சியை ஆதரவளிக்கும் முகமாக உரிமம்பெற்ற வங்கிகளில் வியாபாரப் புத்துயிரளித்தல் பிரிவுகளை நிறுவுதல்

**பின்னணி**

அண்மைய ஆண்டுகளில் நிலவிய சவால்மிக்க பேரண்டப் பொருளாதாரச் சூழல் வியாபாரங்களின் வருமானமீட்டும் ஆற்றலைச் சீர்குலைத்து, அவை தமது கடன்களை உரிய காலத்தில் மீளச் செலுத்துவதனைப் பாதித்ததன் விளைவாக உரிமம்பெற்ற வங்கிகளின் கடன் மீளப்பெறும் செயன்முறை பலயீனப்பட்டது. 2023 இறுதியில் 12.8 சதவீதமாக சற்று முன்னேறியிருப்பினும், 2019இன் இறுதியில் 5.2 சதவீதமாகவிருந்த செயற்படாக் கடன்கள் 2023இன் மூன்றாம் காலாண்டின் இறுதியில் 13.6 சதவீததிற்கு அதிகரித்தமையானது வங்கித்தொழில் துறையின் கொடுகடன் தரம் தேய்வடைந்தமையைச் சாட்சிப்படுத்துகின்றது. இத்தகைய வியாபாரங்களுக்கு புத்துயிரளிப்பதானது பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் வேலை வாய்ப்புக்களை முன்னேற்றி தேசிய பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்குப் பங்களிக்கும்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல், கொவிட்-19 நோய்த்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடியின் போது காணப்பட்ட பாதகமான பேரண்டப் பொருளாதார நிலைமைகளின் எதிர்மறைத் தாக்கங்களின் பாதிப்பினால் தமது கடன் மீள்செலுத்தும் இயலுமை சீர்குலைந்த கடன்பாட்டாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் முகமாக இலங்கை மத்திய வங்கி பல்வேறு வழிகாட்டல்களை உரிமம்பெற்ற வங்கிகளுக்கு காலத்திற்குக் காலம் வழங்கியது. தற்போது, உரிமம்பெற்ற வங்கிகள் கொவிட்-19 இற்குப் பிந்திய புத்துயிரளித்தல் அலகுகளை நிறுவியுள்ளதோடு, இவை கடன்பாட்டாளர்களைத் தெரிவுசெய்யும் தகுதி அளவுகோல்கள், மீட்சிப் பொறிமுறைகள், கூட்டிணைக்கப்பட்ட தொழிற்படு கட்டமைப்புக்கள், மற்றும் ஆளுகைக் கட்டமைப்புக்கள் தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழிகாட்டுவதன் மூலம் அடிப்படையில் மீட்சிக்குத் தோதான கடன்பாட்டாளர்களின் மேம்பட்ட நோக்கெல்லைகளைக் கொண்ட பெரிதும் தரப்படுத்தப்பட்ட கட்டமைப்பினைக் கருத்திலெடுப்பதற்கான காலத்தேவையாகவும் உள்ளன.

பல்வேறு காரணங்களினால் பொருளாதார மந்தம் தோன்றும் போது வியாபாரப் புத்துயிரளித்தல் கட்டமைப்புக்களை ஏற்படுத்துவது என்பது பெருமளவிற்கு பல நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. நிர்வாக வழிகாட்டுதல்களுடனோ அல்லது இல்லாமலோ கடன்படுநர் மற்றும் கடன் வழங்குநர்களுக்கிடையே பேரம்பேசும் மீள்கட்டமைப்புக்கள் "நீதிமன்றத்திற்கு வெளியேயான செயற்படுதல்கள்" எனப்படுகின்றன. விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கூடிய நெகிழ்வு மற்றும் இரகசியம் பேணல், ஒப்பீட்டளவில் குறைந்த செலவு மற்றும் விரைவான நடைமுறைப்படுத்தல் என்பன நீதிமன்றத்திற்கு வெளியேயான செயற்படுதல்களின் பிரதான நன்மைகளாகும்.

மாற்றீடாக, சில நாடுகள், வழமையாக கடன் தீராற்றலற்றமைச் சட்டத்தினால் வகுக்கப்பட்ட சட்டக் கட்டமைப்புக்கு உட்பட்ட நீதித்துறை நடைமுறைகளின் ஈடுபாட்டினூடாக வியாபாரப் புத்துயிரளிக்கும் செயற்பாடுகளைச் செயற்படுத்துகின்றன.

மேற்குறிப்பிட்டவற்றைக் கருத்திற்கொண்டு, பாரதூரமான பேரண்டப் பொருளாதார நிலைமைகளால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களின் நிலையான பொருளாதார மறுமலர்ச்சிக்கு வழிவகுப்பதற்காகவும் உரிமம்பெற்ற வங்கிகளின் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களின் மீளெழுச்சிக்கான வெளிப்படைத்தன்மையுடைய மற்றும் வினைத்திறனான தீர்வுக் கொள்கைக் கட்டமைப்பினை உறுதிப்படுத்துவதற்காகவும் மத்திய வங்கியானது 2024 மாச்சில் "உரிமம்பெற்ற வங்கிகளில் வியாபார புத்துயிரளித்தல் அலகுகளை நிறுவுவதற்காக வழிகாட்டுதல்கள்" எனும் சுற்றறிக்கையை இலங்கை மத்திய வங்கி வெளியிட்டது. இச்சுற்றறிக்கையானது, ஏற்கனவே உருவாக்கப்பட்ட கொவிட்-19 இற்குப் பின்னரான புத்துயிரளித்தல் அலகுகளின் ஆளுகைக் கட்டமைப்புக்கள் மற்றும் வளங்கள், கடன்பாட்டாளர்களைத் தெரிவுசெய்யும் தகுதி அளவுகோல்கள், கூட்டிணைக்கப்பட்ட தொழிற்பாடுகளுக்கான மீட்சிப் பொறிமுறைக் கட்டமைப்பு, கணக்கீட்டுக் கரிசனைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் அறிக்கையிடல்களை மேலும், மேம்படுத்திச் செயற்படுத்தும் பரந்தளவிலான வழிகாட்டுதல்களை உள்ளடக்கியுள்ளது.

**உரிமம்பெற்ற வங்கிகளில் வியாபாரப் புத்துயிரளித்தல் அலகுகளை நிறுவுவதற்கான நோக்கங்கள்**

பேரண்டப் பொருளாதார நிலைமைகளால் வருமானம், காசுப்பாய்ச்சல் அல்லது விற்பனையில் குறைவு, வியாபார நடவடிக்கைகளில் குறைவு அல்லது தேய்வு அல்லது வியாபாரத்தின் தற்காலிக மூடுகை போன்றவற்றை எதிர்கொள்ளும் உரிமம்பெற்ற வங்கிகளின் செயற்படு அல்லது செயற்படாக் கடன்பாட்டாளர்களை இனங்கண்டு உதவுவது வியாபாரப் புத்துயிரளித்தல் அலகுகளின் நோக்கமாகும்.

இந்த அலகு, உண்மையான நிதிப் பிரச்சனைகளை அல்லது சாத்தியப்படக்கூடிய நிதிப் பிரச்சனைகளை எதிர்கொண்டாலும் அடிப்படையில் மீண்டெழக்கூடிய வியாபாரங்களின் மீளெழுச்சி, அத்தகையவற்றிற்கு நன்மைகளை அளிக்கும் விருப்பம், அத்தகைய வியாபார மீளெழுச்சிகளுக்கு வழிகாட்டுதல், தேசிய பொருளாதாரத்தின் மேம்பாட்டுக்கும் அபிவிருத்திக்கும் பங்களிப்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**வியாபாரப் புத்துயிரளித்தல் அலகுகளின் ஆளுகை மற்றும் செயற்பாட்டுக் கட்டமைப்பு**

வங்கிகளின் கடன்பாட்டாளர்களுடைய வியாபாரங்களை மீளெழுச்சி செய்யும் நோக்குடன் உண்மையான அல்லது சாத்தியப்பாடான நிதிப் பிரச்சனைகளை எதிர்கொண்டாலும் அடிப்படையில் மீண்டெழக்கூடிய கடன்பாட்டாளர்களின்

மீளெழுச்சி மற்றும் புனரமைப்புக் கொள்கைகளை உரிமம்பெற்ற வங்கிகள் உருவாக்கி அவற்றை ஆகக் குறைந்தது ஆண்டுக்கொரு தடவையாவது மீள்பார்வை செய்து இற்றைப்படுத்த வேண்டும்.

ஒரு வியாபாரப் புத்துயிரளித்தல் பிரிவானது அதன் கீழ்வரும் கடன்களுக்கான தொடர்புடைய தகவல் மற்றும் அமைப்புப் பாவனைகளின் பெறுகையைத் திறம்பட உறுதிப்படுத்துவதற்காக கடன் உருவாக்கம், சட்டம், இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் கடன் நடைமுறைப்படுத்தல் அலகுகளுடன் ஒழுங்கமைப்போரும் சுதந்திரமாகவும் தொழிற்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், உரிமம்பெற்ற வங்கிகள் வியாபாரப் புத்துயிரளித்தல் அலகுகளை நிறுவத் தேவையான மனித மற்றும் ஏனைய வளங்களை வழங்குவதோடு, தீவு முழுமையாகவும் புவியியல் ரீதியாக பரந்தளவு செயற்பாடுகளைக் கொண்டுள்ள உரிமம்பெற்ற வங்கிகள், வினைத்திறனின் அடிப்படையில், பிராந்திய ரீதியாக அலகுகளை உருவாக்குவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றன.

புத்துயிரளித்தல் மதிப்பீட்டு முறைமைகள் வினைத்திறன் மிக்கதும் வெளிப்படைத்தன்மையுடையதாகவும் இருக்க வேண்டியிருப்பதனால் வியாபாரப் புத்துயிரளித்தல் செயன்முறையின் கீழ் அடிப்படை வளம்பெறத்தக்க வியாபார மதிப்பீட்டினை மேற்கொள்ளுதல் மிகவும் கடினமான ஒரு பணியாகவே இருக்கும். அடிப்படை வளம்பெறத்தக்க வியாபார மதிப்பீட்டின் கீழ், முன்மதியின் அடிப்படையில் அளவுசார் மற்றும் அளவுசாரா குறிகாட்டிகள் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். இக்குறிகாட்டிகளான இலாபத்தன்மை, முடுக்கி, திரவத்தன்மை, பொறுப்புக்களின் முதிர்வுக்காலப் போக்கு மற்றும் ஏனைய பொருத்தமான அளவுசாரா அளவுகோல்கள் மதிப்பீட்டுச் செயற்பாட்டில் உள்ளடக்கப்படலாம். கடன்பெறுநரின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் சாத்தியமாக நீடிக்கக்கூடிய புத்துயிரளித்தல் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். எவ்வாறாயினும், நியாயப்படுத்தக்கூடிய காரணங்களையுடைய கடன்பெறுநர்கள் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை வைத்திருக்காவிடில், வங்கியானது விருப்புரிமையில் பொருத்தமான மற்றும் நம்பகத்தன்மையின் மூலங்களின் மூலம் கிடைக்கக்கூடிய தகவல்களையும் உரிமம்பெற்ற வங்கிகள் பயன்படுத்தலாம். இதற்கமைய, உரிமம்பெற்ற வங்கிகள் கடன்பெறுநர்கள் ஒத்துழைப்புடையவர்களாக இருக்கிறார்கள் என்பதனை உறுதிப்படுத்துவது உரிமம்பெற்ற வங்கிகளுக்கு முக்கியமாக இருப்பதனால் உரிமம்பெற்ற வங்கிகள் புத்துயிரளித்தலுக்கு அவ்வகையான கடன்பெறுநர்களை மட்டும் கருத்திற்கொள்ள முடியும்.

மேலும், உரிமம்பெற்ற வங்கிகள் பொறுப்புக்கூறுதல் மற்றும் வெளிப்படைத்தன்மையினை மேம்படுத்துவதற்கு அவர்களின் ஆண்டறிக்கை அல்லது ஏதாவது பிரசுரிக்கப்படுகின்ற அறிக்கைகளில் வங்கிகளின் ஆளுமைக் கட்டமைப்பு, செயற்பாட்டு முறைமைகள் மற்றும் புத்துயிரளித்தல் மதிப்பீட்டு முறைமைகளை வெளிப்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றன.

**புத்துயிரளித்தல் பொறிமுறை: நிதி மற்றும் செயற்பாடு**

வியாபாரப் பொறிமுறை: பிரிவு அழுத்தத்திற்குட்பட்ட ஆனால் வளம்பெறத்தக்க வியாபாரங்களைப் புத்துயிரளிப்பதற்கு நிதியியல் மற்றும் அல்லது செயற்பாட்டு மறுகட்டமைப்பு உபகரணங்கள் மற்றும் நுட்பங்கள் அல்லது இரண்டும் சேர்ந்த கலவையினைப் பயன்படுத்தலாம்.

- நிதியியல் மறுகட்டமைப்பு உபகரணங்களானது கடன் மன்னிப்பு, முதல் மட்டும் வட்டிக் கொடுப்பனவுகளுக்கான தயவுக்காலம், வட்டி வீதங்களைச் சரிசெய்தல், முதிர்வுக்கால நீடிப்பு உள்ளடங்கலாக கடன் மறுஅட்டவணைப்படுத்தல் மற்றும் இடைக்கால நிதியிடல் மற்றும் வெளியேறுதல், நிதியியல் உள்ளடங்கலாக புதிய நிதியினை வழங்குதல் போன்றவற்றை உள்ளடக்கும்.

- செயற்பாட்டு மறுகட்டமைப்பின் கீழ், வர்த்தக ரீதியான வளம்பெறத்தக்க வியாபாரங்களை கட்டியெழுப்புவதற்கு வியாபாரத் தொழிற்பாடுகள் அல்லது சொத்துக்களில் அடிப்படை மாற்றங்களைச் செய்வதற்கு முன்மொழிதல், ஒரு புதிய வியாபாரத் திட்டத்தினை அல்லது தந்திரோபாயத்தினை விருத்தி செய்தல் மற்றும் அவ்வியாபாரங்களில் செயற்பாட்டு வினைத்திறன் மற்றும் இலாபத்தன்மையினை மேம்படுத்தல், காசு முகாமைத்துவ முறைமையினை மேம்படுத்தல், விலைத் தந்திரோபாயத்தினை மீளாய்வு செய்தல் மற்றும் வாடிக்கையாளர்களைத் தக்கவைத்தல் மற்றும்/ அல்லது புதிய வாடிக்கையாளர்களைச் சேர்த்துக் கொள்ளல், தந்திரோபாயங்களை மீளாய்வு செய்தல் போன்றவற்றை வியாபாரப் புத்துயிரளித்தல் பிரிவு கருத்திற்கொள்ளலாம். மேலும், இப்பிரிவானது மறுவாழ்வு முன்னெடுப்புக்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துவதுடன் சாத்தியமான முதலீட்டாளர்களை அடைவதற்காக கடன் ஆலோசனை மற்றும் வியாபார ஆலோசனைச் சேவைகளையும் வழங்கலாம்.

**நிறுவன செயற்பாட்டிற்கான ஒரு கட்டமைப்பு**

ஒரு கடன்பெறுநர் மற்றும் கடன் வழங்கப்படுதல்களான பல்வேறு வங்கிகளுக்கிடையிலான பரஸ்பரத்துடன் இணங்கக்கூடிய வியாபாரப் புத்துயிரளித்தல் திட்டத்திற்கான ஒரு மேலோட்டமான கட்டமைப்பாக வியாபாரப் புத்துயிரளித்தல் செய்முறையின் கீழ் ஒரு நிறுவனச் செயற்பாட்டுக் கட்டமைப்பு ஒரு புதிய பொறிமுறையாக அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது. தொடர்புபட்டவர்களுக்கிடையே ஒரு பரஸ்பர இணக்கம் காணப்படுவதனால், நீதிமன்றத் தலையீடு தேவைப்படமாட்டாது. நிறுவனச் செயற்பாட்டுக் கட்டமைப்பினைக் கிடைப்பதற்கு நாடுகின்ற தகுதியான நிறுவனக் கடன்பெறுநர்கள் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளுக்கிடையில் செயற்பாட்டு இணக்கப்பாட்டிற்கான பேச்சுவார்த்தையினை உள்ளடக்கக்கூடிய நிறுவன செயற்பாட்டுக் கட்டமைப்புக்கான பொதுவான

1

ஒரு மாதிரியினை விருத்தி செய்வதற்கு கூட்டு அணுகுமுறையினை உரிமம்பெற்ற வங்கிகள் உருவாக்க முடியும். தற்போது உரிமம்பெற்ற வங்கிகளினால் பொதுவான மாதிரியொன்று விருத்தி செய்யப்படுகின்றது. பரஸ்பர இணக்கப்பாட்டு நிபந்தனைகளின் பேச்சுவார்த்தை செயற்பாட்டின் மூலம் எழக்கூடிய சாத்தியமான சிக்கல்களை கவனத்தில் கொள்வதுடன் மற்றும் ஏற்படுகின்ற செலவுகளையும் கருத்திற்கொண்டு, இக்கட்டமைப்பானது நிறுவன கடன்பெறுநர்களுக்காக சிபாரிசு செய்யப்படுகிறது.

**முன்னோக்கிப் பயணித்தல்**

உரிமம்பெற்ற வங்கிகளின் முன்மொழியப்பட்ட வியாபார புத்துயிரளித்தல் பொறிமுறையின் பிரகாரமும் உரிமம்பெற்ற வங்கிகளின் வழிகாட்டல்களின் பிரகாரமும் வியாபாரச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அழுத்தத்திற்குள்ளான கடன்பெறுநர்களின் வியாபாரங்களுக்குப் புத்துயிரளிக்கக் கூடியதாக இருப்பதுடன் மேம்படுத்தப்பட்ட காசுப்பாய்ச்சலினை செயற்படாக் கடன்களின் மீளச்செலுத்துகைக்கு பயன்படுத்தக் கூடியதாக இருக்கும் என்பதுடன் இத்தால் வங்கித்தொழில் துறையின் சொத்தின் தரம் முன்னேற்றமடையும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், நாட்டின் பேரண்டப் பொருளாதாரச் சூழலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்துடன் முக்கியமாக நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் போன்ற வியாபாரங்களின் புத்துயிர்ப்பு நீடித்துநிலைத்திருக்கக்கூடிய பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புச் சந்தர்ப்பங்களை ஊக்குவிக்கும் என்பதுடன் தேசிய பொருளாதாரத்தின் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்யும். மேலதிகமாக, மாற்று அளவீடுகளில், அதாவது தேசிய கடன் உத்தரவாத நிறுவனத்தினை நிறுவுதல், பாதுகாப்பான கொடுக்கல்வாங்கல்களை சட்டத்தினூடாக சட்டக் கட்டமைப்பினை மேம்படுத்தலினை அமுல்படுத்தல் மற்றும் பாரியளவில் வியாபாரங்களினை உள்ளடக்குவதற்காக நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் வரைவிலக்கணத்தினை விரிவுபடுத்தல் போன்றன முன்னெடுத்துச் செல்லப்படுவது பாதிக்கப்பட்ட வியாபாரங்களை புத்துயிரளிப்பதற்கு உகந்ததாக இருக்குமென்பதுடன் அதன் பிரகாரம் பொருளாதாரச் செயற்பாடுகள் முன்னேற்றிச் செல்வதற்கும் பங்களிப்புச் செய்யும். [1]

குறிப்புக்கள்

1. உரிமம்பெற்ற வங்கிகள் என்பது 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க திருத்தியமைக்கப்பட்ட வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த இரண்டு வகை வங்கிகளையும் உள்ளடக்குகின்றன.
2. ஒப்பந்த அடிப்படையில் தவணைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டிய வாடிக்கையாளர்கள் 90 நாட்களுக்கு அதிகமாக கட்டணத்தைச் செலுத்தத்தவறின் அல்லது அனுமதியளிக்கப்படட தொகையினை விட அதிகமாக தொகையினை 90 நாட்களுக்கு மேலதிக நிலுவையாகக் கொண்டிருப்பின் அல்லது இலங்கை கணக்கீட்டு நியமம் 9இன் கீழ் ஏதாவது கடன் வசதிகள் தரம் 3 கடன் வசதிகளாக வகைப்படுத்தப்பட்டிருப்பின் அவை செயற்படாக் கடன் எனக் கொள்ளப்படும் (சாத்தியமான இடர்நேர்வு மற்றும் ஆரம்பத்தில் சேதமடைந்த நிலைமையின் அடிப்படையில்).

**2023 ஆண்டுப்பகுதியில் வங்கித்தொழில் துறை குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளுடன் பெருமளவிற்கு இணங்கிக் கொண்டது.** இவ்வாண்டுப்பகுதியில் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் வீழ்ச்சியடைந்தமையினால் துறையின் மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் 2022 உடன் ஒப்பிடுகையில் 2023 இறுதியில் மேம்பாடொன்றினைப் பதிவுசெய்தமைக்கு ஒட்டுமொத்தக் கொடுகடன் சுருக்கமும் அரச பிணையங்களில் அதிகரித்த முதலீடுகளும் இலங்கை ரூபாவின் உயர்வும் முக்கிய காரணங்களாக அமைந்தன. சவால்மிக்க வியாபார நிலைமைகளிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வுகளிலிருந்தும் வெளிநாட்டு அரச படுகடன் மறுசீரமைப்பின் காரணமாக ஏற்படும் தாக்கத்திலிருந்தும் தோன்றுகின்ற இடர்நேர்வுகளின் காரணமாக ஏற்படக்கூடிய சாத்தியமான இழப்புக்களை ஈர்த்துக் கொள்வதற்காக உயர்தரத்திலான மூலதன தாங்கிருப்புக்களை திரட்டுவதற்கு வங்கிகள் ஊக்குவிக்கப்பட்டன. இதன் விளைவாக, 2023ஆம் ஆண்டுப்பகுதியில் இலாபங்களைப் பிடித்துவைத்தலூடாகவும் (ரூ.82.7 பில்லியன்) புதிய பங்குவழங்கல்களூடாகவும் (ரூ.18.6 பில்லியன்) ஒதுக்குகளை அதிகரித்ததனூடாகவும் (ரூ.17.2 பில்லியன்) வங்கிகள் அடுக்கு I மூலதனத்தினை அதிகரித்தன. வங்கித்தொழில் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம் இவ்வாண்டுப்பகுதியில் 8.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியை அறிக்கையிட்டது இதில் அடுக்கு I மூலதனத்தனத்தில் அதிகரிப்பு 89.7 சதவீதத்திற்குப் பங்களித்த வேளையில் வங்கித்தொழில் துறை அதன் அடுக்கு II மூலதனத்தினை துணைத் தொகுதிக் கடன்களை வழங்கியதனூடாக அதிகரித்தது.

## 1.5.2. வங்கியில்லா நிதியியல் நிறுவனங்கள் துறை

### உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்


**மோசமான பொருளாதார நிலைமைகளிலிருந்து தோன்றுகின்ற சவால்களுக்கு மத்தியில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறை போதுமான மூலதனம் மற்றும் திரவத்தன்மை தாங்கிருப்புக்களினால் ஆண்டு முழுவதும் தாக்குப்பிடிக்கும் தன்மையினைக் கொண்டிருந்தது.** இத்துறை சொத்துக்கள், வைப்புத்

தளம் மற்றும் இலாபத்தன்மை நியதிகளில் வளர்ச்சியைப் பதிவுசெய்தது. எனினும், துறையின் சொத்துக்களின் தரம் கட்டம் 3 கடன்கள் அதிகரித்தமையினால் பிரதிபலிக்கப்பட்டவாறு தேய்வடைந்தது. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறை 33 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளை உள்ளடக்கி 2023[23] இறுதியிலுள்ளவாறு மொத்தச் சொத்துக்களில் 5.1 சதவீதத்திற்கு வகைகூறியது. 1,827 கிளைகளைக் கொண்டிருந்ததுடன் இதில் 1,198 கிளைகள் (65.6 சதவீதம்) மேல் மாகாணத்திற்கு வெளியே அமையப் பெற்றிருந்தன. துறையின் சொத்துத் தளம் 5.1 சதவீதம் (ரூ.81.8 பில்லியன்) கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்து 2022இன் 10.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2023 இறுதியளவில் ரூ.1,692.0 பில்லியனை அடைந்தது. இதற்கு, அரச பிணையங்களில் ஏற்பட்ட அதிகரித்த முதலீடுகளின் காரணமாக முதலீட்டுச் சொத்துப்பட்டியல் கணிசமாக அதிகரித்தமை முக்கிய தூண்டுதலாக அமைந்தது.

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறையின் மொத்தச் சொத்துக்களில் 68.6 சதவீதத்திற்கு கடன்களும் முற்பணங்களும் வகைகூறின.** 2023ஆம் ஆண்டுப்பகுதியில் துறையின் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சொத்துப்பட்டியல் 3.2 சதவீதம் கொண்ட சுருக்கத்தினைப் (ரூ.38.0 பில்லியன்) பதிவுசெய்து 2022இன் 7.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ரூ.1,160.4 பில்லியனாக விளங்கியது. நிதிக் குத்தகைகள், துறையின் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சொத்துப்பட்டியலில் ஆதிக்கம் செலுத்தியதுடன் 2022 இறுதியின் 41.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2023 இறுதியளவில் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் 41.5 சதவீதத்திற்கு வகைகூறியது. ஊர்திகளை உள்ளடக்கிய ஏனைய பிணையிடப்பட்ட கடன்கள் 2022 இறுதியின் 33.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2023 இறுதியளவில் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களில் 32.5 சதவீதத்திற்கு வகைகூறியது. தங்கத்திற்கு எதிரான கடன்கள் மற்றம் வைப்புக்களுக்கெதிரான கடன்களும் இவ்வாண்டுப்பகுதியில் முறையே 4.7 சதவீதத்தினாலும் 3.2 சதவீதத்தினாலும் சுருக்கமடைந்தன. அதேவேளை, வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான காசு மற்றும் நிலுவைகளை முக்கியமாக உள்ளடக்கிய ஏனைய சொத்துக்கள் 2022இன் 23.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2023இல் 3.2 சதவீதத்தினால் அதிகரித்தது.

23 ஈரிஜ பினான்ஸ் லிமிடெட் நீங்கலாக (கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றம் ஈரிஜ பினான்ஸ் லிமிடெட்டினைக் கலைப்பது நீதிமன்ற மேற்பார்வைக்குட்பட்டு 2023 திசெம்பர் 15ஆம் நாளன்று இடம்பெறும் எனக் கட்டளையிட்டது)

வரைபடம் 1.28
2022 மற்றும் 2023 இற்கான சாதனங்கள் வாரியான கடன்கள் மற்றும் முற்பணங்கள் (மொத்தம்)




அச்சிடப்பட்ட வடிவத்தில் காணப்பட்ட பெயரிடல் பிழை காரணமாக வரைபடம் 1.28 மாற்றப்பட்டுள்ளது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறையின் சொத்துக்களின் தரம் 2022 இறுதியின் 17.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2023 இறுதியில் 17.8 சதவீதத்தினால் உயர்வடைந்த மொத்தக் கட்டம் 3 கடன் விகிதத்தினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு தேய்வடைந்தது.** கட்டம் 3 கடன்களின் வகைப்படுத்தலைப் பொறுத்தவரையில் கட்டம் 3 கடன்களின் வகைப்படுத்தலுக்கான உரிய காலம் கடந்த பின்னர் 120 நாட்கள் கொண்ட காலப்பகுதியினைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்பட்ட உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் 2023 ஏப்பிறல் 01 இலிருந்து 120 நாட்கள் கொண்ட முன்னைய வகைப்படுத்தலுக்குப் பதிலாக 90 நாட்களுக்கு அதனை மட்டுப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. அதேவேளை, துறை 2023 இறுதியிலுள்ளவாறு கட்டம் 3 கடன்களுக்காக 32.5 சதவீதம் கொண்ட பெறுமதி இழப்பு காப்பு வீதமொன்றினை அறிவித்தது. இதற்கமைய, தேறிய கட்டம் 3 கடன்களின் விகிதம் 2022 இறுதியின் 12.3 சதவீதத்திலிருந்து 2023 இறுதியில் 12.0 சதவீதத்திற்கு மேம்பட்டது.

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறையின் வரிக்குப் பின்னரான இலாபம் தேறிய வட்டி வருமானமும் தேறிய வட்டியல்லா வருமானமும் அதிகரித்தமையின் காரணமாக 2022இன் ரூ.42.8 பில்லியனிலிருந்து 2023இல் 47.7 பில்லியனுக்கு 11.3 சதவீதத்தால் அதிகரித்தது.** இலாபத்தன்மையில் ஏற்பட்ட

அதிகரிப்பு, சொத்துக்கள் மீதான வருவாய் 2022இன் 3.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2023இல் 4.3 சதவீதத்திற்கு அதிகரித்தமையில் பிரதிபலிக்கப்பட்டது. எனினும், துறையின் மூலதனம் மீதான வருவாய் 2022இன் 12.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2023இல் 12.4 சதவீதத்திற்கு சிறிதளவால் குறைவடைந்தமைக்கு பங்குரிமை மூலதனத்தில் ஏற்பட்ட ஒப்பீட்டு ரீதியிலான உயர்ந்த அதிகரிப்பே காரணமாகும். வருமானத்திற்கான செலவு விகிதம் 2022இன் 79.9 சதவீதத்திலிருந்து 2023இல் 81.1 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறையின் மூலதனத் தளம் 2022 இறுதியின் பதிவுசெய்யப்பட்ட ரூ.317.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 இறுதியில் ரூ.329.0 பில்லியனுக்கு 3.9 சதவீதத்தினால் (ரூ.12.3 பில்லியன்) சிறிதளவிற்கு அதிகரித்தது.** துறையின் மைய மூலதனம் மற்றும் மொத்த மூலதன விகிதங்கள் 2022 இறுதியின் முறையே 20.6 சதவீதம் மற்றும் 22.0 சதவீதங்களிலிருந்து 2023 இறுதியில் முறையே 21.1 சதவீதத்திற்கும் 22.3 சதவீதத்திற்கும் அதிகரித்தன. எனினும், 6 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்[24] குறைந்தபட்ச மைய மூலதனத் தேவைப்பாடுகள் அத்துடன்/ அல்லது மூலதனப் போதுமாந்தன்மை தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகவில்லை.

**கூட்டு மொத்த அடிப்படையில், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறை 2023ஆம் ஆண்டுப்பகுதியில் திரவத்தன்மையினைக் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டு மட்டங்களுக்கு மிக மேலேயே பேணின.** துறையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள ஒட்டுமொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் திரவத்தன்மைச் சொத்துக்கள் 2023 இறுதியில் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச தேவைப்பாடான ரூ.103.4 பில்லியனுக்கெதிராக ரூ.254.9 பில்லியனாக விளங்கி 2022 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.86.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 இறுதியில் ரூ.151.5 பில்லியன் கொண்ட திரவத்தன்மை மிகையைப் பதிவுசெய்தது.

**வாடிக்கையாளர் வைப்புக்கள் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறையில் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி 55.3 சதவீதத்திற்கு வகைகூறின.** வைப்புக்கள் ரூ.935.3 பில்லியனுக்கு 8.2 சதவீதத்தினால் (ரூ.70.8 பில்லியனால்) அதிகரித்த வேளையில் கடன்பாடுகள் 2023இல் ரூ.264.6 பில்லியனுக்கு 17.9 சதவீதத்தினால் (ரூ.57.8 பில்லியன்) வீழ்ச்சியடைந்தன.

## சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனி

**திசெம்பர் 2023இன் இறுதியில், ஒரேயொரு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனி ரூ.1.2 பில்லியன் சொத்துத் தளத்துடனும் ரூ.0.7 பில்லியன் கொண்ட கடன்கள் மற்றும் முற்பணங்களுடனும் காணப்பட்டது.** இதன் மொத்த மற்றும் தேறிய கட்டம் 3 கடன்களின் விகிதம் முறையே 57.8 சதவீதமாகவும் 33.6 சதவீதமாகவும் காணப்பட்டன. இச்சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியின் வரிக்குப் பின்னரான இலாபம் 2022இன் ரூ.1.1 பில்லியனிலிருந்து 94.3 சதவீதத்தினால் 2023இல் ரூ.0.1 பில்லியனுக்கு குறைவடைந்தமைக்கு தேறிய வட்டி வருமானம் குறைவடைந்தமையே காரணமாகும்.

## அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர் கம்பனிகள்

**2023 இறுதியில், 5 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும்[25] 5 முதனிலை வணிகர் கம்பனிகளும்[26] அரச பிணையங்கள் சந்தையில் முதனிலை வணிகர்களாகச் செயற்படுகின்றன.** முதனிலை வணிகர் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்கள் 2022இன் ரூ.131.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023இல் ரூ.270.8 பில்லியனுக்கு 105.7 சதவீதத்தினால் அதிகரித்தன. அரச பிணையங்களின் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியல் 2023 இறுதியில் ரூ.261.9 பில்லியனாக விளங்கியது. இது 2022இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.126.1 பில்லியனிலிருந்து 107.7 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.

**முதனிலை வணிகர் கம்பனிகள் 2022 காலப்பகுதியில் ரூ.1.7 பில்லியன் கொண்ட வரிக்குப் பின்னரான இலாபத்துடன் ஒப்பிடுகையில் 2023இல் ரூ.35.8**

24 குறைந்தபட்ச மைய மூலதனத் தேவைப்பாடுகள் அத்துடன்/ அல்லது மூலதனப் போதுமாந்தன்மை தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகாத உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மீது வைப்பு உச்ச எல்லை, கடன்வழங்கல் உச்ச எல்லை, புதிய வைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதனை மற்றும் புதிய கடன்களை வழங்குதலை முடக்கி வைத்தல் போன்ற ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

25 பான்ஏசியா பாங்கிங் கோப்பரேஷன் நீங்கலாக, (அரச பிணையங்களின் முதலாந்தர ஏலங்களில் பங்குபற்றுவது 2017.08.15 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இடைநிறுத்தப்பட்டது)

26 ஏர்னஸ்ட் செக்குறிட்டீஸ் பிஎல்சி (முதலாந்தர ஏலங்களில் அரச பிணையங்களில் பங்கேற்பது 2017.07.24 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தடைசெய்யப்பட்டது. கடன் வழங்கியவரை கலைத்துவிடுவது என்பது பிணையுறுதியற்ற முதலீட்டாளர்களிரொருவரினால் வழக்குத் தொடுக்கப்பட்டதுடன் 2022.06.17 அன்று கலைத்துவிடும் கட்டளை நீதிமன்றத்தினால் வழங்கப்படுகிறது. எது எவ்வாறாயினும் கலைத்துவிடும் வழக்கு, ஏனைய சட்ட ரீதியான விசாரணைகளின் காரணமாக நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ளன) மற்றும் பேர்பேஜ்ஜூவல் றெசறீஸ் லிமிடெட் நீங்கலாக (வியாபாரம் ஆரம்பத்தில் 2017.07.06 அன்று இடைநிறுத்தப்பட்டதுடன் 2024.01.05 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மேலும் 6 மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது.)

**பில்லியன் கொண்ட வரிக்குப் பின்னரான இலாபத்தினைப் பதிவுசெய்தமைக்கு வட்டி வருமானம், மூலதன இலாபங்களில் ஏற்பட்ட அதிகரிப்பும் அதிகரித்த மீள்மதிப்பீட்டு இலாபங்களும் காரணங்களாயின.** முதனிலை வணிகர் கம்பனிகளின் சொத்துக்கள் மீதான வருமானம் மற்றும் பங்குரிமை மீதான வருமானம் 2022இல் பதிவுசெய்யப்பட்ட முறையே 3 சதவீதம் மற்றும் 19.9 சதவீதங்களிலிருந்து 2023 இறுதியில் முறையே 25.7 சதவீதத்திற்கும் 139.3 சதவீதத்திற்கும் உயர்வடைந்தன. முதனிலை வணிகர் கம்பனிகளின் மூலதனம் 142.4 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு இவ்வாண்டுப்பகுதியில் உழைக்கப்பட்ட இலாபமே முக்கிய காரணமாகும். முதனிலை வணிகர் கம்பனிகளின் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் குறைந்தபட்ச தேவைப்பாடான 10 சதவீதத்திற்கு மேலே காணப்பட்டமைக்கிடையிலும் விகிதத்தில் காணப்பட்ட அளவு 2022 இறுதியில் அறிக்கையிடப்பட்ட 23.2 சதவீதத்திலிருந்து 2023 இறுதியில் 22.3 சதவீதத்திற்கு குறைவடைந்தது.

## உரிமம்பெற்ற நுண்பாகநிதிக் கம்பனிகள்

**உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் துறை 4 கம்பனிகளை உள்ளடக்கியிருப்பதுடன் அதன் சொத்துத் தளத்தில் 18.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியை அறிக்கையிட்டு 2023 இறுதியில் ரூ.11.7 பில்லியனை அடைந்தது.** மொத்தச் சொத்துக்களில் மிகப்பெரும் பங்கிற்கு நுண்பாகக் கடன்கள் வகைகூறி, 2022 இறுதியின் ரூ.7.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 இறுதியில் 8.9 பில்லியனாகக் காணப்பட்டு 8.4 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. துறையின் மொத்த வைப்புத் தளம் 2022இன் ரூ.648.3 மில்லியனிலிருந்து 2023இல் ரூ.812.8 மில்லியனுக்கு 31.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. துறையின் மைய மூலதன மட்டம் ரூ.2.6 பில்லியனாக விளங்கியதுடன் அனைத்து உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளும் குறைந்தபட்ச முன்மதியுடைய ஒழுங்குவிதிகளுடன் இணங்கியே வருகின்றன.

## கூறுநம்பிக்கைகள்

**2023 இறுதியில் தொழிற்பாட்டிலிருந்த கூறுநம்பிக்கைகளின் எண்ணிக்கை 2022இல் அறிவிக்கப்பட்ட 80 இலிருந்து 84இற்கு அதிகரித்து மொத்தச் சொத்துக்களில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.** கூறுநம்பிக்கை முகாமைத்துவ கம்பனிகளின் எண்ணிக்கை 2022 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2023 இறுதியில் 16 ஆக மாற்றமின்றிக் காணப்பட்டது. கூறுநம்பிக்கைகளின் நிதிகள் பணச் சந்தை நிதியங்கள் மற்றும் வருமான நிதியங்களினால் ஆதிக்கம் செலுத்தப்பட்டதுடன் இரண்டும் கூட்டாக கூறுநம்பிக்கை தொழில்துறையின் 84.9 சதவீதத்திற்கு வகைகூறின. கூறுநம்பிக்கைகளின் மொத்தச் சொத்துக்கள் 2022 இறுதியின் ரூ.150 பில்லியனிலிருந்து 2023 இறுதியில் ரூ.406.5 பில்லியனுக்கு 171.0 சதவீதத்தினால் கணிசமானளவிற்கு அதிகரித்தது. வழங்கப்பட்ட கூறுகளின் எண்ணிக்கையும் 2022 இறுதியின் அறிவிக்கப்பட்ட 6,283 மில்லியனிலிருந்து 2023 இறுதியில் 13,371 மில்லியனுக்கு அதிகரித்தது. மேலும், கூறுநம்பிக்கை உடமையாளர்களின் மொத்த எண்ணிக்கை 2022 இறுதியிலுள்ளவாறு 67,912 இலிருந்து 2023 இறுதியில் 93,450 இற்கு அதிகரித்தது. மொத்தச் சொத்துக்களின் சதவீதமாக கூறுநம்பிக்கைகளினால் அரச பிணையங்களில் செய்யப்பட்ட முதலீடுகளின் பங்கு 2022 இறுதியில் அறிவிக்கப்பட்ட 56.7 சதவீதத்திலிருந்து 2023 இறுதியில் 77.2 சதவீதத்திற்கு கணிசமாக அதிகரித்தது. அதேவேளை, மூலதனம் மீதான முதலீடுகள் கூறுநம்பிக்கைச் சொத்துக்களின் பங்காக 2022 இறுதியின் 7.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2023 இறுதியில் 4.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

## காப்புறுதித் துறை

**நீண்ட கால மற்றும் பொதுவான துணைத் துறைகளை உள்ளடக்கிய காப்புறுதித் துறை 2023 காலப்பகுதியில் கலப்பான செயலாற்றத்தினைக் காட்டியது.** துறையானது 2023 இறுதியிலிருந்தவாறு தொழிற்பாட்டிலுள்ள 28 கம்பனிகளை உள்ளடக்கியிருந்ததுடன் இதில் 14 பிரத்தியேகமான நீண்ட காலக் காப்புறுதிக் கம்பனிகளாகவும் 12 பிரத்தியேகமான பொதுக் காப்புறுதிக் கம்பனிகளாகவும் தொழிற்பட்ட வேளையில் 2 நீண்ட காலம் மற்றும் பொதுவான காப்புறுதி வியாபாரங்களாகக் காணப்பட்டன. மேலும், 78 காப்புறுதித் தரகுக் கம்பனிகள் 2023 இறுதியில் தொழிற்பாட்டிலிருந்தன. காப்புறுதித் துறையானது 2022 உடன் ஒப்பிடுகையில் 2023இல் அதிகரித்த மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணத்தினைப் பதிவுசெய்தது.

இவ்வாண்டுப்பகுதியில் நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதித் துறையிலுள்ள மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 12.9 சதவீதத்தினாலும் 3.4 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன. வருடாந்த மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணத்தினால் அளவிடப்பட்ட நாட்டின் காப்புறுதி நுழைவு மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2023 இறுதியில் 1.0 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டது. நீண்ட காலக் காப்புறுதித் துறையின் சொத்துக்கள் விரிவடைந்த வேளையில் பொதுவான காப்புறுதித் துறையின் சொத்துக்கள் சுருக்கமடைந்தன. நீண்ட காலக் காப்புறுதித் துறையின் சொத்து வளர்ச்சி 22.6 சதவீதமாக (ஆண்டிற்கு ஆண்டு) காணப்பட்ட வேளையில் பொதுக் காப்புறுதியின் சொத்துக்கள் 2023 இறுதியில் 4.2 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) சுருக்கமடைந்தன. எனினும், அதிகளவான நீண்ட காலக் காப்புறுதித் துறையின் மொத்தச் சொத்துக்களின் தளத்தினைக் கவனத்திற்கொள்கையில் மொத்தக் காப்புறுதித் துறைச் சொத்துக்கள் 2023இல் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 14.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. பொதுவான காப்புறுதித் துறையின் இலாபத்தன்மை 2022 உடன் ஒப்பிடுகையில் 2023இல் குறைவாகக் காணப்பட்டது. நீண்ட காலக் காப்புறுதித் துறையின் வரிக்கு முன்னரான இலாபம் 2022 உடன் ஒப்பிடுகையில் 2023இல் 30.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. எனினும், பொதுவான காப்புறுதித் துறையின் வரிக்கு முன்னரான இலாபம் இக்காலப்பகுதியில் 25.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதேபோன்று, 2023இல் பொதுக் காப்புறுதியின் சொத்துக்கள் மீதான வருவாயும் உரிமை மூலதனத்தின் மீதான வருவாயும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தேய்வடைந்த வேளையில் நீண்ட காலக் காப்புறுதித் துறைக்கான இதே குறிகாட்டிகள் மேம்பட்டன. ஆய்விற்குரிய காலப்பகுதியில் நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதித் துறைகள் இரண்டினதும் மூலதன நிலைமை மேம்பட்டது. பொதுக் காப்புறுதியின் மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் ஓராண்டிற்கு முன்னைய 210.0 சதவீதத்திலிருந்து 2023 இறுதியில் 252.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. நீண்ட காலக் காப்புறுதியில் மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் ஓராண்டிற்கு முன்னைய 303.0 சதவீதத்திலிருந்து 358.0 சதவீதத்திற்கு மேம்பட்டது.

## ஊழியர் சேமலாப நிதியம்

**ஊழியர் சேமலாப நிதியத்தின் தேறிய பெறுமதி 2022 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2023 இறுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 11.5 சதவீதத்தினால் கணிசமானளவிற்கு அதிகரித்தது. இவ்வதிகரிப்பிற்கு, நிதியத்தின் முன்மதியுடைய முதலீடுகளினூடாக உருவாக்கப்பட்ட வருமானங்களே காரணமாகும்.** உறுப்பினர்களுக்கான மொத்தப் பொறுப்புக்களும் இக்காலப்பகுதியில் 12.9 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, 2023ஆம் ஆண்டிற்காகப் பெறப்பட்ட மொத்தப் பங்களிப்புக்கள் 8.2 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் உறுப்பினர்களுக்கும் அவர்களது சட்டபூர்வமான வாரிசுகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்ட மீளளிப்புக்களின் மொத்தத் தொகை 32.4 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது. இதன் விளைவாக, நிதியத்தின் தேறிய பங்களிப்பு 2022ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.31.6 பில்லியன் கொண்ட நேர்க்கணியப் பங்களிப்புக்களுடன் ஒப்பிடுகையில் 2023இல் ரூ.5.3 பில்லியன் கொண்ட எதிர்க்கணியமான பங்களிப்பினை அறிக்கையிட்டது.

**2023இல் நிதியத்தின் மொத்த முதலீட்டு வருமானம் ரூ.469.3 பில்லியனாக விளங்கி 2022இன் ரூ.315.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 48.6 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.** வட்டி வருமானம் நிதியத்திற்கான வருமானத்தின் ஆதிக்கம்பெற்ற மூலமாக தொடர்ந்தும் இருந்ததுடன் இது, 2022இன் ரூ.349.3 பில்லியனிலிருந்து 2023இல் ரூ.442.4 பில்லியனுக்கு 26.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. எனினும், பங்கிலாப வருமானம் 2022இன் ரூ.7.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023இல் ரூ.3 பில்லியனுக்கு 60 சதவீதம் கொண்ட வீழ்ச்சியை எடுத்துக்காட்டியது. பொருட்கள் மற்றும் பணிகளின் விலைகளில் கணிசமான அதிகரிப்பொன்று காணப்பட்டமைக்கிடையிலும் நிதியம் தொழிற்பாட்டுச் செலவினங்களை 2023இல் மொத்த வருமான விகிதத்தில் 0.49 சதவீதத்தில் வெற்றிகரமாகப் பேணியது. இருப்பினும்கூட, நிதியத்தின் வரிச் செலவினம் 2023 காலப்பகுதியில் அதிகரித்தமைக்கு அதிகரித்த முதலீட்டு வருமானம் காரணமாக இருந்தது.

**உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தல் தொழிற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட இரண்டு மாற்று ஏற்பாடுகளை கவனமாகப் பரிசீலனையில் கொண்டதன் பின்னர்**

அட்டவணை 1.25

**ஊழியர் சேமலாப நிதியத்தின் ஐந்து ஆண்டுச் செயலாற்றச் சுருக்கம்**

| விடயம் | 2019 | 2020 | 2021 | 2022 | 2023* |
|---|---|---|---|---|---|
| நிதியத்தின் தேறிய பெறுமதி (ரூ.பில்) | 2,540.4 | 2,824.3 | 3,166.1 | 3.459.9 | 3,857.4 |
| உறுப்பினர்களுக்கான மொத்த பொறுப்பு (ரூ.பில்) | 2,497.6 | 2,767.8 | 3.066.9 | 3,380.6 | 3,817.9 |
| மொத்த பங்களிப்புக்கள் (ரூ.பில்) | 157.2 | 150.7 | 165.7 | 194.6 | 210.6 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.பில்) | 126.3 | 109.7 | 118.2 | 163.0 | 215.9 |
| தேறிய பங்களிப்பு (ரூ.பில்) | 30.9 | 41.0 | 47.5 | 31.6 | (5.3) |
| அங்கத்தவர் மீதிகளுக்கான வட்டிவீதம் (%) | 9.25 | 9.00 | 9.00 | 9.00 | 13.00 |
| அங்கத்தவர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை (மில்) | 19.4 | 19.8 | 20.3 | 20.4 | 20.9 |
| செயற்பாட்டிலுள்ள அங்கத்தவர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை (மில்) | 2.9 | 2.6 | 2.5 | 2.7 | 2.7 |

* தற்காலிகமானது

*மூலம்:* ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**ஊழியர் சேமலாப நிதியம் படுகடன் பரிவர்த்தனைத் தேர்வினைத் தொடர்வதற்கு தெரிவுசெய்தது.** 2023 யூலை 04 அன்று நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு ஓய்வூதியத்திற்காக இரண்டு தேர்வுகளை வழங்குகின்ற உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தல் தொழிற்பாடுகளை அறிவித்தது. முதலாவது தேர்வு, ஊ.சே.நிதியம் 2027 இற்கும் 2038 இற்குமிடையில் முதிர்ச்சியடைகின்ற 12 புதிய தொடர்களுக்காக தற்போதுள்ள அதன் திறைசேரி முறிகளின் குறைந்தபட்சம் தேவைப்படும் தொகையினைப் பரிமாற்றிக் கொள்வதற்கு அனுமதித்தது. இப்பரிமாற்றம் திறைசேரி முறிச் சொத்துப்பட்டியலிலிருந்து பெறப்படும் அதன் வரி விதிக்கத்தக்க வருமானத்தின் மீது ஆண்டொன்றிற்கு 14 சதவீதம் கொண்ட வருமான வரி வீதத்திற்கு ஊ.சே. நிதியம் உட்பட்டதாக இருக்கும். மாறாக ஊ.சே.நிதியம் அதன் தற்போதைய திறைசேரி முறிகளைப் பரிமாற்றம் செய்யவில்லை எனத் தேர்வு செய்யுமாயின் நிலையான 30 சதவீதம் கொண்ட வரி வீதம் இதன் திறைசேரி முறிச் சொத்துப்பட்டியலிலிருந்து உருவாக்கப்படுகின்ற வரி விதிக்கத்தக்க வருமானத்திற்கு பிரயோகிக்கத்தாக இருக்கும். இத்தேர்வுகளை மிகக் கவனமாகப் பரிசீலனை செய்ததன் பின்னர் ஊ.சே.நிதியத்தின் கட்டுக்காப்பாளராகத் தொழிற்படுகின்ற இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை படுகடன் பரிவர்த்தனை முன்வைப்புக்களைத் தொடர்வதற்கு தெரிவுசெய்தது. இத்தீர்மானமானது நீண்ட காலக் கண்ணோட்டத்துடனும் நிதிய உறுப்பினர்களின் சிறந்த நலவுரித்துக்களுடன் செய்யப்பட்டதுடன் படுகடன் பரிவர்த்தனைக்கான திறைசேரி முறிகளின் ரூ.2,667.5 பில்லியன் முகப்புப் பெறுமதிகளைக் கொண்ட ஊ.சே.நிதியம் வழங்குவதுடன் தொடர்புபட்டதாகும்.

## ஊழியர் நம்பிக்கை நிதியம்

**ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 11.9 சதவீதத்தினால் 2023 இறுதியில் ரூ.520.5 பில்லியனுக்கு அதிகரித்தது.** ஊழியர் நம்பிக்கை நிதியத்தினால் செய்யப்பட்ட முதலீடுகள் 8.3 சதவீதத்தினால் அதிகரித்தன. இம்முதலீடுகளில் 2023 இறுதியில் 93.8 சதவீதம் அரச பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டது. ஊழியர் நம்பிக்கை நிதியம் 2023இல் அதன் உறுப்பினர் நிலுவைகளின் மீது 12.3 சதவீதத்தினைக் கொண்ட முதலீடுகளின் மீது வருமானமொன்றினை ஈட்டக்கூடியதாக இருந்தது. ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் 15.5 மில்லியன் உறுப்பினர் கணக்குகளில் 2.5 மில்லியன் கணக்குகள் மட்டுமே 2023 இறுதியில் செயற்பட்டுக் கொண்டிருந்தன. நிதியத்திற்குப் பங்களிக்கின்ற தொழில்தருநர்களின் எண்ணிக்கை 2022 இறுதியிலுள்ளவாறான 68,488 இலிருந்து 2023 இறுதியில் 75,485 இற்கு அதிகரித்தது. ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்த உறுப்பினர் நிலுவை 0.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 2023 இறுதியில் ரூ.458.5 பில்லியனை அடைந்தது. ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பெறப்பட்ட மொத்த பங்களிப்புகள் 7.4 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்து ரூ.37.1 பில்லியனை அடைந்த வேளையில் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்பட்ட மொத்த நன்மைகள் 53.0 சதவீதத்தினால் அதிகரித்து (ஆண்டிற்கு ஆண்டு) 2023 காலப்பகுதியில் ரூ.38.3 பில்லியனை அடைந்தது.


## 1.5.3 நிதியியல் சந்தைகளின் செயலாற்றம்

### உள்நாட்டுப் பணச் சந்தை

**உள்நாட்டுப் பணச் சந்தையின் திரவத்தன்மைப் பற்றாக்குறை 2023 இறுதியில் கணிசமானளவிற்கு வீழ்ச்சியடைந்தது.** இதற்கு மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகளினூடாக திரவத்தன்மை உட்புகுத்தப்பட்டமை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான தவணை நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களினூடான திரவத்தன்மை ஏற்பாடு, நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டில் செய்யப்பட்ட குறைப்பு மற்றும் குறிப்பிட்ட உரிமம்பெற்ற வங்கிகளுக்கான திரவத்தன்மை உதவி வசதிகளினூடாக வழங்கப்பட்ட திரவத்தன்மை என்பன காரணங்களாக அமைந்தன. 2023ஆம் ஆண்டுப்பகுதியில்

1

வரைபடம் 1.29 2023இல் திறந்த சந்தை தொழிற்பாடுகள், துணைநில் வீத வீச்சு மற்றும் பணச் சந்தை வட்டி வீதங்களின் நடத்தைகள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டின் குறைத்தலினூடாக நிரந்தர திரவத்தன்மை உள்ளீடு ஏறத்தாழ ரூ.200 பில்லியனாகக் காணப்பட்டது. இதற்குப் மேலதிகமாக மத்திய வங்கி இரண்டாந்தரச் சந்தையில் திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்வதற்காக உடனடி ஏலங்களை மேற்கொண்டதுடன் நிரந்தர அடிப்படையொன்றில் ரூ.8.5 பில்லியன் கொண்ட திரவத்தன்மையையும் உள்ளீடு செய்தது. ஆகவே, சந்தைத் திரவத்தன்மை 2023இல் ஒழுங்கற்ற பரம்பலொன்றினை எடுத்துக்காட்டியவிடத்து குறிப்பிட்ட உள்நாட்டு வங்கிகள் திரவத்தன்மை பற்றாக்குறையினைப் பதிவுசெய்த வேளையில் பெரும்பாலான வெளிநாட்டு வங்கிகள் குறிப்பிடத்தக்களவிற்கு திரவத்தன்மை மிகையினைப் பதிவுசெய்தன. அழைப்புப் பணச் சந்தையில் நாளாந்தச் சராசரிக் கொடுக்கல்வாங்கல் பெறுமதி 2022இன் ரூ.15.7 பில்லியனிலிருந்து 2023இல் ரூ.8.6 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், நாளாந்தச் சராசரி கொடுக்கல்வாங்கல் பெறுமதி மீள்கொள்வனவுச் சந்தையில் 2022இன் ரூ.6.8 பில்லியனிலிருந்து 2023இல் ரூ.14.4 பில்லியனுக்கு அதிகரித்து நிதியியல் நிறுவனங்களினால் பிணையிடப்பட்ட கடன்வழங்கல்களுக்கான அதிகரித்த முன்னுரிமையினை எடுத்துக்காட்டியது.

## உள்ளூர் வெளிநாட்டு செலாவணிச் சந்தை

**2023 காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா 12.1 சதவீதத்தினால் உயர்வடைந்தது. 2022 இறுதியில் 363.11 ஆக இருந்த ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா செலாவணி வீதம் 2023 இறுதியில் 323.92இல் காணப்பட்டது.** மத்திய வங்கி 2023 மாச்சு 7ஆம் நாளிலிருந்து செலாவணி வீதம் சந்தை விசைகளினால் தீர்மானிக்கப்படுவதனை அனுமதித்தது. அதேவேளை, உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் திரவத்தன்மை நிலைமைகள் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மத்திய வங்கிக்கு வெளிநாட்டுச் செலாவணியை விற்பனை செய்ய வேண்டுமென்ற கட்டாயம் படிப்படியாகத் தளர்த்தப்பட்டமை மற்றும் பன்னாட்டு நாணய நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழான உட்பாய்ச்சல் என்பனவற்றைத் தொடர்ந்து உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் திரவத்தன்மை மேம்பட்டது. இவ்வபிவிருத்திகள் சந்தைப் பங்கேற்பாளர்களின் மேலும் உயர்வடையுமென்ற எதிர்பார்ப்புக்கு காரணமாகியதுடன் பணவனுப்பல்களையும் ஏற்றுமதி பெறுகைகளையும் கூடுதலானளவிற்கு மாற்றுவதற்கும் தூண்டியது. எனினும், அரசாங்கம் வங்கிகளிடமிருந்த ஐ.அ. டொலர் மதிப்பிலான இலங்கை அபிவிருத்தி முறிகளை உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தல் தொழிற்பாடுகளின் கீழ் ரூபாவில் கொடுப்பனவு செய்தமையால், வங்கிகள் தங்கள் வெளிநாட்டுச் செலாவணிக் கடன்களை தீர்ப்பனவு செய்ய உள்நாட்டுச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணியைக் கொள்வனவு செய்தமையின் காரணமாக 2023இன் பின்னரைப்பகுதியின் முற்பகுதியில் ரூபாய் மதிப்புச் சரிவு அழுத்தங்கள் எழுந்தன. எனினும், வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடு ரூபாவின் அழுத்தத்தினைக் குறைவடையச் செய்ததுடன் செலாவணி வீதத்தினையும் உறுதிப்படுத்தியது. மேலும், உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணி வங்கிகளுக்கிடையிலான சந்தையில் வர்த்தகப்படுத்தல் அளவு 2022இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 9.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023இல் ஐ.அ.டொலர் 15.0 பில்லியனுக்கு 56.7 சதவீதத்தினால் அதிகரித்தது.

## அரச பிணையங்கள் சந்தை


**கொள்கை வீத குறைப்புக்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் இரண்டாந்தரச் சந்தை விளைவு வீதங்களும் வீழ்ச்சியடைந்து, விளைவு வளையியில் கீழ்நோக்கிய சரிவொன்றினைத் தோற்றுவித்தது.** இரண்டாந்தரச் சந்தை விளைவு வளையி 2023 இறுதியளவில் கிரமமான வடிவினைக் கொண்ட வளையிக்கு மாறிச்செல்கின்ற அடையாளமொன்றினை எடுத்துக்காட்டியது. மேலும்,

அரச பிணையங்களின் இரண்டாந்தரச் சந்தையின் திரவத்தன்மை 2023 காலப்பகுதியில் சிறிதளவால் மேம்பட்டதுடன் இது அதிகரித்த நாளாந்த சராசரி வர்த்தக அளவுகளினூடாகவும் சந்தையில் காணப்பட்ட வர்த்தகங்களின் நாளாந்தச் சராசரி எண்ணிக்கைகளிலும் அவதானிக்கப்பட்டது. இதன்படி, 2023 நாளாந்தச் சராசரி வர்த்தக அளவுகள் மற்றும் வர்த்தகங்களின் நாளாந்தச் சராசரி எண்ணிக்கைகள் முறையே ரூ.25.7 பில்லியனுக்கும் 80.6 இற்கும் 2022இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.12.5 பில்லியன் மற்றும் 39 இலிருந்து அதிகரித்தது. எனினும், இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் குறுங்கால முதிர்ச்சிகளை நோக்கிச் சரிந்திருந்தன. 2023இன் பின்னரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 216 மில்லியன் கொண்ட தேறிய வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல்களுக்கு மத்தியிலும் அரச பிணையங்கள் சந்தையில் ஐ.அ.டொலர் 210 மில்லியன் கொண்ட தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சலொன்று 2023இல் பதிவுசெய்யப்பட்டது.

## பங்குரிமைச் சந்தை


**உள்நாட்டு பங்குரிமைச் சந்தை, விலைச் சுட்டெண்கள், சந்தை மூலதனமயமாக்கல் மற்றும் நாளாந்த மொத்தப் புரள்வு ஆகிய நியதிகளில் 2023ஆம் ஆண்டுப்பகுதியில் கலப்பான செயலாற்றமொன்றினை எடுத்துக்காட்டியது.** ஒட்டுமொத்தமாக, அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் மற்றும் ஸ்ரான்டட் அன்ட் புவர் இலங்கை 20 சுட்டெண்கள் ஆண்டு முழுவதும் நேர்க்கணியமான உத்வேகமொன்றினை எடுத்துக்காட்டியது. விலைச் சுட்டெண்களின் அதிகரிப்பு யூலை - ஓகத்துக் காலப்பகுதியில் வங்கித்தொழில் துறை நீங்கலாக

வரைபடம் 1.30
விலைச் சுட்டிகளின் அசைவும் சந்தை மூலதனமாக்கலும்



*மூலம்* : கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

வரைபடம் 1.31
கொழும்புப் பங்கு பரிவர்த்தனையின் வெளிநாட்டுப் பங்கேற்பு



*மூலம்* : கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை அளவு முறையின் அறிவித்தலைத் தொடர்ந்து குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. எனினும், உத்தேச வரித் திருத்தங்கள், அதிகரித்த உணவுப் பணவீக்கம் மற்றும் வலு விலைகளில் ஏற்பட்ட மேல் நோக்கிய திருத்தம் என்பனவற்றின் காரணமாக ஏற்பட்ட அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண்ணில் எதிர்க்கணிய அசைவுடன் சுட்டெண்களின் அசைவு 2023இன் இறுதிப்பகுதியில் ஸ்தம்பித்துக் காணப்பட்டது. இதன்படி, அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் மற்றும் ஸ்ரான்டட் அன்ட் புவர் இலங்கை 20 சுட்டெண் 2023ஆம் ஆண்டுப்பகுதியில் முறையே 24.9 சதவீதத்தினாலும் 15.7 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்த வேளையில் சந்தை மூலதனமயமாக்கல் 9.7 சதவீதத்தினால் உயர்வடைந்து 2023 இறுதியில் ரூ.4,233.3 பில்லியனில் காணப்பட்டது. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை 2023இல் ரூ.1,696.81 மில்லியன் கொண்ட சராசரி நாளாந்த மொத்தப் புரள்வினைப் பதிவுசெய்தது. இது, 2022இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.2,972.3 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 43 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. தேறிய வெளிநாட்டுக் கொள்வனவு நியதிகளில் உள்நாட்டு பங்குரிமைச் சந்தையில் வெளிநாட்டுப் பங்கேற்பு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023இல் வீழ்ச்சியடைந்தது. இதற்கமைய, 2023 காலப்பகுதியில் தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.30.6 பில்லியன் கொண்ட ஏறத்தாழ ஐ.அ.டொலர் 74.3 மில்லியன் கொண்ட உட்பாய்ச்சலொன்றுடன் ஒப்பிடுகையில் 2023ஆம் ஆண்டுகாலப்பகுதியில் ரூ.4.3 பில்லியன் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 13.27 மில்லியனைப் பதிவுசெய்தது.

1

### கூட்டாண்மை படுகடன் பிணையங்கள் சந்தை

**வர்த்தகப் பத்திரங்களின் வழங்கல்கள் 2022 உடன் ஒப்பிடுகையில் 2023இல் குறைவாகக் காணப்பட்டன.** 2022இல் வர்த்தகப் பத்திரங்களூடாகத் திரட்டப்பட்ட ரூ.2.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023ஆம் ஆண்டுப்பகுதியில் வர்த்தகப் பத்திரங்களூடாக ரூ.1.3 பில்லியன் மாத்திரம் திரட்டப்பட்டது. வர்த்தகப் பத்திரங்களின் வட்டி வீதங்கள் முன்னை ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 11.0 சதவீதத்திலிருந்து 36.0 சதவீதம் வரையிலான வீச்சுடன் ஒப்பிடுகையில் 2023ஆம் ஆண்டுப்பகுதியில் 17.0 சதவீதத்திற்கும் 26.5 சதவீதத்திற்குமிடையில் வேறுபட்டது. 2023ஆம் ஆண்டு முழுவதும் கூட்டாண்மை தொகுதிக் கடன்களின் 16 ஆரம்பப் பங்கு வழங்கல்கள் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலுள்ள 5 கம்பனிகளினால் தொடக்கி வைக்கப்பட்டதுடன் கூட்டாக ரூ.34.6 பில்லியன் திரட்டப்பட்டது. இது, 2022இல் 4 கம்பனிகளினால் 10 ஆரம்பப் பங்குவழங்கலினூடாக திரட்டப்பட்ட ரூ.12.7 பில்லியனிலிருந்து கணிசமான அதிகரிப்பொன்றினைக் குறித்துக்காட்டியது. குறிப்பாக, தொகுதிக் கடன்கள் நிலையான மற்றும் மிதக்கும் வட்டி வீதப் பண்புகள் இரண்டுடனும் இவ்வாண்டுப்பகுதியில் வழங்கப்பட்டன. நிலையான வட்டி வீதங்கள் முன்னைய ஆண்டின் 15.42 இலிருந்து 28.00 சதவீதம் வரையிலான வீச்சுடன் ஒப்பிடுகையில் 13.50 இலிருந்து 29.50 சதவீதம் வரையில் வேறுபட்டது.

## 1.5.4 நிதியியல் வசதிக்குட்படுத்தல்

**மத்திய வங்கி 2023ஆம் ஆண்டுப்பகுதியில் நிதியியல் வசதிக்குட்படுத்தலை மேம்படுத்துவதற்குத் தொடர்ந்தும் வசதியளித்தது.** எனினும் 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க புதிய இலங்கை மத்திய வங்கித்தொழில் சட்டம் இயற்றப்பட்டமை நுண்பாக சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்காக மத்திய வங்கியினால் நிதியிடப்பட்ட கடன் திட்டங்களை இடைநிறுத்துவதற்கு வழிவகுத்தமை மற்றும் அரசாங்கத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட கடன் திட்டங்களைப் படிப்படியாக நிறுத்துவதற்கு ஆளுகைச் சபை எடுத்த தீர்மானம் என்பன நிதியியல் வசதிக்குட்படுத்தலை மேம்படுத்தி மத்திய வங்கியின் நியதிச் சட்டத் தொழிற்பாடுகளிலொன்றாக மாற்றியது. மேலும், தேசிய நிதிய வதிக்குட்படுத்தல் உபாயத்தின் கட்டம் I 2024இல் முடிவுறுத்தப்படவுள்ளதுடன் மத்திய வங்கி 2025 இலிருந்து தேசிய நிதிய வசதிக்குட்படுத்தலை உபாயத்தின் கட்டம் IIஇனை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கிறது. மேலும் இலங்கைக்கான அனைத்தையுமுள்ளடக்கிய நிதியியல் கல்வியறிவிற்கான வழிகாட்டலொன்று உருவாக்கப்பட்டிருப்பதுடன் பொதுமக்களின் நிதியியல் நடத்தையினை மேம்படுத்தும் நோக்குடன் 2024 மேயில் வெளியிடுவதற்கு தீர்மானித்திருக்கிறது. மேலும், மத்திய வங்கி நாடு முழுவதிலும் நிதியியல் அறிவினை அதிகரிப்பதற்காக ஆண்டுப்பகுதியில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டது.


## 1.5.5 நிதியியல் உட்கட்டமைப்பு

### கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள்

**2023இல் இலங்கையின் பொருளாதாரம் டிஜிட்டல் மயப்படுத்தலில் கணிசமான வேகத்தினை எடுத்துக்காட்டியதுடன், சில்லறைக் கொடுப்பனவு முறைமைகளில் வலுவான உயர்ந்த வளர்ச்சிக்கு சான்றாகவும் விளங்கியது.** இப்போக்கு டிஜிட்டல் கொடுப்பனவு முறைமைகளுக்கான முன்னுரிமைகள் வளர்ந்து வருவதனை பிரதிபலிக்கிறது. தொடர்ச்சியான இப்பெயர்விற்கு மத்திய வங்கியின் டிஜிட்டல் கொடுப்பனவு ஊக்குவிப்புக் கொள்கை அதேபோன்று கொடுப்பனவு முறைமைகள் மீதான தொழில் ஆலோசனைக் குழுவான தேசிய கொடுப்பனவு ஆணைக்குழுவினால் உருவாக்கப்பட்ட உபாயங்கள் என்பன காரணங்களாக விளங்கின.

**கொடுப்பனவு முறைமைகளின் சுமூகமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக மத்திய வங்கி முறைமைகளின் பங்கேற்பாளர்கள் போதுமான திரவத்தன்மையைக் கொண்டிருக்கின்றார்கள் என்பதனையும் டிஜிட்டல் கொடுப்பனவு மார்க்கங்களுக்காக வளர்ந்துவரும் கேள்வியைப் பூர்த்தி செய்யும் விதத்திலும் முறைமைகளின் கிடைப்பனவினையும் உறுதிப்படுத்தும் விதத்திலும் கொள்கைகளை நடைமுறைப்படுத்தியது.** பொதுமக்களிடையே காசு தொடர்பில் உடனடி நிதி மாற்றல்களுக்கு அதிகரித்து வருகின்ற பிரபல்யத்தன்மை நாட்டினை உடனடிக் கொடுப்பனவு முறைமைகளுக்கு இட்டுச்சென்றதுடன், பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி 2023இல் டிஜிட்டல் கொடுப்பனவு முறைமைகளிடையே உயர்ந்த

வரைபடம் 1.32
சில்லறை கொடுக்கல் வாங்கல்கள்




வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இதன் விளைவாக, லங்காபே நிகழ்நிலைக் கொடுப்பனவுத் தளம் வரிக் கொடுப்பனவுகள் மற்றும் சுங்கத் தீர்வை போன்ற அரச நிறுவனங்களுக்கான கொடுப்பனவுகளை வங்கிக் கணக்குகளிலிருந்து நேரடியாகச் செலுத்துவதற்கும் இலங்கையிலுள்ள அனைத்துக் கியூஆர் கொடுப்பனவுகளுக்குமாக லங்கா கியூஆர் மற்றும் ஜஸ்ட்பே, நிதித்தொழில்நுட்பம் உட்பட பல்வங்கிக் கணக்குகளை செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவுச் செயலிகளுடன் இணைப்பதன் மூலம் வாடிக்கையாளர்கள் கொடுப்பனவுகளை மேற்கொள்ள அனுமதிப்பது, கொடுப்பனவு அட்டைப் பயன்பாடு என்பன அனைத்தும் 2023இல் கணிசமான வளர்ச்சியைக் கொண்டிருந்தன.

**2023ஆம் ஆண்டுப்பகுதியில் அதேநேர வங்கி மாற்றல்களை நோக்கிய குறிப்பிடத்தக்க பெயர்வொன்று காணப்பட்டமையானது காசோலை மற்றும் கொடுப்பனவு அட்டைகளூடாக நிறைவேற்றப்பட்ட மாற்றல்களுடன் ஒப்பிடுகையில் அதேநேர நிதிய மாற்றல்களினூடாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி விஞ்சிக் காணப்பட்டமையின் மூலம் எடுத்துக்காட்டப்படுகிறது.** அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட தனிப்பட்ட மற்றும் கூட்டாண்மை கொடுக்கல்வாங்கல்கள் இரண்டும் ஒரு வாடிக்கையாளரிடமிருந்து மற்றொரு வாடிக்கையாளருக்கான பாரிய பெறுமதி கொண்ட மாற்றல்களை இயலுமைப்படுத்தி தொடர்ந்தும் அதிகரித்தது. எனினும், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினூடாக அதன் பங்கேற்பாளர்களின் சார்பில் தீர்ப்பனவு செய்யப்படுகின்ற ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி என்பனவற்றுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள் பெறுமதி மற்றும் அளவு ஆகிய இரண்டு நியதிகளிலும் வீழ்ச்சியடைந்தன. இவ்வீழ்ச்சிக்கு, 2023இல் அவதானிக்கப்பட்ட சந்தைத் திரவத்தன்மையில் ஏற்பட்ட கணிசமான முன்னேற்றம் காரணமாக அமைந்தது. மேலும், கொடுப்பனவு முறைமைகளின் பிராந்திய ஒருங்கிணைப்பு கொள்கையினை வலியுறுத்துகின்ற விதத்தில் லங்காகியூஆர் 2023இல் இந்தியாவிலுள்ள ஒருமுகப்படுத்தப்பட்ட கொடுப்பனவு இடைமுகங்களுடனும் சீனாவிலுள்ள யூனியன்பே இன்ரநஷனலுடனும் ஒருங்கிணைக்கப்பட்டன. இதன் மூலம் மேற்குறிப்பிட்ட முறைமைகளைப் பயன்படுத்தும் நாட்டிற்கு வருகைதருபவர்கள், தடையின்றி லங்கா கியூஆர் மூலம் இலங்கையில் கொடுப்பனவுகளை மேற்கொள்ள வழிவகுக்கப்படும்.

**மத்திய வங்கி சந்தைப் போக்குகளை நெருக்கமாகக் கண்காணித்தல், தேவையானவிடத்து விரைவான கொள்கைத் தீர்மானங்களை எடுத்தல் மற்றும் நாட்டின் கொடுப்பனவுத் துறையில் தோற்றம்பெற்று வருகின்ற இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு பொருத்தமானவாறு பங்குடமையாளர்களின் விழிப்புணர்வினை அதிகரித்தல் என்பனவற்றினூடாக கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் உறுதித்தன்மையினை உறுதிப்படுத்துகின்றது.** இதற்கமைய, மத்திய வங்கி டிஜிட்டல் கொடுப்பனவு கட்டமைப்பினை தொடர்ந்தும் முன்னேற்ற தொழில்துறையுடன் நெருக்கமாக பணியாற்றுகிறது. மேலும், மத்திய

1

வங்கி வினைத்திறன்மிக்க, அனைத்துமுள்ளடக்கிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளைப் பேணுவதற்கு கடப்பாடு கொண்டிருப்பதுடன் இதன் மூலம் நிதியியல் முறைமையின் உறுதித்தன்மைக்கும் பொருளாதாரத்தின் மீட்சிக்கும் ஆதரவளிக்கிறது.

## பணம் தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல்

**பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தற்பொழுது நாட்டின் நிதியியல் உறுதிப்பாட்டிற்கான கணிசமான இடர்நேர்வுகள், நம்பிக்கையீனங்களுக்கான காரணங்கள், சந்தை ஒழுங்கீனங்கள், ஒழுங்குமுறைப்படுத்தல் சிக்கல்தன்மை, கீர்த்திக்கு ஏற்படக்கூடிய சேதங்கள் மற்றும் முறைமையியல் தீங்குகள் என்பனவற்றை எடுத்துக்காட்டுகின்றது.** 2023இல் நிதியியல் உளவறிதல் பிரிவினூடாக மத்திய வங்கி 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் அறிக்கையிடல் சட்டத்தினால் கட்டாயப்படுத்தப்பட்ட அதன் கடமைகளை 1,369 சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளைப் பெற்று பகுப்பாய்வு செய்ததன் மூலமும் 236 சந்தேகத்திற்குதிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளை சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் முகவர்கள்/ ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபைகளுக்கு பரப்புவதன் மூலம் மேற்கொண்டு வருகிறது. இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வை அணுகுமுறையின் கீழ் நிதியியல் உளவறிதல் பிரிவு 23 தலத்திலான பரீட்சிப்புக்களை மேற்கொண்டதன் மூலம் 15 காரணங்களைக் காட்டும் கடிதங்களையும் 13 தண்டக் கடிதங்களையும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கியதுடன் தண்டப் பணமாக ரூ.21.2 மில்லியனைச் சேகரித்து கொண்டது. மேலும், 2023 செத்தெம்பரில் நிதியியல் உளவறிதல் பிரிவு குறிப்பிடத்தக்களவு அச்சுறுத்தல்கள், பாதிக்கப்படும் தன்மைகள் மற்றும் இலங்கையினால் எதிர்நோக்கப்படும் இடர்நேர்வுகளை எடுத்துக்காட்டுகின்ற பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் மீதான 2021/2022 இற்கான தேசிய இடர்நேர்வு மதிப்பீடுகளை வெளியிட்டது. தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டில் கண்டறியப்பட்டவற்றினைத் தொடர்ந்து 2023-2028 இற்கான தேசிய பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலுக்கான கொள்கையொன்று தயாரிக்கப்பட்டு அமைச்சரவையினால் ஒப்புதலளிக்கப்பட்டது. 2025இல் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் பரஸ்பர மதிப்பீடுகளுக்காக முக்கிய ஆர்வலர்களை ஆயத்தப்படுத்தும் நோக்குடன் நிறுவன ரீதியான நடவடிக்கைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டதுடன் நடைமுறைப்படுத்தலுக்கான ஆர்வலர்களிடையே பகிரப்பட்டன. மேலும், பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலுக்கான செயலணிக் குழுவொன்று இந்நடவடிக்கைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் முன்னேற்றங்களைக் கண்காணிப்பதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டது.

## நிதியியல் துறையுடன் தொடர்பான சட்ட சீர்திருத்தங்கள்

**2023 செத்தெம்பர்/ நவெம்பர் காலப்பகுதியில், 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டம் மற்றும் 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் சிறப்பு ஏற்பாடுகள் சட்டம் என்பன இயற்றப்பட்டு தொழிற்பாட்டிற்கு வந்தன.** ஏற்பாடுகளை மேலும் வலுப்படுத்துவதற்காகவும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்காகவும் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்திற்கான திருத்தங்கள் தற்பொழுது பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் நிலையில் காணப்படுகின்றன. மேலும், 2023ஆம் ஆண்டுப்பகுதியில் மத்திய வங்கி நுண்பாக நிதி மற்றும் கொடுகடன் ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டம் மற்றும் நிதியியல் சொத்து முகாமைத்துவ கம்பனிகள் சட்டம் என்பனவற்றை வரைவதில் நிதி அமைச்சிற்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்கியது. 2023இல் மேற்கொள்ளப்பட்ட ஏனைய சட்ட சீர்திருத்தங்கள் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தினைத் திருத்துவதற்கான வரைவு 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக்குத்தகைக்குவிடல் சட்டம், 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டம், 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் என்பனவற்றிற்கான திருத்தங்களுக்கான வரைவுகளை உள்ளடக்கியிருந்ததுடன் மூலதனச் சந்தை அபிவிருத்திக்காக வர்த்தகத் தீர்ப்பனவு மற்றும் தேறல் சட்டம் என்ற பெயரில் புதிய சட்டமொன்று வரையப்பட்டு வருகின்றது.

## நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு

**2023இல் மத்திய வங்கி அதன் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரவரம்பின் கீழ் நிதியியல் பணி வழங்குவோருக்காக நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பினை வலுப்படுத்துகின்ற நோக்குடன் குறிப்பிடத்தக்க முன்னெடுப்புக்களை நடைமுறைப்படுத்தியது.** 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு மீதான புதிய ஒழுங்குவிதிகள், 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 10(இ) இன் கீழ் 2023 ஓகத்து 8ஆம் நாளன்று விடுக்கப்பட்டது. வலுவூட்டப்பட்ட கட்டமைப்பு நிதியியல் துறைக்குள் வெளிப்படைத்தன்மை, நியாயமானதன்மை மற்றும் பொறுப்பு வாய்ந்த வியாபாரங்களை மேற்கொள்ளுதல் என்பனவற்றை அதிகரிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட அனைத்தையுமுள்ளடக்கிய வழிமுறைகளை உள்ளடக்கியிருப்பதன் மூலம் மிகவும் தாக்குப்பிடிக்கக்கூடியதும் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய நிதியியல் முறைமையினையும் பேணி வளர்க்கிறது. உத்வேகம் மிக்க இரண்டு அடுக்குகளிலான முறையீட்டுக் கையாளல் நடைமுறைகளுக்குப் புறம்பாக இவ்வொழுங்குவிதிகள் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு மேற்பார்வையில் ஒழுங்குமுறைப்படுத்துநர்களுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள காத்திரமான பொறிமுறைகளிலொன்றான சந்தை நடத்தை மேற்பார்வையினை மேற்கொள்வதற்கு மத்திய வங்கிக்குத் தேவையான அதிகாரங்களையும் கட்டமைப்பினையும் வழங்குவதுடன் இவ்வொழுங்குவிதிகள் 2024ஆம் ஆண்டு படிப்படியாக நடைமுறைக்குக் கொண்டுவரப்படும். மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் இந்நடவடிக்கைகள் நிதியியல் முறைமையின் ஒருங்கிணைந்த தன்மை மற்றும் உறுதித்தன்மை என்பனவற்றைப் பேணுவதனை நோக்கமாகக் கொண்டிருந்த வேளையில் இலங்கையில் நிதியியல் வாடிக்கையாளர்களின் நலன்புரிகளுக்கும் முன்னுரிமையளிக்கின்றது.

## வைப்புக் காப்புறுதி மற்றும் தீர்மான அதிகாரசபை

**2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 62ஆம் பிரிவின் கீழ் நிதியியல் நிறுவனங்களின் தீர்மானங்களுக்கு பொறுப்பான அதிகாரசபையாக மத்திய வங்கி குறித்துரைக்கப்பட்டிருக்கிறது.** இதன்படி, மத்திய வங்கி 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தினை இயற்றுவதற்குப் பங்களித்ததுடன் மத்திய வங்கியின் தீர்மான அதிகாரத்தினை வலுப்படுத்துகின்ற தீர்மான அதிகாரங்களை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்காகவும் உலகளாவிய நியமங்களுடன் அணிப்படுத்தப்பட்டிருக்கின்ற வைப்புக் காப்புறுதி திட்டத்தின் நிருவாகத்தினூடாக நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் கட்டமைப்பினை அதிகரிப்பதற்குமாக வைப்புக் காப்புறுதி தீர்மான திணைக்களத்தினை நிறுவியிருக்கிறது.

**இலங்கை வைப்புக் காப்புறுதி திட்டம் நிதியியல் முறைமையில் பொதுமக்களின் நம்பிக்கையை பற்றிப்பிடித்துக் கொள்வதற்காகவும் வங்கித்தொழில் சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் சட்டபூர்வமாக மீள்நிறுவப்பட்டது.** இலங்கை வைப்புக் காப்புறுதி திட்டம் 63 உறுப்பு நிறுவனங்களை உள்ளடக்கியிருப்பதுடன் நிதியியல் முறைமை பாதுகாப்பு வலையமைப்பிலுள்ள வைப்பாளர்களின் நம்பிக்கையினை பற்றிப்பிடித்துக் கொள்ளும் விதத்தில் 2023ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.505.0 மில்லியன் செலுத்தப்பட்டிருக்கிறது. மேலும், இலங்கை அரசாங்கம், உலக வங்கி மற்றும் மத்திய வங்கி என்பன நிதியியல் துறைச் செயலாற்றத்திற்கும் முறைமை உறுதிப்பாட்டிற்கும் மிக இன்றியமையாததாக விளங்கும் காத்திரமான வைப்புக் காப்புறுதி முறைமையொன்றின் அபிவிருத்திக்காக பன்னாட்டுச் சிறப்பு நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் நிதியியல் மற்றும் நிறுவன ரீதியான இயலாற்றலை வலுப்படுத்தும் நோக்குடன் நிதியியல் துறைப் பாதுகாப்பு வலையமைப்பினை வலுப்படுத்தும் செயற்றிட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன.

## வெளிநாட்டுச் செலவாணியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான அரச முகவரொன்றாக மத்திய வங்கி நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிக்**

**கொடுக்கல்வாங்கல்களை ஒழுங்குமுறைப்படுத்தி மேம்படுத்துவதற்கான பொறுப்பினைக் கொண்டிருக்கிறது.** ஆண்டு முழுவதும் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட 'ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குள் திருப்பியனுப்புவது' மீதான ஒழுங்குவிதிகள்படி இலங்கைக்குள் ஏற்றுமதிப் பெறுகைகள் திருப்பியனுப்பப்படுவதனைக் கண்காணிப்பதற்காக தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் இலங்கைச் சுங்கம், உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட பாரிய ஏற்றுமதியாளர்கள் ஆகியோருடனான ஒத்துழைப்பு முயற்சியொன்றான ஏற்றுமதிப் பெறுகைகள் கண்காணிப்பு முறைமைக்கு குறிப்பிடத்தக்க மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வழிமுறைகள் ஐ.அ.டொலர் 14,997 மில்லியன் தொகை கொண்ட ஏற்றுமதிப் பெறுகைகளை தாய்நாட்டிற்குள் பெற்றுக்கொள்வதற்கு உதவியிருக்கின்றன. இதில் ஐ.அ.டொலர் 4,009 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்டிருப்பதன் மூலம் உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு திரவத்தன்மை வழங்கப்பட்டிருக்கிறது.

**மேலும், நாணயத்தை மாற்றுகின்ற வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களின் நடவடிக்கைகள் மிகக் கடுமையான கண்காணிப்பிற்கு உட்பட்டிருக்கின்றன.** இதன் விளைவாக, 2022இன் ஐ.அ.டொலர் 159.8 மில்லியனுடன் ஒப்பிடுகையில் வங்கித்தொழில் முறைமைக்குள் ஐ.அ.டொலர் 388 மில்லியன் கொண்ட தொகை வைப்புச் செய்யப்பட்டதன் மூலம் அத்தகைய கட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களின் செயலாற்றம் குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட்டது.

## கொடுகடன் தகவல்

**நிதியியல் நிறுவனங்களின் கடன் செலுத்தத் தவறும் இடர்நேர்வுகளைத் தணிப்பதற்காகவும் நிதியியல் துறைகளின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை வலுப்படுத்துவதற்காகவும் கொடுகடன் தகவல் பணியகம் தொடர்ந்தும் மிக முக்கியமான வகிபாகமொன்றினை ஆற்றுகின்றது.** இதற்கமைய, கொடுகடன் தகவல் பணியகத்தின் கொடுகடன் புள்ளியிடல், கடன்பாட்டாளர்கள் முன்கூட்டியே தமது கொடுகடன் சொத்துப்பட்டியலை முகாமைப்படுத்துவதற்கு அவர்களை வலுவூட்டுகின்ற பாரம்பரிய அளவை முறைகளுக்கு அப்பால் தனிப்பட்டவர்களின் கொடுகடன் நம்பகத்தன்மை தொடர்பில் பூரணமான மதிப்பீடொன்றினை வழங்குவதுடன் கடன்வழங்குவோர் நம்பகமான ஊக மாதிரிகளின் அடிப்படையில் கடன் வழங்கும் தீர்மானங்களை விரைவுபடுத்துவதற்கு கடன்வழங்குவோரை இயலுமைப்படுத்துகின்றது. கொடுகடன் தகவல் பணியகம் கடன்வழங்கல் சந்தைத் தரவு, எதிர்காலச் சந்தை அபிவிருத்திக்காக உள்ளகத் தகவல்களை வழங்குதல், நுகர்வோர் நடத்தையில் காணப்படும் மாற்றங்கள், சமூகத் தேவைகளுக்கான பரிணாம வளர்ச்சி என்பனவற்றைப் பகுப்பாய்வு செய்வதற்காக தொடர்பான முன்னேற்றங்கண்ட தொழில்நுட்பங்கள் மீது கவனம் செலுத்தி வருகின்றது. கடன்வழங்குகின்ற நிறுவனங்களின் பயன்படுத்துநர்கள் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் குறிக்கோள்களுக்கும் அமைப்பியல் மதிப்பீடுகளுக்குமாக கொடுகடன் தகவல் பணியகத்தினால் வழங்கப்படுகின்ற பெறுமதிகூட்டப்பட்ட இப்பகுப்பாய்வுச் சாதனங்களை முழுமையாக அணுகக்கூடியவர்களாகவுள்ளனர். மேலும், நிதியியல் உள்ளடக்க வசதிகளை அதிகரிப்பதற்காகவும் அனைத்தையுமுள்ளடக்கிய கொடுகடன் தரவு மற்றும் ஆவணங்களை கொண்டிராத முறைசாராத் துறைகளை உள்ளடக்குவதற்கும் கொடுகடன் தகவல் பணியகம் மாற்றுத் தரவு மூலங்களைக் கண்டறிந்து வருகின்றது. காப்புறுதித் தரவு பொதுப் பயன்பாட்டுக் கொடுப்பனவுகள் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் கொடுப்பனவுகள் மற்றும் இலத்திரனியல் வர்த்தகத் தரவு போன்ற இம்மூலங்கள் கீர்த்தி வாய்ந்த பிணையுறுதிகளை மதிப்பீடு செய்வதற்கான முறைசார்ந்த தரவு மூலங்களாக பரிசீலிக்கப்படுகின்றன. மேலும், பாதுகாப்பான கொடுக்கல்வாங்கல்கள் சட்டம் இயற்றப்பட்டமை இலங்கையின் அசையும் சொத்துக்களை ஈடுவைப்பதற்கு பாதுகாப்பான கொடுக்கல்வாங்கல் கடன்வழங்கல் கட்டமைப்புக்களை உருவாக்கும். இக்கட்டமைப்பு அனைத்து வகையான ஒழுங்குமுறைப்படுத்தல் நிதியியல் நிறுவனங்களின் உரிமைகளையும் பாதுகாக்குமென்பதுடன் அசையும் பிணையுறுதிகளின் மீது நிதியிடலை வழங்குவதற்கும் அவர்களை ஊக்குவிக்கும்.

## சிறப்புக்குறிப்பு 4
## சந்தை நடத்தைக்கான மேற்பார்வை: நிதியியல் முறைமையில் நம்பிக்கையை நிலைநிறுத்தல்


### அறிமுகம்

கடந்த இரு தசாப்தங்களாக, பல்வேறு முன்னேற்றமடைந்த மற்றும் நன்கு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பொருளாதாரங்களிலும் ஏற்பட்டுள்ள அண்மைய நிதியியல்சார் வீழ்ச்சிகளும் நெருக்கடிகளும் நிதியியல் நிறுவனங்கள், நிதியியல் அதிகாரசபைகள் மற்றும் ஒட்டுமொத்த நிதியியல் முறைமை மீது பொது மக்களின் குறிப்பாக நிதியியல் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையையும் உறுதியையும் நிலைநிறுத்துவதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன. எனவே, நிதியியல் பணி வழங்குநர்கள் மூலம் நிதியியல் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் நிதியியல் வசதிக்குட்படுத்தலை விரிவுபடுத்தல் மற்றும் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பினை வலுப்படுத்தல் தொடர்பான அதிகரிக்கப்பட்ட கவனத்துடன் நிதியியல் முறைமை மேற்பார்வை தொழிற்பாட்டிற்கான நோக்கெல்லையையும் அணுகுமுறையையும் வலுப்படுத்தி மீள்வடிவமைப்பதற்கு உலகளாவிய ரீதியிலான நிதியியல் அதிகாரிகள் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர். இப்பின்னணியில், செயற்றிறன்மிக்க ஒழுங்குவிதிகளினூடாக நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு கட்டமைப்பினை வலுப்படுத்தி, மேற்பார்வை மற்றும் வாடிக்கையாளர் வலுப்படுத்தலை முன்னெடுத்தலானது உலகளவிலுள்ள நிதியியல் அதிகாரிகளின் முன்னுரிமைகளில் ஒன்றாக விளங்குகின்றது. எடுத்துக்காட்டாக, உலக வங்கியினால் நடாத்தப்பட்ட 2022ஆம் ஆண்டிற்கான நிதியியல் வசதிக்குட்படுத்தல் மற்றும் வாடிக்கையாளர் பாதுகாப்பு அளவீட்டின் உலகளாவிய நிலைப்பாட்டிற்கமைவாக, 113 பதிலிறுத்தப்பட்ட நியாயாதிக்கங்களில், 109 நியாயாதிக்கங்கள் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு மீதான ஒழுங்குவிதிகளைக் கொண்டுள்ளன.

### சந்தை நடத்தைக்கான மேற்பார்வை

சந்தை நடத்தைக்கான மேற்பார்வையானது நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பின் தூணாக விளங்குவதுடன் நிதியியல் முறைமை உறுதிப்பாடு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களித்த வைப்பாளர்கள், கடன்பெறுநர்கள், முதலீட்டாளர்கள், ஆர்வலர்கள் மற்றும் பொது மக்களின் மத்தியில் சந்தை ஒருமைப்பாட்டினதும் நம்பிக்கையினதும் பொது

வரைபடம் சி.கு. 4.1 சந்தை நடத்தைக்கான மேற்பார்வை செயன்முறை




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி

இலக்கை அடைவதில் ஒழுங்குமுறைப்படுத்துநர்களினால் பயன்படுத்தப்படுகின்றது. அனைத்தையுமுள்ளடக்கிய அல்லது முழு நோக்கெல்லையைக் கொண்ட சந்தை நடத்தைக்கான மேற்பார்வையானது உடனடி திருத்த மற்றும் நடைமுறைப்படுத்தல் நடவடிக்கைகளுடன், நிதியியல் பணி வழங்குநர்களின் உற்பத்திகள், பணிகள், முறைமைகள் மற்றும் அணுகுமுறைகள் மற்றும் நடைமுறைகளின் தொடர்ச்சியான மீளாய்வினை உள்ளடக்குகின்றது. இம்மேற்பார்வையின் இலக்குகள், அணுகுமுறை, செயன்முறை என்பனவற்றில் சில ஒற்றுமைகள் காணப்பட்டபோதிலும், இதன் எண்ணக்கருக்கள் மற்றும் கவனம்செலுத்தும் பகுதிகளின் அடிப்படையில், நிதியியல் நிறுவனங்களின் முன்மதியுடைய மேற்பார்வையிலிருந்து வேறுபட்டு காணப்படுவதுடன் நிதியியல் வாடிக்கையாளர்கள் மற்றும் நிதியியல் பணி வழங்குநர்கள் ஆகிய இருவருக்கும் நியாயமான பெறுபேற்றை வழங்குவதற்கு முயற்சிக்கின்றது.

### சந்தை நடத்தைக்கான அணுகுமுறைகள்

சந்தை நடத்தைக்கான மேற்பார்வையானது வேறுபட்ட தொழிற்பாட்டு சூழல்கள் மற்றும் கட்டமைப்புக்களின் கீழ் வடிவமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமையினால், ஒழுங்குமுறைப்படுத்தல் குறிக்கோள்கள், வளம், மற்றும் திறன் மட்டங்கள் அதேபோன்று தொழிற்துறை மற்றும் ஒட்டுமொத்த பொருளாதாரத்தின் அபிவிருத்தி என்பனவற்றுக்கு பொருந்தும் வகையில் இரு பிரதான அணுகுமுறைகளை உள்வாங்க முடியும். இணங்குவிப்பு அடிப்படையிலான அணுகுமுறையில், மேற்பார்வையாளர்கள், நிதியியல் பணி வழங்குநர்களின் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன்

இணங்கியொழுகாமை தொடர்பில் கவனம்செலுத்தி முழுமையான இணங்குவிப்பு இடம்பெறுவதை உறுதிசெய்வதற்கு பொருத்தமான நடைமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை எடுக்கின்றனர். எனினும், இடர்நேர்வு அடிப்படையிலான அணுகுமுறையில், மேற்பார்வையாளர்கள் இடர்நேர்வு பகுப்பாய்வு மற்றும் தணிப்புக்கள் பற்றி கவனம்செலுத்துகின்றனர். இதற்கமைய, சந்தை நடத்தைக்கான மேற்பார்வையின் இடர்நேர்வு அடிப்படையிலான அணுகுமுறையானது மிகவும் முன்னோக்கிப் பார்க்கப்படுவதுடன் மேற்பார்வை சுழற்சி காலப்பகுதிக்கு முன்னரும் காலப்பகுதியிலும் இனங்காணப்பட்ட இடர்நேர்வு மட்டங்களுக்கமைவாக மேற்பார்வை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

### பிரதான மேற்பார்வை கருவிகள்

ஊடகக் கண்காணிப்பு, உற்பத்தி மீளாய்வுகள், கருப்பொருள் மீளாய்வுகள், மறைமுகமான ஆய்வு, அழைப்புக்கள், நிதியியல் பணி வழங்குநர்களின் மூலமான சுய மதிப்பீடுகள், மற்றும் நிதியியல் பணி வழங்குநர் தலைமைத்துவ கவனிப்புடனான நேரடித் தொடர்பு, சந்தை நடத்தைக்கான இடர்நேர்வுகள் தோற்றம்பெற்றுவரும் பிரச்சனைகளுக்கான கட்டுப்பாடுகள், குறித்த நடைமுறைகளை உறுதிப்படுத்தல், அளவுக் கட்டுப்பாட்டு போதுமை போன்ற மேற்பார்வைக் கருவிகளின் வீச்சை சந்தை நடத்தைக்கான மேற்பார்வை உள்ளடக்குகின்றது. இக்கருவிகள், செயற்திறன்மிக்க சந்தை நடத்தைக்கான மேற்பார்வையொன்றைக் கொண்டிருப்பதற்கு மேற்பார்வையாளர்களுக்கு கூட்டாக உதவுகின்றன.

### இலங்கை மத்திய வங்கியின் சந்தை நடத்தைக்கான மேற்பார்வைத் தொழிற்பாடு

உலகளாவிய நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளின் விரிவாக்கத்தினைத் தொடர்ந்து, இலங்கை மத்திய வங்கியானது 2020இல் நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களத்தைத் தாபித்ததுடன் அதன் செயல்நோக்கின் கீழ் அனைத்து நிதியியல் நிறுவனங்களையும் உள்ளடக்கி, 2023 ஓகத்தில் அப்போதைய நாணயவிதிச் சட்டத்தின் 10(இ)ஆம் பிரிவின் கீழ், 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு தொடர்பான ஒழுங்குவிதியை வழங்கியது. 2024 ஓகத்து தொடக்கம் முழுமையாக நடைமுறைக்குவரும் இவ் ஒழுங்குவிதிகள், வேறுபட்ட நியதிச்சட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட தற்போதுள்ள வாடிக்கையாளர் பாதுகாப்பு கட்டமைப்புக்களை ஒருங்கிணைத்து வலுப்படுத்துகின்றதுடன் இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிதியியல் பணி வழங்குநர்களின் சந்தை நடத்தையை மேற்பார்வை செய்வதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு அதிகாரமளிக்கின்றது.

ஒழுங்குவிதிகளின் மூலம் அதிகாரமளித்தலுடன், இலங்கை மத்திய வங்கியானது இடர்நேர்வு அடிப்படையிலான அணுகுமுறையொன்றின் கீழ் சந்தை நடத்தைக்கான மேற்பார்வையை தொடங்குவதற்கு ஏற்பாடுசெய்துள்ள அதேவேளை நிதியியல் பணி வழங்குநர்களின் முறைப்பாடு செய்யப்பட்ட இணங்கியொழுகாமை மற்றும் முறைகேடுகளுக்கு உரிய பரிசீலனையை வழங்கியுள்ளது. சந்தை நடத்தை மேற்பார்வைக்கான முன்னோடியாக, நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களமானது நிதியியல் பணி வழங்குநரின் முறைப்பாடு கையாளுதல் பொறிமுறை பற்றிய கருப்பொருள் மீளாய்வொன்றை நடாத்தியது. இம்மதிப்பீடானது சந்தை நடத்தைக்கான மேற்பார்வை செயன்முறைக்கான பின்னணியை உருவாக்குவதற்கு உதவிய அதேவேளை நிதியியல் பணி வழங்குநர்கள் தமது உள்ளகத் தீர்வு பொறிமுறையை மேம்படுத்துவதற்கான வாய்ப்பொன்றை வழங்கியது.

### முடிவுரையும் முன்னோக்கிய பயணமும்

நவீன நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகளுடன் தொடர்புடைய அதிகரித்த இடர்நேர்வு மற்றும் சிக்கல்தன்மையினூடாக நாடுகள் பயணிக்கும் போது, நிதியியல் வசதிக்குட்படுத்தல் மற்றும் முறைமை உறுதிப்பாட்டை அடைவதில் நிதியியல் முறைமையில் பொதுமக்களின் நம்பிக்கையை நிலைநிறுத்துவது முக்கிய அம்சமாகக் கருதப்படுகின்றது. நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பை ஒழுங்குமுறைப்படுத்துவதில் முக்கிய பொறிமுறையாக வலுவான சந்தை நடத்தைக்கான மேற்பார்வையானது நிதியியல் வாடிக்கையாளர்கள் மற்றும் நிதியியல் பணி வழங்குநர்களின் பொறுப்பான சந்தை நடத்தைக்கான நியாயமான நடத்துகையை எப்போதும் பேணிவளர்க்கின்றது. இது ஒட்டுமொத்த நிதியியல் முறைமையில் பொதுமக்களின் நம்பிக்கையை அதிகரிப்பதற்கான பாதையை வழிவகுக்கும்.

இது தொடர்பில், 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் நியதிகளில், நிதியியல் பணி வழங்குநர்களின் சந்தை நடத்தைக்கான

மேற்பார்வையை முன்னெடுப்பதற்கான தேவையான பொறிமுறைகள், தகைமைகள், மற்றும் நடைமுறைகளை இலங்கை மத்திய வங்கி உருவாக்குகின்றது. 2023ஆம் ஆண்டில், மேற்பார்வை அணுகுமுறை, கருவிகள் மற்றும் தேவையான விபரங்களுடன் செயன்முறையை ஒருங்கிணைக்கும் சந்தை நடத்தைக்கான மேற்பார்வை கைநூலொன்றை இலங்கை மத்திய வங்கி உருவாக்கியுள்ளதுடன் 2024ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டு காலாப்பகுதியில் முதலாவது முழு அளவிலான சந்தை நடத்தைக்கான மேற்பார்வையை தொடங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. முன்னோக்கிப் பார்க்கையில், தேவையான அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்கும், அதிகளவிலான தாக்குபிடிக்கும் தன்மைக்கும் மற்றும் நிதியியல் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையையும் உறுதிப்பாட்டையும் நிலைநிறுத்தும் வகையில் நிலையான நிதியியல் முறைமைக்குப் பங்களிக்கின்ற சந்தை நடத்தைக்கான மேற்பார்வையின் செயற்றிறன்மிக்க நடைமுறைப்படுத்தலுக்கான நிபுணத்துவத்தைக் கொண்டிருப்பதற்கும் இலங்கை மத்திய வங்கியானது ஏனைய நாடுகளிலுள்ள சந்தை நடத்தைக்கான மேற்பார்வையாளர்களுடன் மற்றும் நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான கூட்டணி (AFI) மற்றும் பன்னாட்டு நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு அமைப்பு (FinCoNet) போன்ற பன்னாட்டு வலையமைப்புக்களுடன் அதிகளவிலான ஒத்துழைப்பைப் பெறுவதற்கு எதிர்பார்க்கின்றது.

உசாத்துணைகள்


1. An Introduction to Developing a Risk-Based Approach to Financial Consumer Protection Supervision (2022) - World Bank
2 Establishing a Financial Consumer Protection Supervision Department (2021) – World Bank
3. Financial Consumer Protection and New Forms of Data Processing Beyond Credit Reporting (2018) – World Bank
4. Good Practices for Financial Consumer Protection (2017) – World Bank
5. Market Conduct Supervision in Small Countries: The Case of Armenia (2013) – World Bank
6. Market Conduct Supervision of Financial Services Providers A Risk-Based Supervision Framework (2016) - Alliance for Financial Inclusion
7. Market Conduct Supervision – A Toolkit (2023) - Alliance for Financial Inclusion
8. The Global State of Financial Inclusion and Consumer Protection (2022) - World Bank


## 1.6 இறைத் துறை அபிவிருத்திகள்

### 1.6.1 முக்கிய இறை நிலுவைகள்

**சவால் நிறைந்த சமூக - அரசியல் சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் அரசிறையின் அதிகரிப்பு மற்றும் செலவினங்கள் சிக்கனப்படுத்தப்பட்டமை போன்ற கடுமையான திரட்சிப்படுத்தல் வழிமுறைகள் மூலம் தூண்டப்பட்டு, 2023இல் அதிகரித்த இறைச் செயலாற்றம் முக்கிய இறை நிலுவைகளைக் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வடையச் செய்து பன்னாட்டு நாணய நிதியம்-விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டம் தொடர்வதனை உறுதிப்படுத்தியதுடன் ஒட்டுமொத்த பேரண்டப் பொருளாதார உறுதித்தன்மையினையும் பாதுகாத்தது.** இதன்படி, ஒட்டுமொத்தப் பற்றாக்குறையிலிருந்து வட்டிக் கொடுப்பனவுகளை நீக்குகின்ற மற்றும் இறைக் கொள்கையின் தற்றுணிபுக் கூறினைப் பிரதிபலிக்கின்ற ஆரம்ப நிலுவை, 2022இல் பதிவுசெய்யப்பட்ட 3.7 சதவீதம் கொண்ட (ரூ.894.8 பில்லியன்) பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2023இல் மொ.உ.உற்பத்தியின் 0.6 சதவீதம் கொண்ட (ரூ.173.3 பில்லியன்) மிகையினைப் பதிவுசெய்து, பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட கணியம்சார் செயலாற்றப் பிரமாணங்களை அதிகளவிற்கு விஞ்சிக் காணப்பட்டது. ஆரம்ப மிகை இறுதியாக 2018இல் பதிவு செய்யப்பட்டதுடன் 1950இற்குப் பின்னர் ஆறு ஆண்டுகள் மட்டுமே ஆரம்ப மிகையினை நாடு பதிவுசெய்திருக்கிறது. இறை உறுதித்தன்மையினைப் பேணுவதற்கும் படுகடன் திரள்வதனைக் காத்திரமான முறையில் கட்டுப்படுத்துவதற்கும் நேர்க்கணியமான ஆரம்ப நிலுவையினைப் பேணுவது இன்றியமையாததாகும். அதேநேரம் நடைமுறைக் கணக்குப்[27] பற்றாக்குறை உயர்ந்த வட்டிக் கொடுப்பனவுகளின் காரணமாக பெயரளவு நியதிகளில் விரிவடைந்த போதும் மொ.உ.உற்பத்தி நியதிகளில் இது சிறிதளவு குறுகிக் காணப்பட்டது. திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 10.2 சதவீதத்துடன் (ரூ.2,460.0 பில்லியன்) ஒப்பிடுகையில் 2023இல் மொ.உ.உற்பத்தியின் 8.3 சதவீதத்திற்கு (ரூ.2,282.3 பில்லியன்) குறுக்கமடைந்தது. திரண்ட பற்றாக்குறைக்கான ஆரம்ப மதிப்பீடு மொ.உ.உற்பத்தியின் 7.9 சதவீதமாக (ரூ.2,404.0 பில்லியன்) காணப்பட்டது.

27 நடைமுறைக் கணக்கு நிலுவை மொத்த அரசிறைக்கு மொத்த மீண்டெழும் செலவினத்திற்குமிடையிலான வேறுபாட்டினைக் காட்டுகிறது.

1

அட்டவணை 1.26

**அரசின் இறைத் தொழிற்பாடுகளின் சுருக்கம்**

| விடயம் | 2022 | 2023 (அ) | 2023/2022 | |
|---|---|---|---|---|
| | | | உண்மை மாற்றம் | % மாற்றம் |
| ரூ. மில்லியன் | | | | |
| **மொத்த அரசிறை மற்றும் கொடைகள்** | **2,012,589** | **3,074,324** | **1,061,735** | **52.8** |
| மொத்த அரசிறை | 1,979,184 | 3,048,822 | 1,069,638 | 54.0 |
| வரி அரசிறை | 1,751,132 | 2,720,563 | 969,431 | 55.4 |
| வரியல்லா அரசிறை | 228,052 | 328,259 | 100,207 | 43.9 |
| கொடைகள் | 33,405 | 25,502 | (7,903) | (23.7) |
| **செலவினமும் தேறிய கடன் வழங்கலும்** | **4,472,556** | **5,356,591** | **884,035** | **19.8** |
| மீண்டெழும் | 3,519,633 | 4,699,679 | 1,180,046 | 33.5 |
| வட்டி கொடுப்பனவுகள் | 1,565,190 | 2,455,600 | 890,410 | 56.9 |
| இதில் உள்நாட்டு | 1,436,569 | 2,332,208 | 895,639 | 62.3 |
| வெளிநாட்டு | 128,621 | 123,391 | (5,230) | (4.1) |
| மூலதனமும் தேறிய கடன் வழங்கலும் | 952,923 | 656,912 | (296,011) | (31.1) |
| இதில் அரச முதலீடு | 1,014,293 | 932,745 | (81,548) | (8.0) |
| **நடைமுறைக் கணக்கு மீதி** | **-1,540,448** | **-1,650,857** | | |
| **ஆரம்ப மீதி** | **-894,777** | **173,332** | | |
| **திரண்ட இறை மீதி** | **-2,459,967** | **-2,282,267** | | |
| **மொத்த நிதியிடல்** | **2,459,967** | **2,282,267** | **(177,700)** | **(7.2)** |
| வெளிநாட்டு நிதியிடல் | 424,822 | 494,655 | 69,833 | 16.4 |
| உள்நாட்டு நிதியிடல் | 2,035,145 | 1,787,612 | (247,533) | (12.2) |
| மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக (ஆ) | | | | |
| **மொத்த அரசிறை மற்றும் கொடைகள்** | **8.4** | **11.1** | | |
| மொத்த அரசிறை | 8.2 | 11.0 | | |
| வரி அரசிறை | 7.3 | 9.8 | | |
| வரியல்லா அரசிறை | 0.9 | 1.2 | | |
| கொடைகள் | 0.1 | 0.1 | | |
| **செலவினமும் தேறிய கடன் வழங்கலும்** | **18.6** | **19.4** | | |
| மீண்டெழும் | 14.6 | 17.0 | | |
| வட்டி கொடுப்பனவுகள் | 6.5 | 8.9 | | |
| இதில் உள்நாட்டு | 6.0 | 8.4 | | |
| வெளிநாட்டு | 0.5 | 0.4 | | |
| மூலதனமும் தேறிய கடன் வழங்கலும் | 4.0 | 2.4 | | |
| இதில் அரச முதலீடு | 4.2 | 3.4 | | |
| **நடைமுறைக் கணக்கு மீதி** | **-6.4** | **-6.0** | | |
| **ஆரம்ப மீதி** | **-3.7** | **0.6** | | |
| **திரண்ட இறை மீதி** | **-10.2** | **-8.3** | | |
| **மொத்த நிதியிடல்** | **10.2** | **8.3** | | |
| வெளிநாட்டு நிதியிடல் | 1.8 | 1.8 | | |
| உள்நாட்டு நிதியிடல் | 8.5 | 6.5 | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) 2024 மார்ச் 15ஆம் நாளான்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் (தள ஆண்டு 2015) பயன்படுத்தப்பட்டுள்ளன.


*மூலம்:* நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

## 1.6.2 அரசிறை, செலவினம் மற்றும் தேறிய கடன்வழங்கல்

**இறைத்திரட்சிக்கான அரசாங்கத்தின் கடப்பாட்டினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் அரசிறையில் பெயரளவு நியதிகள் மற்றும் மொ.உ.உற்பத்தியின் சதவீதம் ஆகிய இரு நியதிகளிலும் 2022 உடன் ஒப்பிடுகையில் 2023இல் கணிசமானதொரு அதிகரிப்பு பதிவுசெய்யப்பட்டது.** இதற்கமைய, பெயரளவு நியதிகளில் அரசிறை 54.0 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் மொ.உ.உற்பத்தி நியதிகளில் அரசிறை 2023இன் 11.0 சதவீதத்திற்கு 2.8 சதவீதப் புள்ளிகளினால் அதிகரித்தது. 2022இன் பின்னரைப்பகுதியிலும் 2023இலும் எண்ணற்ற வரிச் சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டமையானது அரசிறைச் சேகரிப்பில் விரிவாக்கம் ஏற்பட ஆதரவளித்தது. வரி வருமானத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு வருமான வரிகள், பெறுமதிசேர் வரி, கலால் தீர்வைகள், இறக்குமதித் தீர்வைகள் மற்றும் சிறப்புப் பண்டத் தீர்வை என்பனவற்றிலிருந்தான அதிகரித்த சேகரிப்புக்கள் முக்கிய காரணமாக அமைந்தன. 2022 ஒத்தோபரில் அறிமுகப்படுத்தப்பட்ட சமூக பாதுகாப்பு பங்களிப்புத் தீர்வையும் அரசிறையில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பிற்குப் பங்களித்தது. 2023இல் வருமான வரிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது, வரியற்ற கீழ்மட்ட வருமானத்தின் நியதிகளில் தனியாள் வருமான வரிக் கட்டமைப்பிற்குச் செய்யப்பட்ட திருத்தம், வரி வீதங்கள் மற்றும் குறிப்பிட்ட வரி வரையறைகள், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கீழ் குறிப்பிட்ட தொழில்சார் நிபுணர்களுக்கான கட்டாயப் பதிவுத் தேவைப்பாடு, நியம கம்பனி வருமான வரி வீதத்தின் மேல் நோக்கிய திருத்தங்கள், கம்பனி வருமான வரிகளுடன் தொடர்பான சலுகை வீதங்கள் ஒழிக்கப்பட்டமை உள்ளிட்ட முக்கிய கொள்கை வழிமுறைகளினூடாக அடையப்பட்டது. இதன் விளைவாக, வருமான வரிச் சேகரிப்பு 2022இன் மொ.உ.உற்பத்தியின் 2.2 சதவீதத்திலிருந்து 2023இல் மொ.உ.உற்பத்தியின் 3.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. அதேவேளை, 2022இல் இரண்டு கட்டங்களில் பெறுமதிசேர் வரி வீதத்திற்குச் செய்யப்பட்ட அதிகரிப்புச் சீராக்கங்கள் இதே ஆண்டின் பிற்பகுதியில் பெறுமதிசேர் வரிப் பதிவுகளின் கீழ்மட்டத்திற்கு


வரைபடம் 1.33


**அரசிறையின் உள்ளமைப்பு - 2023**




*மூலம்:* நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

வரைபடம் 1.34 அரசிறை, செலவீனம் மற்றும் முக்கிய இறை மீதிகள்




**2022இன் இரண்டாம் அரையாண்டில் மற்றும் 2023இல் நடைமுறைப் படுத்தப்பட்ட வரிச் சீர்திருத்தங்கள் 2023ஆம் ஆண்டில் அரசிறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை ஏற்படுத்திய வேளையில் அதிகரித்த உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவுகளுக்கு மத்தியில் சிக்கனப்படுத்தல் வழிமுறைகள் செலவினங்களை ஓரளவு கட்டுப்படுத்த அரசாங்கத்தினை இயலச் செய்தது. இறைத் திரட்சி வழிமுறைகள் இறை மீதிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திற்கு வழிவகுத்தது. குறிப்பாக ஐந்தாண்டுகளுக்குப் பிறகு ஆரம்ப மிகையொன்று 1950இல் இருந்து ஆறாவது முறையாக பதிவு செய்யப்பட்டது.**


*மூலம்:* நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

செய்யப்பட்ட கீழ் நோக்கிய திருத்தங்களுடன் இணைந்து பெறுமதிசேர் வரியுடன் தொடர்பான தேறிய வரியை விரிவடையச் செய்து 2023இன் பெறுமதிசேர் வரிச் சேகரிப்பில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்குப் பங்களித்தது. இதற்கமைய, பெறுமதிசேர் வரி அரசிறைச் சேகரிப்பு முன்னைய ஆண்டின் மொ.உ.உற்பத்தியின் 1.9 சதவீதத்திலிருந்து 2023இல் மொ.உ.உற்பத்தியின் 2.5 சதவீதத்திற்கு அதிகரித்தது. குடிவகை, சிகரெட், பெற்றோல் மற்றும் டீசல் என்பன மீதான கலால் தீர்வை அமைப்பு பணவீக்கத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் சீராக்கம் செய்யப்படுவதற்காக 2023ஆம் காலப்பகுதியில் பல தடவைகள் திருத்தியமைக்கப்பட்டமையானது கலால் தீர்வைகளிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்கள், 2022இன் மொ.உ.உற்பத்தியின் 1.4 சதவீதத்திலிருந்து 2023இல் மொ.உ.உற்பத்தியின் 1.7 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கு வழிவகுத்தது. இறக்குமதித் தீர்வைகள் மற்றும் சிறப்புப் பண்டத் தீர்வைகளை உள்ளடக்கிய பன்னாட்டு வர்த்தகத்துடன் தொடர்பான வரிகள் பெயரளவு நியதிகளில் கணிசமாக ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியை எடுத்துக்காட்டியமைக்கு 2023ஆம் ஆண்டுப்பகுதியில் வரிகளுக்குச் செய்யப்பட்ட மேல் நோக்கிய திருத்தங்களே காரணமாகும். எனினும், மொ.உ.உற்பத்தி நியதிகளில் அளவிடப்படும் போது அவற்றின் அதிகரிப்பு சிறிதளவால் மாத்திரம் விளங்கி குறைவடைந்த இறக்குமதிகளினால் சுருக்கமடைந்தமைக்கு 2023ஆம் ஆண்டின் பெரும்பாலான காலப்பகுதியில் பேணப்பட்ட அவசியமல்லா இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகளும் குறைவடைந்த தாங்கிக் கொள்ளும் தன்மைகளும் காரணமாக விளங்கின. அதேநேரம் 2023இல் சமூகப் பாதுகாப்பு பங்களிப்புத் தீர்வையிலிருந்தான சேகரிப்பு மொ.உ.ற்பத்தியில் 0.8 சதவீதமாகக் காணப்பட்டது. துறைமுகங்கள் மற்றும் வானூர்தி நிலைய அபிவிருத்தித் தீர்வை மற்றும் செஸ் வரியிலிருந்தான அரசிறை ஆய்விற்குரிய காலப்பகுதியில் வீழ்ச்சியை அனுபவித்தமைக்கு நாட்டிற்குள்ளேயான இரட்டைத் தீர்வைகள் கட்டம் கட்டமாக அகற்றுவதற்கு 2023இல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக அமைந்தன. அதேவேளை, 2023ஆம் ஆண்டுப்பகுதியில் வரியல்லா

அரசிறையும் பெயரளவு மற்றும் உண்மை நியதிகள் இரண்டிலும் அதிகரித்தமைக்கு கட்டணம் மற்றும் விதிப்புக்களும் அதேபோன்று அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் போன்ற மூலங்களிலிருந்து கிடைத்த உயர்ந்த அரசிறைச் சேகரிப்புக்கள் தூண்டுதலாக அமைந்தன. 2023இற்கான ஆரம்ப வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளின்படி, வரி அரசிறையும் வரியல்லா அரசிறையும் முறையே மொ.உ.உற்பத்தியின் 11.3 சதவீதமாகவும் 1.2 சதவீதமாகவும் மதிப்பிடப்பட்டதன் மூலம் மொத்த அரசிறையானது மொ.உ.உற்பத்தியின் 12.5 சதவீதமாக இருக்குமென எறிவுசெய்யப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023இல் அரசிறைச் சேகரிப்பில் குறிப்பிடத்தக்க வருமானம் காணப்பட்டமைக்கிடையிலும் 2023ஆம் ஆண்டிற்காக ஆரம்பத்தில் அடைய விரும்பிய வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளுடன் தொடர்பான அரசிறையில் குறைவான செயலாற்றம் காணப்பட்டது. 2023ஆம் ஆண்டிற்காக தேறல் செய்யப்பட்ட அரசிறை 88.4 சதவீதமாக விளங்கியதுடன் தேறல் செய்யப்பட்ட வரி அரசிறை ஆரம்ப எறிவுகளில் 86.9 சதவீதமாகக் காணப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்கப் பணவீக்கத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி விரைவாக இருந்தமை, இறக்குமதிக்கான கேள்வி தொடர்ந்தும் குறைவாகக் காணப்பட்டமை, செலாவணி வீத உயர்வு மற்றும் அரசிறை நிருவாகத்துடன் தொடர்புபட்ட பிரச்சனைகள் என்பன காரணங்களாக அமைந்தன. வருமான வரிக் கட்டமைப்பிற்கு செய்யப்பட்ட மேல் நோக்கிய திருத்தங்கள் போன்ற வரி வழிமுறைகள் நேரடி வரிச் சேகரிப்பின் பங்கில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு வழிவகுத்து 2022இன் 30.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2023இல் 33.5 சதவீதத்தினை அடைந்தது.

**மொத்தச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் பெயரளவு நியதிகள் மற்றும் மொ.உ.உற்பத்தியின் சதவீதம் ஆகிய இரண்டு நியதிகளிலும் அதிகரித்தமைக்கு, மூலதனச் செலவினத்திலும் தேறிய கடன்வழங்கலிலும் குறிப்பிடத்தக்க குறைப்பு காணப்பட்டமைக்கிடையிலும் உள்நாட்டு வட்டிச் செலவினத்தில் ஏற்பட்ட கணிசமான உயர்வே தூண்டுதலாக அமைந்தது.** இதன்படி, பெயரளவு நியதிகளில் அரச செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 19.8 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்த வேளையில், மொ.உ.உற்பத்தி நியதிகளில் செலவினம் 2023இல் 0.8 சதவீதப்புள்ளிகளினால் மாத்திரமே அதிகரித்தது. உள்நாட்டு வட்டிச் செலவினத்தில் ஏற்பட்ட கணிசமான பெயரளவு உயர்விற்கு 2023 யூன் வரை நிலவிய இறுக்கமான நாணய நிலைமைகளிலிருந்து தோன்றிய உயர்வடைந்த உள்நாட்டு வட்டி வீதங்களின் செல்வாக்கும் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தல் தொடர்பிலும் காணப்பட்ட நிச்சயமற்ற தன்மை காரணமாக அரச பிணையங்களுடன் இணைந்து காணப்பட்ட உயர் இடர்நேர்வு மிகைகளும் காரணங்களாக விளங்கின. மேலும், வெளிநாட்டு நிதியிடலை அணுகுவதற்கான வழிவகைகள் அரசாங்கத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையின் காரணமாக உள்நாட்டு நிதியிடலில் அளவுக்கதிகமாக தங்கியிருந்தமையும் உள்நாட்டு வட்டிச் செலவுகள் உயர்வடையப் பங்களித்தன. வட்டிச் செலவு 2022இல் பதிவுசெய்யப்பட்ட முறையே 79.1 சதவீதம் மற்றும் 35.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொத்த அரசிறையில் 80.5 சதவீதத்திற்கும் 2023இன் மொத்தச் அரச செலவினத்தில் 45.8 சதவீதத்திற்கும் வகைகூறியது. அதேவேளை, அரச துறை ஊழியர்களுக்கான ஓய்வுகால வயதினை 65 இலிருந்து 60இற்குக் குறைப்பது தொடர்பாக முன்னைய ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட திருத்தங்களின் காரணமாக ஓய்வுபெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்தமை காரணமாக ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மீதான செலவினம் கணிசமானளவிற்கு அதிகரித்தது. மேலும், இலவச மருந்து மற்றும் அஸ்வேசும நலன்புரி நன்மைகள் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமை என்பனவும் உதவுதொகைகளும் பரிமாற்றங்களும் அதிகரிப்பதற்குப் பங்களித்தன. மறுபுறத்தில் சம்பளங்களும் கூலிகளும் பெயரளவு நியதிகளிலும் அதேபோன்று மொ.உ.உற்பத்தி நியதிகளிலும் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமைக்கு அரச துறைக்கான

வரைபடம் 1.35 அரச மீண்டெழும் செலவினத்தின் உள்ளமைப்பு - 2023




*மூலம்:* நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

புதிய ஆட்சேர்ப்புக்கள் முடக்கிவைக்கப்பட்டிருக்கின்றமை மற்றும் தொழிற்படையிலிருந்து கணிசமானளவு அரச ஊழியர்கள் ஓய்வுபெற்றமையும் காரணங்களாக அமைந்தன. அதேவேளை, மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் பெயரளவு நியதிகள் அதேபோன்று மொ.உ.உற்பத்தி ஆகிய இரு நியதிகளிலும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தன. இக்குறைப்பிற்கு, இந்திய தொடர் கொடுகடன் வசதியூடாக 2022இல் இ.பெ.கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட கடன்வழங்கல் வசதி தீர்ப்பனவு செய்யப்பட்டமையின் காரணமாக தேறிய கடன்வழங்கலில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி காரணமாக அமைந்தது. தேறிய கடன்வழங்கலின் தாக்கம் நீங்கலான மூலதனச் செலவினம் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2022இன் 3.0 சதவீதத்திலிருந்து 2023இல் 3.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. 2023ஆம் ஆண்டிற்கான ஆரம்ப வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளின்படி, மொத்தச் செலவினம் மொ.உ.உற்பத்தியில் 21.2 சதவீதமாக இருக்குமென எறிவு செய்யப்பட்டதுடன் மீண்டெழும் செலவினம் மற்றும் மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன்வழங்கல் முறையே மொ.உ.உற்பத்தியின் 16.8 சதவீதமாகவும் 4.4 சதவீதமாகவும் மதிப்பிடப்பட்டன. உள்நாட்டு வட்டிச் செலவினம் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க உயர்வாக இருந்தமைக்கிடையிலும் செலவினங்களை சிக்கனப்படுத்தும் வழிமுறைகளை தொடர்ந்து மேற்கொண்டமையினூடாக அவசரமற்ற மற்றும் அவசியமற்ற செலவினங்களைக் கட்டுப்படுத்துவதில் அரசாங்கத்தின் பாராட்டத்தக்க முயற்சிகள் மொத்தச் செலவினங்களைக் கட்டுக்குள் வைத்திருப்பதற்கும் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளுக்கு மிக மேலே மீண்டெழும் செலவினம் உயர்வடைவதனைத் தடுப்பதற்கும் உதவின.

### 1.6.3 வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதியிடல்

**2023இல் பன்னாட்டு மூலதனச் சந்தைகளை அணுகுவதில் காணப்பட்ட தடைகளின் பெருமளவு காரணமாக, அரசாங்கம் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதியிடுவதற்கு உள்நாட்டு மூலங்களிலேயே தொடர்ந்தும் முக்கியமாக தங்கியிருக்க வேண்டியிருந்தது.** இதன்படி, ஆய்விற்குரிய காலப்பகுதியில் மொத்த நிதியிடலில் தேறிய உள்நாட்டு நிதியிடல் 78.3 சதவீதத்திற்கு வகைகூறியது. 2021இல் 100 சதவீதத்தினை விஞ்சிய கடந்த இரண்டு ஆண்டுகளுடனும் ஒப்பிடுகையில் சிறிதளவு குறைவடைந்து காணப்பட்ட போதும், இதையொத்த கட்டுப்பாடுகள் நடைமுறையில் இல்லாத வேளையில் தற்போதைய சதவீதம் முறையே 2019 மற்றும் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 62.3 சதவீதம் மற்றும் 57.5 சதவீதங்களுடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டு ரீதியில் இன்னமும் உயர்வாகவே காணப்படுகிறது. உள்நாட்டுப் படுகடனை மேம்படுத்துகை தொழிற்பாடுகளுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களின் தாக்கம் நீக்கப்படுகையில், மொத்த தேறிய உள்நாட்டு நிதியிடல் திறைசேரி உண்டியலினூடாக முனைப்புடன் நிதியிடப்படுகின்றமை, நீண்ட காலச் சாதனங்களிலும் பார்க்க குறுகிய காலச் சாதனங்களுக்குக் காணப்படும் வலுவான சந்தை முன்னுரிமைகளைப் பிரதிபலித்தமைக்கு ஆண்டின் முதலரைப்பகுதியில் நிலவிய நிச்சயமற்ற மற்றும் உயர் திறைசேரி உண்டியல் வீதங்களும் காரணங்களாக விளங்கின.[28] 2023இல் திறைசேரி உண்டியல்களிலிருந்தான தேறிய நிதியிடல் மொ.உ.உற்பத்தியின் 7.5 சதவீதமாக (ரூ.2,058.6 பில்லியன்) விளங்கி 2022இல் பதிவுசெய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 6.7 சதவீதத்தினை விட (ரூ.1,608.2 பில்லியன்) உயர்வாகக் காணப்பட்டது. மாறாக, திறைசேரி முறிகளிலிருந்தான தேறிய நிதியிடல் 2022இன் மொ.உ.உற்பத்தியின் 6.0 சதவீதத்திலிருந்து (ரூ.1,440.2 பில்லியன்) 2023இல் மொ.உ.உற்பத்தியின் 2.5 சதவீதத்திற்கு (ரூ.692.3 பில்லியன்) வீழ்ச்சியடைந்தது. வங்கித்தொழில் துறையிலிருந்தான தேறிய உள்நாட்டு நிதியிடல் மொ.உ.உற்பத்தியின் 0.02 சதவீதம் கொண்ட தேறிய முற்கொடுப்பனவுடன் (ரூ.6.4 பில்லியன்)[29] கணிசமானளவு சுருக்கத்தை கொண்டிருந்தது. இக்குறைப்பு வங்கியல்லா மூலங்களினால் எதிரீடு செய்யப்பட்டது. இது, 2023இன் மொ.உ.உற்பத்தியில் 6.5 சதவீதத்திற்கு வகைகூறியது (ரூ.1,798.5 பில்லியன்). அதேவேளை, மொத்தத் தேறிய நிதியிடலின் தேறிய வெளிநாட்டு நிதியிடலின் பங்கு முன்னைய ஆண்டின் 17.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2023இல் 21.7 சதவீதத்தினால் அதிகரித்தது. 2023இல்

28 இவ்வாண்டுப்பகுதியில் இலங்கை அபிவிருத்தி முறிகளும் மத்திய வங்கியின் தற்காலிக முற்பணங்களும் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தல் தொழிற்பாடுகளின் ஒரு பகுதியாக தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளன.

29 இப்பிரிவின் கீழ், வங்கித்தொழில் துறையிலிருந்தான தேறிய உள்நாட்டு நிதியிடலில் பதிவுசெய்யப்பட்ட சுருக்கத்திற்கு மாறாக, இவ்வத்தியாயத்தின் நாணயத் துறை அபிவிருத்திகளின் கீழ் தரப்பட்டுள்ள அரசிற்கான தேறிய கொடுகடன் தொகை விரிவொன்றினைக் காட்டியது. இவ்வேறுபாட்டிற்கு மத்திய அரச படுகடன் இருப்புக்களான இ.பெ.கூட்டுத்தாபனத்தின் அரச உத்தரவாதமளிக்கப்பட்ட படுகடனுடன் இணைந்த படுகடன் மாற்றல்களைப் பதிவுசெய்யும் நேரம் காரணமாக இருக்கமுடியும். 2022 இறுதியில் இது, வங்கித்தொழில் துறையிலுள்ள 2023இன் பதிவுகளுக்கு மாத்திரம் வகைகூறுகிறது.

தேறிய வெளிநாட்டு நிதியிடல் பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் இரண்டாவது தொகுதியின் கீழ் பெறப்பட்ட மொத்த நிதியிடலை உள்ளடக்கியிருந்தது. இது, வரவு செலவுத்திட்டத்திற்கு உதவியாக வழங்கப்பட்டது. மேலும், குறிப்பிடத்தக்க பெறுகைகள் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கியின் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு போன்ற ஏனைய பல்புடை முகவர்களிடமிருந்து பெறப்பட்டது. இத்தகைய நிதியங்கள் அரசாங்கத்தின் பொருளாதார உறுதிப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஆதரவளிப்பதற்காக சமூகப் பாதுகாப்பு வலையமைப்பின் மீதான செலவினத்திற்கு உதவுவதற்காகவும் வழங்கப்பட்டது.

**குறிப்பிட்ட வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ஸ்தம்பிதப்பட்டமையின் காரணமாக நாட்டிற்கான தரமிடல் முகவர்கள் இலங்கைக்கான அவர்களின் குறைக்கப்பட்ட தரமிடல் அந்தஸ்தினை பேணினர்.** இதற்கமைய, பிட்ச் றேட்டிங் மற்றும் எஸ் அன்ட் பி குளோபல் தரமிடல் இலங்கைக்கான நீண்ட கால வெளிநாட்டு நாணய வழங்குநர் செலுத்தத் தவறும் தரமிடலை மட்டுப்படுத்தப்பட்ட செலுத்தத் தவறல் (RD) மற்றும் குறிப்பிட்ட செலுத்தத் தவறல் (SD) என்பனவற்றைப் பேணியது. மூடிஸ் தரமிடல் நீண்ட கால வெளிநாட்டு நாணய வழங்குநர் கொடுகடன் தரமிடலை 'Ca' (உறுதியானது) இல் பேணியது. அதேநேரம் உள்நாட்டுப் படுகடனை மேம்படுத்தும் தொழிற்பாடுகளின் அறிவித்தல், அரசாங்கத்தின் உள்நாட்டு நாணய உள்நாட்டுப் படுகடனின் தரமிடலை தரம் குறைப்பதற்கு நாட்டிற்கான பன்னாட்டு கொடுகடன் தரமிடல் முகவர்களைத் தூண்டிய வேளையில், உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தல் தொழிற்பாடுகள் வெற்றிகரமாக நிறைவடைந்ததுடன் இவை தரமுயர்த்தப்பட்டன.

## 1.6.4 மத்திய அரசாங்கத்தின் படுகடன் மற்றும் பொதுப்படுகடன்[30]


**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மத்திய அரசாங்கத்தின் படுகடன் 2022இன் 114.2 சதவீதத்திலிருந்து 2023 இறுதியில் 103.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு உயர் பணவீக்கம் மற்றும் வெளிநாட்டுப் படுகடன் மீதான நாணய உயர்வின் தாக்கம் என்பனவற்றினால் தூண்டப்பட்ட மொ.உ.உற்பத்தியின் பெயரளவு நியதிகளில் குறிப்பிடத்தக்களவிற்கு வளர்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும்.** இதற்கமைய, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டுப் படுகடன் மற்றும் வெளிநாட்டுப் படுகடன் இரண்டும் 2022இன் முறையே 62.5 சதவீதம் மற்றும் 51.8 சதவீதத்திலிருந்து 2023இல் முறையே 61.7 சதவீதத்திற்கும் 42.1 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன.[31] எனினும், மொத்தப் படுகடனின் பெயரளவுப் பெறுமதி[32] 4.4 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு உள்நாட்டுப் படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு ஏக காரணமாக அமைந்த வேளையில், உள்நாட்டு நாணயத்தில் மதிப்பிடப்பட்ட வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் 2022இல் அவதானிக்கப்பட்ட மட்டங்களிலிருந்து வீழ்ச்சியடைந்தது. மொத்த உள்நாட்டுப் படுகடனில் ஏற்பட்ட பெயரளவு அதிகரிப்பு, கணிசமான நிதியிடல் தேவைப்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நிதியிடல் தேர்வுகளுக்கு மத்தியிலும் உள்நாட்டுச் சந்தைகளிலிருந்து பூர்த்தி செய்யப்பட்டமையினைப் பிரதிபலித்தது. மொத்த உள்நாட்டுப் படுகடனின் சதவீதமாக நடுத்தர மற்றும் நீண்ட கால உள்நாட்டுப் படுகடனின் பங்கு 2022 திசெம்பர் இறுதியின் 65.7 சதவீதத்திலிருந்து 2023 இறுதியில் 74.2

30 அரசாங்கத்தின் படுகடன் புள்ளிவிபரங்கள் அரசாங்கத்தின் தேறிய வங்கி வைப்புக்களில் எடுத்துக்காட்டப்படுகின்றன.

31 ப.நா.நிதியத்தின் அரச புள்ளி விபரங்களின் கைநூல் 2014இல், அரசப்படுகடனின் புள்ளிவிபரங்களின் தொகுப்பின் வழிகாட்டல்களின்படி, படுகடனின் வதிவற்றோர் உடமைகள் வெளிநாட்டுப் படுகடன்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள வேளையில் வதிவோரின் படுகடன் உடமைகள் உள்நாட்டுப் படுகடன்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

32 வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைத்தல் தொடர்பில் நடைபெற்றுவரும் கலந்துரையாடல்களின் பின்னணியில், 2022 இறுதியிலும் 2023 இறுதியிலும் உள்ளவாறு வெளிநின்ற மத்திய அரசப் படுகடன் 2022 ஏப்பிறல் 12 இற்குப் பின்னர் நிலுவைக்கு மாறிய பல படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளை நீக்குகிறது. இலங்கையின் வெளிநாட்டு அரச படுகடனைத் தீர்ப்பனவு செய்வது தொடர்பான இடைக்காலக் கொள்கை இலங்கையின் நிதி, பொருளாதார உறுதிப்பாடுமற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரினால் அறிவிக்கப்பட்டது. இப்படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் நிலுவையிலுள்ள வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்குகிறது. இது, இடைக்காலக் கொள்கைக்கமைவாக, மூலதனமாகக் கருதப்படும். மேலும், 2022 திசெம்பர் இறுதியிலுள்ளவாறான நிலுவையானது 2022 ஏப்பிறலிலிருந்து 2022 இறுதி வரை நிலுவையிலிருந்த இலங்கை அபிவிருத்தி முறிகளுடன் தொடர்புடைய குறித்த நறுக்குக் கொடுப்பனவுப் பெறுமதிகளை உள்ளடக்கவில்லை.

வரைபடம் 1.36 மத்திய அரசின் வெளிநின்ற படுகடன்




*மூலங்கள்:* நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 1.27

## அரசின் வெளிநின்ற படுகடன் (அ) (ஆ)

ரூ. பில்லியன்

| விடயம் | 2022 | 2023 (இ) |
|---|---|---|
| **உள்நாட்டு படுகடன் (ஈ)** | **15,033.9** | **17,051.9** |
| முதிர்வு காலத்தின்படி | | |
| குறுங்காலம் (உ) | 4,267.7 | 3,616.2 |
| நடுத்தர மற்றும் நீண்டகாலம் (ஊ) | 9,882.1 | 12,646.9 |
| ஏனைய உள்நாட்டு (எ) | 884.1 | 788.7 |
| நிறுவனங்களின்படி (ஏ) | | |
| வங்கி (ஏ) | 8,525.7 | 9,102.8 |
| வங்கியல்லா (ஏ) | 6,164.0 | 7,506.3 |
| மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல் ஒதுக்கீடு (ஐ) (ஒ) | 344.1 | 442.7 |
| **வெளிநாட்டு படுகடன் (ஓ) (ஔ)** | **12,458.2** | **11,644.1** |
| பல்பக்க | 3,611.6 | 3,817.0 |
| இருபக்க மற்றும் வர்த்தக | 8,846.6 | 7,827.1 |
| நாணயங்களின்படி | | |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 1,604.7 | 1,737.1 |
| ஐ.அ.டொலர் | 8,716.9 | 7,943.9 |
| யப்பானிய யென் | 979.6 | 819.4 |
| யூரோ | 417.4 | 396.6 |
| ஏனையவை | 739.6 | 747.1 |
| **மொத்த மத்திய அரசின் வெளிநின்ற படுகடன்** | **27,492.0** | **28,695.9** |
| **பொது உத்தரவாதமளிக்கப்பட்ட படுகடன் (க) (ங)** | **1,180.7** | **1,931.3** |
| **பொதுப் படுகடன்** | **28,672.7** | **30,627.3** |
| மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக (ச) | | |
| **மொத்த மத்திய அரசின் வெளிநின்ற படுகடன்** | **114.2** | **103.9** |
| **உள்நாட்டு படுகடன்** | **62.5** | **61.7** |
| **வெளிநாட்டு படுகடன்** | **51.8** | **42.1** |
| **பொது உத்தரவாதமளிக்கப்பட்ட படுகடன்** | **4.9** | **7.0** |
| **பொதுப் படுகடன்** | **119.2** | **110.8** |

*மூலங்கள்:* நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

(அ) 2014 பன்னாட்டு நாணய நிதியத்தால் அரச நிதி புள்ளிவிபரங்களுக்கான கையேட்டில் அரசாங்கம் படுகடன் புள்ளிவிபரங்களை தொகுத்தல் தொடர்பான வழிகாட்டல்களுக்கு அமைய வதியாதோர் வசமுள்ள வெளிநின்ற இலங்கை அபிவிருத்தி முறிகள் வெளிநாட்டு படுகடனின் கீழ் வகைப்படுத்தப்பட்டதுடன் வதியோர் வசமுள்ள இலங்கை அரசாங்கத்தின் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் உள்நாட்டு படுகடனின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், படுகடன் புள்ளிவிபரங்கள் தேறிய அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன (வைப்புக்கள் நீங்கலாக).

(ஆ) இலங்கையின் வெளிநாட்டு பொதுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் தொடர்பில் 2022 ஏப்பிறல் 12 அன்று நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட இடைக்கால கொள்கை அறிவிப்பின் பின்னர் நிலுவையிலுள்ள பல்வேறு படுகடன் பணிக் கொடுப்பனவுகளை 2022 மற்றும் 2023 இறுதியிலான வெளிநின்ற மத்திய அரச படுகடன் உள்ளடக்கவில்லை. இப்படுகடன் பணிக்கொடுப்பனவுகள் இடைக்காலக் கொள்கையின் பிரகாரம் மூலதனமாக்கப்பட வேண்டுமெனக் கருதப்பட்டு பாதிக்கப்பட்ட படுகடனின் நிலுவையிலுள்ள வட்டிக் கொடுப்பனவுகளை உள்ளடக்கியுள்ளன. மேலும், 2022 திசெம்பர் இறுதியிலுள்ளவாறான நிலுவையானது 2022 ஏப்பிறல் தொடக்கம் 2022 இறுதிவரை செலுத்தவேண்டிய இலங்கை அபிவிருத்தி முறிகளுடன் தொடர்புடைய குறித்த கூப்பன் கொடுப்பனவுகள் நிலுவைத் தீர்ப்பனவு பெறுமதிகளை உள்ளடக்கவில்லை.

(இ) தற்காலிகமானது

(ஈ) 2023 தொடக்கம், உள்நாட்டு படுகடன் தொகுப்பு முறை மாற்றப்பட்டதுடன் இது நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் உறுதிப்படுத்தப்படும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

(உ) வதிவற்ற முதலீட்டாளர்கள் வசமிருந்த திறைசேரி உண்டியல்கள் நீங்கலாக

(ஊ) வதிவற்ற முதலீட்டாளர்கள் வசமுள்ள திறைசேரி முறிகள் நீங்கலாக

(எ) 2022இற்கு பின்னரான தரவுகள் மத்திய அரச படுகடனினுள் உள்ளீர்க்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அரசினால் உத்தரவாதமளிக்கப்பட்ட வெளிநாட்டு நாணய படுகடனின் வெளிநின்ற நிலுவையினை உள்ளடக்குகிறது

(ஏ) நிறுவன ரீதியான வகைப்படுத்தலானது மத்திய வைப்பு முறைமையின் பதிவுகளை அடிப்படையாகக் கொண்ட 2022ஆம் ஆண்டறிக்கையிலிருந்து திருத்தப்பட்டது

(ஐ) உண்மையான சொத்துரிமை நிறுவப்பட முடியாதவைகளுக்கான மீள்கொடுப்பனவு உடன்படிக்கைகளின் கீழான பிணைய இருப்புக்கள் உள்ளடங்கலாக

(ஒ) திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய மீள் கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் கீழான வைப்புக்கள் உரிய உரிமம்பெற்ற வர்த்தக வங்கி அல்லது தனியான முதனிலை முகவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

(ஓ) 2022 மற்றும் 2023 இற்கான வெளிநாட்டு படுகடன் புள்ளிவிபரங்கள் மற்றும் வெளிநாட்டுப் படுகடன் வகைப்படுத்தல் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் பேணப்பட்டு வந்த பொதுநலவாய செயலக படுகடன் பதிவிடல் மற்றும் முகாமைத்துவ முறைமையிலிருந்து 2023 மாச்சு 09, 10 மற்றும் 2024 பெப்ரவரி 26 அன்று பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டன.

(ஔ) இலங்கை மின்சார சபை, வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் மற்றும் இலங்கைத் துறைமுக அதிகாரசபை என்பன முன்னர் வகைப்படுத்தப்பட்டிருந்த பல்வேறு வெளிநின்ற செயற்றிட்டக் கடன்கள் 2022 திசெம்பரிலிருந்து மத்திய அரச படுகடனின் கீழ் உள்ளீர்க்கப்பட்டன.

(க) 2024 பெப்ரவரி 29இல், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சிலிருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பொது உத்தரவாதக் கடன் தொகுக்கப்பட்டது

(ங) ஜூன் 2014 இல் வரையறுக்கப்பட்ட சிறிலங்கன் எயர்லைன்ஸ் வழங்கிய 175 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான சர்வதேச முறிகள் உள்ளடங்கும். இது ஜூன் 2019 இல் முதிர்ச்சியடைந்து 5 வருட காலத்திற்கு மீண்டும் வெளியிடப்பட்டது.

(ச) 2024 மார்ச் 15ஆம் நாளான்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகள் (தள ஆண்டு 2015) பயன்படுத்தப்பட்டுள்ளன.

சதவீதத்திற்கு அதிகரித்தது. இம்மாற்றத்திற்கு முக்கியமாக மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடைமைகள் மற்றும் அரசாங்கத்திற்கான தற்காலிக முற்பணங்கள், உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தல் தொழிற்பாடுகளின் கீழ் நீண்ட கால திறைசேரி முறிகளுக்கு மாற்றப்பட்டன. நடுத்தர காலப் பங்குகளை நீண்ட காலப் படுகடனுக்கு அதிகரித்தமையின் காரணமாக படுகடன் இருப்புக்களின் முதிர்ச்சிக் காலம் நீடிக்கப்பட்டமையின் மூலம் அரசாங்கத்திற்கான மொத்த நிதியிடல் தேவை குறைவடைய உதவியது. இது, பன்னாட்டு நாணய நிதியத்துடன் இணங்கிக் கொள்ளப்பட்ட படுகடன் உறுதிப்படுத்தல் இலக்குகளை எய்துவதற்கு இன்றியமையாததாகும். மேலும், 2023இன் முதலரைப்பகுதியில் அரசாங்கம் ரூபாக் கடன்களின்

வெளிநின்ற இருப்பினைத் தீர்ப்பனவு செய்த வேளையில், 2022 திசெம்பரில் மத்திய அரசாங்கத்திற்குள் ஈர்த்துக் கொள்ளப்பட்ட இ.பெ.கூட்டுத்தாபனத்தின் அரசாங்கத்தின் உத்தரவாதப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நாணயப் படுகடன் இருப்பின் வெளிநின்ற நிலுவை 2023 இறுதியில் மாற்றமின்றியிருந்ததுடன், இப்படுகடனை மறுசீரமைப்பதனைப் பூர்த்தி செய்வதற்கான நிலுவையில் காணப்படுகின்றது. அதேவேளை, பெயரளவு நியதிகளில் வெளிநாட்டுப் படுகடன் 2022 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2023 இறுதியில் வீழ்ச்சியடைந்தமைக்கு முக்கிய வெளிநாட்டு நாணயக்களுக்கெதிராக ரூபா உயர்வடைந்தமையே காரணமாகும். சமப்பெறுமதி தொடர்பான வெளிநாட்டுப் படுகடனின் குறைப்பு 2023இல் ரூ.1,431.4 பில்லியனாக அமைந்தது. எனினும், வெளிநாட்டுப் படுகடன் இருப்பின் ரூபாப் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி 2023 மாச்சிலும் திசெம்பரிலும் பெறப்பட்ட பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் இரண்டு தொகுதிகள் உட்பட பல்புடை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட நிதிகளின் மூலம் பகுதியளவிற்கு எதிரீடு செய்யப்பட்டது. முன்னைய பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டங்களில், பன்னாட்டு நாணய நிதிய நிதியிடல் மத்திய வங்கியின் பொறுப்பாகக் கருதப்பட்டது. எனினும், பிந்திய ஏற்பாடுகளில், இது, அரசாங்கத்திற்கு வரவு செலவுத்திட்ட ஆதரவுகளை வழங்குவதன் மீது கவனத்தினைச் செலுத்துவதுடன் பெறுகைகளை அரசாங்கத்திற்கு மாற்றல் செய்யப்பட்டதன் மூலம் அது அரசாங்கத்தின் பொறுப்பாகக் கருதப்படுவதுடன் மத்திய அரசாங்கத்தின் ஒட்டுமொத்த படுகடனையும் அதிகரிக்கிறது. 2023 இறுதியிலுள்ளவாறு மத்திய அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனில் தொடர்பான பங்கு 2022 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 45.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொத்த மத்திய அரச படுகடன் 40.6 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**வெளிநின்ற அரச படுகடன்[33] மொ.உ.உற்பத்தியின் நியதிகளில் மத்திய அரசாங்கத்தின் படுகடனில் ஏற்பட்ட குறைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் 2022 இறுதியில் மொ.உ.உற்பத்தியின் 119.2 சதவீதத்திலிருந்து 2023 இறுதியில் மொ.உ.உற்பத்தியின் 110.8 சதவீதத்திற்கு குறைவடைந்தது.** உண்மை நியதிகளில் மொத்த வெளிநின்ற பொதுப்படுகடன் 2022 இறுதியின் ரூ.28,672.7 பில்லியனிலிருந்து 2023 இறுதியில் ரூ.30,627.3 பில்லியனுக்கு அதிகரித்தது. இது 6.8 சதவீதம் கொண்டதொரு ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பாகும்.

**அரசாங்கம் இது தொடர்பான ஏனைய வழிமுறைகளுடன் சேர்த்து படுகடன் உறுதித்தன்மையினை எய்துகின்ற நோக்குடன் 2023இல் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தல் தொழிற்பாடுகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியது.** இதன்படி, தகைமையுடைய இலங்கை அபிவிருத்தி முறிகளின் உடமை ஐந்து புதிய வேறுபட்ட இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளுக்கு மாற்றப்பட்ட வேளையில் ஓய்வுகால நிதிகளினால் வைத்திருக்கப்பட்ட திறைசேரி முறிகள் நடுத்தரத்திலிருந்து நீண்ட காலம் வரையிலான தன்மையினைக் கொண்ட புதிய திறைசேரி முறிகளுக்கு மாற்றப்பட்டன. மேலும், மத்திய வங்கி வசமிருந்த வெளிநின்ற திறைசேரி உண்டியல்களும் அரசாங்கத்திற்கான மத்திய வங்கியின் வெளிநின்ற தற்காலிக முற்பணங்களும் பத்து புதிய படிமுறையிலான நிலையான கூப்பன் திறைசேரி முறிகள் ஏற்கனவேயுள்ள பன்னிரண்டு திறைசேரி உண்டியல் உடமைகளும் மாற்றப்பட்டன. உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தல் தொழிற்பாடுகள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டமை குறுங்காலப் படுகடன் முதிர்ச்சிகளை நடுத்தர காலத்திலிருந்து நீண்ட கால முதிர்ச்சிகளுக்கு மாற்றுவதற்கு வழியமைத்ததுடன், இதன் மூலமாக மீளநிதியிடல் இடர்நேர்வு தணிக்கப்பட்ட வேளையில் உள்நாட்டுப் படுகடன் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சிக்கான சராசரிக் காலம் நீளமாகியது. மீள்கொடுப்பனவு கடப்பாடுகள் பரவலாக்கப்பட்டமையினால் ஏற்பட்ட கால நீடிப்பு உடனடியான நிதியியல் அழுத்தங்களை ஒழித்து கூடுதலானளவிற்கு முகாமைப்படுத்தக் கூடியதும் உறுதித்தன்மை வாய்ந்த படுகடன் அமைப்பினை நிறுவுவதற்கும் வசதியளித்தது. அதேவேளை, அரசாங்கம் வெளிநாட்டுப் படுகடன் மீதான நிவாரணம் தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்காக வெளிநாட்டுப் படுகடன் வழங்குவோருடன் தீவிரமாக ஈடுபட்டது. இதன்படி, கொள்கை அளவிலான உடன்படிக்கையொன்று அலுவல்சார் கொடுகடன் வழங்குவோரின் குழுவுடனும் சீனாவின் எக்சிம் வங்கியுடனும் அடையப்பட்டிருக்கின்றமையானது


33 வெளிநின்ற அரச படுகடன் மத்திய அரசாங்கத்தின் படுகடன் மற்றும் அரச உத்தரவாதப் படுகடன் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றிற்கு கையெழுத்திடுகின்ற தற்போதைய செய்முறைக்கு வழியமைத்திருக்கிறது. ஒப்பீட்டு நடவடிக்கை மற்றும் இணங்கிக் கொள்ளப்பட்ட படுகடன் உறுதித்தன்மை இலக்குகளுடனும் இணங்கிக் கொள்ளும் விதத்தில் வெளிநாட்டு வர்த்தகப் படுகடன் மறுசீரமைப்பிற்காக தனியார் படுகடன் உடமையாளர்களுடன் அரசாங்கமும் பேச்சுவார்த்தைகள் நடத்தும் அதன் முயற்சிகளைத் தொடர்ந்தது.

## 1.6.5 மத்திய அரச படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

**மொத்தப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2022இல் மொ.உ.உற்பத்தியின் 12.5 சதவீதத்திலிருந்து 2023இல் மொ.உ.உற்பத்தியின் 15.4 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு அதிகரித்த உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவுகள் முக்கிய தூண்டுதலாக அமைந்தன.** உள்நாட்டுப் படுகடன் தீர்ப்பனவு 2022இன் 10.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2023இல் மொ.உ.உற்பத்தியின் 13.7 சதவீதத்திற்கு உயர்வடைந்தமையானது ரூ.1,283.1 பில்லியன் கொண்ட பெயரளவு அதிகரிப்பினை உருவாக்கியது. அதேநேரம், உள்நாட்டு கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவில் ஏற்பட்ட உயர்வு திறைசேரி முறிகளின் அதிகரித்த தீர்ப்பனவுடன் இணைந்து காணப்பட்டதுடன் 2022 உடன் ஒப்பிடுகையில் 2023இல் ரூ468.7 பில்லியன்

வரைபடம் 1.37 மத்திய அரசின் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக)




*மூலங்கள்:* நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. ஒப்பிடுகையில், வெளிநாட்டுப் படுகடன் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி 2022இன் மொ.உ.உற்பத்தியின் 2.0 சதவீதத்திலிருந்து 2023இல் மொ.உ.உற்பத்தியின் 1.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தமைக்கு 2022இல் அரசாங்கத்தின் படுகடன் இடைநிறுத்தப்படுகின்றது என்ற அறிவிப்பினைத் தொடர்ந்து, குறிப்பிட்ட வெளிநாட்டுப் படுகடன் கடப்பாடுகள் தொடர்ச்சியாக நிறுத்தப்பட்டமையினைத் தொடர்ந்து இது பதிவுசெய்யப்பட்டது.